Hakikat Publications No: 1

# ஈமான் இஸ்லாம்

(Belief And Islam)

## MAWLANA DIYA AD-DIN KHALID AL-BAGHDADI

## HÜSEYN HİLMİ IŞIK

**Hakikat Kitabevi**
Darüşşefeka Cad. No: 53 P.K.: 35 **34083**
Fâtih-İSTANBUL
Tel: 0212 523 45 56-532 58 43 Fax: 0212 523 36 93
http://www.hakikatkitabevi.com.tr
e-mail: bilgi@hakikatkitabevi.com.tr
2024

TYPESET AND PRINTED IN TURKEY BY:
Ihlas Gazetecilik A.S.
Merkez Mah. 29 Ekim Cad. Ihlas Plaza No: 11 A/41
34197 Yenibosna-ISTANBUL, TÜRKİYE
Tel: 90.212.454 3000

ISBN: 978-605-66709-8-5

# ஈமான் இஸ்லாம்

## ஆசிரியர்

இ'ஃதிகாத் நாமா எனும் நூலை இயற்றிய மௌலானா தியாஅத்தீன் காலித் அல்-பக்தாதி அல்-உதுமானி (குத்திச ஸிர்ரஹு)[1] அவர்கள் பக்தாதில் உள்ள ஷஹ்ராஸூர் எனும் இடத்தில் 1778/1192[2]ல் பிறந்து 1826/1246ல் டமஸ்கஸில் மறைந்தார்கள். இவர்கள் 3வது கலீபா உதுமான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களின் பரம்ரையில் தோன்றியதால் உதுமானி என்று அழைக்கப்பட்டார்கள் (அல்லாஹு தஆலா அவர்களை பொருந்திக் கொள்வானாக).

மௌலானா காலித் அவர்கள் அல்லாமா அந்-நவவி அவர்களின் அல்-அஹறதித் அல்-அர்பஊன் எனும் கிரந்தத்தின் 2வது ஹதீதான ஹதீது அல்-ஜிப்ரயீலை தனது இளைய சகோதரருக்கு கற்றுத்தரும் போது அவருடைய சகோதரர் மவுலானா மஹ்மூத்சாஹிப் அவர்கள் அந்த ஹதிதுக்கான விளக்கவுரையை எழுதும்படி வேண்டிக்கொண்டார். தனது சகோதரரின் அறிவார்ந்த விருப்பத்தை திருப்தி படுத்துவதற்காக மௌலானா காலித் அவர்கள் சகோதரரின் வேண்டுதலை ஏற்று **இஃதிகாத் நாமா** எனும் நூலை பாரசீக மொழியில் இயற்றினார்கள். இந்நூல் துருக்கியில் மொழி பெயர்க்கப்பட்டு '**Herkese Lazım Olan Iman**'என்றும், ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டு **Belief and Islam** என்றும், பிரஞ்சு

---

[1] பிரபல்யமான வலிமார்களை குறிக்கும் சொற்றொடர்: பொருள்' அல்லாஹு த'ஆலா அவருடைய மறைவான விஷயங்கள் கண்ணியமானதாகவும், புனிதமானதாகவும், ஆசீர்வதிக்கப் பட்டதாகவும் ஆக்குவானாக.

[2] வருட கணக்குகள் முதலில் கிரெகோரியன் கலண்டரிலும், பிறகு இஸ்லாமிய ஹிஜ்ரி கலண்டரிலும் தரப்படுகின்றது.

மொழியில் 'Foi et Islam' என்றும் 1969ல் ஜேர்மன் மொழியில் Glaube und Islam என்றும் யோருபா, ஹோஷ, மலையாளம், டானிஷ், ஆகிய மொழிகளிலும் வெளிவந்துள்ளன. தற்போது இந்நூல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு **ஈமான் இஸ்லாம்** என்ற பெயரில் வெளியிடுகின்றோம். கிருபை நிறைந்த அல்லாஹ் இந்நூலை வாசிக்கும் அப்பாவி இளைஞர்களுக்கு அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்களினால் போதிக்கப்பட்ட உண்மையான ஈமானிய நம்பிக்கையை கற்றுக்கொள்ளவும் அதன்படி வாழவும் அருள் புரிவானாக.

## வெளியீட்டாளரின் குறிப்பு

இந்நூலினை அதன் அசல் வடிவத்திலோ அல்லது வேறு எந்த மொழியிலோ மொழி பெயர்த்து அச்சிடவிரும்பும் எவருக்கும் எங்கள் அனுமதி முன்கூட்டியே தரப்படுகின்றது. இந்த நன்மை பயக்கும் முயற்சியை மேற்கொள்ளும் அன்பர்களுக்காக அல்லாஹ்வின் ஆசியை வேண்டுவதோடு எங்களது நன்றியையும் தெரிவிக்கின்றோம். எனினும் எங்கள் அனுமதி பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது. அச்சிடுவதற்கு பயன்படுத்தப்படும் காகிதம் நல்ல தரத்துடன் இருக்க வேண்டும், மொழிபெயர்ப்பு, எழுத்துக்கள், வடிவமைப்பு, அச்சுப் பதிப்பு ஆகியவை அழகாகவும் தவறுகள் அற்றவையாகவும் இருக்க வேண்டும்.

**உங்கள் கவனத்திற்கு:** மிஷனரிகள் கிறிஸ்தவ சமயத்தை பரப்புவதற்கும், யூதர்கள் அவர்களின் தல்முதை பரப்புவதற்கும், மதமற்றவர்கள் எல்லா மதங்களையும் அழிப்பதற்கும் முயற்சி செய்கின்றார்கள். இஸ்தான்புலில் உள்ள எங்கள் ஹக்கீக்கத் நூல் பிரசுரிப்பகம் இஸ்லாத்தை அதன் தூயவடிவில் போதிப்பதற்கு முயற்சி செய்கின்றோம். அறிவுஞானமும் மனசாட்சியுமுள்ள ஒருவர் நிச்சயமாக இவற்றில் நல்லதை தெரிவு செய்து பின்பற்று வதுடன் மானிட மேம்பாட்டுக்காக இதை பரப்புவதற்கும் உதவி செய்வார்கள். அது இரு உலகிலும் அனைத்து மனித குலத்தின் இரட்சிப்புக்கும் வழி

வகுக்கும்.

**சுபஹானல்லாஹி வபிஹம்திஹி சுபுஹானல்லாஹில் அளீம்** (கலிமா-தன்சிஹ்) என்ற தஸ்பீஹை காலை மாலை 100முறை ஓதினால் ஒருவரது பாவங்கள் மன்னிக்கப்படவும், அந்த பாவங்களை திரும்பவும் செய்யாமல் இருக்கவும் பாதுகாக்கும். இந்த திக்ர் பெரும் இறைநேசர் இமாம் அர்-ரப்பானி (குத்திஸ ஸிர்ரஹு) அவர்களின் **மக்துபாத்** எனும் கிதாபில் 307, 308ம் கடிதத்தில் எழுதப்பட்டுள்ளது.

**யா ரஹ்மான், யா ரஹீம், யாஅபியூவ்வு, யா கரீம்** என்னும் அல்லாஹ்வின் நாமங்களை ஓதுவது ஒருவருக்கு அல்லாஹ்வின் கருணையையும், இரக்கத்தையும், மன்னிப்பையும், தாராள தன்மையையும் ஞாபகப்படுத்துகின்றது.

இஸ்தான்புலில் பத்திஹ் என்னும் இடத்தில் அமைந்துள்ள எங்கள் **ஹக்கீக்கத்** நூலகம் ஈமான் இஸ்லாம் என்பவற்றை போதிப்பதுடன் இஸ்லாத்தின் மேம்பாட்டையும் நோக்காக கொண்டுள்ளது. இதற்கு உதவி செய்பவர்களை அல்லாஹ் பொருந்திக்கொள்வானாக, ஆமீன்.

அன்பு நிறைந்த வாசகர்களே!, 'அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹ்'.

இந்நூலில் அடங்கியுள்ளவை அனைத்தும் மேன்மைமிக்க இஸ்லாமிய அறிஞர்களின் நூல்களிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டவை. ஆசிரியரின் சொந்த கருத்துக்கள் எதுவும் சேர்க்கப்படவில்லை. நாங்கள் மானிடத்துக்கு சேவை செய்யும் நோக்கத்துடன் மனித உரிமையின் பாதுகாவலர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகவுமே இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

உலக பிரசித்தி பெற்ற நல் அறிஞர்களின் ஆக்கங்களை திறந்த மனதுடனும் மிக கவனத் துடனும் வாசிக்கும்போது நீங்கள் மிகப்பிரயோசனமான பௌதீக, லௌகீக அறிவுகள் இரண்டையும் பெற்றுக்கொள்வீர்கள் 'இன்ஷா

அல்லாஹ்'. எங்கள் அன்பையும் மரியாதை யையும் உங்களுக்கு தெரிவிக்கின்றோம். அல்லாஹ் உங்களுக்கு சரீர சுகத்தையும் வளமான நீண்ட வாழ்வையும் தந்தருள்வானாக, ஆமீன்.

(ஸலவாத்து: ஸலவாத்தும் சலாமும் புகழ்ச்சியும் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்காகும். வஸல்லல்லாஹுஅலா செய்யிதினா முஹம்மதின் வஅலாஆலி முஹம்மத், வபாரிக்க ஆலா செய்யிதினா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மது. அல்லாஹும்ம ரப்பானா ஆத்தினா பித்துன்யா ஹஸனத்தன் வபில் ஆகிரத்தி ஹசனத்தன் வக்கினா அதாபன்னார் பிரஹ்மத்திக்க யா அர்ஹமர்ராஹிமீன்! ஆமீன்.

ஹக்கீக்கத் வெளியீட்டகம்

# முகவுரை

**பிஸ்மில்லாஹ்’வுடன் ஆரம்பிக்கின்றோம். அல்லாஹ்வின் நாமம் அதி உயர் பாதுகாப்பாகும். அவனது அருட்கொடைகள் அளவற்றவை கணக்கில்லாதவை. அவனே படைப்பவன், மன்னிப்பதற்கு மிகவும் விருப்பமானவன், மிகவும் இரக்கமுள்ளவன்.**

அல்லாஹுதஆலா பூமியிலுள்ள அனைத்து மனிதர்கள் மீதும் கருணையையும் அன்பை யும் பொழிகிறான். அவன் பயனுள்ள விஷயங்களை படைத்து நமக்கு வழங்குவதுடன் முடிவற்ற பேரின்பத்திற்கான வழியையும் காட்டுகின்றான். சொந்த நஃப்ஸின் தீயஆசை, தீய தோழர்களின் சகவாசம், தீமையை ஊக்குவிக்கும் பிரச்சாரம் மற்றும் ஊடகங்களின் ஏமாற்று வேலைகள் காரணமாக, நேரிய வழியை விட்டு குபுர் மற்றும் வழிகேடுகளை பின்பற்றியவர்களில் அவன் விரும்பும் சில்ரை, நித்திய அழிவிலிருந்து காப்பாற்றி நேர்வழியில் செலுத்துகிறான். வன்முறையை மேற்கொள்பவர்களுக்கும், வரம்புகளை மீறுபவர்களுக்கும் மற்றும் குபுரிலேயே நிலைத்திருக்க விரும்புபவர்களுக்கும் இந்த பாக்கியத்தை அவன் வழங்குவதில்லை. மறுமையில் நரகத்துக்கு தீர்ப்பளிக்கப்பட்ட விசுவாசம் கொண்ட பாவிகளில் சிலரை தேர்ந்தெடுத்து அவர்களை மன்னித்து சுவர்க்கம் செல்ல அனுமதிப்பான். அல்லாஹுதஆலா மட்டுமே அனைத்து உயிரினங்களையும் படைத்து அவற்றின் இருப்பை ஒவ்வொரு கணமும் நிலைக்கச்செய்து பயம் மற்றும் திகில் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கின்றான். அல்லாஹுதஆலா என்ற கண்ணிய மிக்க நாமத்தில் நம்பிக்கை வைத்து அவனுடைய உதவியை எதிர்பார்த்து இந்நூலை எழுத ஆரம்பிக்கின்றோம்.

**ஹம்து** எனும் புகழ்ச்சியும், நன்றியும் அல்லாஹுதாலாவுக்கே! சாந்தியும் சுப சோபனங் களும் அவன் அன்புக்கு பாத்திரமான இறைதூதர் முஹம்மது (அலைஹி ஸலாம்) அவர்கள் மீதிலும், மங்களகரமான பிரார்த்தனைகள் அவருடைய

அஹ்லுபைத்துகள்(நபி அவர்களின் குடும்பத்தினர்) மீதும், அர்ப்பணிப்புள்ள அவருடைய நேர்மையான தோழர்கள் (சஹாபத் அல்-கிராம்) அனைவர் மீதிலும் உண்டாகட்டும். **ஹம்து** என்றால் அல்லாஹ் அனைத்து உதவிகளையும் படைத்து நமக்கு அனுப்புகிறான் என்று நம்புவதும் சொல்வதுமாகும். **ஷுக்ர்** என்பது அனைத்து உதவிகளையும் இஸ்லாத்துக்கு இணக்கமாக பயன் படுத்துவது.

இஸ்லாமிய நம்பிக்கைகள் மற்றும் ஏவல்கள் விலக்கல் பற்றி ஆயிரக்கணக்கான மதிப்புமிக்க நூல்கள் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் பல பிறநாட்டு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு ஒவ்வொரு நாட்டிற்கும் விநியோகிக்கபட்டுள்ளன. மறுபுறம், தவறான நோக்கமும் குறுகிய பார்வையும் கொண்ட ஜிந்தீக் (முஸ்லீம்களை போன்று நடிக்கின்ற நம்பிக்கையற்றவர்கள்) மற்றும் பிரிட்டிஷ் உளவாளிகளினால் ஏமாற்றப்பட்ட மூடர்களான மார்க்கவாதிகள், பயனுள்ள ஒழி வீசும் இஸ்லாத்தின் சட்டவிதிகளை களங்கப்படுத்துவ தற்கும், அவற்றில் மாற்றங்களை ஏற்படுத்து வதற்கும் முஸ்லிம்களை வழி கெடுப்ப தற்கும் முயற்சி செய்கின்றனர். இருப்பினும், ஏறக்குறைய அனைத்து நாடுகளிலும் உள்ள முஸ்லிம் அறிஞர்கள் இஸ்லாமிய நம்பிக்கையை பாதுகாக்கவும் அதை பரப்புவதற்கும் முயற்சித்து வருவது நன்றியுடன் பார்க்கப்படுகிறது.

நேர்வழிபெற்ற அறிஞர்கள் சஹாபாக்களிடமிருந்து கேட்டு அறிந்த இஸ்லாத்தை நூல் வடிவத்தில் எழுதினார்கள். அவர்கள் **அஹ்லுஸுன்னா அறிஞர்கள்** என்று அழைக்கப் படுகிறார்கள். மறுபுறம், தற்போது அறியக்கிடைக்கும் பொருத்தமற்ற பேச்சுக்கள் எழுத்துக்கள் **குர்ஆன் அல்-கரீமிலிருந்தும் ஹதீஸ்** ஷரீபிலிருந்தும் எடுக்கப்பட்டது என்று கூறப்படுகின்றது. ஆனால் உண்மையில் அவை அஹ்லுஸுன்னா அறிஞர்களின் நூல்களை படிக்காத அல்லது படித்து புரிந்து கொள்ள முடியாதவர்களால் தவறாக விளங்கி கொள்ளப்பட்டவைகள் ஆகும். இன்னும் இந்த பேச்சுக்கள் மற்றும் பிரசுரங்கள் எங்கள் சகோதர முஸ்லிம்களின் உறுதியான ஈமானுக்குமுன் பயனற்றவை. அவை அந்த முகவர்களின் அறியாமையை புலப்படுத்துவதை தவிர நமது இஸ்லாமிய சகோதர சகோதரிகள் மத்தியில் எந்த செல்வாக்கையும் கொண்டிருக்கவில்லை.

முஸ்லீம் என்று அழைக்கப்படும் ஒருநபரை அல்லது

தொழுகையை ஜமாஅத்துடன் நிறைவேற்றும் ஒருவரை முஸ்லிமாகவே பார்க்கவேண்டும். அவருடைய பேச்சு, எழுத்து அல்லது நடத்தையில் ஏதாவது அஹ்லுஸ்ஸுன்னா அறிஞர்களால் தெரிவிக்கப்பட்ட ஈமானுடைய விளக்கங்களுடன் உடன்படவில்லை என்றால் அது நம்பிக்கையின்மை அல்லது வழிகேடு என்றும், அதிலிருந்து விடுபட்டு மனம் திருந்துமாறும் அவருக்கு அறிவுரை கூறப்படும். அவருடைய குறுகிய மனம் மற்றும் தீவிரமான போக்கு காரண மாக அவர் அவ்வாறு செய்ய மறுத்தால் அவர் ஒரு வழி தவறியவர், அல்லது **முர்த்தத்** (மதம்மாறிய) துரோகி அல்லது காபிர்களுக்கு விலைபோனவர் என்று அறியப்படும். அவர் தொழுகையை தொடர்ந்தாலும், ஹஜ் மற்றும் அனைத்து வணக்கங்களை நற்செயல்களை புரிந்தாலும் அவர் அந்த பேரழிவிலிருந்து தப்பமாட்டார். அவர் அவநம்பிக்கையை ஏற்படுத்தும் செயல்களை நிறுத்தி மனம்வருந்தி பாவமன்னிப்பு (தவ்பா) கேட்டால் ஒழிய அவர் முஸ்லிமாகமாட்டார். ஆகவே அவநம்பிக்கையை ஏற்படுத்தும் விடயங்களை ஒவ்வொரு முஸ்லிமும் நன்கு கற்றுக்கொள்வதன் மூலம் வழிதவறுவதிலிருந்து தன்னை பாதுகாத்து கொள்வதுடன் முஸ்லிம்கள் போல் நடிக்கும் நிராகரிப்பவர்கள், பொய்யர்களை (விசேடமாக ஆங்கில உளவாளிகளை) இனம் கண்டு அவர்களிடமிருந்து விலகியிருக்கவும் வேண்டும்.

ரசூலுல்லாஹ் (ஸல்லள்ளாஹு அலைஹி வசல்லம்) அவர்கள் கூறினார்கள்; "**குர்ஆன்அல்-கரீம்** மற்றும் **ஹதீது ஷரீபுக்கு** பிழையானதும் தவறானதுமான அர்த்தங்கள் கொடுக்கப் படும். இதன் காரணமாக 72 வழிதவறிய பிரிவுகள் தோன்றும். இந்த ஹதீதுகள் **அல்-பரிகா** மற்றும் **அல்-ஹதிகா** எனும் கித்தாபுகளில் இரண்டு பிரசித்தி பெற்ற **புகாரி** மற்றும் **முஸ்லிம்** ஹதீது கிரந்தங்களை மேற்கோள் காட்டி விளக்கப்பட்டுள்ளது. அவ்வாறான பேச்சுக்கள் மற்றும் நூல்களை நாம் நம்பக்கூடாது. 'இஸ்லாத்தின் சிறந்த அறிஞர்' அல்லது பேராசிரியர்' என்று அறிமுகப்படுத்த படுவர்களில் சிலர் இந்த வழிதவறிய பிரிவில் உள்ளனர். இந்த திருடர்களின் வலையில் சிக்காமல் நாங்கள் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கம்யூனிஸ்டு சுதந்திரவாதிகள் மற்றும் கிறிஸ்த்தவ மிஷனரிகள் ஒருபுறமும், பிரிட்டிஷ் சதிகாரர்களுக்கும் யூத சியோனிஸ்டுகளுக்கும் தங்களை விற்றுக்கொண்ட வஹாபிகள் மறுபுறமும், முஸ்லிம் இளைஞர்களை பல்வேறு புதிய வழிகளில் தவறாக வழிநடத்த

முயல்கின்றனர். ஈமானையும் இஸ்லாத்தையும் அழித்தொழிப்பதற்கு போலி பிரச்சார கட்டுரைகள், தொலைக்காட்சி, வானொலி மற்றும் இணைய தளங்கள் போன்ற வற்றுக்காக மில்லியன் கணக்கில் செலவு செய்கிறார்கள். இஸ்லாமிய அறிஞர்கள் (ரஹிமஹுமுல்லாஹு த'ஆலா) அவர்களுக்கான பதில்களை அளித்து, அல்லாஹு தஆலாவின் மார்க்கத்தை வெற்றிக்கும் முக்திக்குமான வழி என்று நிரூபித்துள்ளனர்.

இவ்வாறான மிகச்சிறந்த அறிஞர்களுள் ஒருவரான மவ்லான தியா'அத்தீன் காலித் அல் பக்தாதி அல்உதுமானி (குத்திச சிர்ரஹு) அவர்களின் கிதாபான **இ'ஃதிகாத் நாமா**வை நாங்கள் தெரிவு செய்துள்ளோம். இது முதலில் துருக்கிய மொழியில் கமாவின் மறைந்த கௌரவ ஹாஜி ஃபைஸுல்லாஹ், அர்சின்கன், அவர்களினால் மொழி பெயர்க்கப்பட்டு **ஃபராயித் அல் ஃபவாயித்** என்ற தலைப்பில் அச்சிட்டு எகிப்தில் 1312ல் வெளியிடப்பட்டது. இதன் ஆங்கில மொழி பெயர்ப்பு Belief and Islam என்ற தலைப்பில் அதன் முதல்பதிப்பு 1966ல் வெளியிடப்பட்டது. நூலிலுள்ள உரைகளுக்கான விளக்கவுரைகள் அடைப்புக்குறிக்குள்[ ] கொடுக்கப்படுகின்றன. இந்த நூலை அதிகமாக நாங்கள் வெளியிடுவதற்கு உதவிய அல்லாஹ்வுக்கு அளவற்ற நன்றிகளை செலுத்துகின்றோம். **இ'ஃதிகாத்-நாமா**'வின் பாரசீகமொழி அசல்நூல் இஸ்தான்புல் பல்கலைக்கழக நூலகத்தில் உள்ளது (இப்னுல் அமின் மஹ்மூத் கமால் Dept F. 2639).

நற்குணம் கொண்ட அலாவுதீன் ஹஸ்கெபி (ரஹிமஹுல்லாஹு தஆலா) அவர்கள் எழுதிய **துர்ருல் முக்தார்** என்னும் நூலில் நிராகரிப்பவர்களின் திருமணம் பற்றிய பாடத் தின் முடிவில் எழுதப்பட்டுள்ளது: "ஒரு முஸ்லிம் பெண் சிறுமியாக இருந்த நிலையில் நிக்காஹ் செய்துகொண்டு, பின்னர், அவள் பருவமடைந்த போதும் இஸ்லாத்தை பற்றி அறியாதிருந்தால் அவளுடைய நிக்காஹ் வெற்றிடமாகி அவள் [ஈமானை இழந்தவள் ஆகின்றாள்]. அல்லாஹு தாலாவின் பண்புகள் அவளுக்கு கற்பிக்கப்பட வேண்டும். அவள் அவற்றை திரும்ப திரும்ப கூறி அவற்றை நான் நம்புகிறேன் என்று அவள் திரும்பவும் சொல்ல வேண்டும்." இதை விளக்கும்போது, இப்னு ஆபிதீன் (ரஹிமஹுல்லாஹு தஆலா) கூறினார்கள்: 'பெண் சிறியவளாக இருக்கும் போது, அவள் அவளுடைய பெற்றோரின் நம்பிக்கைக்கு உரியவள். அவள் ஒரு முஸ்லிம். அவள்

பருவம் அடைந்த பின்னர் பெற்றோரின் நம்பிக்கையை சார்ந்தவள் அல்ல. இஸ்லாத்தை பற்றி அறியாமல் அவள் பருவமடையும் போது, அவள் மார்க்கத்தை கைவிட்டவள் ஆகின்றாள். ஈமானின் ஆறு கோட்பாடுகளை கற்று அவள் இஸ்லாத்தின்படி வாழ்வது அவசியம் என்று நம்பாத வரை, அவள் கலிமத் அத்தவ்ஹீதை, அதாவது; **'லாஇலாஹ இல்லல்லாஹ், முஹம்மதுன் ரசூலுல்லாஹ்'** ['அல்லாஹு தாலா ஒருவன் இருக்கிறான், முஹம்மது (சல்லள்ளாஹு அலைஹி வசல்லம்) அல்லாஹ்வின் தூதர்" என்று கூறினாலும் முஸ்லிமாக மாட்டாள். அவள் ஈமானின் ஆறு அடிப்படைகளையும் கற்று நம்பிக்கை கொள்ளவேண்டும்; 'ஆமந்து பில்லாஹி ..., 'மற்றும் அல்லாஹு தஆலாவின் ஏவல்களையும் விலக்கல்களையும் நான் ஏற்றுக்கொள்கிறேன் என்று அவள் கூற வேண்டும்.

இப்னு ஆபிதீனின் இந்த விளக்கம் ஒரு காஃபிர் (அவன் அல்லது அவள்) கலிமத் அத்- தவ்ஹீதை கூறியவுடன் முஸ்லிமாகி விடுகிறார் என்பது அதன் அர்த்தத்தை சுருக்கமாக நம்புவது. ஆனால், மற்ற முஸ்லீம்களை போன்று கூடிய விரைவில், அவர்கள் **ஆமன்து**வின் அடிப்படைகளை மனப்பாடம் செய்ய வேண்டும்." (இவை ஈமானின் அவசியமான ஆறு கோட்பாடுகள்", பக். 22 ல்) விளக்கப்பட்டுள்ளது. பின்வரும் கலிமா மற்றும் அதன் பொருளை துல்லியமாக அறிவதுடன் மேலும் தேவையான இஸ்லாமிய போதனைகளை கற்க வேண்டும். **"ஆமந்துபில்லாஹி வமலாயிகத்திஹி வகுதுபிஹி வறுஸுலிஹி வல்- யவ்மில்-ஆகிரி வபில்-கத்ரி கைரிஹி வஷர்ரிஹி மினல்லாஹி தஆலா வல்-பஃ'து பஅதல்-மவ்த், ஹக்குன் அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ் வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வறஸுலுஹு"**. மேலும், ஒரு முஸ்லிம் சிறுவன் (அல்லது சிறுமி) இந்த ஈமானின் கொள்கைகள் ஆறையும் இஸ்லாமிய போதனைகளையும் கற்க வில்லை என்றால் மற்றும் அவற்றை நம்புகிறேன் என்று கூறவில்லை ஆயின், அவர்கள் பருவமடையும் வயதை அடைந்ததும் மார்க்கத்தை இழந்து விடுகிறார்கள். அவர்கள் கற்றுக்கொண்ட பிறகு (அவற்றை நம்புவது) மூலம் ஈமானை அடைந்தால், அவர்கள் உடனடியாக இஸ்லாமிய போதனைகள், அதாவது; ஏவல், விலக்கல்களை கேட்டு கற்றுக் கொள்வது ஃபர்ளு ஆகிவிடும். அதாவது; ஏவல் **ஃபர்ளு** மற்றும் விலக்கல் (**ஹராம்**), எப்படி வுளு செய்வது

என்பது (**வுளூ மற்றும்** குளிப்பு (**குஸ்ல்**) மற்றும் **தொழுகை** (ஸலாத்), மற்றும் எப்படி அவர்களது அவ்ரத்தை (நெருக்கமான உடல் பாகங்களை ) மறைப்பது என்பவற்றை கற்றுக்கொள்வது ஃபர்ளு.

ஒரு நபரிடம் (இந்த போதனைகளை பற்றி) கேட்கும்போது அந்த நபர் அவற்றை கற்பிப்பது அல்லது அதை கற்பதற்கு ஒரு உண்மையான இஸ்லாமிய புத்தகம் பற்றி ஆலோசனை கூறுவது அவருக்கு ஃபர்ளு ஆகின்றது. அவர்கள் கேட்பதற்கு எவரும் இல்லாத சந்தர்ப்பத்தில் அல்லது உண்மையான புத்தகம் கிடைக்கவில்லை என்றால், அதை தேடிப்படிப்பது அவர்களுக்கே ஃபர்ளு ஆகின்றது. அப்படி அவர்கள் தேடாமல் விட்டால் அவர்கள் ஈமான் அற்றவர்கள் ஆகிவிடுவார்கள். அதை கண்டு கொள்ளும் வரை அவர்கள் அறியாமல் இருப்பது அவர்களுக்கு மன்னிப்புக்கான காரணமாக (உதுர்) இருக்கும். கடமையான பர்ளுகளை அதற்குரிய விதிக்கப்பட்ட நேரத்தினுள் நிறைவேற்றாத மற்றும் தடை செய்யப்பட்ட ஹராமான விடயங்களை செய்யும் ஒரு முஸ்லிம் நரகில் தண்டிக்கப்படுவார். இந்நூல் ஈமானின் ஆறு கோட்பாடுகள் பற்றிய விரிவான தகவல்களை கொண்டுள்ளது. ஒவ்வொரு முஸ்லிமும் இந்நூலை நன்றாக படிப்பதுடன் தமது குழந்தைகளும் உறவினர்களும் தெரிந்தவர்களும் அதை படிப்பதற்கும் பிரயோசனம் அடைவதற்கும் தங்களால் இயன்றதை செய்ய வேண்டும்.

குர்ஆன் வசனங்களின் அர்த்தங்கள் எழுத்துக்களில், **மால்** என்று கூறப்படுகின்றது (**தஃப்சீருடைய** அறிஞர்களால் **குர்ஆன் அல்-கரீ**மின் விளக்கமாக அறிவிக்கப்பட்டது); குர்ஆன் ஆயத்தின் பொருள்/அர்த்தங்கள் ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம்) அவர்களால் மட்டுமே புரிந்து கொள்ளப்பட்டன. அவர்கள் அவற்றை ஹதீது ஷரீபு மூலம் அவருடைய ஸஹாபாக்களுக்கு போதித்தார்கள். தஃப்சீருடைய அறிஞர்கள் இந்த ஹதீதுகளை, மத்ஹபை பின்பற்றாத மார்க்கவாதிகள் (லா-மத்ஹபி), அதாவது ஆங்கிலேய காபிர்களிடம் தங்களை விற்றுக்கொண்ட முனாபிக்குகள் மற்றும் ஜிந்திக்குகளால் புனையப்பட்ட பொய்யான ஹதீதுகளிலிருந்து வேறுபடுத்தினார்கள். அவர்கள் எந்த ஹதீது களையும் கண்டுபிடிக்க முடியாதபோது, அந்த வசனங்களுக்கு, தஃப்சீரின் அறிவியலை (மேல்வாரியாக பிரயோகிப்பதன்) மூலம் அர்த்தங்களை வழங்கினார்கள். அறபு மொழி பேசும்

ஆனால் இஸ்லாமிய அறிவியலை கற்காதவர்கள் மற்றும் தஃப்சீர் பற்றிய அறிவு இல்லாதவர்கள் விளங்கி கொண்டவை **குர்ஆன் அல்-கரீமின்** தஃப்சீர் என்று அழைக்க படுவதில்லை. ஒரு ஹதீஸ் ஷரீஃபு கூறுகிறது: "**சொந்த புரிதலின்படி குர்ஆன் அல்- கரீமுக்கு விளக்கம் கூறுபவர் நம்பிக்கையற்றவர்.**"

அல்லாஹுத்தஆலா நம் அனைவரையும் அஹ்லு ஸுன்னாவின் அறிஞர்கள் காட்டிய நேர்வழியில் சேர்த்து வைப்பானாக! இஸ்லாத்தை அறியாதவர்கள், 'இஸ்லாத்தின் பெரும் அறிஞர்' போன்ற பெயர்களில்! வரும் மத்ஹபு இல்லாத முனாபிக்குகளின் மோசடிகளை, வஞ்சகமான பொய்களை நம்புவதிலிருந்து நம்மை பாதுகாப்பானாக. ஹக்கீகத் பிரசுரிப்பாளர்கள் பல்வேறு மொழிகளில் வெளியிட்ட அனைத்து நூல்களும், வெளியீடு களும் நூல்களாகவும், இணையம் மூலமும் உலகம் முழுவதும் விநியோகிக்கப்படுகின்றன.

உலக முஸ்லிம்கள் அனைவரும் தற்போது, மூன்று குழுக்களாக பிரிந்துள்ளனர். முதல் குழுவில் சஹாபாக்களின் அடிச்சுவடுகளை பின்பற்றும் உண்மையான முஸ்லிம்கள் உள்ளனர். அவர்கள் **அஹ்லுஸ்ஸுன்னா** அல்லது **ஸுன்னி முஸ்லிம்** அல்லது **ஃபிர்கத் அன்-நஜியா**; அதாவது நரகத்திலிருந்து பாதுகாக்கப்படுபவர்கள். இரண்டாவது குழு சஹாபாக்களின் எதிரிகளை உள்ளடக்கியது. அவர்கள் ஷியாக்கள் (ஷீயிகள்) என்று அழைக்கப்படுகிறார்கள் அல்லது ஃபிர்கத் அல்-ளல்லா (வழி தவறிய குழு). மூன்றாவது குழு ஸுன்னிகளுக்கும் ஷியாக்களுக்கும் விரோதமானவர்கள்.; அவர்கள் வஹாபிகள் அல்லது நஜ்திகள் என்று அழைக்கப்படுகின்றனர். ஏனெனில் அவர்கள் முதலில் தோன்றியது அரேபியாவில் நஜ்த் எனும் ஊரில். அவர்கள் ஃபிர்கத் அல்-மலுனா (சபிக்கப்பட்ட குழு) என்றும் அழைக்கப்படுகின்றனர். ஏனெனில், அவர்கள் முஸ்லிம்களை 'காஃபிர்கள்' என்று அழைக்கின்றார்கள்.

எங்கள் **முடிவற்ற பேரின்பம்** மற்றும் **மீள் எழுதல் மற்றும் மறுமை** வெளியீடுகளில் எழுதப்பட்டுள்ளது. முஸ்லிம்களை இவ்வாறு அழைப்பவர்களை நபி (ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம்) அவர்கள் சபித்தார்கள். யூதர்களும் ஆங்கிலேயர்களும் முஸ்லிம்களை இந்த மூன்று குழுக்களாக பிரித்தனர். ஒவ்வொரு முஸ்லிமும் அவர்களின் நஃப்சின் தஸ்கியா (சுத்திகரிப்பு)க்காக எப்போதும் "**லா இலாஹ**

**இல்லல்லாஹ்**" என்று கூற வேண்டும். அது அவர்களின் இயற்கையில் உள்ளார்ந்த பாவங்களிலிருந்தும் அறியாமை யிலிருந்தும் அவர்களை தூய்மைபடுத்தும். மேலும் உள்ளத்தின் சுத்திகரிப்புக்காக **அஸ்தஃபிருல்லாஹ்** என்பதை எப்போதும் திரும்ப திரும்ப கூறிக்கொண்டே இருக்க வேண்டும். இது நப்ஸு, தீய தோழர்கள் மற்றும் தீய நூல்களினால் உண்டாகும் நம்பிக்கையின்மை மற்றும் பாவங்களிலிருந்து உள்ளத்தை பாதுகாக்கும். இஸ்லாத்திற்கு கீழ்ப்படிந்து மனம் திருந்துபவர்களால் செய்யப்படும் பிரார்த்தனைகள் அல்லாஹு தஆலாவினால் ஏற்றுக்கொள்ளப்படும். தொழுகையை நிறைவேற்றாதவர்கள், திரை யின்றி பெண்களையும் மற்றவர்களின் அவ்றத்தையும் பார்க்கின்றவர்கள், ஹராமான உணவையும் பானங்களையும் அருந்துபவர்கள், மற்றும் இஸ்லாத்திற்கு கீழ்படியாதவர்கள் ஆகியோருடைய பிரார்த்தனைகள் ஏற்கப்படமாட்டாது.

| கிரிகோரியன் | ஹிஜ்ரி சூரிய | ஹிஜ்ரி சந்திரன் |
|---|---|---|
| 2001 | 1380 | 1422 |

# அறிமுகம்

[அல்லாஹ்வின் நல்லருளை நாடும் அழகான தொடக்கத்திற்காக மவ்லானா காலித் அல்-பக்தாதி (குத்திச சிர்ருஹு) தனது நூலை அல்-இமாம் அர்-ரப்பானி அஹ்மத் அல்-ஃபாருகி அஸ்-சிர்ஹிந்தி (ரஹ்மதுல்லாஹி அலைஹி, (1624/1034) எழுதிய 'மக்துபாத்'தின் மூன்றாவது தொகுதியில் 17வது கடிதத்தை மேற்கோள்காட்டி தொடங்குகிறார். அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தது:]

எனது கடிதத்தை பிஸ்மில்லாவுடன் தொடங்குகிறேன். எல்லையற்ற மகிமையும் நன்றியும் எமக்கு எல்லாவிதமான அருட்கொடைகளையும் வழங்கிய அல்லாஹு தஆலாவுக்கே, அவன் எம்மை முஸ்லிம்களாக்கி கௌரவித்ததுடன் எம்மை முஹம்மது (ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்) அவர்களின் உம்மாவாக படைத்து மதிப்பளித்தான். இது மிக உயர்ந்த பாக்கியமாகும்.

அல்லாஹு தஆலாவே அனைவருக்கும் அனைத்து நலவுகளையும் உதவிகளையும் அனுப்புகிறான் என்பதை தியானித்து உணரவேண்டும். அவனே அனைத்தையும் படைக்கின்றான். அவனே ஒவ்வொரு படைப்பையும் ஒவ்வொரு கணத்திலும் நிலைத்திருக்க வைப்பவன். மனிதர்களின் உயர்ந்த நற்குணங்கள் அனைத்தும் அவனுடைய அருள்பாலிப்பும் உதவிகளும் ஆகும். நமது வாழ்க்கை, அறிவு, வலிமை, பார்க்கும் உணர் வுகள் கேட்கும் செவிப்புலன் மற்றும் பேச்சு அனைத்தும் அவனிடம் இருந்தே வந்தவை. அவன் எண்ணற்ற அருட்கொடைகளையும் நற்பேறுகளையும் எப்போதும் தருபவன். கஷ்டங்கள் துன்பங்களிலிருந்து அவனே காப்பாற்றுகின்றான். அவன் பிரார்த்தனைகளை ஏற்றுக்கொள்கிறான். துன்பம் மற்றும் பேரழிவுகளை விலக்கி வைக்கின்றான். அவன் மட்டுமே நமக்கு தேவையான ஆகார வகைகள் அனைத்தையும் படைத்து அவை நம்மை வந்தடைய செய்கிறான். அல்லாஹு தஆலாவின் அருள் எல்லையற்றது அவன் பாவம் செய்பவர்களுக்கு கூட அந்த ரிஸ்கை துண்டிக்காத அளவுக்கு தாராளமானவன். அவன் நமது பாவங்களை மறைப்பது அவனுடைய மிகப்பெரும்

கருணை. அவனுடைய ஏவல் களுக்கு கீழ்ப்படியாதவர்களை, அல்லது தடைகளிலிருந்து விலகி இருக்காதவர்களை அவமானப்படுத்தவோ, இழிவுபடுத்தவோ, அல்லது நேர்மையின் திரையை கிழிக்கவோ இல்லை. அவன் மிகவும் மன்னிப்பவன் இரக்கமுள்ளவன். அவனுடைய தண்டனைக்கு உரியவர்களை தண்டிப்பதற்கு அவசரப்படுவதில்லை. அல்லாஹுதஆலா தனது அருட் கொடைகளை உதவிகளை அவன் விரும்புபவர்கள் மீதும், அவனுடைய எதிரிகள் மீதும் இறக்கி அருள்கிறான். யாருக்கும் எதுவும் தப்புவதில்லை. அவனுடைய மிக உயர்ந்த அருட்கொடைகளில் மிகவும் மதிப்பு மிக்கது அவன் நமது இரட்சிப்புக்கான சரியான பாதையை காட்டுவதுடன், நம்மை வழி தவறாமல் இருக்கவும் சுவர்க்கம் செல்லவும் ஊக்குவிப்பதாகும். சொர்க்கத்தில் முடிவற்ற நற்சுகண்டிகள் இன்பங்கள் அனைத்தையும் நாம் அடையவதற்கு, அவனுடைய கருணையையும் அன்பையும் பெறுவதற்கு எங்கள் அன்புக்கு பாத்திரமான நபி (ஸல்லல் லாஹுதஆலா அலைஹி வஸல்லம்) அவர்களின் பாதையை பின்பற்றுமாறு நமக்கு கட்டளையிடுகின்றான். அவனுடைய நற்கொடைகள் அனைத்தும் சூரியனை போல் வெளிப்படையானவை. மற்றவர்களிடமிருந்து நமக்கு கிடைக்கும் உதவிகள் உண்மையில் அவனிடமிருந்தே வருகின்றன. அல்லாஹு தாலா, அவனுடைய படைப்புகளை இடைநிலைகளாக்கி அவர்களுக்கு உதவிசெய்யும் விருப் பத்தை ஏற்படுத்தி, சத்தியையும் வலிமையையும் கொடுப்பவன். இக்காரணத்தினால் அவன் எல்லா இடங்களிலும் அனைத்து மக்கள் வழியாகவரும் எல்லா நற்கொடை களையும் அனுப்புகின்றவனாக இருக்கிறான். அல்லாஹு தஆலாவை தவிர வேறு எவரிடமிருந்து எந்த அனுகூலத்தையும் எதிர்பார்ப்பது, காவலனிடமிருந்து யாசிப்பது அல்லது ஏழைகளிடமிருந்து தர்மம் கேட்பது போன்றது. படித்த, படியாத புத்திசாலிகள், விளங்குவதற்கு ஆர்வமுள்ளவர்கள் நாங்கள் சொல்வது சரி என்பதை உணர்வார்கள். ஏனெனில், சொல்லப்பட்ட விஷயங்கள் வெளிப்படையான உண்மை. அவற்றை பற்றி சிந்தியுங்கள்.

இந்த அருட்கொடைகளை வழங்கிய அல்லாஹு தஆலாவுக்கு இயன்றவரை நன்றி செலுத்துவது அனைவரின் கடமையாகும். இது கடமை என்பது அறிவு ஞானத்தின் கட்டளை. ஆனால் இந்த நன்றியை

செலுத்துவது எளிதல்ல, ஏனெனில் மனிதன், முதலில் இல்லாமையிலிருந்து படைக்கப்பட்டதன் காரணமாக அவன் பலவீனமானவன், எளிமை யானவன் தவறுகள் குறைபாடுகள் உள்ளவன். மாறாக, அல்லாஹு தஆலா எப்போதும் நித்தியமாக உள்ளவன், குறைபாடுகள் அவனை நெருங்காது. எல்லா வகையான மேன்மையும் அவனுக்கே உரியது. மனிதர்கள் எந்த வகையிலும் அவனுக்கு ஒப்பீடோ அல்லது அதற்கு அருகிலும் இல்லை. மிகவும் கீழ்த்தரமான மனிதர்களுக்கு அல்லாஹு தஆலாவை போன்று உயர்வான, அவனுடைய தகுதிக்கு ஏற்ப கண்ணியமான முறையில் நன்றி செலுத்த முடியுமா? மனிதர்கள் அழகானது மதிப்புமிக்கது என்று கருதும் பல விடயங்கள் உள்ளன. ஆனால் அவை தீயவை என்பதை அல்லாஹு தஆலா அறிந்திருக் கின்றான். அவற்றை அவன் விரும்பவில்லை. மேலும், மரியாதை அல்லது நன்றியுணர்வு என்று நாம் கருதும் பல விடயங்கள் பொதுவாக அவனுக்கு பிடிக்காதவையாகவும் இருக்கலாம். இக்காரணத்தினால், மனிதர்கள், தங்கள் குறைபாடுள்ள மனம் மற்றும் குறுகிய பார்வை, காரணமாக அல்லாஹு தஆலாவிற்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவிக்கும் முறைகளை பகுத்தறிய முடியாது. நன்றி, மரியாதை செலுத்தும் வழிகளை அவன் எங்களுக்கு காண்பிக்கா விட்டால் புகழ்வது என்று கருதும் செயல்கள் அவதூறா கவும் இருக்கலாம்.

அல்லாஹுதஆலாவுக்கு நன்றி செலுத்துவது இதயம், நா, உடல் ஆகியவற்றினால் நிறை வேற்ற வேண்டும் என்று நம்பிக்கை கொள்ளப்பட்ட மார்க்க கடமைகளை அல்லாஹு தஆலா வரையறுத்து அவனுடைய அன்புக்குரிய தூதர் (ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வசல்லம்) அவர்களுக்கு அறிவித்தான். அல்லாஹு தஆலாவினால் நபியவர்களுக்கு கட்டளையிடப்பட்ட மார்க்க கடைமைகள் **இஸ்லாம்** என்று அழைக்கப்படுகிறது. அவனுடைய நபியவர்கள் கற்பித்த வழியை பின்பற்றி ஒருவர் அல்லாஹ்வுக்கு நன்றி கூறுகிறார். இந்த வழியில் பொருந்தாத அதற்கு வெளியேயான எந்த நன்றியையும், வழிபாட்டையும் அல்லாஹுதஆலா ஏற்கவோ விரும்பவோ மாட்டான். ஏனெனில் மனிதர்கள் நல்லதாக அழகானதாக கருதும் பல விஷயங்கள் உள்ளன. ஆனால் அவற்றை இஸ்லாம் ஏற்கவில்லை மாறாக அசிங்கமாக கருதுகிறது. எனவே, அல்லாஹு தஆலா வுக்கு நன்றி செலுத்துவதில்,

பகுத்தறிவு உள்ளவர் ஹஸ்ரத் முஹம்மது (அலைஹி ஸலாம்) அவர்களை பின்பற்றி தங்களை மாற்றிக்கொள்ள வேண்டும். அவரது வழி இஸ்லாம் என்று அழைக்கப்படுகிறது. முஹம்மது (அலைஹி-ஸலாமை) பின்தொடர்பவர் முஸ்லிம் என்று அழைக்கப்படுகிறார். முஹம்மது (அலைஹி-ஸலாமை) பின்பற்றி அல்லாஹூதஆலாவுக்கு நன்றி செலுத்துவது இபாதா (வணக்கம்) என்று அழைக்கப் படுகிறது. இஸ்லாமிய போதனையில் இரண்டு பகுதிகள் உள்ளன: மார்க்கம் (மதம்) மற்றும் அறிவியல்[1]. மார்க்க போதனையில் இரண்டு பகுதிகள் உள்ளன:

1) இதயத்தால் நம்பிக்கைகொள்ள வேண்டிய **ஈமானின்** போதனைகள் **உசூல் அத்தீன்** என்று அழைக்கப்படும். சுருக்கமாக, **ஈமான்** என்பது முஹம்மது (அலைஹி- ஸலாம்) அவர்கள் போதித்த ஆறு கோட்பாடுகளை நம்புவதாகும். இஸ்லாத்தை ஏற்பதற்கும் நிராகரிப்பின் அடையாளங்களை பயன்படுத்துவதை தவிர்க்கவும் அவர் கற்பித்தார். ஈமான் கொண்ட ஒரு நபர் **முஸ்லிம்** என்று அழைக்கப்படுகிறார்.

2) வழிபாட்டு நடைமுறைகள், மற்றும் உடலாலும் இதயத்தாலும் செய்யக்கூடாதவைகள் பற்றிய போதனைகள். நிறைவேற்ற வேண்டிய கட்டாய கடமைகள் **ஃபர்ளு** என்றும், தவிர்க்க வேண்டியவை **ஹராம்** என்றும் அழைக்கப் படுகின்றன. இந்த போதனைகள் **ஃபுரூஅத்தீன்** அல்லது **அஹ்காம் அல்-இஸ்லாமியா**, இஸ்லாமிய போதனைகள் எனப்படுகின்றது. [ஒவ்வொருவரும் முதலில் செய்ய வேண்டியது கலிமா தவ்ஹீதின் அர்த்தத்தை விளங்குவதும் அதை நம்புவதுமாகும். **கலிமா அத்தவ்ஹீத்** என்பது: **“லா இலாஹ இல்லல்லாஹ், முஹம்மதுன் ரசூலுல்லாஹ்,”** அதன் பொருள்: “அல்லாஹூ தாலா ஒருவன் இருக்கின்றான், முஹம்மது (அலைஹி சலாம்) அவனுடைய தூதர் ஆகும் என்பது.”

இந்த உண்மையை நம்புபவர் “ஈமான் கொண்டவராகவும் முஸ்லிமாகவும் ஆகிவிடுவார்”. ஈமான் உள்ள ஒருவர் **மு’ஃமின்** (நம்பிக்கை

---

[1] சமய சீர்திருத்தவாதிகள் மார்க்க போதனையை ‘ஸ்காலஸ்டிக்’ (அறிவியல்) போதனை என்றும் விஞ்ஞான போதனைகள் ‘பகுத்தறிவு போதனைகள்’ என்று அழைக்கின்றனர்.

கொண்டவர்) மற்றும் **முஸ்லிம்** என்றும் அழைக்கப்படுவார். ஈமான் தொடர்ச்சியாக இருக்க வேண்டியது அவசியம். எனவே, அவநம்பிக்கையை ஏற்படுத்தும் செயல்களையும் அதை குறிக்கும் விஷயங்களையும் தவிர்க்க வேண்டும்.

**குர்ஆன் அல்கரீம்** என்பது **கலாம் அல்-இலாஹி** (தெய்வீக உரை அல்லாஹு தஆலா வின் வார்த்தை). அல்லாஹு தஆலா **குர்ஆன் அல்-கரீமை** ஜிப்ரீல் (அலைஹி-ஸலாம்) என்ற மலக்கு மூலம் முஹம்மது (அலைஹி-ஸலாம்) க்கு அனுப்பி வைத்தான். **குர்ஆன் அல்-கரீமில்** உள்ள வார்த்தைகள் அரபு மொழியில், ஆயத்துகளாக (வசனங்களாக), சொற்கள் எழுத்துக்கள் ஒருங்கிணைக்கப்பட்டு அல்லாஹு தஆலாவினால் இறக்கி வைக்கப்பட்டது. இந்த எழுத்துக்கள் மற்றும் வசனங்கள் கொடுக்கும் அதன் அர்த்தம் **கலாம்அல்-இலாஹி**யை வெளிப்படுத்துகின்றன. இந்த எழுத்துக்கள் மற்றும் வசனங்கள் **குர்ஆன் அல்-கரீம்** என்று அழைக்கப்படுகின்றது. கலாம் அல்-இலாஹியை வெளிப்படுத்தும் அர்த்தங்கள் **குர்ஆன் அல்-கரீம்** ஆகும். அத்துடன், கலாம் அல்-இலாஹி என்ற இந்த **குர்ஆன் அல்-கரீம்** ஒரு படைப்பு அல்ல. அல்லாஹு தஆலாவின் மற்ற பண்புகளை போன்று இதுவும் நித்தியமானது. ஆண்டுக்கு ஒருமுறை ஜிப்ரயில் (அலைஹிஸலாம்) வருகை தந்து ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட குர்ஆன் அல்-கரீமின் பகுதியை லவ்ஹுல் மஹ்பூலில் (சொர்க்கத்தில் அனைத்து விஷயங்களும் பொறிக்கப்பட்டுள்ள இடம்) பதிவு செய்யப்பட்ட அதே வரிசையில் ஓதுவார். எங்கள் நபியும் அதை மீண்டும் ஓதுவார். எமது நபி அவர்கள் இவ்வுலகை விட்டும் மறைந்த வருடம் ஜிப்ரயில் (அலைஹி ஸலாம்) இரண்டு முறை வந்து **குர்ஆன்அல்-கரீம்** முழுவதையும் ஓதினார். எங்கள் அருள்பாலிக்கப்பட்ட நபியும் பெரும்பாலான சஹாபாக்களும் குர்ஆன் அல்-கரீமை முழுமையாக மனனம் செய்திருந்தார்கள். நபி அவர்கள் தனது மறைவு மூலம் மறுமையை கௌரவித்த வருடம் அபூபக்கர் அஸ்-சித்தீக் (ரலியல்லாஹுத'ஆலா அன்ஹு) அவர்கள் குர்ஆன் அல்கரீமை மனனம் செய்தவர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்தார். குர் ஆன் அல்-கரீம் ஏற்கனவே எழுதப்பட்ட பகுதிகளை சேகரித்து முழுவதுமாக எழுதுவதற்கு ஒரு குழுவை அமைத்தார். இவ்வாறு குர்ஆன் அல்-கரீமுக்கு எழுதப்பட்ட எழுத்து பிரதியாக முஸ்ஹாஃப் அமைந்தது. அந்த முஸ்ஹாஃப் பிரதியின் ஒவ்வொரு

எழுத்தும் சரியான இடத்தில் இடம்பெற்றன என்று முப்பத்து மூவாயிரம் சஹாபிகள் ஒருமித்த கருத்தை தெரிவித்தனர்.

நபி முஹம்மது (அலைஹிசலாம்) அவர்கள் கூறியவைகள் **ஹதீது ஷரீஃப்** என்று அழைக்க படுகின்றது. அல்லாஹுதஆலாவினால் அறிவிக்கப்பட்டு முஹம்மது (அலைஹி சலாம்) அவர்களின் வார்த்தைகளால் கூறப்பட்டவை **ஹதீஸ் குத்ஸி** என்று அழைக்கப்படுகின்றது. பல ஹதீஸ் கிரந்தங்கள் எழுதப்பட்டுள்ளன. **அல்-புகாரி** மற்றும் **முஸ்லீம்** என்பவை அதிகம் பிரபல்யமானவை. அல்லாஹு தஆலாவின் கட்டளைகளில், நம்பிக்கை கொள்ள வேண்டிய போதனைகள் ஈமான் என்று அழைக்கப்படுகின்றது. கட்டளையிடப்பட்டவை (ஏவல்) கடமைகள் (**ஃபர்ளு**) என்றும், தடுக்கப்பட்டவை (**ஹராம்**) என்றும் அழைக்கப் படுகின்றன. ஃபர்ளு மற்றும் ஹராம் **அஹ்காம் அல்-இஸ்லாமிய்யா** என்று அழைக்கப்படுகிறது. இஸ்லாமிய போதனைகளில் ஒன்றைக்கூட நம்பாதவர் **காஃபிர்** (நிராகரிப்பவர், இஸ்லாத்தின் உண்மையை மறுப்பவர்) என்று அழைக்கப்படுகிறார்.

ஒருவர் செய்ய வேண்டிய அத்தியாவசியமான இரண்டாவது விடயம், அவருடைய இதயத்தை தூய்மைப்படுத்துவது. 'இதயம்' என்ற சொல்லுக்கு இரண்டு அர்த்தங்கள் உண்டு. எங்களில் மார்பில் உள்ள சதைத்துண்டு, கிட்டத்தட்ட எல்லா மக்களாலும் இதயம் என்று அழைக்கப்படுகிறது. இந்த அர்த்தத்தில் உள்ள இதயம் விலங்குகளிலும் உள்ளது. இரண்டாவது 'இதயம்' கண்ணுக்கு தெரியாமல் சடத்துவ இதயத்தில் தங்கியுள்ளது. இந்த இரண்டாவது இதயமே '**ஆன்மீக இதயம்**' என்று அழைக்கப்படுகிறது. இந்த இதயத்தை பற்றியே மார்க்க நூல்களில் எழுதப்பட்டுள்ளது. இந்த இதயம் இஸ்லாமிய போதனை களுக்கு உரிய இடம். நம்பிக்கை கொள்வதும் மறுப்பதும் இந்த இதயம்தான். நம்பிக்கை கொண்ட இதயம் தூய்மையானது. நம்பிக்கையற்ற இதயம் அழுக்கானது மற்றும் 'இறந்துவிட்டது. கடுமையாக முயற்சி செய்து இதயத்தை தூய்மைப்படுத்துவது நமது முதல் கடமையாகும். வணக்கங்கள், குறிப்பாக தொழுகையை நிறைவேற்றுவது மற்றும் இஸ்திஃபார் எனும் பிரார்த்தனை செய்வது இதயத்தை தூய்மை படுத்துகின்றது. ஹறா மான விடயங்களில் ஈடுபடுவது இதயத்தை அழுக்கடைய செய்கின்றது. நபி (ஸல்லல் லாஹு அலைஹி வசல்லம்) அவர்கள்: "அடிக்கடி

இஸ்திஃபார் செய்யுங்கள்" என்று கூறினார்கள்! ஒருவர் இஸ்திக்ஃபார் தொடர்ந்து கூறினால் அல்லாஹுு தஆலா அவரை அனைத்து நோய்கள் மற்றும் பேரழிவுகளிலிருந்து பாதுகாக்கின்றான். அவர் எதிர்பார்க்காத இடங்களிலிருந்து அவருக்கு ரிஸ்கை அனுப்புகிறான்." இஸ்திஃபார் என்பது "(அல்லாஹுு தஆலாவே என்னை மன்னிப்பாயாக!) என்று கூறுவதாகும். பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு பிரார்த்திப்பவர் முதலில் முஸ்லிமாக இருக்க வேண்டும். பாவங் களுக்காக மனம் வருந்தி, பிரார்த்தனையை அதன் அர்த்தம் அறிந்து அதில் நம்பிக்கை கொண்டு செய்ய வேண்டும். இருண்ட இதயத்துடன் செய்யப்படும் பிரார்த்தனைகள் ஏற்றுக்கொள்ள தக்கதல்ல. தினசரி ஐந்துநேர தொழுகைக்கு பிறகு மூன்று முறை "**அஸ்தஃபிருல்லாஹ்**" என்று சொன்னால் அவர்களின் இதயம் தூய்மையாகி இதயமே பிரார்த்தனையை சொல்லத்தொடங்கும். இதயம் ஒன்றுபடாமல் வாயினால் மாத்திரம் செய்யப்படும் பிரார்த்தனையில் பயன் இல்லை.

இஸ்லாமிய மார்க்கம் அறிவித்த மதபோதனைகள் அஹ்லுஸ்ஸுன்னா அறிஞர்களின் நூல்களில் போதனைகளாக எழுதப்பட்டுள்ளன. அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்கள் அறிவித்த ஈமான் (நம்பிக்கைகள்) மற்றும் இஸ்லாம் (வழிபாடுகள்) ஆகியவற்றை, 'நாஸ்' (குர்ஆனின் ஆயத்துகள்-மற்றும் ஹதீஸ் ஷரீஃபில்) எந்த ஒன்றையாவது வெளிப்படையான அர்த்தங் களுடன் ஒருவர் நம்பிக்கை கொள்ளாவிட்டால் காஃபிர் ஆகிவிடுவார். ஒருவர் தனது அவநம்பிக்கையை மறைத்தால் அவர் முனாபிக் என்று அழைக்கப்படுவார். தனது அவநம்பிக்கையை மறைத்து, தன்னை ஒரு முஸ்லிமாக காட்டிக் கொண்டு அதன் மூலம் முஸ்லிம்களை ஏமாற்ற முயல்பவர் zசிந்தீக் என்று அழைக்கப்படுவார். நாஸின் தெளிவற்ற அர்த்தம் காரணமாக தவறாக நம்புவதனால் ஒருவர் காபிராகமாட்டார். ஆனால், அஹ்லுஸுன்னாவின் உண்மையான வழியிலிருந்து விலகுபவர் நரகம் செல்வார். வெளிப்படையான அர்த்தங்களை கொண்ட நாஸ்களில் நம்பிக்கை காரணமாக அந்த நபர் நிரந்தரமாக நரகின் தண்டனையில் இருக்கமாட்டார் அவர் நரகத்திலிருந்து மீட்கப்பட்டு சொர்க்கத்துக்கு கொண்டு செல்லப்படுவார். இந்த வகையான மனிதர்கள் மதவெறியர்கள் (அஹ்ல் அல்-பித்'ஆ)

அல்லது வழிதவறிய குழுக்கள் (ளலாலா) என்று அழைக்கப்படுகிறார்கள். 72 வழிதவறிய பிரிவினர் தோன்றி உள்ளனர். இவர்களினால் செய்யப்படும் எந்த வழிபாட்டு செயல்களும், உதவிகள், அல்லது சேவைகள் எதுவும், மற்றும், நம்பிக்கையற்ற அல்லது நிராகரிப்பவர்களால், முர்த்தத் துரோகிகளால் செய்யப்படும் மனித நேய மற்றும் வழிபாட்டு செயல்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அது மறுமையில் அவர்களுக்கு எந்த நன்மையையும் கொடுக்காது.

சரியான நம்பிக்கையை கொண்ட முஸ்லிம்கள் அஹ்லுஸ் ஸுன்னத் வல்-ஜமாஅத் அல்லது ஸுன்னி என்று அழைக்கப்படுகிறார்கள். முஸ்லிம்கள் வழிபாட்டு முறைகளில் நான்கு மத்ஹபுகளில் வேறுபட்டுள்ளனர் (பக். 50-54 பார்க்க). நான்கு மத்ஹபுகளில் ஏதேனும் ஒன்றை பின்பற்றுபவர் மற்ற மூன்று மத்ஹபுகளும் அஹ்லு ஸுன்னாவை சேர்ந்தவை என்றும் ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துபவர்கள் என்றும் அறிவார்கள். இந்த நான்கு மத்ஹபுகள் ஒன்றிலும் இல்லாதவர் ஸுன்னி முஸ்லிம் அல்ல. அஹ்லுஸ் ஸுன்னா அல்லாத நபர்; ஒன்றில் (காஃபிர்) அல்லது வழி தவறியவர் (பித்அத்).[1]வாதி.

நான்கு மத்ஹபுகளில் ஒன்றின்படி வழிபாடு செய்பவர் அந்த வழிபாட்டு முறைகளில் ஏதேனும் தவறுகள் செய்தாலோ அல்லது பாவங்களை செய்தாலோ அந்நபர் மன்னிக்கப் படுவார். ஒருவர் மனம் திருந்தவில்லை என்றால் அல்லாஹுதஆலா நாடினால் மன்னித்து விடலாம். அந்த நபரை ஒருபோதும் நரகத்தில் சேர்க்காமலும் விடலாம். அல்லது அவன் செய்த பாவங்களுக்கு நரகில் தண்டனயை அனுபவித்தபின் நரகிலிருந்து விடுவிக்க ப்படுவார். இஸ்லாத்தில் அடிப்படையானவை என்று படியாதவர்கள் கூட நம்பிக்கை கொள்ளும் அத்தியாவசியமான தெளிவான போதனைகளில் ஒன்றைக்கூட நம்பாதவர் **காபிர்** அல்லது முர்த்தத்

---

[1] இது அல்-இமாம் அர்-ரப்பானி (ரஹ்மதுல்லாஹி அலைஹியின் கடிதங்களில் (**மக்துபாத்**) எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக முதல் 286வது கடிதங்களின் தொகுதி, அத்துடன் **துர்ருல்முக்தார்** புத்தகத்திற்கான அத்-தஹ்தாவியின் சிறு விளக்க குறிப்பில் (ஜபாயிக் என்ற அத்தியாயத்தில்) மற்றும் **அல்-பசாயிர்லி-முன்கிரி தவாஸ்ஸுலி பிஅஹ்லில் மகாபிர்**, ஆவணங்களுடன் எழுதப்பட்டுள்ளது. கடைசி இரண்டு புத்தகங்களும் அரபு மொழியில் மொழியில் வெளியிடப்பட்டவை. கடைசி நூல், முதலில் இந்தியாவில் அச்சிடப்பட்டது. இஸ்தான்புல்லில் உள்ள

(மார்க்கமற்றவர்). அவர் நரகில் நித்தியமாக தண்டிக்கப்படுவார்.

காஃபிர்களில் இரண்டு வகையினர் உள்ளனர்: வேதங்கள் கொடுக்கப்பட்ட காஃபிர்கள் மற்றது வேதம் இல்லாதவர்கள். முஸ்லீம் பெற்றோருக்கு பிறந்து, பின்னர் இஸ்லாத்தை கைவிட்டு **காஃபிர்** ஆகின்ற ஒருவர் "**முர்த்தத்**" ஆவார்.

இப்னு ஆபிதீன் (ரஹிமஹுல்லாஹு) அவர்கள் ஷிர்க்கின் காரணமாக திருமணம் தடை செய்யப்பட்டது பற்றி எழுதியுள்ளார்கள். "முர்த்தத், முல்ஹித் (பக்கம். 27 அடிக்குறிப்பை பார்க்க), ஜின்தீக், நெருப்பு வணங்கிகள், சிலை வணங்குபவர்கள், பண்டைக்கால கிரேக்க தத்துவ வாதிகள், முனாபிக்குகள், வழிதவறலின் காரணமாக நிராகரிப்பில் சேர்ந்து கொண்ட 72 வழிதவறிய பிரிவினர், பிராமணர்கள், பௌத்தர்கள், பாத்தினிகள் இபாஹதிஸ் மற்றும் துர்சிஸ் ஆகியோர் வேதப்புத்தகம் இல்லாத காபிர்கள்." கம்'யூனிஸ்டுகள் ப்ரீமேசன்கள் ஆகியோரும் வேதமில்லா காபிர்கள். **தோரா**வை நம்பும் யூதர்களும், **பைபிளை** நம்பும் கிறிஸ்தவர்களும் (தற்போது மாற்றப்பட்டு கறைபடுத்தப்பட்டவை) வேதத்தையுடைய காபிர்கள். வேதத்தை உடைய காபிர்கள் சில படைப்புகளை தெய்வமாக வணங்குபவர்கள் **முஷ்ரிக்** (அல்லாஹ்வுக்கு பங்காளிகள் மற்றும் துணைகளை சேர்ப்பவர்கள்) ஆவார்கள்.

ஒரு வேத புத்தகத்தை உடைய அல்லது இல்லாத காஃபிர், இஸ்லாத்தை தழுவினால் அவர் நரகத்திற்கு செல்வதில் இருந்து தப்பித்துக் கொள்வார். அந்த நபர் பாவம் இல்லாத தூய முஸ்லிமாக மாறுகிறார். ஆனால் அந்த நபர் ஒரு உண்மையான **ஸுன்னி** முஸ்லிமாக வேண்டும். ஸுன்னி முஸ்லிமாக மாறுவது என்றால் அஹ்லுஸ்ஸுன்னா அறிஞர்களில் ஒருவரால் எழுதப்பட்ட நூற்களை வாசித்து கற்று அதற்கேற்ப ஈமான் நம்பிக்கை), செயல்கள் மற்றும் வார்த்தைகளை மாற்றியமைக்க வேண்டும். இவ்வுலகில் ஒரு நபர் முஸ்லிமா அல்லது இல்லையா என்பது, வற்புறுத்தல் இல்லாத நிலையில் அவருடைய வார்த்தைகளிலிருந்து தெளிவான புரிந்து கொள்ளப்படுகின்றது. அவர் இவ்வுலகை விட்டு பிரியும் அவருடைய இறுதி மூச்சில் அவர் ஈமானுடன் அடுத்த உலகிற்கு சென்றாரா என்பதில் அது உறுதியாகிறது. கடுமையான பாவங்களை செய்த ஒரு முஸ்லீம் தூய்மையான

இதயத்துடன் வருந்தினால், அவருடைய பாவங்கள் நிச்சயமாக மன்னிக்கப்படும். இது **இல்முல்-ஹால்** புத்தகங்களில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது (உதாரணமாக, 21-22 ம் பக்க உரையின் அடிக்குறிப்பை பார்க்கவும். மற்றும் **Endless Bliss** இல் **தவ்பா** என்பது என்ன மற்றும் எப்படி செய்வது என்பது விளக்கப்பட்டுள்ளது.]

# ஈமான் இஸ்லாம்

இந்த நூலில் ஈமான் மற்றும் இஸ்லாம் பற்றி நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம்) அவர்கள் கூறிய ஒரு ஹதீது ஷரீஃபு விளக்கப்படுகின்றது. இந்த ஹதீது ஷரீபின் பறக்கத்தின் மூலம் முஸ்லீம்களின் நம்பிக்கை **ஈமான்** பலப்படுத்தப்படும். அவர்கள் இரட்சிப்பும் மகிழ்ச்சியும் அடைவார்கள் என்று நம்புகிறேன். மேலும், நான் காலித் (குத்திச சிர்ருஹ்) என்னுடைய பல பாவங்களில் இருந்து காப்பாற்றப்படுவேன் என்றும் நம்புகிறேன். அல்லாஹுதஆலா மீது நான் வைத்திருக்கும் அழகிய நம்பிக்கையை கொண்டு, அதாவது; அவனுக்கு எதுவும் தேவையில்லை, அவனுடைய உதவிகளும் உபகாரங்களும் ஏராளமாகவே உள்ளன. மேலும் மனித உயிரினங்கள் மீது அதிகம் பரிவு காட்டுபவன், இந்த ஏழை காலிதை மன்னித்து விடுவானாக. எனது இருப்பு மிகவும் சிறியது, என்னுடைய இதயம் மிகவும் கறுப்பானது, என்னுடைய வார்த்தைகள் பொருத்த மற்றவை. குறைபாடுள்ள எனது வழிபாடுகளை ஏற்றுக்கொள்வானாக. அல்லாஹு தஆலாவே! வஞ்சகமான, பொய்யுரைக்கும் ஷைத்தானின் தீங்குகளிலிருந்தும், மேலும் [இஸ்லாத்தின் எதிரிகளின் தவறான வார்த்தைகளாலும், எழுத்துகளாலும் ஏமாந்துவிடாமல்] எங்களை பாதுகாத்து மகிழ்விப்பாயாக! அவன் கருணையாளர்களில் மிகவும் கருணை யாளன், மிகவும் பெரும் தன்மை யுள்ளவன், மிகவும் தயாளமானவன்.

இஸ்லாமிய அறிஞர்களின் கூற்றுப்படி, பருவமடைந்து (பாலிஃ) மற்றும் சிந்தனை ஆற்றல் (ஆகில்) பெற்ற ஒவ்வொரு முஸ்லிம் ஆண்/பெண்[அல்லாஹு தஆலாவை அறிந்து ஏற்றுக்கொள்வதற்கு (முகல்லஃப்) பொறுப்பாகி விட்டார்கள், வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால்] அல்லாஹு தஆலாவின் சிஃபத் அத்-தாத்திய்யா[1]

---

[1] அல்லாஹு தாலாவின் தாத் துக்கு (சுயம்) விசேடமான ஆறு ஸிபத்துகள் சிஃபத் அத்-தாதியா என்று அழைக்கப்படுகிறது. அவை அல்-வுஜூத், அல்லாஹுதஆலா தானே சுயமாக இருப்பது; அல்-கிதம், ஆரம்பம் இல்லாமல் கடந்த காலத்திலும் நித்தியமானவன்;

மற்றும் சிஃபத் அத்-துபுத்தியா[1] வை சரியாக அறிந்து ஏற்றுக்கொள்வது. இது முதன்மையான (ஃபர்ளு) கட்டாயமானது. அவர்கள் அறியாமல் இருப்பது மன்னிக்க கூடியது அல்ல; பாவமானது.

நான், காலித் இப்னு அஹ்மத் அல்-பாக்தாதி, இந்த புத்தகத்தை எழுதுவது எனது மேன்மையை மற்றும் அறிவை மற்றவர்களுக்கு காண்பிப்பதற்காக அல்ல, ஆனால் ஒரு நினைவூட்டலுக்காக, ஒரு கடமைக்காக. அல்லாஹுதஆலா இந்த பணிவான காலிதுக்கும் அனைத்து முஸ்லிம்களுக்கும் அவனுடைய ஆற்றலுடனும் அவனது நபியின் ஆசீர்வதிக்க ப்பட்ட ஆன்மா மூலமும் உதவி செய்வானாக! ஆமீன்.

அல்லாஹு தஆலாவை தவிர அனைத்தும் **மாசிவா** அல்லது **ஆலம்** என்று அழைக்க படுகிறது. மக்கள் அதை இப்போது தவறாக '**இயற்கை**' என்று குறிப்பிடுகிறார்கள். அனைத்து படைப்புகளும் இல்லாதிருந்தன. அல்லாஹு தஆலாவே அனைத்தையும் படைத்தவன். அவை அனைத்தும் **மும்கின்** (இல்லாமையிலிருந்து இருப்புக்கு வரவும் மற்றும் இருக்கும் போது இல்லாமலும் ஆகலாம்). **ஹாதீத்** (அவை இல்லாத போது தோன்றியவை). ஒரு

---

அல்-பகா, ஒருபோதும் முடிவில்லாதவன்; அல்-வஹ்தானிய்யா, எந்த சமமான அல்லது பொருந்தக்கூடிய பங்காளியும் இல்லாதவன்; அல்-முகாலஃபதுன் லில்-ஹவாதித், படைப்புகளுக்கு எந்த வகையிலும் ஒப்பில்லாதவன்; அல்-கியாமு-பி-நஃப்ஸிஹி, அவனுடைய சுயமான இருப்புக்கு எதுவும் தேவையில்லாதவன்; படைப்புகளுக்கு இந்த ஆறு பண்புகளில் எவற்றுடனும் எந்த தொடர்பும் இல்லை. சில இஸ்லாமிய அறிஞர்கள் அல்-முகலாஃதுன் லி-ல்-ஹவாதித் மற்றும் அல்-வஹ்தானியா வும் ஒன்றையே குறிக்கின்றன, ஆகவே, அஸ்-சிஃபத் அத்-தாதியாவின் எண்ணிக்கை ஐந்து என்று கூறினார்கள்..

[1] அஸ்-சிஃபத்அத்-துபுதிய்யா; எட்டுபண்புகள்: ஹய்யு (என்றென்றும்உயிர்வாழ்பவன்); இல்ம் (சர்வ அறிவாற்றல்), சம்உ' (கேட்டல்), பசர் (பார்த்தல்), குத்ரா (சர்வ வல்லமை), கலாம் (பேச்சு, வார்த்தை), இரதா (நாட்டம்), மற்றும் தக்வின்(படைப்பாற்றல்). அல்லாஹு தாலாவின் எட்டு பண்புகளில் ஒவ்வொன்றும் தனித்துவமானவை மற்றும் ஒரு சீரான நிலையில் உள்ளவை. அவற்றில் எந்த மாற்றமும் ஏற்படாது. ஆனால் அவை ஒவ்வொன்றும் படைப்புகளில் அதன் தொடர்புடைய தரத்தில் வேறுபடுகின்றன

ஹக்கிகத் பப்ளிகேஷன்ஸ் மூலம் மறுபதிப்பு 1975/1395 முதல் பல முறை ஆஃப்செட் செயல்முறை செய்யப்பட்டது

ஹதீது ஷரீஃபு இதை: "**அல்லாஹு**ᵘ**தலா இருந்தான். வேறு எதுவும் இருக்கவில்லை**," என்று வெளிப்படுத்துகிறது.

படைப்பினங்கள் **ஹாதீத்** என்பதற்கு இரண்டாவது ஆதாரம் அவை அனைத்தும் எப்பொழுதும் திரிபடைந்து மாறிக்கொண்டே இருக்கின்றன.[1]; இருப்பினும், **கதிம்** ஆனது (ஆரம்பம் இல்லாதது) ஒரு போதும் மாறக்கூடாது. அல்லாஹுᵘதஆலாவின் தாத்து (சுயம்) மற்றும் பண்புகள் **கதிம்** ஆனவை மற்றும் அவை ஒருபோதும் மாறாது. படைப்பினங் களில் ஏற்படும் மாற்றங்கள் அவை ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு மாறுவதால், அது நித்திய கடந்த காலத்திலிருந்து வர முடியாது. அவற்றுக்கு ஒரு ஆரம்பம் இருக்க வேண்டும், மேலும், அவை இல்லாமையிலிருந்து உருவாக்கப்பட்ட அணுக்கள், மூலகங்கள், துகள்களி லிருந்து வரவேண்டும். பிரபஞ்சம் மும்கின் என்பதற்கு மற்றொரு சான்று, அது இல்லாமல் இருந்து வரலாம், அஃது; படைப்புகள் ஹாதித்: அவை இல்லாமையில் இருந்து உருவாகின்றன.

இரண்டு விடயங்கள் உள்ளன: **மும்கின்** மற்றும் **வாஜிப்**[2]. மும்கின் மட்டும் இருந்து **வாஜிபுல் வுஜூத்**

---

[1] பிரபஞ்சத்தில், பௌதீக நிகழ்வுகளில் பொருட்களின் நிலை மாறுகிறது. இரசாயன தாக்கங்களில், பொருட்களின் சாராம்சம் அல்லது அமைப்பு மாறுகிறது. பொருட்கள் அல்லது பொருள் இல்லாது மற்றதாக மாறுவதை நாம் காண்கிறோம். இன்று, அணு மாற்றங்கள் மற்றும் அணுசக்தி எதிர்வினைகளில், இது சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டது, அணுக்கள் அல்லது மூலகம் கூட இல்லாமலாகி சத்தியாக மாறுகின்றது..

[2] **வுஜூத்** என்றால் 'இருப்பது.' மூன்று வகையான இருப்பு உள்ளது. முதலாவது **வாஜிப் அல் வுஜூத்**, அவசியமான இருப்பு, எப்போதும் உள்ளது, இதற்கு முன்பும் இல்லாமல் இருந்ததில்லை அல்லது நித்திய எதிர்காலத்திலும் இருப்பது அல்லாஹுᵘ தாலா மட்டுமே வாஜிப் அல் வுஜூத். இரண்டாவது ஒன்று **மும்தனி அல்வுஜூத்**, அது எப்போதும் இருக்க முடியாது. அப்படிப்பட்டது அல்லாஹுᵘ தாலாவுக்கு இணைஇருப்பது; அஃது மற்றொரு கடவுள் அல்லாஹுᵘ தாலாவின் பங்காளி இருக்க முடியாதது. மூன்றாவது ஒன்று **மும்கின் அல்-வுஜூத்**, அது இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம். அப்படித்தான் பிரபஞ்சம், விதிவிலக்கு இல்லாமல் அனைத்து படைப்புகளும். வுஜூதுக்கு எதிரானது அதம் (இல்லாமை) ஆகும். அனைத்து படைப்புகளும் அதமில் இருந்தன, அவை தோன்றுவதற்கு முன்பு அவை இல்லாதவை.

இருக்கவில்லை என்றால், எதுவும் இருக்காது.[1] இந்த காரணத்தினால், மும்கின் இருப்புக்கு வர முடியவில்லை அல்லது அது தானாகவே இருக்கவும் இல்லை. சில சக்திகள் அதை பாதிக்கவில்லை என்றால், அது எப்போதும் இல்லாத நிலையிலேயே இருந்திருக்கும், ஒரு மும்கின் தன்னை உருவாக்க முடியாது என்பதால், இருப்புக்கு வருவதற்கு முடியாது இருந்திருக்கும், அது இயற்கையாகவே, மற்ற மும்கின்களை உருவாக்கவும் முடியாது. எனவே, மும்கினை உருவாக்கியது வாஜிப் அல்-வுஜூத். பிரபஞ்சத்தின் இருப்பு அதை இல்லாமையில் இருந்து படைத்த ஒருவன் இருப்பதை காட்டுகிறது. எனவே, மும்கின்களான படைப்புகள் அனைத்தையும் படைத்த ஒரு தனித்துவமான படைப்பாளன் **வாஜிப் அல்-வுஜூத்** மட்டுமே. ஹாதித் அல்லது மும்கின் இல்லை. எப்போதும் இருப்பவன் மற்றும் கதிம் (நித்தியமானவன்). 'வாஜிப் அல் வுஜூத்' என்பதன் அர்த்தம் அது தன்னில் சுயமாக நிலையானது. அதன் இருப்பு வேறு ஒன்றில் தங்கியில்லாதது. அதாவது அது வேறொருவரால் உருவாக்கப்படவில்லை. அது அவ்வாறு இல்லை எனின், அது வேறொரு வரால் உருவாக்கப்பட்ட ஒரு படைப்பாக (மும்கின் மற்றும் ஹாதித்) ஆக இருக்க வேண்டும். இது மேல் குறிப்பிட்டதற்கு எதிரானது. பாரசீக மொழியில் 'குதா' (அல்லாஹு தஆலாவின் பெயராக பயன் படுத்தப்படுகிறது) ஏனென்றால் 'அல்லாஹ்' எப்போதும் சுயமான, நித்தியமாக இருக்கிறான் என்பது. அவன் ஒருவன் என்ற அத்தியாயத்தை பார்க்கவும் ;(பக். 83).

உயிரினங்களின் வியக்கத்தக்க வகுப்புகள் வரிசையில் இருப்பதை காண்கின்றோம். மற்றும், ஒவ்வொரு ஆண்டும் விஞ்ஞானம் இந்த ஒழுங்கு முறையின் புதிய விதிகளை கண்டுபிடிக்கின்றது. இந்த வரிசையை உருவாக்கியவன் **ஹய்யு** (என்றென்றும் உயிர் வாழ்கின்றவன்), **அலிம்**(எல்லாம் அறிந்தவன்), **காதிர்**(சர்வசக்தன்), **முரீத்**(அனைத்து நாட்டமுடையவன்), **சமீஉ**(அனைத்தையும் கேட்பவன்),

[1] இது ஒரு மாற்றம், ஒரு நிகழ்வு, இல்லாமையிலிருந்து வெளிவருவது. மற்றும், பௌதீக வியலில் நமது அறிவின்படி, ஒரு பொருளில் ஒரு மாற்றம் நிகழ, அந்த பொருளில் ஒரு வெளிப்புற சக்தி செயல்பட வேண்டும், அதன் மூலமானது பொருளுக்கு முன் இருக்க வேண்டும்.

**பசீர்** (அனைத்தையும் பார்ப்பவன்), **முதகல்லிம்** (எல்லாம் பேசுபவன்) மற்றும் **காலிக்** (படைப்பாளன்)[1] ஏனெனில் மரணம், அறியாமை, இயலாமை, வற்புறுத்தல், காது கேளாமை, குருட்டுத்தன்மை, ஊமை ஆகியவை அனைத்தும் குறைபாடுகள். இது போன்ற குறைபாடுகள் அல்லாஹு தஆலாவிடம் சாத்தியமற்றது. அவன் இந்த பிரபஞ்சத்தை அத்தகைய ஒரு வரிசையில் படைத்தவன் மற்றும் அவற்றின் அழிவிலிருந்து அவற்றை பாதுகாக்கின்றவன். மேலும், படைப்பு களிலும் மேற்கூறிய முழுமையான பண்புகள் இருப்பதை நாம் காண்கிறோம். அல்லாஹு தஆலா அவற்றை உயிரினங்களில் படைத்தான். இந்த பண்புக்கூறுகள் அவனிடம் இல்லை எனின் அவன் அவற்றை எவ்வாறு படைப்புகளில் உருவாக்க முடியும்? இந்த உயிரினங்கள் அவனை விட உயர்ந்தவைகளாக இருக்கும் அல்லவா ?[2].

---

[1] இவை அல்லாஹு தாலாவின் எட்டு சிஃபத் அத்-துபுதிய்யா ஆகும். .சிஃபத் அல்-ஹக்கீகியா என்றும் அழைக்கப்படுகிறது. இவை ஏற்கனவே அல்லாஹு தஆலாவில் உள்ள பண்புகளாகும் அதைத் தவிர, உயிரினங்களிலும் ஓரளவு உள்ளது.

[2] அணுவிலிருந்து நட்சத்திரங்கள் வரை ஒவ்வொரு படைப்பும் சில கணக்கீடுகள் மற்றும் சட்டங்களை கொண்டு படைக்கப்பட்டுள்ளது. அறியப்பட்ட பௌதீகவியல், இரசாயன வியல், வானியல் மற்றும் உயிரியல் விதிகள் மனித மனதைக் குழப்புகின்றன. டார்வின் கூட கண்ணின் அமைப்பில் ஒழுங்கையும் அதன் நுட்பமான அமைப்பையும் பற்றி யோசித்த போது அவர் பைத்தியம் பிடிப்பது போல் உணர்ந்ததாக சொல்ல வேண்டியிருந்தது. வளி என்பது நைட்ரஜன் (78%), ஆக்ஸிஜன் (21%) மற்றும் உன்னத வாயுக்கள் (1%) ஆகியவற்றின் கலவை. அது ஒரு கலவை, ஒரு சேர்வை அல்ல. ஆக்ஸிஜன் உள்ளடக்கம் 21சதவீதத்துக்கு மேல் இருந்தால், அது நமது நுரையீரலை எரிக்கும். அது 21 சதவீத த்திற்கும் குறைவாக இருந்தால் அது இருக்கும் இரத்தத்தில் உள்ள ஊட்டச்சத்துக்களை எரிக்க முடியாது. அது சாத்தியமற்றதாக இருக்கும். மனிதர்கள் மற்றும் விலங்குகள் வாழ. இந்த 21 சதவீதம், எங்கும், மழையின் போதுகூட மாறாது. இது அல்லாஹு தஆலாவின் ஒரு பெரிய அருட்கொடை,ஆசீர்வாதம். அவனுடைய இருப்பையும், ஆற்றலையும், அருளையும் இது காட்டவில்லையா? கண்ணின் கட்டுமானத்தை ஒப்பிடும் போது அவனுடைய ஆற்றலை தவிர வேறு ஒன்றும் இல்லை. இந்த அதிசயத்துடன். அனைத்தையும் படைத்தவனின், சட்டங்கள், நுட்பமான கணக்கீடுகள்

இந்த படைப்பினங்களின் உலகைப் படைத்தவன் முழுமையான அனைத்து பண்புகளையும் மற்றும் மேன்மையையும் கொண்டிருக்க வேண்டும். குறைபாடான எதுவும் அவனிடம் இல்லை, ஏனெனில் குறைபாடுள்ள ஹுதா, படைப்பாளியாக இருக்க முடியாது. இந்த நியாயமான ஆதாரங்கள் தவிர, ஆயத்துகள் மற்றும் ஹதீஸ்கள் அல்லாஹுதஆலா முழுமையான பண்புகளை கொண்டுள்ளான் என்பதை தெளிவாக விளக்கு கின்றன. எனவே அதில் சந்தேகம் கொள்வதற்கு அனுமதி இல்லை. சந்தேகம் அவநம்பிக்கையை ஏற்படுத்துகிறது. மேற்கூறிய எட்டு பரிபூரண

பண்புகள் சிஃபத்து அத்-துபுதிய்யா எனப்படும். அல்லாஹுதாலா முழுமையின் எட்டு பண்புகளையும் கொண்டுள்ளான். அவனிடம், அவனது பண்புகளில், எந்த குறையும், கோளாறும், மாற்றமும் இல்லை. **அஸ்-சிஃபாத் அத்-தாத்திய்யா** மற்றும் **அஸ்-சிஃபாத் அத்-துபுத்தியா** தெய்வீக பண்புகள்(**உலூஹிய்யா**) என்று அழைக்கப்படுகின்றன. ஒருநபர் ஒருபடைப்பு தெய்வீக பண்பை கொண்டிருப்பதாக நம்பினால் அவர் **முஷ்ரிக்** (அல்லாஹு தாலாவுக்கு ஒரு பங்காளியை சேர்ப்பபவர்) அது ஷிர்க் ஆகிறது.

---

மற்றும் சூத்திரங்கள் அறிவியல் என்று கற்பிக்க ப்படுகின்ற எல்லாவற்றையும் உருவாக்கியவன் அறிவு குறைபாடுள்ள பண்புகளை கொண்டிருப்பது சாத்தியமா. ?

# இஸ்லாத்தில் அத்தியாவசியமானவை (1)

அனைத்து படைப்புகளின் இருப்பை ஒவ்வொரு கணமும் வைத்திருக்கும் அல்லாஹு தஆலா'வின் உதவியுடன், அவன் எப்போதும் எங்கும் இருப்பவன், அனைத்தையும் பார்த்து கொண்டிருப்பவன், அனைத்து உதவிகளையும் நன்மைகளையும் வழங்குகின்றவன். இப்போது, நாம் நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்) அவர்களின் அருள்நிறைந்த சம்பவத்தை விளக்குவோம். எங்கள் அன்பிற்குரிய மேலான ஹஸ்ரத் உமர் இப்னு அல்-கத்தாப் (ரலியல்லாஹு தஆலாஅன்ஹு) முஸ்லிம்களின் வீரமிக்க தலைவராக இருந்தார்கள். நபித்தோழர்களில் மிக உயர்ந்தவர்களில் ஒருவர், மேலும் உண்மையானவர்களில் புகழ் பெற்றவர் கூறினார்:

"அத்தகைய ஒருநாளில் எங்களில் சில தோழர்கள் ரசூலுல்லாஹ் (ஸல்லள்ளாஹு தஆலா அலைஹி வஸல்லம்) அவர்களின் சேவையில் இருந்தோம். அந்த நாளின், அந்த நேரம் மிகவும் நல்லதாகவும், மதிப்புமிக்கதாகவும் இருந்தது. அதை மீண்டும் ஒருமுறை பெற வாய்ப்பு இல்லை. அந்த நாளில், நபிகள் நாயகம் (ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்) அவர்களின் கூட்டத்தினராக இருப்பதன் மூலம் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்பதற்காக அவருக்கு மிக அருகில், அவரது ஆசீர்வதிக்கப்பட்ட முகத்தை பார்ப்பது எங்கள் ஆன்மாக் களுக்கு உணவாக இருந்தது. ஆன்மாக்களுக்கு மகிழ்ச்சி மற்றும் ஆறுதல் கிடைத்தது. அந்த நாளின் மதிப்பு மற்றும் மகத்துவத்தை வலியுறுத்துவதற்காக அவர் கூறினார்; "அப்படி இன்னொரு நாள்..." இருக்க முடியுமா? கௌரவமிக்க மதிப்பு மிக்க நேரம் ஒருவருடைய பங்கிற்கு கிடைப்பது போலவே ஜிப்ரீல் (அலைஹி-சலாமை) ஒரு மனிதருடைய தோற்றத்தில் பார்ப்பதற்கு அவருடைய குரலை கேட்பதற்கு; மனிதனுக்கு தேவையான அறிவை ரசூலுல்லாஹ் (ஸல்லாஹுதஆலா அலைஹி வஸல்லமின்) ஆசீர்வதிக்கப்பட்ட நாவின் மூலம் முடிந்தவரை அழகாகவும் தெளிவாகவும் கேட்பதற்கு?.

"அந்த நேரத்தில், முழு நிலவு உதிப்பது போல ஒரு

மனிதர் எங்கள் அருகில் வந்தார். அவருடைய ஆடைகள் மிகவும் வெள்ளையாகவும், தலைமுடி மிகவும் கறுப்பாகவும் இருந்தது. தூசி மற்றும் வியர்வை போன்ற பயணங்களின் அடையாளங்கள் அவர் மீது காணப்பட வில்லை. நபி (ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்) அவர்களின் ஸஹாபாக்களில் எங்களில் ஒருவர்கூட அவரை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. அதாவது அவர் எங்களில் ஒருவரல்ல, முன்பு பார்த்தவரும் அல்ல தெரிந்தவரும் அல்ல. அவர் நபி (ஸல்லல்லாஹு தஆலாஅலைஹி வஸல்லம்) அவர்கள் முன்னிலையில் அமர்ந்தார். அவருடைய முழங்கால்களை நபியவர்களின் அருள்பாலிக்கப்பட்ட முழங்கால்களுக்கு அருகில் வைத்தார்.” இந்த நபர், ஒரு மனித தோற்றத்தில் வந்த ஜிப்ரயில் (அலைஹி-சலாம்) என்ற வானவர். அவர் உட்கார்ந்தது அவரது வழி என்றாலும் பழக்க வழக்கங்களுடன் (அதப்) பொருந்தாததாக தெரிந்தாலும், அது எங்களுக்கு ஒரு மிக முக்கியமான உண்மையை எங்களுக்கு அறிவித்தது. மார்க்க அறிவை கற்றுக்கொள்வதில் வெட்கம், கூச்சத்துக்கு இடமில்லை. பெருமையோ ஆணவமோ எஜமானர் ஆகாது. ஹஸ்ரத் ஜிப்ரையில், இந்த நடத்தையால், சஹாபாக்களுக்கு அதை காட்ட விரும்பினார். ஒவ்வொருவரும் இஸ்லாத்தை பற்றி தெரிந்துகொள்ள விரும்பினால் அதை வெட்கப்படாமல், சுதந்திரமாக ஆசிரியர்களி டம் கேட்க வேண்டும் என்றும், அல்லாஹு தஆலாவுக்கான ஒருவரின் கடமைகளை கற்றுக்கொள்வதில், இஸ்லாத்தை கற்றுக்கொள்வதில் மற்றும் அதை நிறைவேற்றுவதில் சங்கடம் அல்லது கூச்சம் இருக்கக்கூடாது. “வந்த உன்னத நபர் ரசூலுல்லாஹ் (ஸல் லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்) அவர்களின் ஆசீர்வதிக்கப்பட்ட முழங்கால்கள் மீது அவரது கையை வைத்தார், பின்னர் அவர் ரசூலுல்லாஹ்விடம் கேட்டார்: ‘ஓ அல்லாஹ்வின் தூதரே! இஸ்லாம் என்றால் என்ன, ஒரு முஸ்லிம் எப்படி இருக்க வேண்டும் என்று சொல்லுங்கள்.”

‘இஸ்லாம்’ என்பதன் சொல்லகராதியின் பொருள் ‘சமர்ப்பிப்பது, சரணடைவது’ என்பதாகும். ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்) அவர்கள் விளக்கினார்கள்; ‘**இஸ்லாம்** மார்க்கம் என்பது ஐந்து அடிப்படை அத்தியாவசியமான விடயங்களின் அமைப்பை கொண்டது. அவை:

1.ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு தஆலா அலைஹி

வஸல்லம்) அவர்கள் கூறினார்கள். இஸ்லாத்தின் அடிப்படைகளில் முதன்மையானது "**கலிமத் அஷ் ஷஹாதாவை உரைப்பது**"; அதாவது, "**அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹ் வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரசூலுஹூ**" என்று கூற வேண்டும். இன்னும் தெளிவாக கூறுவதானால்; பருவ வயதை அடைந்த மற்றும் புத்திசாலியான, ஒருநபர் கூற வேண்டும், "**பூமியிலோ அல்லது வானத்திலோ அல்லாஹூ தஆலாவை தவிர வணங்கப்பட தகுதியுள்ள யாரும் இல்லை, வேறெதுவும் இல்லை, உண்மையான தகுதியுள்ள இறைவன் அல்லாஹூதாலா மட்டுமே. அவன் தான் வாஜிப் உல்-வுஜூத். எல்லா விதமான மேன்மையும் அவனிடமே உள்ளது. எந்த குறைபாடும் அவனில் இல்லை. அவனுடைய பெயர் அல்லாஹ்**", இதை அனைவரும் அவர்களின் இதயம் மூலம் முழுமையாக நம்ப வேண்டும். மேலும் சொல்லவும் வேண்டும்: "மிகவும் உன்னதமான முகம்மது இப்னு அப்துல்லா, அவருடைய முகம் தோற்றத்தில் ரோஸி, வெள்ளை-சிவப்பு கொண்டவர், பிரகாசமான மற்றும் அழகான, கருப்பு கண்கள் மற்றும் புருவங்கள், அருள்பாலிக்கப்பட்ட பரந்த நெற்றி மற்றும் அழகான நடத்தை, அவருடைய நிழல் பூமியில் விழவே இல்லை, அவர் பேச்சில் மென்யானவர் மற்றும் மக்காவில் ஹாசிமி குடும்பத்தில் பிறந்தார், அரபி என்று அழைக்கப்பட்டார். அல்லாஹூ தஆலா அனுப்பிய மனித தூதர்." நபிகளாரின் தாயார் ஹஸ்ரத் ஆமினா பின்த் வஹ்ஹாப் ஆவார். அவர் மக்காவில் ரபியுனில் அவ்வல் பிறை 12ல் திங்கட்கிழமை அதிகாலையில் பிறந்தார் [ஏப்ரல் 20, 571]. அவருக்கு நாற்பது வயதானபோது [திங்கள், ரமலான் 17, 610], அவர் அல்லாஹ்வின் தூதர் நபி என்று அறிவிக்கப்பட்டார். அந்த ஆண்டு '**பிஃதா**' என்று பெயரிடப்பட்டது (மக்களை சரியான பாதையில் அழைப்பதற்காக) அனுப்பப்பட்டார். அதன் பிறகு, அவர் மக்காவில் பதின்மூன்று ஆண்டுகளாக மக்களை இஸ்லாத்திற்கு அழைத்தார். பின்னர் அவர் அல்லாஹூ தஆலாவின் கட்டளைபடி மதீனாவுக்கு (ஹிஜ்ரத்) இடம் பெயர்ந்தார். அங்கிருந்து, அவர் இஸ்லாதத்தை எங்கும் பரப்பினார். ஹிஜ்ரத் முடிந்து பத்து வருடங்கள் கழித்து அவர் திங்கட்கிழமை, ரபியினுல்-அவ்வல் பிறை 12ல்[1]

[1] வரலாற்றாசிரியர்களின் கூற்றுப்படி, 622ம்(கிரிகோரியன்) ஆண்டு சஃபர் மாதத்தின் 27 வியாழன் மாலை நபி அவர்கள் மக்கத்துல்

[ஜூலை 632] மதீனாவில் வபாத்தானார்.

2. இஸ்லாத்தின் ஐந்து கடமைகளில் இரண்டாவதாக தொழுகையை (ஸலாத்) அதற்குரிய சரியான நேரத்தில் தினமும் ஐந்து முறை நிறைவேற்றுவது. நிறைவேற்றும்போது அதற்குரிய பர்ளுகள் ஷர்த்துகளை கடைப்பிடிப்பதும், அதற்குரிய நேரத்தை அறிந்து கொள்வதும் பர்ளு ஆகும். நான்கு மத்ஹபுகளில் ஒன்றையும் பின்பற்றாதவர்கள், லா-மத்ஹபி அல்லது ஸுன்னி அல்லாதவர்களால் தயாரிக்கப்பட்ட தவறான தொழுகை நேர அட்டவணைகளை பின்பற்றி குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் தொழுகையை நிறைவேற் றுவது பெரும் பாவமாகும். இந்த தொழுகை செல்லுபடியாகாது. இது ளுகர் தொழுகையின் ஆரம்ப சுன்னாவையும் மற்றும் மாலை (மகரிபு) தொழுகையின் ஃபர்ளு தொழுகை யையும் கரஹா நேரத்தினுள் நிகழ்த்துவதற்கு காரணமாகின்றது. (இந்த நேரத்தில் தொழுகை நிறைவேற்றுவது பாவமானது). ஒரு தொழுகைக்கு உரிய நேரம் முஅத்தினின் அதான் (தொழுகைக்கான அழைப்பு) மூலம் புரிந்து கொள்ளப்படுகிறது.

[ஈமான் கொள்ளாதவர்களின் மற்றும் பித்அத்வாதிகளின் குரல்ஒலி, ஒலிபெருக்கி போன்ற கருவிகளின் ஒலி "அதான் அல்-முஹம்மதி" (முஸ்லிம்களின் தொழுகைக்கு அழைப்பு) என்று அழைக்கப்படுவதில்லை.] தொழுகை அதன் ஃபர்ளு, வாஜிபு, சுன்னா, மற்றும் தொழுகையில் உள்ள பல்வேறு விதிகளை] பேணி, அதன் பரிந்துரைக்கப்பட்ட நேரம் முடிவதற்குள் இதயத்தை அல்லாஹு தஆலாவிடம் சமர்ப்பித்து நிறைவேற்ற வேண்டும். குர்ஆன்அல்-கரீமில், தொழுகை 'ஸலாத்' என்று

---

முகர்ரமாவிலிருந்து அல் மதீனத் அல் முனவ்வரா வரை அவர் இடம்பெயர்ந்த போது (ஹிஜ்ரத்) ஸவ்ர் என்ற மலை குகைக்குள் நுழைந்தார்கள். திங்கட்கிழமை இரவு அவர் குகையை விட்டு வெளியேறி மதீனாவிற்கு அருகிலுள்ள கூபா என்ற மாவட்ட பிராந்தியத்திற்குள் நுழைந்தார்கள். ரபிஉல் அவ்வல் (செப்டம்பர் 20ம் தேதி) திங்கட்கிழமை 8 ஆம் தேதி இது மகிழ்ச்சியான நாள் முஸ்லீம்களின் ஹிஜ்ரியின் தொடக்கமாக அமைந்தது. ஷியாக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹிஜ்ரி ஷம்சி நாட் காட்டி யின் ஆரம்பம் இதை விட ஆறு மாதங்கள் முந்தியது; அது, இது மஜூசி(நெருப்புவழிபடுபவர்கள்) நெருப்பை வணங்கும் காஃபிர்களின் நவ்ரூஸ் பண்டிகையுடன் மார்ச் 20 அன்று தொடங்குகிறது.

அழைக்கப்படுகிறது. மனிதனின் தொழுகை யுடன், மலக்குகள் இஸ்திஃபார் செய்வது (அல்லாஹு தஆலாவிடம் பாவ மன்னிப்பை கோருவது) மற்றும் அல்லாஹுதஆலா கருணை காட்டுவது என்பன சேர்ந்தவை. இஸ்லாத்தில் தொழுகை (ஸலாத்) என்பது இல்முல்-ஹால் நூல்களில் எழுதப் பட்டவாறு சில செயல்களை செய்வதுடன் சில குறிப்பிட்ட தஸ்பீஹ்களை ஓதுவதுமாகும்.

தொழுகை தக்பீர் அல்-இஃப்திதாவுடன் 'அல்லாஹு அக்பர்' என்று கூறுவதுடன் ஆரம்பிக்க படுகிறது. ஆண்களுக்கு, கைகளை காது வரை உயர்த்திய பிறகு தொப்புளுக்கு கீழே கைகளை பற்றிக்கொள்வதும், பெண்கள், தோள்களின் அளவு வரை கைகளை உயர்த்திய பிறகு அவற்றை மார்பகங்களின் மேல்வைத்து நிறைவேற்றப்படுகிறது. கடைசி இருப்பில் தலையை வலப்புறமும் பின்னர் இடது புறமும் தோள்களை திருப்பி சலாம் கொடுப்பதுடன் இது முடிவடைகிறது.

3. இஸ்லாத்தின் ஐந்து கடமைகளில் மூன்றாவது "**ஒருவரின் சொத்திலிருந்து ஜகாத் கொடுக்க வேண்டும்**". ஜகாத் என்பதன் பொருள் 'தூய்மை பெறுவதுடன் நல்லதாகவும் அழகாகவும் மாறுவது. இஸ்லாத்தில் சகாத் என்பது 'ஒருவர் தனது தேவைகளுக்கு மேல் நிசாப் எனும் குறிப்பிட்ட அளவை தாண்டி, சொத்துக்கள், செல்வம் வைத்திருப்பவர், அதிலிருந்து குறிப்பிட்ட அளவு பிரித்து அதை குர்ஆன் அல்-கரீமினால் வரையறுக்க பட்ட முஸ்லிம்களுக்கு அவர்களை சங்கட படுத்தாமல் வழங்க வேண்டும். சகாத் ஏழு வகையான மக்களுக்கு வழங்கப்படுகிறது. நான்கு மத்ஹபுகளும் ஜகாத்தை ஏகமனதாக நான்கு வகையாக விபரிக்கின்றது: 1. தங்கம் மற்றும் வெள்ளியின் ஜகாத், 2. வணிக பொருட்களின் ஜகாத், 3. அரை வருடத்திற்கும் மேலான மேய்ச்சல் வயல்களில் மேய்ந்த நான்கு கால் விலங்குகளின் ஜகாத், 4. மண்ணில் இருந்து பெறப்பட்ட அனைத்து வகை பயிர்களின் தானியங்களின் ஜகாத். இந்த நான்காவது வகை ஜகாத் **உஷ்ர்** எனப்படுகிறது. பயிர் அறுவடை செய்தவுடன் செலுத்தப்பட வேண்டும். மற்ற மூன்றுக்கும் ஒரு வருடம் கழித்து அதன் நிசாபின் அளவு கணக்கிடப்படும்.

4. இஸ்லாத்தின் நான்காவது கடமை "ரமலான் மாதத்தின் தினமும் நோன்பு நோற்பது. உண்ணாமல், குடியாமல் இருப்பது '**ஸவ்ம்**' என்று அழைக்கப்படும்.

இஸ்லாத்தில் ஸவ்ம் என்பது ரமழான் மாத [நாட்களில்] ஒருவர் மூன்று விதமான விடயங்களிலிருந்து தன்னை பாதுகாத்து க்கொள்வது. அல்லாஹு கட்டளையிட்டபடி சாப்பிடுவது, குடிப்பது மற்றும் உடலுறவு கொள்வது. ரமலான் மாதம், (மேற்கு) அடிவானத்தில் பிறையை பார்த்தவுடன் தொடங்குகிறது.

5. இஸ்லாத்தின் ஐந்தாவது கடமை "வசதி உள்ளவர் தனது வாழ்நாளில் ஒரு முறை ஹஜ் செய்வது. வசதியுள்ளவர் மக்காவுக்கு சென்று திரும்பி வருவதற்கும் போதுமான பணம், அவர் திரும்பி வரும்வரை அவர் விட்டுச்செல்லும் குடும்பத்தாரின் வாழ்வாதாரத்துக்கு போதுமான பணம் இருப்பின், அவர் வாழ்நாளில் ஒரு முறை ஹஜ் செய்வது ஃபர்ளாகும். ஒருவருடைய உடல் ஆரோக்கியமாகவும் வழி பாதுகாப்பானதாகவும் இருப்பின் அவர் வாழ்நாளில் ஒருமுறை கஃபாவை சுற்றி தவாஃப் செய்வது, அரஃபாத் சமவெளியில் தங்குவது கடமை. "ரசூலுல்லாஹ் (ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம்), அவர்களிடமிருந்து இந்த பதில்களை கேட்டதும் அந்த நபர், "ஓ! ரசூலள்ளாஹ்! நீங்கள் உண்மை உரைத்தீர்" என்று கூறினார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்; அங்கிருந்த ஸஹாபிகள் அந்த நபரின் நடத்தையை கண்டு வியந்தனர். ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு பதில் சரியானது என்பதை உறுதிப்படுத்தினார். ஒன்று ஒருவருக்கு தெரியாததை கற்றுக்கொள்ளும் நோக்கில் கேட்கிறார்; ஆனால் நீங்கள் உண்மையை சொன்னீர்கள் என்று சொல்வது என்பது கேட்டவருக்கு ஏற்கனவே தெரியும் என்பதை குறிக்கிறது.

மேலே பட்டியலிடப்பட்டுள்ள ஐந்து கடமைகளில் கலிமத் அஷ்-ஷஹாதாவை கூறுவதும் அதன் அர்த்தத்தை நம்புவதும் மிக உயர்ந்தது. அடுத்த அதிகபட்சம் தொழுகையை நிறைவேற்றுவது. இதற்கு அடுத்த படியாக நோன்பு நோற்க வேண்டும். பின்னர் ஹஜ் வருகிறது. கடைசியாக ஜகாத் கொடுக்க வேண்டும். கலிமா அஷ்ஷஹாதா என்பது ஒருமனதாக உறுதியானது, மிக உயர்ந்தது. மற்றொன்றின் வரிசை குறித்து நான்கு, பெரும்பாலான இஸ்லாமிய அறிஞர்கள் நாம் மேலே சொன்னதையே சொன்னார்கள். இஸ்லாத்தின் ஆரம்பத்திலேயே கலிமத் அஷ்-ஷஹாதா முதலில் ஃபர்ளு ஆனது. பி'ஃதா வின் 12ம் ஆண்டில், ஹிஜ்ரத்துக்கு ஒரு வருடம் மற்றும் சில மாதங்களுக்கு முன்பு மி'ஃராஜின் போது

தொழுகை ஃபர்ளானது (பக்.48 பார்க்க). ஹிஜ்ரத்தின் இரண்டாம் ஆண்டு ஷஃபான் மாதம் ரமழானில் நோன்பு நோற்பது பர்ளு ஆனது. சக்காத் கொடுப்பது, ரமலான் மாதம், நோன்பு கடமையான அதே ஆண்டில் ஃபர்ளு ஆகிவிட்டது. ஹஜ் என்பது ஹிஜ்ரத்தின்

---

நபி (ஸல்) அவர்கள் வியாழன் வரை குபாவில் தங்கியிருந்தார்கள். வெள்ளிக்கிழமை அந்த மாவட்டத்தை விட்டு, மதீனாவில் நுழைந்தார்கள். அதேநாள். அதே ஆண்டில் முஹர்ரம் மாதத்தின் ஆரம்பம் (ஜூலை16 வெள்ளி) ஹிஜ்ரி கமரியின் (சந்திர) நாட்காட்டி ஆண்டின் தொடக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஹிஜ்ரி ஷம்சி ஆண்டு, இது கிரகோரியன் ஆண்டுடன் ஆரம்பமானது. அந்த கிரகோரியன் புத்தாண்டை விட 622 ஆண்டுகள் பின்னர் உருவானது. ஹிஜ்ரி ஷம்சி ஆண்டு தொடங்கும் கிரிகோரியன் ஆண்டு அந்த ஹிஜ்ரி ஷம்சி புத்தாண்டை விட 621 ஆண்டுகள் அதிகமானது .

ஒன்பதாம் ஆண்டு ஃபர்ளு ஆனது. ஒரு நபர் இஸ்லாத்தின் இந்த ஐந்து கடமைகளில் ஒன்றை நம்ப மறுத்தால், கேலி செய்தால் அல்லது புறக்கணித்தால் அவர் நம்பிக்கை யற்றவராக மாறுகிறார். அல்லாஹுதாலா எங்களை காப்பாற்றுவானாக. அதேபோல, ஹலால் அல்லது ஹராம் (தடுக்கப்பட்டது) என்று ஏகமனதாகவும் தெளிவாகவும் அறிவிக் கப்பட்ட விடயங்கள் எதையும் ஏற்காதவன், அல்லது ஹராமானதை 'ஹலால்' என்றும் அல்லது ஹலாலை 'ஹராம்', என்றும் சொல்பவன் நம்பிக்கையற்றவனாக மாறுகிறான். மேலும், ஒரு நபர் தவிர்க்க முடியாத இஸ்லாமிய போதனைகளில் ஒன்றை விரும்பவில்லை அல்லது மறுத்தால், அல்லது முஸ்லீம் நாடுகளில், அறியாத படிக்காத மக்களாலும் அறியப்பட்ட போதனைகளை நம்ப மறுப்பவர் காபிராக[1] மாறுவார்.

---

[1] உதாரணமாக, பன்றி இறைச்சி உண்பது, மதுபானம் அருந்துவது, சூதாட்டம், மற்றும் ஒரு பெண் தன்னை மறைக்க எதுவும் இல்லாமல், தலை, முடி, கைகள் மற்றும் கால்கள் என்பவற்றை மற்றவர்களுக்கு காட்டிக்கொள்வது, ஒரு ஆண் முழங்கால்களுக்கும் தொப்புளுக்கும் இடையில் உள்ள பகுதியை மறைக்காமல் மற்றவர்களுக்கு தன்னை காட்டுவது

அனைத்தும் ஹராம். அதாவது அல்லாஹுதஆலா இந்த செயல்களை தடைசெய்துள்ளான். அல்லாஹ்வின் கட்டளை களையும் தடைகளையும் விளக்கும் நான்கு மத்ஹபுகளும் ஆண் மற்றும் பெண்களின் உடலின் அவ்ரத் பாகங்களை வித்தியாசமாக விவரித்துள்ளது. அவற்றை மற்றவர்களுக்கு காட்டுவது ஹராம். ஒவ்வொரு முஸ்லிமும் அவர் சார்ந்த மத்ஹபு விவரித்த உடலின் பாகங்களை மறைப்பது ஃபர்ளு. இந்த பகுதிகளை மறைக்காதவர்களை பார்ப்பது மற்றவர்களுக்கு ஹராம். இது ஹராம் என்று **கிமியா அஸ் ஸஆதா** வில் எழுதப்பட்டுள்ளது. சிறுமிகள் மற்றும் பெண்கள் தங்கள் தலைமுடி, கைகள், கால்கள், மறைக்காமல் மற்றும் மெல்லிய, அலங்காரமான, இறுக்கமான ஆடைகளுடன் மற்றும் வாசனை திரவியங்கள் பூசிக்கொண்டு வெளியே செல்வதும் ஹராம்.

அவர்கள் வெளியே செல்வதற்கு அனுமதி கொடுக்கும், ஒப்புதல் அளிக்கும் அவர்களின் தாய், தந்தை, கணவர் மற்றும் சகோதரர்களும் அந்த பாவத்தையும் தண்டனையையும் பகிர்ந்து கொள்வர்கள்; அதாவது, அவர்கள் அனைவரும் சேர்ந்து நரகத்தில் எரிவார்கள். அவர்கள் மனம் வருந்தி பாவமன்னிப்பு கேட்டால் மன்னிக்கப்படுவார்கள், அல்லாஹுதஆலா அவர்களை மன்னிக்க விரும்புகிறான். ஹிஜ்ரி மூன்றாம் ஆண்டில், பருவமடைந்த புத்திசாலி பெண்கள் தங்களை (நா மஹ்ரம்) திருமணம் செய்ய தடை விதிக்கப்படாத ஆண்களுக்கு காட்டிக்கொள்ள வேண்டாம் என்று உத்தரவிடப்பட்டது. பிரிட்டிஷ் உளவாளிகள் மற்றும் அவர்களால் ஏமாற்றப்பட்ட அறியாத மடையர்கள் கூறுவது போல் ‘ஹிஜாப் போடுவதற்கான கட்டளை பிற்காலத்தில் வந்தது (இஸ்லாமிய அறிவியல்) ஃபிக்ஹ் அறிஞர்களால் இட்டுக்கட்டப்பட்டது’ என்ற கூற்றை நாம் நம்பக் கூடாது. அது பற்றிய ஆயத்துகள் ஹிஜாப் முக்காடு அத்தியாவசியமானது என்பதற்கான சான்றாகும். முஸ்லிம் என்று சொல்பவர் அவர்கள் செய்யும் அனைத்தும் இஸ்லாத்துடன் ஒத்துப் போகின்றனவா இல்லையா என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இல்லை என்றால் அவர்கள் அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர் ஒருவரிடம் கேட்டு அல்லது அவர்களின் புத்தகங்களைப் படிப்பதன் மூலம் கற்று தெரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் செய்வது இஸ்லாத்துடன் ஒத்துப்போக வில்லை என்றால் அவர்கள் பாவத்திலிருந்தும் அவநம்பிக்கையில் இருந்தும் தப்பித்துக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் உண்மையாக ஒவ்வொரு நாளும் மனம்வருந்தி பாவமன்னிப்பு கேட்க வேண்டும். அவநம்பிக்கை மற்றும் பாவங்கள் நிச்சயமாக மன்னிக்கப்படும். அவர்கள் மனந்திரும்பவில்லை என்றால், அவர்கள் இவ்வுலகிலும் மறுமையிலும் தண்டனையை நரகத்தில்

# ஈமானின் அத்தியாவசியமானவை II

“அந்த உன்னத நபர் மீண்டும் கேட்டார், **“ஓ! ரசூலுல்லாஹ்! ஈமான் என்றால் என்ன வென்று என்னிடம் கூறுங்கள்”**. இஸ்லாம் என்றால் என்ன என்று கேட்டதற்கு பதில் முன்னரே கொடுக்கப்பட்டது, வந்தது ஹஜ்ரத் ஜிப்ரயில் (அலைஹி சலாம்) அவர்கள் எங்கள் தலைவர் ரசூலுல்லாஹ்விடம் (ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்) ஈமானின் அமைப்பின் யதார்த்தத்தை விளக்குமாறு கேட்டார். அகராதியின் படி ஈமான் என்றால்; ஒரு நபர் முற்றிலும் உண்மையானவர் என்று அறிந்து அவர்மீது நம்பிக்கை கொள்வது என்று அர்த்தம். இஸ்லாத்தில் ஈமான் என்றால் ரசூலுல்லாஹ் (ஸல்லல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அல்லாஹு தஆலா அனுப்பிய உண்மையான தூதர் (நபி) என்று அறிந்து நம்பிக்கையுடன் கூறுவதுடன், அவர் சுருக்கமாக அறிவித்ததை சுருக்கமாக நம்புவதும், அவருக்கு விரிவாக தெரிவிக்கப் பட்டதை விரிவாகவும் நம்புவதும். கலிமா அஷ்-ஷஹாதாவை முடிந்தபோது

---

அனுபவிப்பார்கள். இத்தகைய தண்டனைகள் எங்கள் புத்தகத்தின் பல்வேறு பகுதிகளில் எழுதப்பட்டுள்ளன. பெரும் பாவம் செய்த முஸ்லிம் அந்த பாவத்திற்கு எவ்வளவு தண்டனையோ அந்த அளவுக்கு நரகத்தில் எரிக்கப்பட்ட பிறகு வெளியே எடுக்கப்படுவார். அல்லாஹு தஆலாவை நம்பாத காஃபிர்கள் மற்றும் இஸ்லாத்தை அழித்து விடுவதற்கு முயற்சி செய்தவர்கள், ஜிந்திக்குகள், என்றென்றும் நரகத்தில் எரிக்கப்படுவார்கள்.

ஆண்களும் பெண்களும் தொழுகையின் போது அல்லது எந்த இடத்திலும் மறைக்க வேண்டிய உடலின் பாகங்கள் ‘அவ்ரத்’ (நெருக்கமான) பகுதிகள் எனப்படும். அவ்ரத் பகுதிகளில் ஒன்றை காட்டுவது அல்லது மற்றவர்களின் அவ்ரத் பகுதிகளை பார்ப்பது ஹராம். ஒருநபர் இஸ்லாத்தில் அவரத் என்ற பெயரில் எந்த கருத்தும் இல்லை என்று சொன்னால் அவன் ஒரு நம்பிக்கை அற்றவனாக மாறுகிறான். ஹலால், ஹராம் என்பதற்கு அதற்குரிய முக்கியத்துவம் கொடுக்காத, அல்லது ஒருமித்த இஜ்மாவின்படி அவ்ரத் ஒரு பகுதியை காட்டுவது அல்லது பார்ப்பபதற்கு கூறப்பட்ட தண்டனை பற்றி பயப்படாத ஒருநபர் நான்கு மத்ஹபுகளின் படியும் காஃபிராக

எல்லாம் வாயினால் கூறுவதும் ஆகும். வலிமையான ஈமான் எப்படிப்பட்டது என்றால் நமக்கு உறுதியாக தெரிந்தது; அதாவது, நெருப்பு எரிக்கின்றது, பாம்பு அதன் நஞ்சினால் கொல்கின்றது, எனவே அவற்றை நாம் உறுதியாக அறிவோம், தவிர்க்க முயற்சி செய்வோம். நாம் அல்லாஹுத ஆலாவின் மீதும் அவனுடைய பண்புகள் மீதும் அவற்றின் மாண்பை முழு மனதுடன் சிறந்தவைகளாக கருதி அவனுடைய அங்கீகாரத் திற்காக (**ரிளா**), அவனுடைய அழகுக்காக (**ஜமால்**), அவனுடைய கோபம் (**கதப்**) மற்றும் வேதனை (**அதாப்**) இலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு பளிங்கு கல்வெட்டு போல் இதயத்தில் உறுதியாக ஈமான் கொள்ள வேண்டும்.

---

மாறுகிறார். அதேபோல், பெண்களும் தங்கள் அவ்ரத் பகுதிகளைக் காட்டுவது அல்லது ஆண்கள் மத்தியில் பாடுவது, மவ்லித் ஓதுவது (முஹம்மது நபியின் 'அலைஹி-ஸலாம் பிறந்தநாள் கொண்டாடுவதற்கு)ஆனாலும் தண்டனைக்குரிய குற்றமாகும். ஹன்பலி மத்ஹபில், ஆண் களுக்கு கவட்டுக்கும் (முதுகந்தண்டின் அடிப்பகுதியும் தொடையும் சந்திக்கும் இடம்) முழங்காலுக்கும் இடைப்பட்ட பகுதி அவ்ரத் அல்ல.

தான் முஸ்லீம் என்று கூறுபவர், இஸ்லாத்தின் நான்கு மத்ஹபுகளில் ஏகமனதாக அறிவிக்கப் பட்ட அந்த கட்டளைகளுக்கு(ஃபர்ளு) மற்றும் தடைகள் (ஹராம்க்கு மேலதிகமாக, ஈமான் மற்றும் இஸ்லாத்தின் கடமைகளை கற்றுக் கொள்வதற்கும் உரிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அறியாமல் இருப்பது ஒரு சரியான காரணம் அல்ல. அது அறிந்திருந்தும் அவநம்பிக்கைக்கு ஒத்ததாகும். நான்கு மதுகபுகளின் படி பெண்களின் உடல் வெளிப்புறம் முழுவதும், அவளுடைய கைகள் மற்றும் முகத்தைத் தவிர, அவ்ரத்தாகும். ஒரு நபர் உரிய முக்கியத்துவம் கொடுக்காமல், அவருடைய (மதுஹபின்படி அவ்ரத், ஆனால் மற்ற மூன்று மத்ஹபுகளில் ஒன்றில் அவ்ரத் அல்லாத) உடலின் பகுதியை வெளியாக்கினால் எனின், அவர் காஃபிராக ஆக மாட்டார். ஆனால் அவர் பின்பற்றும் மத்ஹபின்படி அது பெரும் பாவமாகும். இதற்கு ஒரு உதாரணம்: ஒரு மனிதன் தனது தொடை, இடுப்பு மற்றும் இடுப்புக்கு முழங்கால்கள் இடையில் உள்ள பகுதியை வெளிப்படுத்துவது.

ஒருவருக்கு தெரியாததை கற்றுக்கொள்வது

ஃபர்ளு. அதை அவர் கற்றுக் கொண்ட உடன், மனந்திருந்தி தன்னை மறைத்துக் கொள்ள வேண்டும். பொய், வதந்தி, புறம் பேசுதல், அவதூறு, திருட்டு, ஏமாற்றுதல், துரோகம், ஒருவரின் உணர்வுகளை புண்படுத்துவது, குறும்பு செய்தல், ஒருவரின் சொத்தை அவருடைய அனுமதி இல்லாமல் பயன்படுத்துவது, ஒரு தொழிலாளி அல்லது போர்ட்டரின் நிலுவை தொகையை செலுத்தாமல் இருப்பது, கிளர்ச்சி செய்வது, அதாவது; சட்டங்கள் மற்றும் அரசாங்கத்தின் உத்தரவுகளை எதிர்த்து, வரி செலுத்தாமல் இருப்பது ஆகியவை பாவம் ஆகும். காஃபிர்களுக்கு எதிராகவும் அல்லது இஸ்லாமிய நாடுகள் அல்லாதவற்றிலும் அவற்றை செய்வது ஹராம். இது அவநம்பிக்கை (குஃப்ர்) அல்ல, ஆனால் அறியாதவர்கள் அவற்றை செய்வது பாவம். அவ்வளவு பரவலாக இல்லாத இஸ்லாத்தின் போதனைகளை படிக்காதவர்கள் அறிய மாட்டார்கள். அல்லது படிக்காதவர்கள் தெரிந்து கொள்வது அவசியம்.

(முஹம்மது (அலைஹி சலாம்) அவர்களால் அறிவிக்கப்பட்ட ஈமான் மற்றும் இஸ்லாம் ஒன்றுதான். **கலிமத் அஷ்ஷஹாதா**'வின் அர்த்தத்தில் அவை இரண்டும் உள்ளது. பொதுவான மற்றும் விவரங்களில் அகராதி அர்த்தங்களில் அவை வேறுபடுகின்றன என்றாலும், இஸ்லாத்தில் அவற்றுக்கிடையே எந்த வித்தியாசமும் இல்லை. ஈமான் என்பது ஒன்றா அல்லது பல பகுதிகளின் அமைப்பா? அது பகுதிகள் என்றால் அது எத்தனை பகுதிகளால் ஆனது? அமல் (நடை முறைகள், செயல்கள்) அல்லது இபாதத் (வணக்க வழிபாடுகள்) ஈமானில் சேர்ந்து உள்ளதா இல்லையா?. "எனக்கு ஈமான் இருக்கிறது" என்று சொல்லும் போது "**இன்ஷா அல்லாஹு தாலா**" (அல்லாஹ் நாடினால்) என்று சேர்ப்பது சரியா? இல்லையா? ஈமானில் சிறிதளவு அல்லது பெரிதளவு உள்ளதா? ஈமான் ஒரு படைப்பா? நம்புவது அல்லது நம்பிக்கை வைத்திருப்பது ஒருவரின் சக்திக்குள் உட்பட்டதா? அல்லது விசுவாசிகள் நிர்ப்பந்தத்தால் நம்பினார்களா? வற்புறுத்தல் அல்லது வலிமை யினால் நம்ப வேண்டிய கட்டாயம் இருந்தால், ஏன் எல்லோரும் நம்பும்படி கட்டளை யிடப்பட்டது? இவை அனைத்தையும் ஒவ்வொன்றாக விளக்குவதற்கு நீண்ட காலம் எடுக்கும். எனவே, அவற்றுக்கு தனித்தனியாக இங்கு பதில் சொல்ல மாட்டேன். ஆனால் தெரிந்து கொள்ள வேண்டும், இரண்டு சுன்னி இஃதிகாத் சிந்தனை பள்ளிகளில் ஒன்றான இமாம் அபுஅல்-ஹசன் அல்-

அஷ்அரி (குத்திச சிர்ரஹு) அவர்களால் நிறுவப்பட்ட அஷ்அரி இஃதிகாத் இஸ்லாமிய சட்டம் ஷாஃபிஈ மற்றும் மாலிகி மத்ஹபுகளினால் பின்பற்றப் பட்டது. முஃதாஸிலா (பித்அத்தான வழி தவறிய 72 பிரிவுகளில் ஒன்று) நமக்கு சாத்திய மில்லாத ஒன்றை செய்யும்படி கட்டளையிடுவது அல்லாஹு தஆலாவுக்கு சாத்தியம் இல்லாதது (ஜாயிஸ் இல்லை). முஃதஸிலாவின் படி, சாத்தியமான ஆனால் மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஒன்றை அல்லாஹு தஆலா கட்டளையிடுவதற்கு சாத்தியம் இல்லை.

அஷ்அரியின் கூற்றுப்படி, அவன் கட்டளையிடாவிட்டாலும் அது அல்லாஹ் தஆஅலா' வுக்கு இன்னும் சாத்தியம் ஆகும். மக்களை காற்றில் பறப்பதற்கு கட்டளையிடுவது இந்த வகையை சேர்ந்தது. ஈமானிலோ அல்லது ஷரீஅத்திலோ அல்லாஹு தஆலா மனிதனுக்கு சாத்தியமில்லாததை கட்டளையிட வில்லை. இதன் காரணமாக, ஒருவர் முஸ்லிமாக இருக்கும் போது, பைத்தியம் பிடித்தால், அல்லது மயக்கமடைந்தால் (அல்லாஹு தஆலாவை மறந்து, சுயநினை வின்றி மயக்கம்) அல்லது தூக்கத்தில், இறந்து விடுவா ரானால் உறுதிப்படுத்தும் நிலையில் இல்லா விட்டாலும் அவர் இன்னும் முஸ்லிம்.

இந்த ஹதீஸ் ஷரீஃபில் 'ஈமான்' என்பதற்கு அகராதியின் பொருளை சிந்திக்க கூடாது, ஏனெனில் அரேபியாவில் அறியாதவர்களுக்கும் அதன் பொருள் 'உறுதிப்படுத்துவது, நம்பிக்கை என்பது தெரியும். நிச்சயமாக சஹாபத் அல்கிராம் (ரழி-அல்லாஹு தஆலா அன்ஹும் அஜ்மஈன்கள்) அதை அறிந்திருந்தார்கள். அவர்களுக்கு ஜிப்ரயில் (அலைஹி-ஸலாம்) ஈமானின் பொருளை ரசூலுல்லாஹ் (அலைஹி சலாம்) அவர்களிடம் இஸ்லாத் தில் ஈமான் என்றால் என்ன என்று கேட்பதன் மூலம் கற்பிக்க விரும்பினார். '**ஈமான்**' என்பது; குறித்த ஆறு நம்பிக்கை கோட்பாடுகளை, கஷ்ஃப் மூலம் (மறைவானதை) அறிவது, அல்லது **விஜ்தான்** (மனச்சாட்சி) ஒரு சான்றை கொண்டு நுண்ணறிவினால் புரிந்து கொள்வது, அல்லது தனித்துவமான அங்கீகரிக்கப்பட்ட அறிக்கையை நம்பிக்கை வைத்து பின்பற்றுவதுடன் இதயத்தாலும் ஆன்மாவாலும் நம்புவதுடன் வாயால் சொல்வது என்று பொருள். ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்); ஈமான் என்பது குறிப்பிட்ட ஆறு உண்மைகளை நம்ப வேண்டும் என்று கூறினார்:

1- முதலாவதாக, **அல்லாஹு தஆலா தான் வாஜிபல் வுஜூத் (அவசியமான ஒன்று), உண்மையான இறைவன் (மஃபூத்) மற்றும் அனைத்து படைப்பினங்களின் படைப்பாளன்** என்று நம்புவது. அவன் மட்டுமே அனைத்தையும் உருவாக்குகிறான் என்று முற்றிலும் நம்ப வேண்டும். [ஒவ்வொரு பொருளும், அணுக்கள், மூலக்கூறுகள், கலவைகள், சேதன பொருட்கள், செல்கள், வாழ்வு, இறப்பு, ஒவ்வொரு நிகழ்வும், எதிர்வினைகள் ஒவ்வொன்றும், அனைத்து சக்தி மற்றும் ஆற்றல், இயக்கங்கள், சட்டங்கள், ஆவிகள், மலக்குகள் மற்றும் உயிர்வாழும் அல்லது உயிரற்ற அனைத்து படைப்புகளையும், இம்மையிலும் மறுமையிலும் பொருள், நேரம் மற்றும் ஒற்றுமை இல்லாத அனைத்தையும் இல்லாமையில் இருந்து படைத்து பரிபாலிக்கின்றான்.

அவன் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து படைப்புகளையும் அவை [இல்லாதிருந்த ஒரே கணத்தில்] படைத்தான். [அவற்றில் சிலவற்றை வேறொன்றிலிருந்து படைக்கின்றான். மேலும், தீர்ப்பு நாள் வருகின்ற போது, அவை அனைத்தையும் ஒரு நொடியில்] அழித்து விடுவான். அவன் அனைத்தையும் படைத்தவன், உரிமையாளன், எல்லா படைப்புகளின் முழுமையான ஆட்சியாளன். அவனைவிட யாரும் ஆதிக்கம் செலுத்தவோ, கட்டளை யிடவோ, அல்லது யாரும் அல்லாஹு தஆலாவை விட உயர்ந்தவனாக இருக்கவோ முடியாது என்று நம்பிக்கை கொள்ள வேண்டும். எல்லா வகையான மேன்மையும், எல்லா பண்புகளின் பூரணத்துவமும் அவனுக்கு மட்டுமே சொந்தமானது. அவனிடம் எந்த குறையும் இல்லை, எந்த குறைவான பண்பும் அவனிடம் இல்லை. அவன் விரும்பியதை செய்ய அவனால் முடியும். அவன் பிரயோசனமானது என்று நினைக்காத ஒன்றும் அவனுக்கோ அல்லது மற்றவருக்கோ பயனுள்ளதல்ல. அவன் பிரதி பலனுக்காக எதையும் செய்வ தில்லை. அவன் செய்யும் எல்லாவற்றிலும் மறைவான காரணங்கள் (ஹிக்மா), பயன்கள், அருள் பாலிப்பும் மற்றும் உதவிகளும் உள்ளன.

அல்லாஹுதஆலா தனது படைப்புகளுக்கு நன்மை பயக்கும் பயனுள்ளவற்றை செய்ய வேண்டியதில்லை, அல்லது அவன் சிலருக்கு வெகுமதிகளையும் மற்றும் சிலரை வேதனை செய்யவும் வேண்டியதில்லை. பாவம் செய்த அனைவரையும் சுவர்க்கத்திற்கு கொண்டு வருவான் ஆயின் அது அல்லாஹு தஆலாவின் மேன்மைக்கும் கருணைக்கும் உரியதாக இருக்கும்.

அவனுக்கு கீழ்ப்படிந்து வழிபடுபவர்கள் அனைவரையும் அவன் நரகம் புகச் செய்வானாயின் அது அவனுடைய நீதியாக மாறும். ஆனால் அவனை வழிபடும் முஸ்லிம் களை சொர்க்கத்தில் நுழைய வைத்து அவர்களுக்கு இன்பமானவைகளை தருவதாக ஆணையிட்டு அறிவித்தான். அவனை நம்ப மறுப்பவர்களை நரகத்தில் நிரந்தரமாக தண்டனை செய்வதாகவும் அறிவித்துள்ளான். அவனுடைய வார்த்தையை அவன் மீறுவது இல்லை. எல்லா உயிர்களும் அவனை நம்பி வழிபட்டாலும் அவனுக்கு எந்த பயனும் இல்லை. அனைத்து உயிரினங்களும் அவனை நம்பாமல் காஃபிர்களாக மாறினாலும், தீங்குகள் அதிகமாகிவிட்டாலும் அல்லது அடிபணியாது விட்டாலும் அவனுக்கு எந்த தீங்கும் விளைவிக்காது. மனிதன் எதையாவது செய்ய நினைக்கும் போது அல்லாஹு தஆலாவும் விரும்பினால் அதை அப்படியே உருவாக்குகின்றான். அவனுடைய மனித படைப்புகளையும் அவற்றின் செயல்களையும் செய்து முடிப்பவன் அவன் ஒருவனே. அவன் விரும்பவில்லை என்றால் அல்லது உருவாக்கவில்லை என்றால் எதுவும் நகர முடியாது. அவன் விரும்பவில்லை என்றால், யாரும் நம்ப மறுப்பவர் (காபிர்) அல்லது மதமற்ற துரோகியாக ஆக முடியாது. அவன் அவநம்பிக்கையையும் பாவங்களையும் நடக்க அனுமதிக்கிறான். ஆனாலும், அவனுக்கு அவர்களை பிடிக்காது. அவனுடைய செயல்களில் யாரும் தலையிட முடியாது. அவன் இதை ஏன் செய்தான் என்று காரணம் கேட்பதற்கு, அல்லது அவன் எப்படி செய்ய வேண்டும் என்று கருத்து தெரிவிப்பதற்கு வலிமை அல்லது உரிமை யாருக்கும் இல்லை.

ஷிர்க்கை (அல்லாஹு தஆலாவை தவிர வேறு எதையும் தெய்வமாக்குவது, வணங்குவது) அல்லது நிராகரிப்பினால் செய்த காரியங்களை தவிர, ஒரு நபர் செய்த பெரும் பாவத்திற்காக மனம் வருந்தாமல் இறந்து போனால் அல்லாஹு தஆலா விரும்பினால் மன்னிப்பான். சிறிய பாவம் செய்தவர்களை அல்லாஹ் விரும்பினால் தண்டிப்பான். அல்லாஹு தஆலாவை நம்பிக்கை கொள்ளாத காபிர்களையும், விசுவாச துரோகி களையும் ஒருபோதும் மன்னிக்க மாட்டேன் என்று அறிவித்தான். அவர்களை நரகத்தில் நிரந்தரமாக சித்திரவதை செய்வான். முஸ்லீம்களாக இருப்பவர்களை, அதாவது **அஹ்ல் அல்-கிப்லா** (வழிபாடுகள் மற்றும் தொழுகையின் போது கஃபாவை

முன்நோக்கி திரும்புபவர்கள்)ஆக இருந்தும், அவர்களுடைய இஃதிகாத் ஈமான், நம்பிக்கை **அஹ்லு ஸுன்னா** நம்பிக்கைகளுடன் பொருந்தவில்லையானால் அவர்கள் மன்னிப்பு கேட்காமல் இறக்கின்ற அத்தகைய முஸ்லிம்கள் **பித்அத்வாதிகள்** நரகத்தில் நிரந்தரமாக இருக்காது வெளியேற்றப்படுவார்கள்.

அல்லாஹுதஆலாவை இவ்வுலகில் கண்ணால் பார்க்க முடியும் ஆனால் அவன் பார்க்கப் படவில்லை. மறுமையில், (மஹ்ஷரில்) தீர்ப்பு நாளில் கூடியிருக்கும் இடத்தில் அவன் காஃபிர்களாலும் பாவியான முஸ்லிம்களாலும் அவனுடைய சீற்றத்துடன் பார்க்கப்படுவான். பக்தியுள்ள முஸ்லிம்கள் அவனை இரக்கமுள்ளவனாகவும் அழகுடனும் காண்பார்கள். சொர்க்கத்தில், விசுவாசிகள் அவனுடைய அழகை காண்பார்கள். மலக்குகளும் பெண்களும் அவனை பார்ப்பார்கள். காபிர்கள் இதை இழந்து விடுவார்கள். அங்கு ஜின்களும் இதை இழக்க நேரிடும் என்று ஒரு அறிக்கை தெரிவிக்கிறது. பெரும்பான்மை உலமாக்களின் கூற்றுப்படி, "அல்லாஹுதஆலா'வினால் அன்பு வைக்கப்பட்ட முஸ்லீம்கள் அவனுடைய அழகை (தஜல்லி அல் ஜமால்) ஒவ்வொரு காலையிலும் மாலையிலும் அவனை (று'ஃயத்) காண்பார்கள். குறைந்த தரத்தில் உள்ள முஸ்லிம்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காண்பது கொண்டு கௌரவிக்கப்படுவார்கள். பெண்கள் வருடத்தில் சிலமுறை இந்த உலகின் திருவிழாக்கள் போன்று காண்பார்கள்[1] "அல்லாஹு

---

[1] ஹஸ்ரத் ஷேக் அப்த் அல்-ஹக் அத்-தஹ்லவி [டெல்லியில்1642/1052 காலமானார்] தனது பாரசீக மொழி படைப்பான தக்மில் அல்-ஈமானில் எழுதினார்கள்: **"ஒரு ஹதீஸ் ஷரீப் கூறுகின்றது: மறுமை நாளில் நீங்கள் 'உங்கள் ரப்பை [மாதத்தின்] பதினான்காம் நாள் [முழு நிலவு] பார்ப்பது போல் காண்பீர்கள்.**" அல்லாஹு தாலா இந்த உலகத்தில் புரியாமல் அறியப்படுகிறான், மறுமையில் அவன் விவரிக்க முடியாதளவு காணப்படுவான்.

அபுல்-ஹசன் அல்-அஷ்ஹரி, அல்-இமாம் அஸ்-சுயூதி மற்றும் அல்-இமாம் அல்-பைஹகி போன்ற சிறந்த அறிஞர்கள் கூறினார்கள். மலக்குகளும் அவனை சொர்க்கத்தில் பார்க்க போகிறார்கள். இமாம் அல்-அஃலம் அபு ஹனிஃபாவும் வேறு சில அறிஞர்களும் ஜின்கள் (நெருப்பிலிருந்து உருவாக்கப்பட்ட மறைவான ஒரு புத்திசாலி உயிரினம், மலைக்குகளை விட தரத்தில்

தஆலா பார்க்கப்படுவான் என்று நம்ப வேண்டும், எனினும் நாம் அவன் எப்படி பார்க்கப்படுவான் என்று நாம் நினைக்கக்கூடாது. ஏனெனில் அவனுடைய செயல்களை நமது புத்தியை கொண்டு வர்ணிக்க முடியாது. அவை உலகத்தில் உள்ளவைகளை ஒத்திருக்க மாட்டாது. [பௌதீக அல்லது இரசாயனவியல் தரவுகளை கொண்டு அவற்றை மதிப்பிட முடியாது]. அந்த அம்சங்கள் அல்லது அது போன்ற கருத்துக்களுடன் அவனுக்கு எந்த தொடர்பும் இல்லை.

அவன் பொருள் அல்ல. [அவன் ஒரு மூலகமோ சேர்வையோ அல்ல] அளவிடவோ கணக்கிடவோ முடியாதவன். அவனில் எந்த மாற்றமும் நிகழ்வதில்லை. அவன் இடம், நேரம், காலம், மற்றும் தூர அளவீடுகளுக்கு அப்பாற்பட்டவன். எனவே, மனிதனின் தர்க்கம், அறிவு அல்லது புத்தியால் அல்லாஹுவை பற்றி எதையும் புரிந்து கொள்ள முடியாது. எனவே மனிதன் அவன் எப்படி காணப்படுவான் என்பதை புரிந்து கொள்ள முடியாது. கை, கால், திசை, இடம் போன்ற சொற்கள், ஆயத்துகளிலும் ஹதீஸ்களிலும் இருந்தாலும் அவை அல்லாஹு தாலாவுக்கு ஏற்றவையல்ல. அவற்றை நாம் இன்று அறிந்து பயன் படுத்துகின்ற அர்த்தத்தில் பயன்படுத்தப்படுவது இல்லை. அத்தகைய ஆயத்துகள் மற்றும் ஹதீஸ்கள் **முதஷாபிஹாத்** (புரிந்துகொள்ள முடியாத, பொருள் மறைக்கப்பட்டவை) என்று அழைக்கப்படுகின்றன. எனினும் அவற்றை நாம் நம்ப வேண்டும், ஆனால் அவை என்ன, அல்லது எப்படி, என்பதைப் புரிந்து கொள்வதற்கு முயற்சி செய்யக்கூடாது. அவற்றை சுருக்கமாக அல்லது விரிவாக விளக்கலாம் (த'ஃவில்); அதாவது அவற்றிற்கு அல்லாஹு தாலாவுக்கு ஏற்ற அர்த்தங்களை கொடுக்கலாம். உதாரணமாக, 'கை' என்ற வார்த்தைக்கு சக்தி அல்லது ஆற்றல் என விளக்கப்படுகிறது. முஹம்மது (அலைஹிசலாம்) அவர்கள் மிஃராஜ் சமயத்தில் அல்லாஹு தஆலாவை பார்த்தார்கள். ஆனால் அந்த பார்வை இந்த உலகில் பார்ப்பது போல் கண்களால் பார்க்கவில்லை. அவனை இவ்வுலகில் பார்த்ததாக சொல்பவன் ஒரு zஸிந்தீக்.

---

குறைந்தவை) அவை தவாப் (நற்செயல்களுக்கு மறுமையில் வழங்கப்படும் வெகுமதிகள்) சம்பாதிக்கவில்லை. அவர்கள் சொர்க்கத்தில் நுழைய மாட்டார்கள். உண்மையுள்ள இறையச்சத்தை கொண்ட ஜின்கள் மட்டுமே

அவ்லியாக்கள் (கத்தஸல்லாஹூதஆலா அஸ்ரா ரஹூம் அஜ்மஈன்) பார்த்த அனுபவங்கள் இந்த உலகில் பார்ப்பது போன்றதோ அல்லது மறு உலகில் பார்ப்பது போன்றதோ அல்ல. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அது **ரு'ஃயத்** (பார்த்தல்) அல்ல, ஆனால் **ஷூஹூத்** [பார்ப்பதற்கு உதாரணங்கள் (மிதால்கள்) அவர்களின் 'இதய கண்கள்' மூலம் பார்ப்பது] அவர்கள் அதை அனுபவித்தனர். சில பெரிய அவ்லியாக்கள் அவனை பார்த்ததாக கூறினார்கள். இன்னும் அவர்கள் தாங்கள் உணர்வற்று மயக்க (சக்ர்), நிலையில் இருந்த போது அனுபவித்த ஷூஹூதை அவர்கள் தவறாக று'ஃயத் என்று கருதினார்கள். இது அவர்களின் வார்த்தைகளில் ஒன்றாகும், விளங்குவதன் மூலம் புரிந்து கொள்ள முடியும்.

**கேள்வி:** "அல்லாஹூதஆலாவை இவ்வுலகில் கண்களால் பார்ப்பது சாத்தியம் (ஜாயிஸ்) என்று மேலே கூறப்பட்டுள்ளது. அப்புறம் நடக்கக்கூடிய ஒன்றை சொல்பவர் எவ்வாறு zஸிந்தீக் ஆக இருக்கும்? அப்படி சொல்லும் ஒரு நபர் காபிர் ஆகுவாரா? அது சாத்தியம் என்று சொல்ல முடியுமா?"

**பதில்:** 'ஜாயிஸ்" என்பதன் கருத்து அகராதியில் 'நடக்க சாத்தியமானது அல்லது இல்லை. எனினும்,அல்-அஷ்ஹரி[அபுல்-ஹசன்அலி இப்னு இஸ்மாயில் ( மறை 941/330ல் பாக்தாதில்)], அவர்களின் மத்ஹபின்படி ரு'ஃயத் சாத்தியம் என்பது அல்லாஹூதஆலா, இந்த உலகத்தில் பார்ப்பதற்கு வித்தியாசமான உணர்வுள்ள மனிதனை, நெருக்கமாக அல்லது அவனுடன் நேருக்கு நேர் பார்ப்பதில் இருந்து வேறுபட்டதாக, படைக்க முடியும். மேலும், இந்த உலகில்

---

நரகத்தில் இருந்து தப்பிக்கும். பெண்கள் இவ்வுலகில் பண்டிகை காலங்கள் போன்று வருடத்திற்கு சில முறை அல்லாஹூ தஆலாவை பார்ப்பார்கள். சரியான (காமிலான) விசுவாசிகள் ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் அவனை காண்பார்கள், மற்றவர்கள் அவனை வெள்ளி கிழமைகளில் பார்ப்பார்கள். இந்த நற்செய்தி தாழ்மையான எனக்கும், உண்மையுள்ள பெண்கள் மற்றும் மலக்குகள் மற்றும் ஜின்களையும் உள்ளடக்கியது.; அது சரியாக இருக்கும். பரிபூரண (அறிவு, புத்திசாலி) மற்றும் ஆரிஃப் பெண்கள் பாத்திமத் அஸ்ஸஹ்ரா, கதீஜாத் அல்-குப்ரா, ஜஷாத் அஸ்-சித்திகா மற்றும் பிற ஒழுக்கமானவர்கள் [நபியின்] மனைவிகள் மற்றும் ஹஸ்ரத் மரியம் மற்றும் ஹஸ்ரத் ஆசியா போன்ற பெண்கள் சிறப்பான மரியாதை

கொடுக்கப்படுவார்கள். . அல்-இமாம் அஸ்-சுயூதியும் இதையே குறிப்பிடுகிறார்கள்.

அவன் உருவாக்கிய பௌதீக விதிகளுக்கு மாறாக படைக்க வல்லவன் என்று அர்த்தம். உதாரணமாக, சீனாவில் இருக்கும் பார்வையற்றவனுக்கு அண்டலூசியாவில் (தெற்கு ஸ்பெயின்) இருக்கும் ஒரு கொசுவை காட்டுவது சாத்தியம், அவனால் முடியும். பூமியின் மேல் இருக்கும் மனிதனுக்கு சந்திரனில் அல்லது நட்சத்திரத்தில் உள்ள எதையும் காட்டுவதற்கு முடியும். அத்தகைய சக்தி அவனுக்கு மட்டுமே சொந்தமானது.

இரண்டாவதாக, "நான் இந்த உலகில் அல்லாஹு தாலாவை பார்த்தேன்" என்று கூறுவது, ஆயத்-கரிமாவுடன் (குர்ஆன் அல்-கரீமின் வசனங்கள்) மற்றும் உலமா (இஸ்லாத்தின் புனித சட்டம் மற்றும் இறையியல் பற்றிய நிபுணத்துவம் பெற்றவர்களாக அங்கீகரிக்க ப்பட்ட இஸ்லாமிய அறிஞர்களின் ஒருமித்த கருத்துடன் பொருந்தாது. எனவே, அத்தகைய அறிக்கையை வெளியிடும் ஒருவர் ஒரு **முல்ஹித்** அல்லது zஸிந்தீக்[1] என்று கூறுகிறது. மூன்றாவது விடையாக, "அல்லாஹு தாலாவை இவ்வுலகில் காண முடியும்" என்ற கூற்று "அவனை பூமியில் பௌதீக காரணங்கள் மற்றும் விதிகளுடன்" பார்க்க இயலும் என்று அர்த்தம் இல்லை. இருப்பினும், அவனை பார்த்தேன் என்று சொல்பவர் அவர் மற்ற விஷயங்களை பார்ப்பது போல் பார்த்தார் என்று பொருள். இது சாத்தியமில்லாத ஒரு பார்வை. இத்தகைய அறிக்கைகளை வெளியிடுபவர் அவநம்பிக்கையை ஏற்படுத்தும் முல்ஹித் அல்லது ஸிந்தீக். [இந்த பதில்களுக்குப் பிறகு, ஹஜ்ரத் மவ்லானா காலித்" கவனமாக இருங்கள்!" என்று எழுதியுள்ளார். இதனால் அவர் இரண்டாவது பதிலுக்கு கவனத்தை செலுத்தினார். அது பொருத்தமாக இருந்தது.] நேரம் கழிதல், பகல் அல்லது இரவு என்பவற்றை அல்லாஹு

---

[1] முல்ஹிதுகள் அல்லது ஸிந்தீக்க்குகள் தாங்கள் முஸ்லிம் என்று கூறுகிறார்கள். முல்ஹிதுகள் அவர்களின் வார்த்தையில் நேர்மையானவர்கள்; அவர்கள் ஒரு முஸ்லீம் மற்றும் சரியான பாதையில் இருப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். இருப்பினும், ஸிந்தீக்குகள் இஸ்லாத்தின் எதிரிகள், அவர்கள் உள்ளிருந்து இஸ்லாத்திற்கு தீங்கு விளைவிப்பதற்கும் முஸ்லிம்களை ஏமாற்றுவதற்கும் தங்களை முஸ்லிம்கள் என்கிறார்கள்.

தஆலாவுடன் தொடர்புபடுத்த முடியாது. அவனில் எந்த மாற்றமும் நிகழ்வதில்லை என்பதால், அதை சொல்ல முடியாது. அவன் கடந்த காலத்தில் இந்த முறையில் இருந்தான் அல்லது அவன் எதிர்காலத்திலும் அப்படி இருப்பான் என்று கூற முடியாது. அவன் எதிலும் (ஹுலூல்) ஊடுருவுவதில்லை.[1] அவன் எதனுடனும் ஒன்று படுவதும் இல்லை. அவனுக்கு எதிரி, துணை, உதவியாளர் அல்லது பாதுகாவலர் ஒருபோதும் இல்லை, அவனுக்கு அப்பா, அம்மா, மகன் ,மகள் அல்லது மனைவி இல்லை. அவன் எப்போதும் எல்லோருடனும் இருக்கிறான், சுற்றிலும் இருக்கிறான் மற்றும் எல்லா வற்றையும் சூழந்துள்ளான். அவன் எல்லோருக்கும் அவர்களின் முக்கிய நாடி நரம்புகளை விட நெருக்கமானவன். இருப்பினும், அவனது இருப்பு, ஒற்றுமை நெருக்கம் அல்லது நம்மை சூழந்துள்ளது நாம் புரிந்து கொள்வது போல் இல்லை. அவனது நெருக்கத்தை அறிஞர்களின் அறிவால், விஞ்ஞானிகளின் புத்தி சாதுரியத்தால் அல்லது அவ்லியாக்களின் (கத்தஸல் லாஹுதஆலா அஸ்ராரஹும் அஜ்மஈன்) கஷ்ஃப் அல்லது ஷுஹுத் மூலம் அறிந்து கொள்ள முடியாது. மனித அறிவினால் அதன் உள் அர்த்தங்களை புரிந்து கொள்ள முடியாது. அல்லாஹுதஆலா அவனுடைய தாத்தில் (சுயம்) தனித்துவமானவன், சிஃபத்து களில் (பண்புகளில்) எந்த மாற்றமோ வேறுபாடோ நடைபெறாது. அல்லாஹு தஆலாவின் பெயர்கள் **தவ்கிஃபி**, அதாவது இஸ்லாம் காட்டும் பெயர்கள் மட்டுமே அவனுடைய பெயர்களாக பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறது. வேறு வார்த்தைகளை பயன்படுத்து

வதற்கு அனுமதி இல்லை.[2] அவனுடைய பெயர்கள்

---

[1] 'நுசைரி' என்ற பிரிவைச் சேர்ந்த ஷியாக்கள் அல்லாஹுத்தஆலா ஹத்ரத் அலியில் ஊடுருவியுள்ளான் என நம்புகிறார்கள். இந்த தவறான நம்பிக்கை அவர்கள் காபிர்களாக மாறுவதற்கு காரணமாகின்றது.

[2] உதாரணமாக, அல்லாஹுதஆலாவை 'அளீம்' ('சர்வ அறிவாளி') என்று அழைக்கலாம். ஆனால் 'ஃபக்கீஹ் என்பதை பயன்படுத்த முடியாது. இது ஆலிம்' (இஸ்லாமிய அறிஞர்) என்பதை குறிக்கும். இதனால் அவனுக்கு 'ஃபக்கிஹ்' என்பதை பயன்படுத்துவதில்லை. அதேபோல், அல்லாஹுதஆலா என்பதற்குப் பதிலாக 'கடவுள்' என்று கூறுவது அனுமதிக்கப்படவில்லை, ஏனெனில் 'கடவுள்' என்றால் 'சிலை' அல்லது 'தெய்வம்'; எருது இந்துக்களின் கடவுள்"என்று கூறப்படுகிறது.

எல்லையற்றவை. அவனுக்கு 1001 பெயர்கள் உள்ளன என்பது அனைவரும் அறிந்ததே. அதாவது, அவன் 1001 பெயர்களை மனித இனத்திற்கு வெளிப்படுத்தினான். முஹம்மது (அலைஹி-ஸலாம்)அவர்களின் மார்க்கத்தில் அவற்றில் 99 அஸ்மாஅல்-ஹுஸ்னா' என்று அழைக்கப்படும்.

அல்லாஹு தஆலாவின் தனிப்பட்ட பண்புகள் **சிஃபத் அத்-தாதிய்யா** ஆறு. அல்லாஹ் வின் பரிபூரணமான பண்புகள்) **சிஃபத் அத்துபுதிய்யா** எட்டு. சுன்னி இஸ்லாத்தின் இரண்டு இ'ஃதிகாத் பள்ளிகளில் (மதுஹபு) ஒன்று இமாம் அபு மன்சூர் அல்மாதுரிதி 'குத்திஸ சிர்ரஹுரு' என்பவரால் நிறுவப்பட்ட **மாதுரிதிய்யா**' வின்படி அல்லாஹு தஆலாவின் இறைமை பண்புகள் சிஃபத் உலூஹிய்யா எட்டு. இது ஹனஃபி மற்றும் ஹன்பலி மதுஹபுகளினால் பின்பற்றப்படுகின்றது. இந்த சிபத்துகள் **அஷ்'அரியின்** இ'ஃதிகாத் மதுஹபு படி ஏழு. அல்லாஹு தஆலாவின் இந்த பண்புகள் அவனுடைய தாத்தை போன்று என்றும் நிரந்தரமானவை, அதாவது; அவை நித்தியமானவை, புனிதமானவை. அவை படைப்புகளின் பண்புகளை போன்று இல்லை. பகுத்தறிவு அல்லது அனுமானத் தின் மூலம் அல்லது ஒப்பிடுவதன் மூலம் புரிந்து கொள்ளப்பட முடியாதவை. இந்த ஒவ்வொரு பண்புக்கும் எடுத்துக்காட்டுகளை உலகில் உள்ள மனித படைப்புகளுக்கு அருளியுள்ளான். இந்த உதாரணங்களை பார்க்கும்போது, அவனுடைய பண்புகளை ஓரளவு புரிந்து கொள்ள முடியும்.

மனிதனால் அவனை விவரிக்க முடியாது என்பதால் விளங்க நினைப்பது அல்லது விவரிக்க முயற்சிப்பது அனுமதிக்கப்படவில்லை. அவனுடைய எட்டு பண்புகளும் ஒன்றல்ல, மற்றும் அவனது தாத்தை விட வேறு இல்லை; அதாவது, அவனது பண்புகள் அவனுடைய தாத்தை உருவாக்குவதில்லை. அவை அவனைத் தவிர வேறு இல்லை. இந்த எட்டு பண்புகள் அவை: **ஹய்யு**- என்றென்றும் உயிருள்ளவன், **இல்ம்**- சர்வ அறிவாற்றல், **சம்உ**-கேட்பது, **பசர்**-பார்ப்பது, **குத்ரா**- சர்வ வல்லமை, **கலாம்**- பேச்சு, வார்த்தை, **இறாதா**- நாட்டம், மற்றும் **தக்வின்**-படைப்பாற்றல். அஷ்அரி மத்ஹபில், **தக்வின்** மற்றும் **குத்ரா**வும் ஒரே பண்புகளை

---

இதேமாதிரி டையூ (பிரெஞ்சு), காட்(ஜெர்மன்) போன்ற வார்த்தைகள் கடவுளை சிலைக்கு பயன்படுத்தலாம். அல்லாஹு தாலாவிற்கு அல்ல

குறிக்கின்றன. **மஷிய்யா** (இறைசித்தம்) **இறாதா** என்பன ஒரே கருத்தை குறிக்கின்றன.

அல்லாஹு தஆலாவின் எட்டு பண்புகளில் ஒவ்வொன்றும் ஒரே மாதிரியானது தனித்துவ மானது. அவற்றில் எதற்கும் எந்த மாற்றமும் ஏற்படாது, இருப்பினும் அவை ஒவ்வொன்றும் படைப்புகளில் அவற்றின் தொடர்பை பொறுத்து வேறுபட்டது. அதாவது அவனுடைய ஒரு பண்பு படைப்புகளில் பல்வேறு தாக்கத்தை ஏற்படுத்தினாலும் அதன் சீரான தன்மையில் மற்றம் இல்லை. அதேபோல், அவன் பல்வேறு வகையான உயிரினங்கள், படைப்புகளை படைத்து அவற்றை ஒவ்வொரு கணமும் அழிவிலிருந்து பாதுகாத்து வருபவன். அவன் ஒருவனே. அவனில் எந்த மாற்றமும் நிகழ்வதில்லை. ஆனால், படைப்புகள் அனைத்தும் அவனுடைய இரட்சிப்பை ஒவ்வொரு கணமும் எல்லா வகையிலும் எதிர்பார்த்து இருக்கின்றன. அவனுக்கு யாருடைய தேவையும் இல்லை.

2– ஈமானின் அவசியமான ஆறு கோட்பாடுகளில் இரண்டாவது **அல்லாஹு தஆலா'வின் மலக்குகளை நம்புவது**". 'மலக்கு' என்றால் 'தூதர்' அல்லது சத்தி என்று பொருள்படும். அவர்கள் வானவர்கள் (**லதீஃப்**) பொருட்களின் வாயு நிலையை விட அதிக அமானுஷ்ய மானவர்கள். அவர்கள் நூராணி (ஒளியால் ஆன) ஆன்மீகமானவர்கள். அவர்கள் உயிருடன் இருப்பவர்கள். அவர்களுக்கு புத்தி (அக்ல்) உள்ளது. மனிதர்களின் தீய குணங்கள் அவர்களிடம் இல்லை. வாயுக்கள் திரவமாகவும் திடமாகவும் மாறும் போது ஒரு வடிவத்தை எடுப்பதுபோல் அவர்கள் எந்த வடிவத்தையும் எடுக்கலாம். அவர்கள் அழகிய உருவங்களை எடுக்க முடியும். மலக்குகள் பெரிய மனிதர்களின் உடலை விட்டு பிரிந்த ஆத்மாக்கள் அல்ல. கிறிஸ்தவர்கள் மேற்கூறியவாறு அத்தகைய ஆவிகள் என்று கருதுகிறார்கள். ஆற்றல் அல்லது சக்தியை போன்று அவர்கள் சடப்பொருள் அல்லாதவர்கள் அல்ல. சில பழங்கால தத்துவவாதிகள் அவர்களை அவ்வாறு சடப்பொருள் அல்ல என்று கருதினர். அவர்கள் அனைவரும் '**மலாயிக்கா**' என்று அழைக்க படுகிறார்கள். மலக்குகள் மற்ற அனைத்து உயிரினங்களுக்கும் முன்பே படைக்கப்பட்டனர். எனவே, நாங்கள் வேதங்களை நம்புவதற்கு முன் அவர்களை நம்புமாறு கட்டளையிடப்பட்டுள்ளோம். வேதங்கள் தீர்க்கதரிசிகளை நம்புவதற்கு முந்தியது. **குர்ஆன் அல்-கரீமில்** நம்பிக்கைகள் இந்த வரிசையில்

கொடுக்கப்பட்டுள்ளன.

மலக்குகள் மீதான நம்பிக்கை பின்வருமாறு இருக்க வேண்டும்: அவர்கள் அல்லாஹு த'ஆலாவினால் படைக்கப்பட்ட உயிரினங்கள். அல்லாஹ்வுக்கு நம்ப மறுக்கும் காபிர்கள் மற்றும் இணைவைக்கும் முஷ்ரிக்குகள் கூறுவதுபோல் அவர்கள் அவனுடைய பங்காளி களோ அல்லது பெண் மக்களோ அல்ல. (அல்லாஹு தாலாவின் பங்காளிகள் என்று கூறுவது ஷிர்க் எனக்கூறப்படுகிறது). அவன் மலக்குகள் அனைவரையும் நேசிக்கிறான். அவர்கள் அவனுடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறார்கள், அவர்கள் பாவம் செய்வதில்லை, அவனுடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியாமல் இருப்பதில்லை. அவர்கள் ஆணோ பெண்ணோ அல்ல. அவர்கள் திருமணம் செய்வதில்லை. அவர்களுக்கு குழந்தைகள் இல்லை. அவர்கள் உயிருடன் இருக்கின்றனர். ஹஸ்ரத் அப்துல்லாஹ் இப்னு மசூத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் ஒரு கூற்றின்படி சில மலக்குகளுக்கு குழந்தைகள் இருப்பதாகவும், அதில் ஷைத்தான் மற்றும் ஜின்கள் உள்ளடக்கப்பட்டதாக கூறியிருந் தாலும், அதற்கான பதில் கிதாபுகளில் விரிவாக எழுதப்பட்டுள்ளது. அல்லாஹு தஆலா மனிதர்களை படைக்கப் போவதாக அறிவித்த போது, வானவர்கள், "யா அல்லாஹு தாலா! நீ உலகத்தை கெடுத்து இரத்தம் சிந்தும் படைப்புகளையா படைக்கப் போகின்றாய்?" என்று கேட்டார்கள். இது '**ஜzல்லா**', என அழைக்கப்படும் இந்த மலக்குகளின் கேள்விகள் அவர்கள் அப்பாவிகள் என்பதை மாற்றுவதில்லை.

எல்லா உயிரினங்களிலும், மலக்குகளே அதிக எண்ணிக்கையில் உள்ளனர். அவர்களின் எண்ணிக்கையை அல்லாஹுதஆலாவை தவிர யாரும் அறியவில்லை. வானத்தில் மலக்குகள் வணங்காத காலி இடம் இல்லை. வானத்தில் உள்ள எல்லா இடமும் ருகூவிலும், சுஜூதிலும் உள்ள மலக்குகளால் நிரம்பியுள்ளது. வானத்தில், பூமியில், புல்லில், நட்சத்திரங் களில், ஒவ்வொன்றிலும் உயிர்வாழும் மற்றும் உயிரற்ற படைப்புகளிலும், ஒவ்வொரு மழைத்துளியிலும், தாவர இலைகளிலும், அணுவிலும், மூலக்கூறு, ஒவ்வொரு இயக்கம் மற்றும் அசைவுகளிலும் மலக்குகள் கடமையில் உள்ளனர். அவர்கள் எல்லா இடங்களிலும் அல்லாஹுதஆலாவின் கட்டளைகளை நிறைவேற்றுகின்றார்கள். அவர்கள் அல்லாஹ் வுக்கும் படைப்புகளுக்கும் இடையில் ஊடகம் போன்றவர்கள். அவர்களில் சிலர் மற்றவர்

களை விட மேலானவர்கள். அவர்களில் சிலர் நபிமார்களுக்கு செய்திகளை கொண்டு வந்தனர். சில மலக்குகள் மனித இதயத்திற்கு நல்ல எண்ணங்களை கொண்டு வருகின் றனர். இது '**இல்ஹாம்**' (உத்வேகம்) என்று அழைக்கப்படுகிறது. இன்னும் சிலருக்கு மனிதர்கள் மற்றும் படைப்புகளை எல்லாம் தெரியாது. அவர்கள் அல்லாஹு தாலாவின் அழகில் சுயநினைவை இழந்துவிட்டனர். இந்த மலக்குகள் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தங்குகிறார்கள், அந்த இடத்தை விட்டு வெளியேற முடியாது. சில மலக்குகளுக்கு இரண்டு மற்றும் சிலருக்கு நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட இறக்கைகள் உள்ளன.[1] சொர்க்கத்தில் இருக்கும் மலக்குகள் சொர்க்கத்தில் தங்குகிறார்கள். அவர்களின் தலைவர் **ரிள்வான்**. நரகத்தின் மலக்குகள் **ஜபானியாக்கள்**. அவர்களுக்கு கட்டளையிடப்பட்டதை நரகத்தில் செயல்படுத்துகிறார்கள். கடல்நீர் மீன்களுக்கு தீங்கு விளைவிக்காதது போல், நரகத்தின் நெருப்பு அவர்களுக்கு தீங்கு விளைவிப்பதில்லை. ஜபானியாக்கள் பத்தொன்பது முன்னணி மலக்குகள், அவர்களின் தலைவர் **மாலிக்**.

ஒவ்வொரு மனிதனுக்கும், நான்கு மலக்குகள் அவர்கள் செய்யும் அனைத்து நல்ல மற்றும் கெட்ட செயல்களை பதிவு செய்கிறார்கள். அவர்களில் இருவர் இரவில் வருவார்கள், மற்ற இருவரும் பகலில் வருவார்கள். அவர்கள் '**கிராமன் காத்திபீன்**' (அழியாத

---

[1] ஒவ்வொரு வகையான பறவைகளின் மற்றும் விமானத்தின் இறக்கைகள் அவற்றின் சொந்த அமைப்பு மற்றும் ஒன்றிலிருந்து மற்றது வேறுபட்டதுபோல், மலக்குகளின் இறக்கைகள் அவற்றின் சொந்த அமைப்பை கொண்டுள்ளன.. நாம் அறியாத ஒன்றின் பெயரைக் கேட்டதும் இது நமக்குத் தெரிந்த விஷயங்களை போன்றது என்று யூகிப்பதன் மூலம் நாம் தவறாக நினைக்கிறோம். நாங்கள் மலக்குகளுக்கு இறக்கைகள் உள்ளன என்று நாங்கள் நம்புகின்றோம். ஆனால் அவை எப்படி இருக்கின்றன என்று எங்களுக்குத் தெரியாது. தேவாலயங்கள், வெளியீடுகள் அல்லது திரைப் படங்களில் உள்ள சிறகுகள் கொண்ட பெண்களின் படங்கள் மலக்குகள் என்று கருதப்படுகின்ற அனைத்தும் பொய்யானவை. முஸ்லீம்கள் இதுபோன்ற படங்களை எடுப்பதில்லை. முஸ்லிமல்லாத வர்களால் வரையப்பட்ட இந்த யதார்த்தமற்ற படங்களை நாம் உண்மை என்று கருத கூடாது. நம்பவும் கூடாது.

எழுத்தாளர்கள்) அல்லது '**ஹஃபஸா**' (பதிவிடும்) மலக்குகள் என்று அழைக்கப்படுகிறார்கள். மற்றொரு அறிக்கையின் படி, ஹஃபாஸா மலக்குகள் 'கிராமன் காத்திபீன்களிலிருந்து வேறுபட்ட வர்கள். ஒருவரின் வலது பக்கத்தில் இருக்கும் மலக்கு இடதுபக்கத்தில் இருப்பவரை விட மேலானவர். அவர் நல்ல செயல்களை பதிவு செய்கிறார். இடதுபுறம் இருப்பவர் தீய செயல்களை பதிவு செய்கிறார். காஃபிர்களை சித்திரவதை செய்யும் மற்றும் கீழ்ப் படியாத முஸ்லிம்களை அவர்களின் கபுருகளில் சித்திரவதை செய்யும் மலக்குகள் இருக்கிறார்கள். இன்னும், கபுருகளில் கேள்வி கேட்கும் மலக்குகள் '**முன்கர்**' மற்றும் '**நகீர்**' என்று அழைக்க படுகிறார்கள்.. முஸ்லிம்களை கேள்வி கேட்கும் மலக்குகள் '**முபஷ்ஷிர்** மற்றும் '**பஷிர்**' (நற்செய்தி வழங்குபவர்கள்) என்றும் அழைக்கப்படுகிறார்கள். மலக்குகளில் ஒருவரிலிருந்து மற்றவர் மேன்மையை கொண்டுள்ளனர். அவர்களில் மிக உயர்ந்த நான்கு மலக்குகள் உள்ளனர். அவர்களில் முதன்மையானவர் **ஜிப்ரயீல்** (அலைஹிசலாம்) அவர்கள். தீர்க்கதரிசிகளுக்கு **வஹி** (தெய்வீக வெளிப்பாடு) கொண்டு வருவதும் கட்டளைகள் மற்றும் தடைகளை அவர்களுக்கு தெரிவிப்பதும் ஜிப்ரயீலின் கடமை. இரண்டாவது **இஸ்ராஃபில்** (அலைஹி சலாம்) அவர்கள் '**சூர்**' என்று அழைக்கப்படும் கடைசி துருப்பை ஒலிப்பவர். இஸ்ராஃபில் இரண்டு முறை சூர் ஒலிப்பார். விலையுயர்வு, பற்றாக்குறை, [பொருளாதார ஒழுங்கு, வசதி வாய்புகள், ஆறுதல் மற்றும் எளிமை] மற்றும் ஒவ்வொரு பொருளையும் நகர்த்துவது என்பன அவரது கடமை. நான்காவது இஸ்ராயில் (அலைஹி-ஸலாம்), மனித உடல்களிலிருந்து (ரூஹ்) ஆன்மாக்களை கைப்பற்றுவது. இந்த

நான்கிற்கு பிறகு நான்கு உயர்ந்த வகுப்புகள் மலக்குகள் உள்ளனர்: ஹமலத் அல் அர்ஷின் நான்கு மலக்குகள், திருப்பி எழுப்பப்படும் அந்த நாளில் எட்டு பேராக இருக்கும். அல்லாஹ்வின் தெய்வீக பிரசன்னத்தில் மலக்குகள் '**முகர்ரபூன்**' என்று அழைக்கப் படுகிறார்கள்; நரகில் வேதனை செய்யும் மலக்குகளின் தலைவர்கள் '**கருபியூன்**'என்றும்; மற்றும் கருணையின் மலக்குகள் '**ருஹானியூன்**' என்றும் அழைக்கப்படுவார்கள். இந்த உயர்ந்த மலக்குகள் நபிமார்களை (அலைஹி முஸ்ஸலவாத்து வத்தஸ்லிமாத்துகள்) தவிர, மனிதர்கள் அனைவரையும் விடவும் உயர்ந்தவர்கள். ஸாலிஹீன் (பக்தியுள்ள முஸ்லிம்கள்), அவ்லியாக்கள் (அல்லாஹு

தஆலாவின் நேசர்கள்) பொதுவான மற்றும் தாழ்ந்த நிலை மலக்குகளை விட உயர்வானவர்கள். மேலும் பொதுவான முஸ்லிம்களை (கீழ்ப்படியாத, பாவமுள்ளவர்கள்) விட பொதுவான மலக்குகள் உயர்ந்தவர்கள். எவ்வாறாயினும், காஃபிர்கள் எல்லா உயிரினங்களை விட தாழ்ந்தவர்கள்.

ஷூரின் முதல் ஒலியில், **ஹமலத் அல்-அர்ஷ்** தவிர அனைத்து மலக்குகளும் மற்றும் நான்கு பிரதான மலக்குகளும் அழிக்கப்படுவார்கள். பின்னர் **ஹமலத்அல்-அர்ஷ்** மற்றும் நான்கு பிரதான மலக்குகளும் அழிக்கப்படுவார்கள். இரண்டாவது சூரில் அனைத்து மலக்குகளும் எழுப்பப்படுவார்கள். **ஹமலத் அல் அர்ஷ்** மற்றும் நான்கு மலக்குகளும் இரண்டாவது சூர் ஒலிக்கு முன் எழுவார்கள். அதாவது, எல்லா படைப்புகளும் அழிக்கப்பட்ட பிறகு இந்த மலக்குகளும் அழிக்கப்படுவார்கள். அவர்கள் அனைவரும் அனைத்து உயிர்களும் திரும்ப எழுப்பப்பட முன் எழுப்பப்படுவார்கள்.

3– ஈமானின் மூன்றாவது பர்ளு "**அல்லாஹுதஆலா'வினால் வெளிப்படுத்தப்பட்ட வேதங்களை நம்புவது**." தீர்க்கதரிசிகள் சிலருக்கு இந்த வேதங்கள் மலக்குகளை கொண்டு அவர்களுக்கு ஓதி காட்டுவதன் மூலம் அவர்களுக்கு அனுப்பி வைத்தான். சிலருக்கு எழுதப்பட்ட ஏடுகளை அனுப்பினான், மற்றும் சிலருக்கு மலக்குகள் இன்றி நேரடியாக கேட்க வைப்பதன் மூலம் அனுப்பினான். இந்த வேதங்கள் அனைத்தும் அல்லாஹு தஆலாவின் வார்த்தைகள் (கலாம்-அல்லாஹ்). அவை கடந்த காலத்திலும் நித்தியமானவை. அவை அவனுடைய படைப்புகள் அல்ல. மலக்குகளால் உருவாக்கப்பட்ட வார்த்தைகளும் அல்ல, தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளும் அல்ல. அல்லாஹு தஆலாவின் வார்த்தை நாங்கள் எழுதும், மனதில் வைத்து பேசும் மொழிக்கு மாறானது. அது எழுத்தில், பேச்சில் மனதில் இருப்பது போல் இல்லை. அதற்கு எழுத்துகளோ ஒலிகளோ கிடையாது. மனிதனால் அவனும் அவனுடைய பண்புகளும் எப்படி இருக்கின்றன என்பதை புரிந்து கொள்ள முடியாது. ஆனால் மனிதர்கள் அந்த வார்த்தையை படிப்பதற்கு, மனதில் வைத்திருப்பதற்கு மற்றும் எழுதுவதற்கும் முடியும். அது எங்களிடம் இருக்கும்போது ஹாதித் (பின்னர் உருவாக்கப்பட்டதாக) ஆகிறது. அதாவது; அல்லாஹு தஆலாவின் வார்த்தை இரண்டு விதமான அம்சங்களை கொண்டது. அது மனித படைப்பிடம் இருக்கும் போது அது ஹாதித்[2] படைப்பு ஆகின்றது.

அது அல்லாஹுு தஆலாவின் வார்த்தை என்று நினைக்கும் போது, அது நித்தியமானது (கதீம்).

அல்லாஹுுதஆலா இறக்கி வைத்த அனைத்து (வேத) புத்தகங்களும் மிக சரியானவை. அவற்றில் பொய், பிழை எதுவும் இல்லை. அவன் தண்டிப்பான் சித்திரவதை செய்வான்

என்று அவன் அறிவித்தபோதிலும் அவனுக்கு மன்னிப் பதும் சாத்தியமானது; இந்த மன்னிப்பு நமது அறிவுக்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளின் நிபந்தனைக்கு உட்பட்டதாக இருக்கலாம். அல்லது அவனது சொந்த விருப்பம் மற்றும் நாட்டத்தின் பேரில், அல்லது மனிதர்களுக்கு தகுதியான தண்டனையை அவன் மன்னிப்பான் என்று வெளிப்படுத்து வதாகவும் இருக்கும். ஏனெனில், தண்டனை பற்றிய பிரகடனம் நிகழ்வை பற்றி விவரிக்காததால் அவன் மன்னிக்கும் போது அது பொய்யாக இருக்க முடியாது. தடை அல்லது சிரமம் இல்லாவிட்டால் ஆயத்துகளையும் ஹதீஸ்களையும் அவற்றின் வழக்க மான அர்த்தங்களில் விளக்குவது அவசியம். இந்த அர்த்தங்களை போன்ற வேறு அர்த்தங்களை கொடுக்க அனுமதிக்கப்பட வில்லை[1]. **முதஷாபிஹாத்** எனப்படும் ஆயத்துக்கள் புரிந்துகொள்ள முடியாதவை, அர்த்தங்கள் மறைக்கப்பட்டவை. அல்லாஹுு தஆலா மட்டுமே அறிந்தவன். அல்லாஹ்விடம் நெருங்கி உயர்ந்த நிலையை அடைந்த மிகச்சிலர் அல்லாஹுு தஆலா' வினால் அல்-இல்மல்-லதுன்னி (அவ்லியாக்களின் இதயங் களுக்கு அல்லாஹுு தஆலாவினால் ஈர்க்கப்பட்ட) எனும் அறிவு வழங்கப்பட்டவர்கள் அவர்கள் அனுமதிக்கப்பட்ட அளவு வரை அவற்றின் அர்த்தங்களை புரிந்து கொள்ள முடியும். வேறு

---

[1] குர்ஆன் அல்-கரீம் மற்றும் ஹதீஸ் ஷரீஃபுகள் குறைசிகளின் (முஹம்மது அலைஹி-ஸலாம் சேர்ந்த ஒரு அரபு வம்சத்தினர்) மொழியில் மற்றும் பேச்சுவழக்கில் உள்ளன. ஆதலால் அதன் வார்த்தைகளுக்கு ஹிஜாஸில் (செங்கடல் கடற்கரையில் அரேபிய தீபகற்பத்தில் உள்ள பகுதி மக்கா மற்றும் மதீனா அமைந்துள்ளது) 1400 ஆண்டுகளுக்கு முன்பு பயன்படுத்தப்பட்ட அர்த்தங்கள் கொடுக்கப்பட வேண்டும். பல நூற்றாண்டுகளாக மாற்றங்கள் அடைந்த இன்றைய அர்த்தங்களை வழங்குவதன் மூலம் அவற்றை மொழிபெயர்ப்பது சரியல்ல.

யாராலும் அவற்றை புரிந்து கொள்ள முடியாது. இந்த காரணத்திற்காக, முத்தஷாபிஹாத் என்பது அல்லாஹுதாலாவின் வார்த்தைகள் என்று நம்பவேண்டும், நாம் அவற்றின் அர்த்தங்களை ஆராய்வது கூடாது. அஷ்அரி மத்ஹபு அறிஞர்கள் அத்தகைய ஆயத்துகளை சுருக்கமாகவோ அல்லது விபரமாகவோ விளக்குவது (தஃவில்) அனுமதிக்கப் படுகிறது என்று கூறினார்கள். **'த'ஃவில்'** என்பது; ஒரு சொல்லின் பல அர்த்தங்களில் இருந்து பொதுவாக இல்லாத ஒரு சொல்லை தெரிவு செய்வது. உதாரணமாக, **"அல்லாஹ்'வின் கரம் அவர்களுடையதை விட மேலானது"** என்ற ஆயத்து பற்றி, அது அல்லாஹு தஆலாவின் வார்த்தை "அல்லாஹு தஆலா இந்த வார்த்தை (வசனம்) மூலம் எதை சொல்கிறானோ அதை நான் நம்புகிறேன்" என்று நாம் கூற வேண்டும். "அதன் அர்த்தத்தை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை" அல்லாஹு தஆலா மட்டுமே அறிவான்" என்று சொல்வது சிறந்தது. அல்லது "அல்லாஹு'வின் அறிவு என்பது நமது அறிவை போன்றது அல்ல. அவனுடைய விருப்பம் நம் விருப்பம் போல் இல்லை. அதேபோல, அவனுடைய கை மனித படைப்பின் கைகளைப் போன்றது அல்ல." என்று நாம் கூற வேண்டும்".

அல்லாஹு தஆலா இறக்கிய வேத புத்தகங்களில், சில ஆயத்துக்களின் உச்சரிப்புகள் அல்லது அர்த்தங்கள், அல்லது இரண்டும் அவனால் மாற்றப்பட்டன (**நாஸிக்**). **குர்ஆன் அல்-கரீம்** அனைத்து வேதங்களையும் மாற்றியது மற்றும் அவற்றில் உள்ள விதிகளையும் ரத்து செய்தது. உலக முடிவுவரை **குர்ஆன் அல்-கரீமில்** சேர்த்தல், மறக்கப்பட்டது அல்லது விடுபட்டது போன்ற எந்த தவறும் இருக்காது. கடந்த காலம் மற்றும் எதிர்காலம் பற்றிய அனைத்து அறிவும் குர்ஆன் அல்-கரீமில் உள்ளது. இந்த காரணத்தினால், **குர்ஆன்அல்-கரீம்** மற்ற அனைத்து வேதங்களையும் விட உயர்ந்தது மற்றும் மதிப்புமிக்கது. அல்லாஹு தஆலா ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம்) மூலம் நிகழ்த்திய மிகப் பெரிய மு'ஃஜிஸா **குர்ஆன் அல்-கரீம்**. எல்லா மனிதர்களும் ஜின்களும் ஒன்று சேர்ந்து இதில் உள்ள மிகச்சிறிய சூராவை போன்ற ஒன்றை கூறுவதற்கு முயற்சித்தாலும் அவர்கள் அதில் வெற்றி பெற மாட்டார்கள். உண்மையில், அரேபியாவின் இலக்கிய கவிஞர்கள் சொற்பொழி வாளர், ஒன்று கூடி மிகவும் கடினமாக பாடுபட்டனர். ஆனால் அவர்கள் ஒரு குறுகிய வசனம்

போன்ற ஒன்றை கூட உருவாக்க முடியவில்லை. அவர்களால் **குர்ஆன் அல் கரீமுக்கு** எதிராக நிற்க முடியவில்லை. அவர்கள் மயக்கமடைந்தனர். அல்லாஹு தஆலா இஸ்லாத்தின் எதிரிகளை குர்ஆனுக்கு முன் திறமையற்றவர்களாக ஆக்கி, தோற்கடிக்கவும் செய்கிறான். குர்ஆன் அல்கரீமின் வாக்கிய நடை மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்டது. குர்ஆன்அல்-கரீம் கூறுவது போல் மனிதர்களால் கூற இயலாது. அரேபியாவின் இலக்கியவாதிகளால் பேசப்படுகின்ற மொழிநடையின் எழுத்துக்களில் கூறப்பட்டதாக இருந்த போதிலும் கூட **குர்ஆன் அல்-கரீம்** உள்ள வசனங்கள் மனிதர் களின் கவிதை, உரை நடை, சொல் நயம் போன்றது அல்ல.

மனிதகுலத்திற்கு வெளிப்படுத்தப்பட்ட வேதங்களின் எண்ணிக்கை 104: அதில் 10 **சுஹுஃபு** (சிறியவேதம்) **ஆதம்** (அலைஹி-ஸலாம்) அவர்களுக்கும் 50 சுஹுஃபுகள் **ஷீத்** (அலைஹி-ஸலாம்) அவர்களுக்கும்; 30சுஹுஃபுகள் **இத்ரீஸ்** (அலைஹி-ஸலாம்) அவர்களுக்கும்; 10 ஸுஹுஃபுகள் **இப்ராஹிம்** (அலைஹி-ஸலாம்) அவர்களுக்கும் கொடுக்கப்பட்டது என்பது அனைவரும் அறிந்ததே. இது தவிர **தவ்ராத்** (தோரா) வேதம் **மூஸா**(அலைஹி-ஸலாம்) அவர்களுக்கு அருளப்பட்டது. **ஜபூர்** வேதம் **தாவூத்** (அலைஹி-ஸலாம்) அவர்களுக்கு; **இன்ஜில்** வேதம் (லத்தீன் 'இவாஞ்சலியம்') **ஈசா** (அலைஹி-சலாம்) அவர்களுக்கும் மற்றும் **குர்ஆன் அல்-கரீம் முஹம்மது** (அலைஹி சலாம்) அவர்களுக்கும் வழங்கப்பட்டது.

ஒரு நபர் எதையாவது கட்டளையிடவோ தடைசெய்யவோ விரும்பினால், அல்லது ஏதாவது கேட்க விரும்பினால் அல்லது சில செய்திகளை வழங்க முன் முதலில் அவர்கள் யோசித்து அவர்களின் மனதில் தயார் செய்கிறார்கள். மனதில் உள்ள இந்த எண்ணங்கள் "**கலாம் நஃப்ஸி**" என்று அழைக்கப்படுகின்றது. அவை அரபு, பாரசீகம் அல்லது ஆங்கிலம் என்று சொல்ல முடியாது. அவை பல்வேறு மொழிகளில் வெளிப்படுத்த படுவதனால் மனதில் உள்ள எண்ணத்தில் மாற்றங்களை ஏற்படுத்தாது. இந்த எண்ணங்களை வெளிப்படுத்தும் வார்த்தைகள் "**கலாம் லஃப்ஸி**" என்று அழைக்கப்படுகின்றது. கலாம் லஃப்சியை வெவ்வேறு மொழிகளில் வெளிப்படுத்தலாம். எனவே, ஒரு நபரின் கலாம் நஃப்ஸி என்பது அறிவு, விருப்பம், பகுத்தறிவு போன்ற பிற பண்புகளை போன்று அதை வைத்திருப்பவரின் தூய்மையான, மாறாத, தனித்துவமான பண்பு. கலாம்

லஃப்ஸி என்பது கலாம் நஃப்ஸியை விளக்கும் 'சொற்களின் கூட்டு' அதை விளக்குபவரின் வாய் வழியே வந்து காதுகளை அடைகின்றன. அதுபோல அல்லாஹுதஆலாவின் வார்த்தையும் நித்தியமானது, நிரந்தர மானது, அமைதியற்றது, படைக்கப்படாதது மற்றும் அவனிடமே இருப்பது. இது அல்லாஹு தாலாவின் அறிவு மற்றும் நாட்டம் போன்று 'சிஃபத் அத்-தாதியா' மற்றும் 'சிஃபத் அத்-துபுதிய்யா' விலிருந்தும் வேறுபட்ட ஒரு பண்பு ஆகும்.

கலாம் (பேச்சு, சொல்) எனும் பண்பு என்றும் மாறாது தூய்மையானது. இது எழுத்துக் களிலும் ஒலிகளிலும் இல்லை. அதை ஒரு கட்டளை, ஒரு தடை, ஒரு கதை என்றோ அல்லது அரபு, பாரசீகம், ஹீப்று, துருக்கியம் அல்லது சிரியாக் என்று பிரிக்கவோ வகைப் படுத்தவோ முடியாது. இது அத்தகைய வடிவங்களை எடுக்காது. அதை எழுதவும் முடியாது. அதற்கு, கருவிகளோ ஊடகங்களோ புத்திக்கூர்மையோ, காதோ, நாவோ தேவையில்லை. அதை எந்த மொழியில் வேண்டுமானாலும் சொல்லலாம். எனவே, அது அரபு மொழியில் இருந்தால் இது **குர்ஆன் -அல்-கரீம்** என்று அழைக்கப்படுகிறது. அது ஹீப்ருவில் வெளிப் படுத்த பட்டால் அது தவ்ராத். இது சிரியாக் மொழியில் வெளிப்படுத்தப்பட்டால் அது இன்ஜில் ஆகும். [இது (சதுத்தீன் தஃப்தஸானி, சமர்கண்டில் 1389/792ல் மறைந்தவர்) அவர்களின் ***ஷர்ஹ் அல்-மகாசித்*** என்ற கிதாபில் எழுதப்பட்டுள்ளது. கிரேக்க மொழியில் அதன் வெளிப்பாடு இன்ஜில், மற்றும் சிரியாக் மொழியில் அதன் வெளிப்பாடு ஸபூர் ஆகும்.]

**கலாம்அல்-இலாஹிய்யா** (அல்லாஹு தஆலாவின் வார்த்தை) பல்வேறு விடயங்களை பற்றி கூறுகிறது; அது நடந்த அல்லது நடக்கப்போகும் சம்பவங்களை கூறினால் அது **ஹபார்** (விவரணம்) என்று அழைக்கப்படுகிறது; இல்லையெனில், அது **இன்ஷா** என்று அழைக்கப்படுகிறது. அது செய்ய வேண்டியவை பற்றி கூறினால் அது **அம்ர்** (கட்டளை) எனப்படும். அது தடை செய்யப்பட்ட விஷயங்களை கூறினால், அது **நஹி** (தடை)என்று அழைக்கப்படும். ஆனால் **கலாம் அல்-இலாஹியா**வில் மாற்றம் அல்லது அதிகரிப்பு நிகழ்வது இல்லை. அனைத்து வெளிப்படுத்தப்பட்ட வேதங்களும் (புத்தகங்களும்), அனைத்து பக்கங்களும் அல்லாஹு தஆலாவின் பண்பு '**கலாம் அல்லாஹ்**'விலிருந்து வந்தவை; அதாவது அவை அவனுடையவை **கலாம் அந்-நஃப்சி**. மேலும், அதன் அரபியில் **குரான் அல்-கரீம்**. வஹி என்னும் (தெய்வீக

வெளிப்பாடு) எழுத்து வடிவில் ஓதப்பட, கேட்கப்படக்கூடிய, எழுதப்படக் கூடிய மற்றும் மனனமிடக்கூடிய கவிதை வசன நடையில் அனுப்பப்பட்டவை. **கலாம் அல்-லஃப்ஸி** அல்லது **குர்ஆன் அல்-கரீம்**. கலாம் அல்-லஃப்ஸி கலாம் அன்-நஃப்சியை குறிக்கின்ற காரணத்தினால், அதை **கலாம் அல்-இலாஹிய்யா** அல்லது தெய்வீக பண்பு என்று அழைப்பது அனுமதிக்க படுகிறது. அது முழுவதுமாக **குர்ஆன் அல்-கரீம்** என்றும், அதன் பாகங்களும் **குர்ஆன் -அல்-கரீம்** என்றும் அழைக்க படுகின்றது. நேரிய மார்க்க அறிஞர்கள் 'கலாம் அன்-நஃப்ஸி' ஒரு படைப்பு அல்ல, நித்தியமானது என்று ஏகமனதாக கூறியுள்ளார்கள். கலாம் அல்-லஃப்சி படைக்கப்பட்டதா அல்லது நித்தியமானதா என்பதில் ஒருமித்த கருத்து இல்லை. கலாம் அல்-லஃப்ஸி படைக்கப்பட்டதாக கருதுபவர்கள் அது உருவாக்கப்பட்டது என்று சொல்லாமல் இருப்பது நல்லது என்று எச்சரித்தும் உள்ளார்கள். ஏனென்றால் அப்படி சொன்னால் அது கலாம் அன்-நஃப்சி ஒரு படைப்பு என்று அர்த்தம் கொடுக்கும். இந்த விசயத்தில் இதுதான் சிறந்த கருத்து.

மனித மனம் எதையாவது கேட்கும் போது அது வேறு எதையாவது குறிக்கிறது, அது ஒரே நேரத்தில் குறிக்கப்பட்ட விஷயத்தை நினைவில் கொள்கிறது. அஹ்லுஸ் ஸுன்னாவில் உள்ள அறிஞர்களில் சிலர் **குர்ஆன் அல்-கரீம்** படைக்கப்பட்டது என்று கூறியது என்பது எங்கள் நாவினால் நாம் உச்சரிக்கும் ஒலிகள் மற்றும் வார்த்தைகளை குறிக்கின்றது. அஹ்லுஸ்ஸுன்னாவின் அறிஞர்கள் கலாம் அன்-நஃப்சி மற்றும் கலாம் அல்-லஃப்ஸி இரண்டும் அல்லாஹு தாலாவின் வார்த்தை என்று ஏக மனதாக கூறியுள்ளார்கள். சில அறிஞர்கள் இந்த அறிக்கை, கலாம் அன்-நஃப்சி அல்லாஹு தாலாவின் பண்புகளில் ஒன்றான பேச்சு உருவகமானது என்று கருதினாலும் மற்றும் கலாம் அல்-லஃப்ஸி என்பது அல்லாஹு தாலாவின் வார்த்தை என்பதன் அர்த்தம் அல்லாஹு தாலா தான் அதை படைதத்தவன் என்பதாகும்.

**கேள்வி**: "மேலே உள்ள எழுத்தில் இருந்து புரிகிறது அல்லாஹு தாலாவின் நித்திய வார்த்தையை கேட்கமுடியாது. நான் அல்லாஹு தஆலாவின் வார்த்தைகளை கேட்டிருக் கின்றேன் என்று சொல்வதன் அர்த்தம் 'நான் ஒலிகளையும் உச்சரிக்கப்பட்ட வார்த்தை களையும் கேட்டிருக்கிறேன், அல்லது 'குரலின் ஒலியையும் நித்திய கலாம் அன் நஃப்ஸியையும் நான் புரிந்து கொண்டேன். எல்லா நபிமார்களும் மற்றும் எல்லோரும்

இந்த இரண்டு வகைகளிலும் கேட்கலாம். மூஸா (அலைஹி-ஸலாம்) அவர்களை **கலிம்-அல்லாஹ்** (அல்லாஹுதஆலாவுடன் பேசினார்)?" என்று வேறுபடுத்துவதற்கு காரணம் என்ன?

**பதில்**: மூஸா (அலைஹி சலாம்) அவர்கள் நித்திய வார்த்தையை தெய்வீக வழக்கத் திலிருந்து வேறுபட்டு அவர்கள் அதை சொற்கள் ஒலிகள் இல்லாமல் விளக்க முடியாத வகையில் கேட்டார்கள். சுவர்க்கத்தில் புரியாத, விவரிக்க முடியாத வகையில் அல்லாஹு தஆலாவை காண்பது போன்று. வேறுயாரும் இந்த முறையில் கேட்கவில்லை. அவர் அல்லாஹு தஆலா'வின் வார்த்தையை அவரது காது வழியாக மட்டுமல்லாமல், அவரது உடலின் ஒவ்வொரு துணிக்கைகள் மூலமாகவும், எல்லா திசையிலிருந்தும் கேட்டார்கள். அல்லது மரத்தின் திசையில் இருந்தும் ஒலி மற்றும் காற்றின் அதிர்வு அல்லாத வேறு எதுவும் இல்லாமல் கேட்டார். ஏனென்றால் இந்த மூன்று நிபந்தனைகளில் ஒன்றில் அவர் அதை கேட்டிருக்கிறார், அதனால் அவர் '**கலிம்-அல்லாஹ்**' என்ற பெயருடன் கௌரவிக் கப்பட்டார். முஹம்மது (அலைஹி சலாம்) அவர்களும் மிஃராஜ் இரவில் இந்த முறை யிலேயே இறை வார்த்தையை கேட்டனர். ஜிப்ரயீல் (அலை) அவர்களிளிடம் இருந்து வஹியை பெறும் போதும் அப்படித்தான் பெற்றார்கள்.

4. ஈமானின் ஆறு அத்தியாவசியமானவைகளில் நான்காவது மக்களுக்கு வழி காட்டவும், அவன் விரும்பும் வழியில் நடத்துவதற்கும் "**அல்லாஹு தஆலா அனுப்பிய தீர்க்கதரிசி களை நம்பிக்கை கொள்வது**," சொற்களஞ்சியத்தில், 'ருசூல்' (றசூலின் பன்மை) அனுப்பிய, தூதர்கள்.' இஸ்லாத்தில், 'றசூல்' என்றால் 'உன்னதமான, மரியாதைக்குரிய நபர். அவருடைய குணம், அறிவு மற்றும் புத்தி அவரது காலத்தில் இருந்த அனைத்து மக்களையும் விட உயர்ந்தது, மற்றும் அவருடைய குணாதிசயங்களில் கெட்ட குணம் மற்றும் பிடிக்காத விடயம் எதுவுமே இல்லை. நபிமார்கள் தரமான உயரிய **இஸ்மா**வை கொண்டிருந்தனர்; அதாவது, அவர்களின் நுபுவ்வத் (நபித்துவம்)[1] பற்றி

---

[1] நயவஞ்சகமாக இஸ்லாத்தை அழிக்க முயற்சிக்கும் சில காஃபிர்கள், "முஹம்மது (அலைஹி- சலாம்) நபியாக வருவதற்கு முன் விக்கிரகங்களுக்கு பிராணிகளை பலியிட்டு வந்தார்" என்றும் இதற்கு சான்றாக மதுஹபு அற்றவர்கள் எழுதிய புத்தகங்கள் ஆவணங்களாக குறிப்பிடுகின்றனர். இந்தக் கூற்று பொய் என்பதை மேலே உள்ள வரிகள் நிரூபிக்கின்றன.

அவர்களுக்கு அறிவிக்கப்படுவதற்கு முன்னும் பின்னும் மற்றும் அவர்களின் அவர்கள் எந்த கொடிய பாவங்களையோ அல்லது சிறு பாவங்களையோ செய்யவில்லை. அவர்களின் நபித்துவம் அவர்களுக்கு அறிவிக்கப் பட்ட பிறகு அறியப்பட்டு பரவும் வரை, அவர்களிடம் குருடு, காது கேளாமை அல்லது அது போன்ற குறைபாடுகள் இருக்கவில்லை. ஒவ்வொரு நபிமாருக்கும் ஏழு தனித்தன்மைகள் இருந்தன என்பதை நம்பவேண்டும்: **அமானா** (நம்பகத்தன்மை), **சித்க்** (பக்தி), **தப்லீக்** (பிரச்சாரம், மற்றும் அல்லாஹு தஆலாவின் மார்க்கத்துக்கு மக்களை அழைப்பது), **அதாலா** (நீதி நியாயம்), **இஸ்மா** (பாவம் செய்வதற்கு எதிரான சக்தி) **ஃபதானா** (அதிகூர்மையான புத்தி) மற்றும் அம்ன் **அல்-அஸ்ல்** (நுபுவ்வா விலிருந்து நீங்குவதற்கு எதிரான பாதுகாப்பு). ஒரு புதிய மார்க்கத்தை (ஷரீஅத் விதிகளின் அமைப்பு) கொண்டு வந்த நபி “ற சூல்” என்று அழைக்கப்படுகிறார். மேலும் ஒரு புதிய மதத்தை கொண்டு வராமல் முந்தைய மார்க்கத்துக்கு அழைப்பவர் “நபி” [‘தீர்க்கதரிசி, தூதுவர்] என்று அழைக்கப்படுகிறார். இந்த இரண்டுக்கும் ‘தூது’ பயன்படுத்தப்படுகிறது] கட்டளைகளை தெரிவிப்பதிலும் அல்லாஹு தஆலாவின் மார்க்கத்துக்கு அழைப்பதிலும் அவர்களுக் கிடையில் வேறுபாடில்லை. எல்லா நபிமாரும் விதிவிலக்கு இல்லாமல் அர்ப்பணிப்பு

மற்றும் உண்மையானவர்களாக இருந்தனர் என்று நம்ப வேண்டும். அவற்றில் ஒன்றை மறுப்பவர் அவை அனைத்தையும் மறுத்தவராக கருதப்படுகிறார்.

நுபுவ்வத்தை கடின வேலை, பசி, அசௌகரியம் மற்றும் அதிக வழிபாடு மூலம் அடைய முடியாது. அது அல்லாஹு தாலா’வின் தயவினாலும், அவனது தெரிவு மூலம் மட்டுமே கொடுக்கப்படுகின்றது. மனிதனுக்கு இம்மை, மறுமைக்கு பயனுள்ள வாழ்க்கையை ஏற்பாடு செய்வதற்காகவும், தீய செயல்களிலிருந்து அவர்களை தடுப்பதற்கும், அமைதி, பாதுகாப்பு, மற்றும் நிம்மதியை அடைவதற்கு வழிகாட்டுவதற்கும், நபிமார்கள் ஊடாக வேதங்கள் அனுப்பப்பட்டன. நபிமார்களுக்கு பல எதிரிகள் இருந்த போதிலும், கேலி செய்து கடுமையாக நோவினை செய்த போதும் அவர்கள் எதிரிகளுக்கு பயப்படவோ, அல்லாஹு தஆலாவின் கட்டளைகளை, நம்பிக்கை நடை முறைகளை மக்களுக்கு அறிவிப்பதில் தயக்கம்

காட்டவோ இல்லை. நபிமார்கள் உண்மையானவர்கள் தூய பக்தியாளர்கள் என்பதை நிரூபிப்பதற்கு அல்லாஹு தஆலா அவர்களுக்கு அற்புதங்களை (முஃ ஜிஸாக்கள்) கொடுத்து பலப்படுத்தினான். அவர்களின் அற்புதங்களுக்கெதிராக சவால் விடுவதற்கு யாராலும் முடியவில்லை. ஒரு குறிப்பிட்ட தீர்க்கதரிசியை பின்பற்றுபவர்கள் அந்த தீர்க்கதரிசியின் **உம்மா** என்று அழைக்கப்படுகிரர்கள். மறுமை நாளில் தீர்க்க தரிசிகள் அவர்களின் உம்மத்துக்காக பரிந்துபேச அனுமதிக்கப்படுவார்கள், குறிப்பாக கடுமையான பாவம் செய்தவர்களுக்காக அவர்களின் பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படும். அல்லாஹு தஆலா அவர்களின் உம்மத்தில் உள்ள உலமாக்கள், சாலிஹீன்கள் மற்றும் அவ்லியாக்களும் பரிந்துரை செய்ய அனுமதிக்கப்படுவார்கள். அவர்களின் பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ள ப்படும். நபிமார்கள் (அலைஹிமுஸ்ஸலவாத்து வத்தஸ்லிமாத்) அவர்களின் கபுருகளில் நாம் அறியமுடியாத வகையில் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பூமி அவர்களின் அருள்பாலிக்கப்பட்ட உடல்களுக்கு எந்த சிதைவையும் ஏற்படுத்தாது. மேலும், ஒரு ஹதீஸ் ஷரீபில் கூறப்பட்டுள்ளது: **“நபிமார்கள் தங்கள் கப்ருகளில் தொழுகையையும் ஹஜ்ஜையும் செய்கிறார்கள்**[1] ஒரு

[1] இன்று, அரேபியாவில் ‘வஹாபிகள்’ என்று அழைக்கப்படுபவர்கள் இது போன்ற ஹதீஸ்களை நம்புவதில்லை. அவர்கள் இந்த ஹதீஸ்களை நம்பும் உண்மையான முஸ்லிம்களை “காஃபிர்கள்” என்று அழைக்கிறார்கள். தெளிவற்ற, மயக்கமான அர்த்தங்களைக் கொண்ட ஆயத்துகள் மற்றும் ஹதீஸ்களை அவர்கள் தவறாகப் புரிந்து கொண்ட காரணத்தால் அவர்கள் நிராகரிப்பவர்களாக இல்லை, ஆனால் பித்’அத்’வாதிகளாக மாறியுள்ளார்கள். அவர்கள் முஸ்லிம்களுக்கு பெரிதும் தீங்கு விளைவிக்கின் றார்கள். வஹாபிசம் என்பது அரேபியாவின் நஜ்த் பகுதியைச் சேர்ந்த முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் என்ற ஒரு அறியாதவனால் நிறுவப்பட்டது. பிரித்தானிய உளவாளி ஹம்பர், அஹ்மத் இப்னுதைமியாவின் (இ. டமாஸ்கஸ், 1328/728). துரோகக் கருத்துக்களைப் பயன்படுத்தி அவரை தவறாக வழிநடத்தினான்.

முகம்மது அப்துஹ் (இறப்பு. எகிப்து, 1905/1323) என்ற எகிப்தியரின் புத்தகங்கள் மூலம் இது துருக்கியர் களிடையேயும் பரவியது. அஹ்லுஸ் ஸுன்னாவின் அறிஞர்கள் நூற்றுக்கணக்கான நூல்களை எழுதி வஹாபிசம் ஐந்தாவது மத்ஹப் அல்ல என்றும்

நபியின் அருள்பெற்ற கண்கள் தூங்குவது போல, அவருடைய இதயத்தின் கண்கள் தூங்குவதில்லை. அனைத்து நபிமார்களும் (அலைஹிமுஸ்ஸலாம்) அவர்கள் கடமை செய்வதிலும் தீர்க்கதரிசனத்தின் பரிபூரண பண்புகளை கொண்டிருப்பதிலும் சமமானவர்கள். மேற்கூறிய ஏழு விசேட தனித்தன்மைகள் அனைத்து நபிமார்களிடமும் இருந்தன. நபிமார்கள் நுபுவ்வாவிலிருந்து விலக்கப்படவில்லை. எனினும் அவ்லியாக்களின், விலாயத் (வலி என்ற நிலை) யிலிருந்து இல்லாமல் நீங்கி போகலாம். நபிமார்கள் படைப்பில் மனிதர்களே. ஜின்களோ அல்லது மலக்குகளோ அல்ல. அவை மனிதர்களுக்குரிய தீர்க்கதரிசி எனும் நிலையை ஒருபோதும் அடையவோ முடியாது. தீர்க்கதரிசிகளுக்கு இடையே மேன்மையில் மற்றும் தரங்களில் வித்தியாசம் இருந்தது. உதாரணமாக, அவரது உம்மாவில் உள்ளவர்களின் எண்ணிக்கை மற்றும், அவர் நியமிக்கப்பட்ட இடம் பிரதேசம் பகுதிகள், அவருடைய அறிவு மற்றும் மரிஃபாக்களில் இருந்து (அவ்லியாவின் இதயங்களுக்கு ஊக்கமளிக்கப்பட்ட அல்லாஹுு

தாலாவின் தாத்து மற்றும் சிஃபத் பற்றி அறிவு), அவருக்கு அளிக்கப்பட்ட அற்புதங்கள்; அவற்றின் தொடர்ச்சி, பிரத்தியோக பரிசுகள், அருட்கொடைகள் போன்ற மேன்மைகளை கொண்டிருப்பது தொடர்பாக இந்த வரிசையில், கடைசியாக வந்த ரசூலுல்லாஹ் முஹம்மது (அலைஹி-ஸலாம்) மற்ற அனைத்து நபிமார்களை விடவும் உயர்ந்தவர். இந்த வரிசையில் அடுத்ததாக, 'உலுல்-அஸ்ம்' எனப்படும் நபிமார்கள் ஏனையவர்களை விட உயர்ந்தவர்கள். றசூல்மார்கள், றசூல் அல்லாத நபிமார்களை விட உயர்ந்தவர்கள். நபிமார்களின் (அலைஹிமுஸ்ஸலாம்) எண்ணிக்கை

---

வஹாபிகள் தவறான வழியில் வழிகெட்டவர்களாக (ளலாலா) என்றும் நிரூபித்தார்கள். விரிவான தகவல்கள் எங்களின் **முடிவில்லாத பேரின்பம், ஒரு பிரிட்டிஷ் உளவாளியின் ஒப்புதல் வாக்குமூலம்**, மற்றும் **முஸ்லிமுக்கான ஆலோசனை** புத்தகங்களில் வழங்கப்பட்டுள்ளன. எமது மார்க்கத்துக்கு சேவை செய்யும் இளைஞர்களை பிரிட்டிஷ் காரர்களினால்! நிறுவப்பட்ட அவர்களின் வஹாபிச மார்க்கத்தில் வீழ்ந்துவிடாமல் அல்லாஹுுத்தஆலா பாதுகாப்பானாக. பல ஹதீஸ்களில் போற்றப்படும் அஹ்லுஸ் ஸுுன்னா அறிஞர்களின் வழியிலிருந்து விட்டு விலகாதிருக்க அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக .

அறியப்படவில்லை. 124,000க்கும் அதிகமான நபிமார்கள் இருந்ததாக பரவலாக அறியப்படுகிறது.. அவர்களில் 313 அல்லது 315 பேர் றசூல்மார்கள்; அவர்களில் ஆறு பேர் உயர்ந்த நிலையில் உள்ள றசூல்மார்கள், 'உலுல்-அஸ்ம்' என்று அழைக்கப்பட்டனர்: **ஆதம்**, **நூஹ்** (நோவா), **இப்ராஹிம்** (ஆபிரகாம்), **மூசா** (மோசஸ்), **ஈசா** (இயேசு) மற்றும் **முஹம்மது முஸ்தபா** (அலைஹி முஸ்ஸலாத்து வஸ்ஸலாம்).

பின்வரும் 33 தீர்க்கதரிசிகள் நன்கு அறியப்பட்டவர்கள்: **ஆதம்**, **இத்ரிஸ்** (ஏனோக்), **ஷீத்** (ஷிஸ்), **நூஹ்** (நோவா), **ஹூத்** (ஹெபர்), **சாலிஹ்** (மெதுசலே), **இப்ராஹிம்** (ஆபிரகாம்), **லூத்** (லாட்), **இஸ்மாயில்** (இஸ்மாயில்), **இஷாக்** (ஐசாக்),**யாகூப்** (ஜேக்கப்), **யூசுப்** (ஜோசப்), **அய்யூப்** (ஜோப்), **ஷுஐப்** (ஜத்ரோ), **மூசா**(மோசஸ்), **ஹாருன்** (ஆரோன்), **கிள்ர்**, **யூஷா இப்னு நன்** (ஜோசுவா), **இல்யாஸ்** (எலியாஸ்), **அல்யாசா** (எலிஷா), **துல்-கிஃப்ல்** (எசேக்கியல்), **ஷமூன்**, **இஷ்மோயில்** (இஸ்மாயில்), **யூனுஸ்** இப்னு மாதா (ஜோனா), **தாவூத்** (டேவிட்), **சுலைமான்** (சொலமன்), **லுக்மான்**, **ஜகரியா** (சக்கரியா), **யஹ்யா** (ஜான் தி பாப்டிஸ்ட்), **உசைர்** (எஸ்ரா), **ஈசா இபின் மரியம்** (இயேசு), **துல்-கர்னைன்** (சுல்கர்னைன்) மற்றும் **முஹம்மது** (அலைஹிமுஸ்ஸலாத்து வஸ்ஸலாம்).

அவர்களில் 28 பேரின் பெயர்கள் மட்டுமே குர்ஆன் அல்-கரீமில் கூறப்பட்டுள்ளன. ஷெத், கிள்ர், யூஷா, ஷமூன் மற்றும் இஷ்மோயில் எழுதப்படவில்லை. துல்கர்னைன், லுக்மான் மற்றும் உஸைர் ஆகியோர் தீர்க்கதரிசிகளா என்பது உறுதிப்படுத்த படவில்லை. **மக்துபாத்** இரண்டாம் தொகுதியின் 36வது கடிதத்தில் எம். மாதுமின் அறிக்கையில் கிள்ர் (அலைஹி-ஸலாம்) தீர்க்கதரிசி என்பது உண்மை என்று எழுதப்பட்டுள்ளது. 182வது கடிதத்தில் "கிள்ர் (அலைஹி-ஸலாம்) அவர்கள் மனித உருவில் தோன்றி சிலவற்றை செய்கிறார்கள் என்பது அவர் உயிருடன் இருக்கிறார் என்பதை காட்டவில்லை என்று எழுதப்பட்டுள்ளது. அல்லாஹு தஆலா கிள்ர் (அலைஹி-ஸலாம்) அவர்களின் ஆன்மாவுக்கும் அதேபோல் பல நபிமார்கள், வலிமார்களின் ஆன்மாக் களுக்கும் மனித உருவில் தோன்றுவதற்கு அனுமதியை வழங்கினான். அவர்களை காண்பது அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள். என்பதை நிரூபிக்கவில்லை. துல்-கிஃப்லு (அலைஹி-ஸலாம்) 'ஹர்கில்' என்று அழைக்கப்பட்டவர், அவர் இலியாஸ், இத்ரிஸ் அல்லது

ஜகரியா என்றுகூட கூறப்படுகிறது. இப்ராஹிம் (அலைஹி-ஸலாம்) அவர்கள் கலீலுல்லாஹ், ஏனெனில் அவருடைய இதயத்தில் படைப்பினங்களின் மீது பற்று இருக்கவில்லை அல்லாஹ்'வின் அன்புமட்டுமே இருந்தது. மூஸா (அலைஹி-ஸலாம்) அவர்கள் அல்லாஹு தஆலாவுடன் பேசியதால், கலீம்-அல்லாஹ் ஆனார். ஈஸா (அலைஹி-ஸலாம்) அவர்களுக்கு தந்தை இல்லை மற்றும் 'ஆகு!' என்ற கலிமத் அல்-இலாஹியாவின்(தெய்வீக) ஆணை யினால் பிறந்ததால் கலிமத்-அல்லாஹ் என்று அழைக்கபட்டார். மேலும் அவர் அல்லாஹ் வுடைய வார்த்தைகளை போதித்தார், அவை முழுவதும் அவை தெய்வீக ஞானத்தால் நிறைந்திருந்தன. மேலும் அவற்றை மக்களின் காதுகளுக்கு தெரிவித்தன.

<u>முஹம்மது</u> (அலைஹி-ஸலாம்) அவர்கள் அனைத்து படைப்புகளும் படைக்கப்படுவதற்கு காரணமானவர்கள், மிக்க மேன்மையானவர், மிகவும் சிறந்தவர், மனித குலத்தில் மிகவும் மரியாதைக்குரியவர், ஹபீப்-அல்லாஹ் (அல்லாஹ்'வின் அன்புக்குரியவர்). அவர் ஹபீப்-அல்லாஹ் என்பதற்கும் அவரது மேன்மையையும் உயர்வையும் நிரூபிக்க பல சான்றுகள் இருந்தன. இந்த காரணத்தினால், அவரை ஜெயித்தது அல்லது தோற்கடித்தது போன்ற வார்த்தைகளை அவர்மீது யாரும் சொல்ல முடியாது. மீள எழுப்பப்படும் நாளில், அவர் தனது கல்லறையிலிருந்து அனைவருக்கும் முன்பாக எழுந்திருப்பார். அவர் தீர்ப்பு செய்யும் இடத்திற்கு முதலில் செல்வார். எல்லோருக்கும் முன் அவர் சொர்க்கம் செல்வார். அவரது அற்புதங்கள் எண்ணற்றவை, மனித சக்தியால் அவற்றை கணக்கிட முடியாது. நாம் நமது எழுத்துக்களில் அவருடைய "**மிஃராஜ்**" அற்புதத்தை விவரிப்பதன் மூலம் அலங்கரிப்போம்.

ரசூலுல்லாஹ் (அலைஹி-ஸலாம்) அவர்கள் அல்மக்கத்-அல் முகர்ரமா (மக்கா, நபிகள் நாயகம் அலைஹிஸ்ஸலாம் பிறந்த இடம், இஸ்லாத்தின் புனித நகரம்) படுக்கையில் இருந்த போது அவர் விழித்தெழ வைக்கப்பட்டு அவர் உடலுடன் ஜெருசலேமில் உள்ள அக்ஸா மசூதிக்கு (குத்ஸ்) கொண்டு செல்லப்பட்டார். பின்னர் அங்கிருந்து வானங்கள், மற்றும் ஏழாவது வானத்திற்குப் பிறகு, அல்லாஹு தாலா நிச்சயித்த இடங்களுக்கு சென்றார். இந்த முறையில் நாம் மிஃராஜ்

மீது நம்பிக்கை கொள்ள வேண்டும்.[1] அவர் ஜிப்ரைல் (அலைஹி-ஸலாம்) உடன் அவர்கள் மக்காவிலிருந்து சித்ரத் அல்-முன்தஹா வுக்கு சென்றார்கள். அது ஆறாம் மற்றும் ஏழாம் வானங்களில் உள்ள மரம். எந்த அறிவும், எந்த ஏற்றமும் அதை விட செல்ல முடியாது. சித்ராவில் ரசூலுல்லாஹ் (அலைஹி- ஸலாம்) அவர்கள் ஜிப்ரயில் (அலைஹி-ஸலாமை) அவரது சொந்த உருவத்தில் அறுநூறு இறக்கைகளுடன் பார்த்தார்கள். ஜிப்ரயில் (அலைஹி-ஸலாம்) சித்ராவில் தங்கி விட்டார். மக்காவிலிருந்து ஜெருசலம் வரை அல்லது ஏழாவது வானம் வரை, ரசூலுல்லாஹ் (அலைஹி-ஸலாம்) அவர்கள் **புராக்**மீது எடுத்து செல்லப்பட்டார். இது ஒரு வெள்ளை நிற, மிக வேகமான, பாலினமற்ற மற்றும் இவ்வுலகை சேராத சொர்க்கத்தின் விலங்கு, கோவேறு கழுதையை விட சிறியது மற்றும் கழுதையை விட பெரியது. அதன் ஒவ்வொரு அடியையும் கண்ணுக்கு எட்டாத தூரத்தில் வைத்தது. **அக்ஸா மசூதியில்** ரசூலுல்லாஹ் (அலைஹி-ஸலாம்) இமாமாக இருந்து மற்ற நபிமார்களுக்கு ஜமாஅத்தில் தொழுகை நடத்தினார்கள். அது இரவு அல்லது காலை நேர தொழுகை. நபிமார்களின் ஆன்மாக்கள்

தங்கள் சொந்த மனித உருவங்களில் இருந்தனர். ஜெருசலம் இருந்து அவர் **மி'ஃராஜ்** என்ற அறியப்படாத ஏணியில் உடனடியாக ஏழாவது வானம் வரை உயர்த்தப்பட்டார். வழியில், மலக்குகள் வரிசையாக நின்றனர். வலது மற்றும் இடது புறத்தில், அவரை புகழ்ந்து பாராட்டினர். ஜிப்ரயில் (அலைஹி-ஸலாம்) ரசூலுல்லாஹ் (அலைஹி-ஸலாமி)ன் வருகையின் நற்செய்தியை ஒவ்வொரு வானத்திலும் அறிவித்தார்கள். ஒவ்வொரு வானத்திலும் ஒரு

---

[1] இஸ்மாயிலிய வழிகேடர்களும் இஸ்லாத்தின் எதிரிகளும் இஸ்லாமிய அறிஞர்களின் வேஷம் போட்டனர். மிஃராஜ் என்பது உடலுடன் ஏற்றம் அல்ல, ஆனால் ஒரு ஆன்மீக நிலை—(ஹால்) என்று சொல்லியும், எழுதியும் இளைஞர்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள். அத்தகைய குளறுபடியான ஊழல் புத்தகங்கள் நாம் வாங்கவும் கூடாது. அவர்கள் நம்மை ஏமாற்றவும் விடக்கூடாது. மிஃராஜ் எப்படி நடந்தது என்று பல மதிப்புமிக்க புத்தகங்களில் விரிவாக எழுதப்பட்டுள்ளது. உதாரணத்துக்கு, காதி இயாத் அல்-மாலிகி எழுதிய **ஷிஃபா-அல் ஷரீப்**'பில் (d. மொராக்கோவில் 1150/544), மற்றும் **முடிவற்ற பேரின்பம்** என்பன.

தீர்க்கதரிசியை கண்டு அவரை வாழ்த்தினார். சித்ராவில், அவர் பல ஆச்சரியமான விஷயங்களையும்; சொர்க்கத்தின் நற்பேறுகளையும் மற்றும் நரகத்தின் தண்டனைகளையும் கண்டார்கள். அவர் அல்லாஹு தஆலாவின் அழகை (ஜமால்) காண வேண்டும் என்ற ஆசையினாலும் மகிழ்ச்சியினாலும் சொர்க்கத்தின் நற்பேறுகள் எதையும் பார்க்கவில்லை. சித்ராவை தாண்டி, நூர் (பிரகாசம்) மத்தியில் தனியாக சென்றார்கள். அவர் மலக்குகளின் பேனாக்களின் ஓசைகளை கேட்டார். எழுபதாயிரம் திரைகளை கடந்து சென்றார், இரண்டு திரைகளுக்கு இடையே இருந்த தூரம் ஐநூறு வருடங்களின் தூரம். பின்னர் அவர், **ரஃப்ரஃப்** என்ற படுக்கையின் மீது, அது சூரியனை விட பிரகாசமாக இருந்தது, **குர்சி**யினூடாக சென்றார் (ஏழாவது வானத்திற்கு வெளியேயும் அர்ஷின் உள்ளேயும் இருக்கும் வானங்களின் எல்லையில் உள்ளது) மற்றும் தெய்வீக அர்ஷை அடைந்தது. அவர் அர்ஷுக்கு அப்பால் நேரம், இடம் மற்றும் சடத்துவ உலகங் களுக்கு அப்பால் அவர் அல்லாஹு தஆலாவை செவியுறும் இடத்தை அடைந்தார். அல்லாஹுதஆலாவை புரிந்துகொள்ள முடியாத அல்லது விளக்க முடியாத மறுமை யில் காணப்படுவதை போன்ற வகையில் நேரம் மற்றும் இடம் இல்லாமல் பார்த்தார். அவர் அல்லாஹு தாலாவுடன் வார்த்தை, சத்தம் இல்லாமல் பேசினார். அல்லாஹு தஆலாவை போற்றிப் புகழ்ந்தார், அவருக்கு எண்ணற்ற பரிசுகளும் மரியாதைகளும் வழங்கப்பட்டன. அவரும் அவருடைய உம்மாவும் (ஒரு நபியின் நம்பிக்கையாளர்களின் சமூகம்) தினசரி ஐம்பது வேளை தொழுகை நிறைவேற்றுமாறு கட்டளையிடப்பட்டார். ஆனால், மூஸா (அலைஹி சலாம்) அவர்களின் மத்தியஸ்தம் மூலம் படிப்படியாக ஐந்து வேளையாக குறைக்கப்பட்டது. அதற்கு முன் காலை மற்றும் மதியத்துக்கு பின்னர் அல்லது இரவுகளில் மட்டுமே தொழுகை நிறைவேற்றப்பட்டது. வெகு நீண்ட பிரயாணத்தில், பரிசுகள் மற்றும் நற்பேறுகளைகளை அடைந்து பல திகைப்பூட்டும் விடயங்களை பார்த்து, கேட்ட பின்னர் அவர் படுக்கைக்கு திரும்பினார். அது இன்னும் சூடாகவே இருந்தது. நாம் மேலே எழுதியது ஓரளவு ஆயத்துகள் மற்றும் ஹதீஸ்களி லிருந்து புரிந்து கொள்ளப்பட்டவை. அனைத்தையும் நம்புவது வாஜிப் அல்ல. ஆனால் இவற்றை மறுப்பவர்கள் அஹ்லுஸ் சுன்னாவிலிருந்து பிரிந்து விடுவார்கள் என்று அஹ்லு ஸுன்னா

அறிஞர்கள் கூறியுள்ளார்கள். குர்'ஆனின் ஒரு வசனத்தை அல்லது ஹதீதை நம்பாதவர்கள் காஃபிராக மாறுவார்கள். முஹம்மது (அலைஹி-ஸலாம்) நபிமார்களில் மிக உயர்ந்தவர் (**செய்யிது அல்-அன்பியா**) என்பதைக் காட்டும் எண்ணற்ற சான்றுகளில் சிலவற்றை மேற்கோள் காட்டுவோம்.

கியாமத் நாளில் அனைத்து நபிமார்களும் அவரது கொடியின் நிழலில் தங்குவார்கள். அல்லாஹுதஆலா அனைத்து நபிமார்களுக்கும் கட்டளையிட்டான் (அலைஹிமுஸ்ஸலாம்) அவர்கள் முஹம்மது (அலைஹி சலாம்) அவர்களின் காலம் வரையில் உயிருடன் இருந்தால், அல்லாஹு தஆலா'வினால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவரை நம்ப வேண்டும் மற்றும் அவருக்கு உதவியாளர்களாக இருக்க வேண்டும். மேலும், அனைத்து தீர்க்கதரிசி களும் அவர்களின் உம்மாக்களுக்கு இதை அவர்களின் கடைசி கோரிக்கையாக கட்டளையிட்டனர். முஹம்மது (அலைஹி-ஸலாம்) காத்தமுல் அன்பியா (கடைசிநபி) ஆவார்; அதாவது; அவருக்குப்பின் எந்த நபியும் வரமாட்டார். அவருடைய அருள்பாலிக்க ப்பட்ட ஆன்மா, அனைத்து தீர்க்கதரிசிகளுக்கும் முன்னரே படைக்கப்பட்டது. நபி என்ற அந்தஸ்து முதலில் அவருக்கே கொடுக்கப்பட்டது. நபித்துவம் அவர் உலகத்துக்கு வந்து கௌரவிப்பதன் மூலம் நிறைவுற்றது. உலக முடிவை நோக்கி, ஹஸ்ரத் அல்-மஹ்தியின் காலத்தில், ஈஸா (அலைஹிசலாம்) அவர்கள் வானத்திலிருந்து டமஸ்கஸுக்கு இறங்கி வந்து சேர்வார்கள். முஹம்மது (அலைஹிசலாம்) அவர்களின் உம்மாவில் சேர்ந்து பூமியில் இஸ்லாத்தை பரப்புவார்கள்.

[வழிதவறிய '**காதியானி**' அல்லது '**அஹ்மதி**' என்று அழைக்கப்படும் பிரிவினர் 1880/1296ல் இந்தியாவில் பிரிட்டிஷாரினால் உருவாக்கப்பட்டனர் ஈஸா (அலைஹி-ஸலாம்) பற்றியும் அவதூறான பொய்களை கூறுகிறார்கள். அவர்கள் தங்களை முஸ்லிம்கள் என்று கூறிக்கொண்டாலும், இஸ்லாத்தை உள்ளிருந்து அழிக்க முயற்சிக்கின்றார்கள். இஸ்லாமிய அறிஞர்களால் ஒருமித்து அளிக்கப்பட்ட ஒரு தீர்ப்பில் (ஃபத்வா) அவர்கள் முஸ்லிம்கள் அல்ல என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் தோன்றிய zசின்தீக்குகளின் மற்றொரு வழி தவறிய குழு ஜமாஅத் அத்-தப்லிகியா (தப்லீக்ஜமாஅத்) என்று அழைக்கப்படும் குழு.

அவர்களின் பிரிவு முதன் முதலில் 1926/1345ல் இலியாஸ் என்ற அறியாதவரால் நிறுவப்பட்டது. அவர் முஸ்லீம்கள் "இஸ்லாத்தின் உண்மையான பாதையில் இருந்து விலகி விட்டனர்" என்று வலியுறுத் தினார். மேலும் "வழிகேட்டிலிருந்து அவர்களைக் காப்பாற்று" என்ற தெய்வீக கட்டளையை பெற்றதாக அவர் கனவு கண்டதாக கூறினார். அவர் நசிர் ஹுஸைன், ரஷித் அஹ்மத் கன்கோஹி மற்றும் கலீல் அஹ்மத் செஹரன்புரி போன்ற அவருடைய வழிதவறிய தலைவர்களின் புத்தகங்களிலிருந்து கற்றுக் கொண்டதை பிரச்சாரம் செய்தார். முஸ்லிம்களை ஏமாற்றுவதற்காக அவர்கள் தொழுகை மற்றும் ஜமாஅத்தின் முக்கியத்து வத்தையும் பற்றி எப்போதும் பேசுவார்கள். எனினும், அவர்களின் தொழுகை மற்றும் பிற வழிபாடுகள் ஏற்கப்பட தக்கவையல்ல. ஏனெனில் அவர்கள் வழிதவறியவர்கள் (அஹ்ல் அல்-பித்ஆ), அதாவது, அவர்கள் அஹ்லுஸ் சுன்னா நம்பிக்கைக்கு அப்பாறபட்டவர்கள்.

அவர்கள் தங்கள் வழிதவறிய நம்பிக்கைகளிலிருந்து தங்களை விடுவித்து உண்மையான முஸ்லிம்களாக மாறுவதற்கு முதலில் செய்ய வேண்டியது அஹ்ல் அஸ்-ஸுன்னாவின் அறிஞர்களால் எழுதப்பட்ட புத்தகங்களை படிப்பதுதான். **குர்ஆன் அல்-கரீமில்** ஆயத்து களுக்கு மறைவான அர்த்தங்களை தவறாகப் புரிந்துகொள்ளும் மக்கள் பித்'அத்வாதிகள் அல்லது மதவெறியர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். அத்தகைய குர்ஆன் வசனங் களுக்கு அவர்களின் சதிசெய்யும் நோக்குடன் வழிதவறிய சிந்தனைகளுக்கு பொருத்த மான அர்த்தம் கொடுக்கின்ற இஸ்லாத்தின் எதிரிகள் ஜிந்தீக் என்று அழைக்கப்படு கின்றனர். அவர்கள் குர்ஆன் அல்-கரீம் மற்றும் இஸ்லாத்தையும் மாற்ற முயற்சி செய்கின்றனர். அத்தகைய குழுக்கள் இஸ்லாத்தின் மிகப்பெரிய எதிரியான ஆங்கிலே யர்களால் நிறுவப்பட்டு முழு உலகுக்கும் பரப்புவதற்கு பணரீதியாக ஊக்கமளித்து ஆதரிக்கப்பட்டனர். பிரித்தானிய நிராகரிப்பவர்களின் வலையில் மிகவும் இழிவான கருவிகளாக சிக்கி விழுந்துவிட்ட தப்லீக் ஜமா'அத்தின் படிப்பறிவு குறைந்த மற்றும் வெறும் அறியாமையில் உள்ள உறுப்பினர்கள் தங்களை 'அஹ்லுஸ்ஸுன்னா' என்று அழைத்துக்கொண்டு தொழுகையை நடத்துவதன் மூலமும் பொய்களை சொல்வதன் மூலமும் முஸ்லீம்களை ஏமாற்ற முயல்கின்றனர். அப்துல்லாஹ் இப்னு மசூத்

(ரலியள்ளாஹுத'ஆலா அன்ஹு) கூறினார், "எந்த மதத்தையும் நம்பாத மக்கள் இருப்பார்கள் என்றாலும் அவர்கள் தொழுகை நடத்துகிறார்கள். இந்த மக்கள் நரகத்தின் ஆழமான பள்ளங்களில் நித்திய நெருப்புக்கு உட்படுத்தப்படுவார்கள். அவர்களில் சிலர் பெரிய மினாராக்கள் மேல் கட்டப்பட்ட நாரைக் கூடுகள் போன்ற தலைப்பாகை களை அணிந்திருப்பார்கள், தாடி வளர்த்து நீண்ட அங்கிகளை அணிந்து கொண்டு, முஸ்லிம்களை ஏமாற்றுவதற்கு குர்'ஆனை ஓதுவதுடன் வசனங்களை தவறாக விளக்கு வார்கள். இருப்பினும், ஒரு ஹதீஸ் ஷரீப் கூறுகிறது: "**அல்லாஹு தஆலா உங்களை உங்கள் உருவங்கள் மற்றும் உடைகளை கொண்டு தீர்மானிக்கவில்லை, ஆனால் உங்கள் இதயங்கள் மற்றும் நோக்கங்களை தவிர**." இந்த படிக்காத, அறியாத பொய்யர்களால் பதில் சொல்ல முடியாது என்பதால் ஹக்கிகத் பதிப்பகத்தினால் வெளியிடப்பட்ட புத்தகங்கள், தவறானது மற்றும் வழிதவறியது, அவற்றை படிக்க வேண்டாம் என்று கூறுகின்றனர். இஸ்லாத்தின் எதிரிகளான வழி தவறியவர்கள் மற்றும் ஜிந்தீக்குகளை அடையாளம் காண்பதற்கு மிகவும் குறிப்பிடத்தக்க அடையாளம் அவர்கள் அஹ்ல் அஸ்-சுன்னாவின் அறிஞர்களின் புத்தகங்கள் பிழையானவை என்று கூறுவதுடன் அவை வாசிக்கப்படுவதையும் தடுக்கின்றனர். எங்கள் துருக்கிய நூல் **ஃபைதலி பில்கிலர்** இவர்களால் இஸ்லாத்திற்கு ஏற்படுத்திய தீங்குகள் பற்றியும் அஹ்லு ஸுன்னா அறிஞர்கள் அவர்களுக்கு அளித்த பதில்களையும் மேற்கோள் காட்டுகின்றது.]

முஹம்மது (ஸல்லள்ளாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் நபிமார்களில் மிகவும் உயர்ந்தவர்கள். அனைத்து உயிரினங்களுக்கும் அல்லாஹு தஆலாவின் அருளாகவும் கருணையாகவும் வந்தவர்கள். பதினெட்டாயிரம் படைப்பினங்கள் அவரது ஆசீர்வாத கடலில் இருந்து பலன் பெறுகின்றன. ஒருமித்த கருத்து மூலம், அவர் அனைத்து மனிதர் களுக்கும் ஜின்களுக்கும் நபி. மலக்குகள், தாவரங்கள், விலங்குகள், மற்றும் அனைத்து படைப்புகளுக்கும் அவர்கள் தான் நபி என்று பல அறிக்கைகள் கூறுகின்றன. மற்ற தீர்க்கதரிசிகள் சில நாடுகளில் உள்ள கோத்திரங்கள், சமூகங்களுக்கு அனுப்பபட்டனர். ரசூலுல்லாஹ் (அலைஹி-ஸலாம்) அனைத்து உயிரினங்கள் உயிரற்ற பொருட்களுக்கும் நபியாக இருக்கிறார்கள்.

அல்லாஹு தஆலா மற்ற நபிமார்களுடன்

அவர்களின் பெயர்களை கூறி அழைத்து உரையாற்றினான். முஹம்மது (அலைஹி-ஸலாம்) அவர்களை, அல்லாஹு தஆலா அன்புடன் அழைத்தான். அவரை நோக்கி, “எனது நபியே!” என்று அழைத்தான். ஒவ்வொரு நபிக்கும் வழங்கப்பட்ட அதிசயம் போன்று அவருக்கும் வழங்கப்பட்டது. அல்லாஹு தஆலா அன்பான நபிக்கு அதிக பரிசுகளை வழங்கினான். அவன் மற்ற நபிமார்களுக்கு வழங்கியதை விட அதிகமான அற்புதங்களை கொடுத்தான். அவன் மற்ற எல்லா தீர்க்கதரிசிகளையும் விட எண்ணற்ற பெருமைகளுடன் சிறப்பம்சங்களை கொடுத்து உயர்ந்தவராக ஆக்கினான். அவர் அவரது அருள் பாலிக்கப்பட்ட விரலினால் சைகை செய்தபோது சந்திரன் இரண்டாக பிளந்தது; அவரது உள்ளங்கையில் உள்ள கற்கள் அல்லாஹ்வின் பெயரை உச்சரித்தன; “ஓ ரசூலல்லாஹ்” என்று மரங்கள் அவரை வரவேற்றன; ஹன்னானா என்று பெயரிடப்பட்ட உலர்ந்த மரக்கட்டை ரசூலுல்லாஹ் (அலைஹி-ஸலாம்) அவர்கள் அதை அப்படியே விட்டுவிட்டு விலகி சென்றதால் அழுதது,; அவரது ஆசிர்வதிக்கப்பட்ட விரல்களுக்கு இடையே இருந்து தூய நீர் பாய்ந்தது; அல்-மகாம் அல்-மஹ்முத்தின் உயர் தரங்கள் (புகழ் மற்றும் மகிமை), அஷ்-ஷஃபாஅத் அல்-குப்ரா (பரிந்துரை), சொர்க்கத்தில் ஹவ்த் அல்-கவ்தர் (பால் போன்ற வெள்ளை ஆறு அல்லது தடாகம்), மேலும் ஒன்று கூட்டப்படும் தீர்ப்பு நாளில் ரஸூலுல்லாஹ் அலைஹி ஸலாம் அவருடைய ‘உம்மா’வுக்கு சொர்க்கத்தில் ஏராளமான நன்மைகள் இருக்கும்.)

அல்-வஸீலா (பரிந்துரைக்கும் அணுகு முறை) மற்றும் அல்-ஃபாதிலா(கௌரவம்) என்பன அவருக்கு மறுமையில் வழங்கப்பட இருக்கின்றன; சொர்க்கத்தில் நுழைவதற்கு முன்னரே அல்லாஹு த’ஆலா’ வின் ஜமாலை [மிஃ’ராஜின் போது] காணும் பெருமை அவருக்கு கிடைத்தது; அவரிடமே உலகின் மிகவும் அழகான நல்லொழுக்கத்தின் தரம், பரிபூரண மான நம்பிக்கை, அறிவு, மென்மை, பொறுமை, நன்றியுணர்வு, சுஹ்த் (உலக விஷயங் களை விட்டு திரும்புதல்), கற்பு, நீதி, வீரம், வெட்கம், தைரியம், அடக்கம், ஞானம், அழகான நடத்தை, உதவும் குணம், கருணை மற்றும் சொல்லில் அடங்கா கௌரவம் மற்றும் மரியாதைக்குரிய பண்புகள் இருந்தன. அவருக்கு கொடுக்கப்பட்ட அற்புதங்களின் எண்ணிக்கையை அல்லாஹு தஆலாவை தவிர வேறு

யாரும் அறியமாட்டார்கள். அவருடைய வேதம் மற்ற அனைத்து மதங்களையும் ரத்து செய்தது. அவருடைய மதம் அனைத்து மதங்களிலும் சிறந்தது உயர்ந்தது. அவரது உம்மா மற்ற உம்மாக்களை விட உயர்ந்தது. அவருடைய உம்மாவின் அவ்லியாக்கள் முந்திய நபிமார்களின் உம்மாவின் அவ்லியாக்களை விட கண்ணியமானவர்கள். அவருடைய உம்மாவின் அவ்லியாக்களில் அவருடைய வாரிசு (கலீஃபா) ஆவதற்கு மிகவும் தகுதியானவர் **அபுபக்கர் அஸ்-சித்திக்** (ரழியல்லாஹு தஆலா அன்ஹு), அவர் பெரும்பாலான அவ்லியாக்களாலும் மற்றும் இமாம்களினாலும் மிகவும் விரும்பப்பட்டவர். கலிபாவுக்கு மற்றவர்களை விட மிகவும் பொருத்தமானவர். நபிமார்களுக்கு பிறகு, வந்திருக்கும் மற்றும் வரப்போகும் அனைத்து மனிதர்களிலும் அவரே உயர்ந்தவர். முதன் முதலில் கலிஃபாவின் அந்தஸ்தையும் கௌரவத்தையும் அடைந்தவர். அல்லாஹு தஆலாவின் அருளினால் இஸ்லாம் தோன்று வதற்கு முன் அவர் சிலைகளை வணங்கவில்லை. அவர் குப்ர் மற்றும் வழிகேடு.[1] களிலிருந்து பாதுகாக்கப்பட்டார். அவருக்கு பிறகு, மனிதர்களில் உயர்ந்தவர் இரண்டாவது கலீஃபா உமர் இப்னு அல்-கத்தாப் (ரழி-அல்லாஹு தாலா அன்ஹு). அல்லாஹு தஆலா இவரை அன்பிற்குரிய நபி(அலைஹி சலாம்) அவர்களுடைய நண்பராக தெரிவு செய்தான். மனிதர்களில் அடுத்த படியாக உயர்ந்தவர் ரசூலுல்லாஹ் (அலைஹி-ஸலாம்) அவர்களின் மூன்றாவது கலீஃபா **துன்-நூரைன் உதுமான் இப்னு அஃப்பான்** (ரழி-அல்லாஹு தஆலா அன்ஹு). உதவிகள் மற்றும் ஆசீர்வாதங்களின் பொக்கிஷம் மற்றும் அடக்கம், நம்பிக்கை மற்றும் ஆன்மீக அறிவின் ஆதாரம். அவருக்கு பிறகு, மனிதர்களில் மிகவும் மங்களகர மானவர் ரசூலுல்லாஹ்'வின் (அலைஹி-ஸலாம்), நான்காவது கலீஃபா **அலி இப்னு அபிதாலிப்** (ரழியல்லாஹு தஆலா அன்ஹு), வியக்க வைக்கும் மேன்மைகளை

---

[1] அபூபக்கர் அஸ்-சித்திக் (ரழி-அல்லாஹுதாலா அன்ஹு) பற்றிய இந்த அறிக்கை மூலம் ரஸூலுல்லாஹ் (அலை) அவர்கள் நபித்துவத்திற்கு முன் சிலைகளை வணங்கினார்கள் என்று நினைத்து எழுதும் மனிதர்கள் எவ்வளவு அறியாதவர்களாகவும் பரிதாபமானவர்களாகவும், இருக்கிறார்கள் என்பது தெளிவாகின்றது.

உடையவர். அறிவின் தலைவாசல் மற்றும் அல்லாஹு தஆலாவின் 'சிங்கம்'. அதற்கு அடுத்தவர் ஹஸ்ரத் **ஹஸன் இப்னு அலி** (ரழியல்லாஹு தஆலா அன்ஹு) கலீஃபா 'வானார் (அல்-மதீனத் அல்-முனவ்வராவில் 669/49ல் விஷம் வைத்து கொல்லப்பட்டார்). ஹதீஸ் ஷரீப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முப்பது வருட கலிபா ஆட்சி கிலாபத் அவருடன் முடிவடைந்தது. அவருக்கு பிறகு உயர்ந்த மனிதர் ஹஸ்ரத் **ஹுசைன் இப்னு அலி** (ரழியல்லாஹுதஆலா அன்ஹு), ரசூலுல்லாஹ் (அலைஹி சலாம்) அவர்களின் கண்களின் ஒளி என்று வர்ணிக்கப் பட்டவர். இங்கு அவர்களின் மேன்மை அவர்கள் சம்பாதித்த தவாப் (அல்லாஹுதஆலாவின் விருப்பத்துக்கு ஏற்ப செயல்படுவதற்கு அவன் அளிக்கும் வெகுமதி)யை அடிப்படையாக கொண்டது; இஸ்லாத்தின் நிமித்தம் தங்கள் நாட்டையும், தங்கள் அன்புக்குரியவர்களையும் துறந்தார்கள்.

மற்றவர்களுக்கு முன்பாக இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார்கள்; ரசூலுல்லாஹ் (அலைஹி-ஸலாமை) மிக உயர்ந்த அளவிற்கு நேசித்தார்கள். அவரது சுன்னாவை கண்டிப்பாக பின்பற்றினார்கள்; அவரது மார்க்கத்தை பரப்புவதற்கும் நிராகரிப்பையும் குழப்பங் களையும் தடுப்பதற்கு அதிகம் போராடினார்கள்.

ஹஸ்ரத் அலி மற்றும் ஹஸ்ரத் அபுபக்கர் (ரழி-அல்லாஹு அன்ஹும்) ஆகியோர் மற்ற அனைவருக்கும் முன்பாக இஸ்லாத்தை தழுவினார்கள். ஹஸ்ரத் அலி (ரழியல்லாஹு அன்ஹு) அவர் சிறுவராக இருந்ததால் சொத்து எதுவும் இல்லாமல் ரசூலுல்லாஹ் (அலை) அவர்களின் வீட்டில் வசித்து அவருக்கு சேவை செய்து வந்தார். இதனால், அவரின் உதாரணத்தை பின்பற்றி காஃபிர்கள் இஸ்லாத்தை தழுவவும், அவர்களை தோற்கடிப் பதற்கும் உதவ முடியவில்லை. மறுபுறம், மற்ற கலீஃபாக்கள் மூவரும் இஸ்லாத்தை தழுவி இஸ்லாத்தை வலுப்படுத்தினார்கள். ஏனெனில் ஹஸ்ரத் அலி மற்றும் அவரது இரண்டு மகன்மார்கள் ரலியல்லாஹு தஆலா அன்ஹும் ரஸூலுல்லாஹ்வின் நெருங்கிய இரத்த உறவினர்கள், மற்றும் ஹஸ்ரத் அபுபக்கர் மற்றும் ஹஸ்ரத் உமர், ரலியல்லாஹு தஆலா அன்ஹும்களை விட உயர்ந்தது என்றும் சொல்லலாம். ஆனால் அவர்களின் மேன்மை எல்லா விடயங்களிலும் இருக்கவில்லை. அதனால் இந்த பெரிய உயர்ந்தவர்களை எல்லா வகையிலும் மிஞ்சுவதற்கு அவர்களுக்கு உதவவில்லை.

இது கிள்று (அலைஹி சலாம்) அவர்கள் மூஸா (அலைஹி சலாம்) அவர்களுக்கு கற்பித்ததை போன்றது[1]. ஹஸ்ரத் **பாத்திமா** (ரழியல்லாஹு தஆலா அன்ஹா), ஹஜ்ரத் **கதீஜா** மற்றும் ஹஜ்ரத் **ஆயிஷா** (ரழியல்லாஹு தஆலா அன்ஹுமா) வை விட உயர்ந்தவர். ஏனெனில் அவர் இரத்தம் சம்பந்தமாக நபியுடன் நெருக்கமாக இருந்தார். ஆனால், ஒருவகை மேன்மை எல்லா வகையிலும் மேன்மையை காட்டாது. இந்த மூன்று பேரிலும் யார் உயர்ந்தவர் என்பதில் இஸ்லாமிய அறிஞர்களுக்கிடையே கருத்து வேறுபாடு கொண்ட அறிக்கைகளை வெளியிட்டனர். ஹதீஸ் ஷரீஃப் மூலம் புரிந்து கொள்ளப்பட்டதிலிருந்து இந்த மூவரும், ஹஸ்ரத் மரியம் (கன்னி மேரி) மற்றும் பிர்அவ்னின் மனைவி ஹஸ்ரத் ஆசியா, ஆகிய உலகப் பெண்களில் ஐவரும் மிகவும் உயர்ந்தவர்கள். ஹதீஸ் ஷரீஃபில், "**பாத்திமா சொர்க்கத்தின் பெண்களில் உயர்ந்தவர், ஹசன் மற்றும் ஹுசைன் சொர்க்கத்தின் இளைஞர்களில் மிக உயர்ந்தவர்கள்**" என்ற ஒரு விஷயத்திலேயே அவர்களின் மேன்மையை குறிக்கின்றது.

சஹாபத் அல்-கிராமில் அடுத்த உயர்ந்தவர்கள்- **அஷரத்அல்-முபாஷ்ஷரா**, சொர்க்கம் செல்லும் நற்செய்தியுடன் ஆசீர்வதிக்கப்பட்ட பத்துபேர். அதற்கு அடுத்த உயர்ந்தவர்கள், புனித பத்ர் யுத்தத்தில் பங்கேற்ற 313 முஸ்லீம்கள். அடுத்ததாக, புனித உஹது யுத்தத்தில் கலந்து கொண்ட 700 துணிச்சலான முஸ்லிம்கள். அவர்களுக்கு அடுத்ததாக ரசூலுல்லாஹ் (அலைஹி-ஸலாம்)க்கு மரத்தடியில் **பைஅத் அர்-ரிள்வான்** விசுவாசப் பிரமாணம் செய்து கொண்ட 1400சஹாபாக்கள். அஸ்ஸஹாபத் அல்-கிராம் (ரழியல்லாஹு தஆலா அன்ஹும் அஜ்மஈன்). ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம்) முக்காக உயிரையும் உடைமைகளையும் தியாகம் செய்தார்கள், அவருக்கு உதவியும் செய்தார்கள். எனவே, அவர்களில் எவருடைய பெயரையும் குறிப்பிடப்படும் போது அவர்கள் மீது

[1] இரத்த உறவு மேன்மைக்கான ஒரே அளவுகோல் என்றால், ஹஜ்ரத் அப்பாஸ் ஹஸ்ரத் அலியைவிட உயர்ந்தவராக கருதப்பட்டிருக்க வேண்டும். மேலும், அபூதாலிபும், அபுலஹபும் இரத்தம் சம்பந்தமாக மிகவும் நெருக்கமானவர்கள். அவர்களுக்கு தாழ்ந்த விசுவாசிக்கு இருக்கும் மரியாதை மேன்மையும் கூட இல்லை.

மரியாதையுடனும் பாசத்துடனும் வாழ்த்துவது எமது கடமையாகும் (வாஜிப்).

அவர்களின் மகத்துவத்துக்கு தகாத வார்த்தைகளை கூறுவது ஒருபோதும் அனுமதிக்க படவில்லை. அவர்களின் பெயர்களை அவமரியாதையாக குறிப்பிடுவது வழிகேடாகும். ரசூலுல்லாஹ் (ஸல்லள்ளாஹு அலைஹி வசல்லம்) அவர்களை நேசிப்பவர் அவருடைய சஹாபாக்கள் அனைவரையும் நேசிக்க வேண்டும், ஏனெனில் ஒரு ஹதீஸ் ஷரீஃபு கூறுகின்றது: **"என் சஹாபாவை நேசிப்பவர் என்னை நேசிப்பதால் அவர்களை நேசிக்கிறார். அவர்களை நேசிக்காதவர் என்னை நேசிக்கவில்லை. அவர்களை நோவினை செய்பவர் என்னை நோவினை செய்கிறார். என்னை நோவினை செய்பவர் அல்லாஹு தஆலாவை நோவினை செய்கிறார். அல்லாஹு தஆலாவை நோவினை செய்பவன் நிச்சயமாக தண்டனைகளை அனுபவிக்கிறான்** மற்றொரு ஹதீது ஷரீஃபில் கூறப்பட்டுள்ளது: **"அல்லாஹு தஆலா எப்போது என் உம்மாவில் ஒருவரை அருள் பாலிக்க விரும்புகிறானோ, அவர் இதயத்தில் என் சஹாபாக்களின் மீது அன்பை வைக்கிறான்; மேலும் அவர்கள் அனைவரையும் மிகவும் நேசிக்கிறார்."**

எனவே, சஹாபத் அல்-கிராம்களிடையே ஏற்பட்ட மோதல்கள் கலீஃபா ஆவதற்கு அல்லது தீய எண்ணங்கள் அல்லது சிற்றின்ப ஆசைகளை திருப்திப்படுத்துவதற்காக நடந்ததாக கருதக்கூடாது. அப்படியொரு அனுமானத்தில் இருந்து அவர்களை பற்றி தவறாக பேசுவது அழிவுக்குரியது. நயவஞ்சகம் அவர்களை வழி நடத்துகிறது. ஏனெனில், ரஸூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம்) அவர்கள் முன்னிலையில் அமர்ந்து அவர்களின் அருள்பெற்ற வார்த்தைகளை கேட்பதன் மூலம் பொறாமை, பதவி ஆசை, மற்றும் உலக ஆசைகள் அவர்களின் இதயங்களிலிருந்து முற்றாக அகற்றப்பட்டது. அவர்கள் திருத்திய மைக்கப்பட்டு பேராசை, லட்சியம், வெறுப்பு, மற்றும் தீய இயல்புகளில் இருந்து முற்றிலும் சுத்திகரிக்கப்பட்டனர்.

உயர்ந்த நபியின் உம்மாவில் ஒரு வலியின் முன்னிலையில் சில நாட்கள் தங்கியிருப்பவர், வலியின் அழகிய ஒழுக்கங்கள் மற்றும் மேன்மை மிக்க சிறப்புகள் மூலம் பிரயோசன மடைகிறார், மற்றும் உலக இலட்சியங்களில் இருந்து சுத்திகரிக்கப்படுகிறார் என்ற உண்மையை கருத்தில்

கொள்ளும்போது, நபிகளாரின் ஸஹாபாக்கள், நமது ஏஜமானர்கள், மற்ற அனைத்தையும் விட ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம்) அவர்களை நேசித்தவர்கள், அவருக்காக அவர்களின் உயிர் மற்றும் சொத்துக்களை தியாகம் செய்தவர்கள், அவருக்காக வாழ்ந்தவர்கள் மற்றும் அவருக்காக தங்கள் நாட்டை துறந்தவர்கள், மற்றும் அவர்களின் ஆன்மீக திருப்திக்காக அவருடன் கூடவே இருக்க விரும்பியவர்களை, எப்படி அவர்கள் மோசமான ஒழுக்கத்திலிருந்து விடுபடவில்லை, அவர்களின் நஃப்ஸ் சுத்தமாக இல்லை, அவர்கள் செத்த பிணம் போன்ற இந்த தற்காலிக உலகத்துக்காக போராடினார்கள் என்று அனுமானித்தார்கள்? அந்த பெரிய மனிதர்கள் நிச்சயமாக எல்லோரையும் விட தூய்மையாக இருந்தார்கள். அவர்களுக்கிடையே இருந்த கருத்து வேறுபாடுகளையும் மோதல்களையும், நமக்கிடையே உள்ள தீய நோக்கம் கொண்ட வர்களின் விஷயங்களுடன் ஒப்பிடுவதும், அல்லது, அவர்கள் தங்கள் தீய, சிற்றின்ப உலக ஆசைகளை பூர்த்தி செய்ய போராடினார்கள் என்று கூறுவதும் நியாயமற்றது, ஏற்றுக்கொள்ள முடியாதது. சஹாபத் அல்-கிராம்களுக்கு எதிராக இது போன்ற தவறான கருத்துகளை அனுமதிக்க முடியாது. அவர்களுக்கு எதிராக ஏதாவது சொல்லும் நபர் சஹாபத்அல்-கிராம் மீதுள்ள விரோதம் என்பது ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம்) அவர்களுக்கு எதிரான விரோதம் என்று பொருள் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். மற்றும் அவர்களை பற்றி தவறாகப் பேசுவது என்பது அவர்களுக்கு கல்வியறிவு கொடுத்து பயிற்சி அளித்த ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வசல்லமு)க்கு எதிரானது. இந்த காரணத்தினால், இஸ்லாமிய பெருமக்கள் அறிஞர்கள் கூறினார்கள் சஹாபத் அல்-கிராம்கள் மீது மரியாதை குறைவு காட்டுவது மற்றும் உயர்ந்த எண்ணம் இல்லாமல் இருப்பது அல்லாஹ்வின் தூதர் மீது அவநம்பிக்கை என்று பொருள்.

"ஜமால்" (ஒட்டகை) மற்றும் சிஃப்பீன் யுத்தங்களை காரணம் காட்டி அவர்கள் மீது அவதூறு கூற முடியாது. அந்த போர்களில் ஹஸ்ரத் அலிக்கு எதிராக நின்ற சஹாபி களுக்கு, அங்கே அவர்கள் அனைவரையும் தீமையிலிருந்து பாதுகாக்கும் காரணங்கள் இருந்தன. தீர்ப்புநாளில் அவர்களுக்கு வெகுமதி கொடுக்கப்படும். ஒரு ஹதீது ஷரீஃபு கூறுகிறது: "**தவறு இழைக்கும் முஜ்தஹிதுக்கு ஒரு வெகுமதி வழங்கப்படும், மற்றும்**

**சரியானதைக் கண்டறிபவருக்கு இரண்டு அல்லது பத்து வெகுமதி வழங்கப்படும். இந்த இரண்டில் ஒரு வெகுமதி இஜ்திஹாதை[1] பயன்படுத்துவதற்கும் மற்றொன்று உண்மையை கண்டு பிடிப்பதற்கும் ஆனது**" இஸ்லாத்தின் அந்த பெரிய மனிதர்களுக்கு இடையே சண்டையும் சச்சரவுகளும் பிடிவாதத்தினாலோ அல்லது குரோதத்தினாலோ அல்ல, மாறாக அவர்களின் [வெவ்வேறான] இஜ்திஹாதுகள் மற்றும் இஸ்லாத்தின் கட்டளையை நிறைவேற்ற வேண்டும் என்ற அவர்களின் விருப்பம் காரணமாக இருந்தது. சஹாபா அல்-கிராம் ஒவ்வொருவரும் முஜ்தஹித்களாக இருந்தனர்.[2] ஒவ்வொரு முஜ்தஹிதும் அவரை விட உயர்ந்த முஜ்தஹிதுடன் உடன்படா விட்டாலும், தனது சொந்த இஜ்திஹாத் மூலம் கண்டுபிடித்த முடிவுக்கு இணங்க செயல்படுவது ஃபர்ளாக இருந்தது. அவர் மற்றொருவரின் இஜ்திஹாதை பின்பற்ற மார்க்கத்தில் அனுமதிக்கப்பட வில்லை.

இமாம் அல்-அஃலம் அபுஹனிஃபா நுமான் இப்னு தாபித்(மறைவு 767/150) உடைய இரண்டு மாணவர்கள், அபுயூசுப் மற்றும் முஹம்மது அஷ்-ஷைபானி, மற்றும் இமாம் முஹம்மது இப்னு இத்ரீஸ் அஷ்-ஷாஃபி'யின் (மறைவு எகிப்தில் 820/204) மாணவர்கள் மாணவர்கள் இருவர்; அபுசவ்ர் மற்றும் இஸ்மாயில் அல்-முசானி, பல அம்சங்களில் அவர்களின் தலைவர்களுடன் உடன்பட வில்லை, மற்றும் சில விஷயங்களில் அவர்களின் எஜமானர்கள் 'ஹறாம்' என்றதை அவர்கள் 'ஹலால்' என்றார்கள், மேலும் அவர்களின் எஜமானர்கள் ஹலால் என்று கூறிய சில விடயங்களை அவர்கள் 'ஹறாம்' என்றார்கள். அவர்களை பாவிகள் தீயவர்கள் என்று கூற முடியாது. அவர்கள் முஜ்தஹிதுகளாக இருந்ததால் யாரும் அவ்வாறு கூறவில்லை. ஹஸ்ரத் அலி(ரழியால்லாஹு தஆலா அன்ஹு) அவர்கள் ஹஸ்ரத் முஆவியா இப்னு அபு சுஃப்யான் மற்றும்

---

[1] இஜ்திஹாத்: பெரிய அறிஞர்களால் முஜ்தஹித்களால் ஒரு ஆயத் கரிமா அல்லது ஒரு ஹதீஸ் ஷரீஃபின் உள் மறைந்திருக்கும் பொருளைப் புரிந்து கொள்ள முயற்சிப்பதன் மூலம் அடையப் பெற்ற முடிவு அல்லது தீர்ப்பு

[2] எடுத்துக்காட்டாக, அல்-ஹதிகா'வின் 298வது பக்கத்தில் உள்ள ஹதீஸ் ஷரீபில் கூறப்பட்டுள்ளது அம்ர் இப்னுல் ஆஸ் (ரழி-அல்லாஹு தஆலா அன்ஹு) ஒரு முஜ்தஹித் ஆக இருந்தார்.

ஹஜ்ரத் அம்ர் இப்னு அல்-ஆஸ் (ரழியல்லாஹு தஆலா அன்ஹுமா) விட அறிந்தவர் மற்றும் உயர்ந்தவர் என்பது உண்மை தான். அவர்களிடமிருந்து வேறுபடுத்தும் பல உயர்ந்த குணங்கள் அவரிடம் இருந்தன. மேலும் அவருடைய இஜ்திஹாத் அதிக சக்தி வாய்ந்தது. அவர்களின் இஜ்திஹாத்களை விட துல்லியமானது. இருப்பினும், அனைத்து சஹாபத் அல்-கிராம்களும் முஜ்தஹிதுகள், அந்த இருவரும் அந்த மாபெரும் தலைவரின் இஜ்திஹாதை பின்பற்றுவதற்கு அனுமதிக்கப் படவில்லை. அவர்களுக்கு அவர்களின் சொந்த இஜ்திஹாதுகளின் படி செயல்படுவது அவசியமாக இருந்தது.

**கேள்வி:** "ஜமால்' மற்றும் 'சிஃப்பின்' போர்களில், ஏராளமான சஹாபத் அல்- கிராமில் உள்ள முஹாஜிருன் மற்றும் அன்சாரீன்கள் பங்கேற்று ஹஸ்ரத் அலியுடன் கீழ்ப்படிந்து பின் தொடர்ந்தார்கள். அவர்கள் அனைவரும் முஜ்தஹிதுகளாக இருந்தாலும், அவரை பின்பற்றுவது வாஜிபு என்று அவர்கள் கருதினர் என்று காட்டுகிறது. இது அவர்களுடைய இஜ்திஹாதுகள் அவருடைய கருத்துடன் உடன்படவில்லை யென்றாலும் அவரை பின்பற்ற வேண்டும் இல்லையா?"

**பதில்:** ஹஸ்ரத் அலி (ரழியல்லாஹு தஆலா அன்ஹு)வை பின்பற்றிய முஸ்லிம்கள் மற்றும் அவரது பக்கத்தில் போராடியது அவரை பின்தொடர்வது என்ற பார்வையில் அல்ல. ஆனால், அவர்களுடைய இஜ்திஹாது அவருடைய இஜ்திஹாதுடன் ஒத்துப் போனதால் இமாம் அலியை பின்பற்றுவது வாஜிப் என்று காட்டியது. இதேபோல், பல முக்கிய நபித்தோழர்களின் இஜ்திஹாதுகள் ஹஸ்ரத் அலியின் கருத்துடன் உடன்பட வில்லை. அவர்கள் அவருக்கு எதிராக சண்டையிடுவது வாஜிப் ஆனது. ஸஹாபத் அல் கிராமின் இஜ்திஹாதுகள் மூன்று வெவ்வேறு வழிகளில் வெளிவந்தன: அவர்களில் சிலர் ஹஸ்ரத் அலி (ரழியல்லாஹு தஆலா அன்ஹு) சரி என்று புரிந்துகொண்டனர், அவர்கள் ஹஸ்ரத் அலியை பின்பற்றுவது அவசியமானது; மற்றொன்று ஹஸ்ரத் அலியுடன் போரிட்டவர்களின் இஜ்திஹாத் சரியானது என்று கண்டது. அவர்கள் ஹஸ்ரத் அலி ரழியல்லாஹுதஆலா அன்ஹு உடன் போரிட்டவர்களை பின்பற்றுவது அவர்களுக்கு வாஜிபானது. மூன்றாவது குழு இரு தரப்பையும் பின்பற்ற கூடாது, அவசியம் சண்டையிட கூடாது என்று கூறியது. அவர்களின் இஜ்திஹாத் அவர்கள் போரில்

சேரக்கூடாது என்பது. இந்த மூன்று குழுக்களும் நிச்சயமாக சரியானவை, மேலும் மறுமையில் நற்கூலி பெற தகுதியானவை.

**கேள்வி:** "மேலே உள்ள பதில், ஹஸ்ரத் அலிக்கு எதிராக (ரழியல்லாஹு தஆலா அன்ஹு) போராடியவர்களை சரி என்று காட்டுகிறது. மறுபுறம் அஹ்ல் சுன்னாவின் அறிஞர்கள் ஹஸ்ரத் அலி ரழியல்லாஹு தஆலா அன்ஹு சரி என்று கூறியுள்ளனர், அவருடைய எதிரிகள் தவறு செய்தார்கள், அவர்கள் மன்னிக்கப்பட கூடியவர்கள் ஏனெனில் அவர்களுக்கு ஒரு காரணம் (உத்ர்) இருந்தது, மேலும் அவர்கள் தவாபையும் பெற்றனர். அதைப் பற்றி என்ன சொல்ல முடியும்?"

**பதில்:** அல்-இமாம் அஷ்-ஷாபி மற்றும் உமர் இப்னு அப்துல் அஜீஸ் ஆகிய இருவரும் இஸ்லாத்தின் மிகப்பெரிய மனிதர்கள், சஹாபத் அல்-கிராம்களை நோக்கி 'பிழை' என்ற வார்த்தையை பயன்படுத்துவதற்கு அனுமதி இல்லை என்று கூறினார்கள். இந்த காரணத்துக்காக, கூறினார்: "மேன்மக்களை பற்றி 'பிழை' என்று சொல்வது தவறு". அது பற்றி கீழ் நிலையில் உள்ளவர்கள் "அவர் செய்தது சரிதான்" "அவர் தவறு செய்தார்", "நாங்கள் அங்கீகரிக்கிறோம்," அல்லது "நாங்கள் மறுக்கிறோம்", போன்ற வார்த்தைகளை கூறுவது அனுமதிக்கப்பட வில்லை. அல்லாஹு த'ஆலா எங்கள் கைகள் அந்த பெரிய மனிதர்களின் இரத்தத்தை தொடுவதை அனுமதிக்கவில்லை. எனவே இந்த பெரிய மனிதர்கள் பற்றி நாம் 'நியாயம்' மற்றும் 'அநியாயம்' போன்ற வார்த்தைகளை கூறாமல் நமது நாவை பாதுகாக்க வேண்டும்.

அந்த ஆழ்ந்த அறிவு பெற்ற அறிஞர்கள் சான்றுகள் மற்றும் நிகழ்வுகளை ஆய்வு செய்து இமாம் அலி சொன்னது சரி மற்றும் அவரது எதிரிகள் தவறாக புரிந்து கொண்டனர் என்று கூறினார்கள். உண்மையில், ஹஸ்ரத் அலிக்கு மறுபக்கத்தில் இருந்தவர்களுடன் பேசும் வாய்ப்பு இருந்தது. அவர்களுக்கு அவருடைய இஜ்திஹாதுக்கு ஒத்துபோக கூடிய இஜ்திஹாதை கடைப்பிடிக்க வழிகாட்டியிருக்க முடிந்திருக்கும். உண்மையில் ஹஸ்ரத் ஸுபைர் இப்னு அவ்வாம் 'ஜமால்' போரில் ஹஸ்ரத் அலியை எதிர்த்தார். ஆனால், உண்மைகளை ஆழமாக, அதிகம் படித்த பிறகு அவர் தனது இஜ்திஹாதை மாற்றி, அவருடன் சண்டையிடுவதை நிறுத்தினார். அஹ்லுஸ்

ஸுன்னாவின் அறிஞர்கள் தவறை அனுமதிக்க பட்டதாக கூறும் வார்த்தைகளை அப்படியே எடுத்துக்கொள்ள வேண்டும். ஹஜ்ரத் அலி மேலும் அவருடன் இருந்தவர்கள் நேர்வழியில் இருந்தார்கள் மற்ற குழுவில் இருந்த நபித்தோழர்களும் அன்னை ஆயிஷா அஸ்-சித்தீக்கா போன்றோர் தவறான வழியில் இருந்தார்கள் என்று கூறுவதற்கும் அனுமதியில்லை.

**அஹ்காம்-அஷ் ஷரிய்யா**வின் கிளையான இஜ்திஹாதுகளுக்கு இடையே ஏற்பட்ட வேறுபாடு காரணமாக சஹாபத் அல்-கிராமுக்கு இடையே இந்த சண்டைகள் ஏற்பட்டன. இஸ்லாத்தின் அவசியமான விடயங்களில் அவர்களுக்கு எந்த கருத்து வேறுபாடும் இருக்கவில்லை. இன்று சிலர், பெரியவர்களை அவ மரியாதையாக பேசுகிறார்கள். ஹஸ்ரத் முஆவியா மற்றும் அம்ர் இப்னு அல்-ஆஸ் ரழியல்லாஹு தஆலா அன்ஹும் போன்ற சஹாபா பெரியார்களை மரியாதை குறைவாக, இழிவாக பேசுகிறார்கள். அவர்கள் சஹாபாக்களை அவதூறு செய்வதன் மூலம் ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம்) அவர்களை அவதூறு மற்றும் சிறுமை படுத்துகிறார்கள் என்பதை அவர்கள் உணர்வதில்லை என்று ஷிஃபா அஷ்ஷரீபில் எழுதப்பட்டுள்ளது; இமாம் மாலிக் இப்னு அனஸ் ரழியல்லாஹு தஆலா அன்ஹு கூறினார்: “ஒருவர் முஆவியா மற்றும் அம்ர் இப்னு அல்-ஆஸ் ஆகியோரை திட்டுபவர் மற்றும் அவதூறு செய்பவர் அவர் கூறும் வார்த்தைகளுக்கு அவரே தகுதியானவர். அவர்களுக்கு எதிராக பேசுபவர்களை, எழுது பவர்களை மற்றும் அவர்களுக்கு மரியாதை காட்டாதவர்களை கடுமையாக தண்டிக்க வேண்டும். அல்லாஹு தஆலா தனது நேசத்திற்குரிய சஹாபாக்கள் மீதான அன்பினால் எங்கள் இதயங்களை நிரப்புவாயாக!. நயவஞ்சகர்கள் பாவிகளை தவிர இறையச்சமுள்ள அல்லாஹ்வை அஞ்சும் முஸ்லிம்கள் அந்த மேன்மக்களை நேசிப்பார்கள்.

[ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம்) அவர்களின மதிப்பையும் மேன்மை யையும் உணர்ந்தவர்கள், சஹாபா பெருமக்கள் அனைவரையும் நேசிக்கின்றார்கள் மதிக்கின்றார்கள். அவர்கள் அனைவரையும் நேசிப்பவர்கள் மற்றும் பின்பற்றுபவர்கள் **அஹ்லுஸ் ஸுன்னா** என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்களில் சிலரை நேசிக்கிறோம் மற்றவர்களை வெறுக்கிறோம் என்று

கூறுபவர்கள் அவர்களில் பெரும்பான்மையினரை அவதூறு செய்கிறார்கள். அவர்களில் யாரையும் பின்பற்றாதவர்கள் **ராஃபிதிகள்** அல்லது **ஷியாக்கள்** என்று அழைக்கப்படுகிறார்கள். ஈரான், இந்தியா மற்றும் ஈராக்கில் பல ராஃபிதிகள் உள்ளனர். துருக்கியில் யாரும் இல்லை. அவர்களில் சிலர் தூய முஸ்லிம்களை ஏமாற்றுவதற்காக தங்களை **அலவிகள்** என்று அழைக்கின்றனர். அதாவது; ஹஸ்ரத் அலியை அன்பு வைப்பவர். ஒருவரை நேசிக்கிறேன் என்று சொல்பவர் அவரது அடிச்சுவடுகளை பின்பற்றுவதுடன் அவர் நேசித்தவர்களை நேசிப்பது அவசியம். அவர்கள் ஹஸ்ரத் அலி ரழியல்லாஹு தஆலா அன்ஹுவை நேசித்தால் அவர்கள் அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றுவார். அவர் நபியின் ஸஹாபாக்கள் அனைவரையும் நேசித்தார். அவர் இரண்டாவது கலீஃபா ஹஸ்ரத் உமருக்கு ஆலோசகராக இருந்தார். அவர் தனது ரகசியங்களை அவரிடம் கூறினார். அவர் ஹஸ்ரத் உமருக்கு ஹஸ்ரத் பாத்திமாவின் மகள் உம்மு குல்தும் திருமணம் செய்து வைத்தார். அவர் ஒரு குத்பா உரையில் ஹஸ்ரத் முஆவியா பற்றி கூறினார்: "எங்கள் சகோதரர்கள் எங்களுடன் உடன்படவில்லை. இன்னும் அவர்கள் நம்ப மறுப்பவர்களோ அல்லது பாவிகளோ அல்ல. அவர்களின் இஜ்திஹாது அப்படி அவர்கள் நடந்துகொள்ள வேண்டும் என்று ஏவுகின்றது." ஹஸ்ரத் தல்ஹா (ரழியல்லாஹு தஆலாஅன்ஹு) ஹஸ்ரத் முஆவியாவுக்கு எதிராக போரிட்டு வீரமரணம் அடைந்த போது, ஹஜ்ரத் முஆவியா அவர்களே ஹஸ்ரத் தல்ஹாவின் முகத்தில் இருந்த தூசியை சுத்தம் செய்தார். அவரது மையித்து தொழுகையில் இமாமாக நின்று தொழுவித்தார். அல்லாஹு தஆலா குர்ஆன் அல்-கரீமில், "**நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள்**" என்று அறிவித்தான்.

சூரா'அல்-ஃபத்ஹு'வின் கடைசி ஆயத்தில் அல்லாஹு தஆலா "**நபியின் தோழர்கள் ஒருவரையொருவர் நேசிக்கிறார்கள்.**" என்று அறிவித்தான். நபித்தோழர்களில் ஒருவரை நேசிக்கவில்லை என்றாலும் அல்லது அதற்கு மேலாக மோசமாக விரோதத்தை கட்டுவது என்பது **குர்ஆன் அல்-கரீமி**ன் படி அவநம்பிக்கை என்று பொருள். அஹ்லுஸ்-சுன்னா அறிஞர்கள் சஹாபத் அல்-கிராம்களின் (ரழியல்லாஹுதஆலா அன்ஹும் அஜ்மஈன்) மேன்மையை புரிந்து முஸ்லிம்களுக்கு சரியாக கட்டளையிட்டார்கள். அவர்கள் அனைவரை யும் நேசித்து அதன் மூலம் முஸ்லிம்களை

பேரழிவிலிருந்து மீட்டனர்.

"காரிஜிகள்"என்று அழைக்கப்படுபவர்கள் அஹ்லு-பைத் (நபியின் நேரடி உறவினர்) களுடன் விரோதம் கொண்டவர்கள். அதாவது சுன்னி முஸ்லிம்களுக்கு மிகவும் பிரியமான எங்கள் மேன்மைக்குரிய ஹஸ்ரத் அலி (ரழி-யல்லாஹு தஆலாஅன்ஹு) மற்றும் அவரது மக்கள் மற்றும் சந்ததியினர் மீது விரோதம் கொள்கின்றவர்கள் தற்போது **யஸீதிகள்** என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்களின் கொள்கைகள் மிகவும் வழிகேடானவை, அவர்களுக்கு இஸ்லாத்துடன் எந்த தொடர்பும் இல்லை.

**வஹாபிகள்**; இவர்கள் அனைத்து சஹாபத் அல்-கிராம்களையும் நேசிப்பதாக கூறிக்கொண்டு, அந்த நற்பேறு பெற்றவர்களை பின்பற்றாமல், அவர்களுடைய சொந்த வழிதவறிய கொள்கைகளை பின்பற்றிக்கொண்டு சஹாபாக்களின் வழியை பின்பற்று வதாக கூறுகின்றனர். வஹாபிசம் என்பது மார்க்கஅறிஞர் என்று கூறப்படும் இப்னு தைமிய்யா'வின் சுன்னிகளுக்கு எதிரான மதவெறி கொள்கைகளை கொண்ட கருத்துக் களுடன் ஹம்பர் என்ற பிரிட்டிஷ் உளவாளியின் பொய்களுடன் சேர்ந்த கலவை. அவர்கள் தசவ்வுபில் மேன்மை அடைந்தவர்களையும், அஹ்லு ஸுன்னா அறிஞர்களையும், ஷியாக்களையும் விரும்புவதில்லை. அவர்களை எதிர்ப்பதுடன் அனைவரையும் அவதூறு செய்கிறார்கள். அவர்கள் மட்டுமே முஸ்லிம்கள் என்று கருதுகிறார்கள். தங்களை போல் இல்லாதவர்களை அவர்கள் மதம் மாறியவர்கள் எனக்கூறி, அவர்களை கொன்று அவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்வது ஹலால் என்று கூறுகின்றனர். எனவே, அவர்கள் **இபாஹிஸ்** (அல்லது **இபாஹாதிஸ்**, அதாவது, வஹாபிகள், முஸ்லிம்களை கொலை செய்வது மற்றும் அவர்களின் சொத்துக்களை அபகரிப்பது 'ஹலால்' என்று சொல்பவர்கள். (மாறாக, முஸ்லிம்களை கொலை செய்வதும் அவர்களின் சொத்துக்களை அநியாயமாக அபகரிப்பதும் ஹறாம் ஆகும்).

அவர்கள் அல்-குர்'ஆனின் ஆயத்துக்களுக்கும் ஹதீஸ் ஷரீபுகளுக்கும், இஸ்லாத்துக்கு எதிரான தவறான அர்த்தங்களை புரிந்து கொண்டு இஸ்லாம் அவற்றை மட்டுமே கொண்டுள்ளது என்று வாதிக்கின்றார்கள். அவர்கள் **அதில்லா அல்-ஷரியா**'வையும் பெரும்பாலான ஹதீஸ்களையும் மறுக்கின்றார்கள். நான்கு மத்ஹபுகளின் பெரும்

அறிஞர்கள் அவர்கள் அஹ்லுஸ்ஸுன்னாவை விட்டு வெளியேறியவர்கள், வழி தவறி யவர்கள், இஸ்லாத்துக்கு துரோகமிழைத்து பெரும் தீங்கு விளைவித்தார்கள்[1] என்று ஆவணங்களுடன் நிரூபித்து பல கிதாபுகளை எழுதியுள்ளனர்.

ஐயூப் சப்ரி பாஷா 1791/1205ல் (ரஹ்மஹுல்லாஹு தஆலா): "வஹாபிசம் அரேபிய தீபகற்பத்தில் கிளர்ச்சி, இரத்தக்களரி, மற்றும் சித்திரவதைகளுடன் தோற்று விக்கப் பட்டது" என்று எழுதியுள்ளார்கள். எகிப்தின் முகம்மது அப்துஹ், வஹாபிசத்தையும் மத்ஹபு எதிர்ப்பையும் உலகம் முழுவதும் அவரது நூற்கள் மூலம் பரப்ப முயன்ற ஒருவர். அவர் கெய்ரோ மெசோனிக் லாட்ஜின் தலைவர் ஜமால் அத்தீன் அல்-ஆப்கானி (மறைவு 1867/1314) மீது தனது அபிமானத்தை வெளிப்படையாக தெரிவித்த ஒரு ப்ரீமேசன். அப்துஹ் "இஸ்லாத்தின் சிறந்த அறிஞர், அறிவார்ந்தவர், சிறந்த சீர்திருத்தவாதி" என்று இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்த பட்டார். மார்க்கவாதி என்ற போர்வையில் மாறுவேட மிட்ட இந்த இஸ்லாத்தின்

---

[1] மேலும் விரிவான தகவலுக்கு, தயவுசெய்து எங்கள் ஆங்கிலப் புத்தகங்கள் **Advice for the Muslim, Endless Bliss,** *அரபியில்* **Al-minhat al-wahbiyya firraddil-Wahhabiyya, At-tawassuli bin-Nabi wa bis-salihin and Sabil annajat** இன்னும் பார்சியில் **Sayful-abrar** ஆகிய நூற்களை படிக்கவும், இவை மற்றும்அஹ்லுல்-பித்'ஆவை மறுத்து எழுதப்பட்ட பெறுமதி மிக்க நூல்கள் இஸ்தான்புல்லில் உள்ள ஹக்கிகத் பதிப்பகத்தால் வெளியிடப் படுகின்றன. **ரத்துல் முஹ்தார்** அத்தியாயம் மற்றும் V. III இல் "**பாகி**" இரண்டும் (முஹம்மது அமீன் இபினு ஆபிதீன், மறைவு, டமாஸ்கஸில் 1836/1252) மற்றும் துருக்கிய மொழியில் **நிஃமத்தி இஸ்லாமில் "நிகாஹ்"** என்ற அத்தியாயத்தில், வஹாபிகள் இபாஹிகள் என்று தெளிவாக எழுதப்பட்டுள்ளது ஐயூப் சப்ரி பாஷா (சுல்தான் அப்துல் ஹமீத் கான் II காலத்தில் ஒரு அட்மிரல் ஆக இருந்தவர். மறைவு .1890/1308), அவரது துருக்கிய படைப்புகளான **மிர்அத் அல்-ஹரமைன்** மற்றும் **தாரிக் வஹாபியான்**, மற்றும் அகமது செவ்டெட் பாஷா, அவரது துருக்கிய படைப்புகளின் ஏழாவது தொகுதியில் **Osmanlis Tarihi,** வஹாபிகளை பற்றிய விரிவான தகவல்களை வழங்கியுள்ளார். மேலும் யூசுஃப் அன்-நபஹானி யின் அரபுமொழி ஆக்கமான **ஷவாஹித் அல்-ஹக்** (3வது பதிப்பு.கெய்ரோ, 1965/1385) என்ற நூலில் வஹாபிகளையும் இப்னு தைமியாவையும் நீண்ட காலமாக மறுத்தார். அதில் ஒரு பகுதி (**உலமா அல்-முஸ்லிமின் வ-வஹாபியுன்**, இஸ்தான்புல், 1972). என்ற அரபு புத்தகத்தில் ஓரளவு மீள் பதிப்பு செய்யப்பட்டது

எதிரிகள் அஹ்லு ஸுன்னாவையும், இஸ்லாத்தையும் உள்ளிருந்து, நயவஞ்சகமாக அழிப்பதற்கு இந்த ஃபித்னாவை தூண்டிவிட்டனர். அப்துஹ் வானளாவிய ரீதியில் போற்றப்பட்டார். கல்வியறிவு குறைந்தவர்கள் அஹ்லுஸுன்னா வின் சிறந்த அறிஞர்கள் **அ'இம்மத்தல்-மதாஹிப்** என்று அறிவிக்கப்பட்டனர். அவர்களின் பெயர்கள் அதன் பிறகு குறிப்பிட படவில்லை. ஆனால், எங்கள் தூய முன்னோர்களின் உன்னத சந்ததியினர், மரியாதைக்குரிய வழித்தோன்றல்கள் ரசூலுல்லாஹ்வுக்காக (ஸல்லள்ளாஹு தஆலா அலைஹி வஸல்லம்) உயிர்தியாகம் செய்த தியாகிகள் இந்த பிரச்சாரங்களாலும் விளம்பரங்களினாலும் ஏமாற்றப்படவில்லை. விளம்பரங்களுக்காக பல மில்லியன் பவுண்கள் செலவிடப்பட்டிருந்தும் அவர்கள் இந்த போலி இஸ்லாமிய நயவஞ்சகர்களை கேட்கவோ அல்லது அங்கீகரிக்கவோ கூட இல்லை. இந்த ஒழுக்கமற்ற தாக்குதல்களுக்கு எதிராக அல்லாஹு தஆலா தியாகிகளின் சிறுவர்களை பாதுகாத்தான்.

இந்தியாவில் மதுஹபு அற்ற ஜமாஅத்தே இஸ்லாமியாவின் நிறுவனர் மவுதூதி (மறைவு 1979/1399), செய்யித் குதுப் (1966/1386ல் எகிப்தில் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்), ஹமீதுல்லாஹ், மற்றும் தப்லீக் ஜமாஅத்தின் உறுப்பினர்களால் எழுதப்பட்ட நூல்கள் மொழி பெயர்க்கப்பட்டு இளைஞர்களுக்கு வழங்கப்பட்டன. பெரிய விளம்பரங்கள் மூலம் இந்த மொழிபெயர்ப்புகள் அதிகமாக பாராட்டப்பட்டன. இவற்றில் அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்களின் கருத்துகளுடன் இணங்கி போகாத நயவஞ்சக கருத்துக்கள் உள்ளடக்க பட்டிருந்தன. நாம் எப்போதும் எச்சரிக்கையாகவும் கவனமாகவும் இருக்க வேண்டும். அல்லாஹு தஆலா அவனுடைய அன்புக்குரிய நபி முஹம்மது (அலைஹி-ஸலாம்) அவர்கள் மீதான அன்பின் பொருட்டால் அறியாமையிலிருந்து முஸ்லிம்களை விழித்தெழ வைப்பானாக!. எதிரிகளின் அவதூறுகளாலும் பொய்களாலும் ஏமாற்றப்படாமல் நம்மை காப்பானாக! ஆமீன்.

வணக்கங்களினால் மட்டும் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ள வேண்டாம்!. ஆதத்-இலாஹிய்யா (அல்லாஹு தஆலாவின் தெய்வீக) வழக்கத்தை கடைப்பிடிக்காமல், கஷ்டப்படாமல் அல்லது வழிகளை உறுதியாக பிடித்துக் கொள்ளாமல் செய்யப்படும் வணக்கங்கள், பிரார்த்தனைகள் அல்லாஹு தஆலாவிடம் அற்புதங்களை கேட்பதாக

அர்த்தப்படும். ஒரு முஸ்லிம் கடினமாக உழைப்பதுடன் பிரார்த்தனை செய்யவேண்டும். நாம் முதலில் வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும், பின்னர் பிரார்த்தனை செய்ய வேண்டும். (அவநம்பிக்கை மற்றும் நிராகரிப்பிலிருந்து தப்பித்து கொள்வதற்கு முதல்வழி இஸ்லாத்தை கற்றுக்கொள்வதும் கற்றுக்கொடுப்பதுமாகும். உண்மையில், முஸ்லிமான ஆண்/பெண் அனைவரின் முதன்மையான கடமை(ஃபர்ளு) அஹ்லுஸ்சுன்னா கொள்கைகள்: ஏவல் மற்றும் விலக்கல்களை கற்றுக்கொள்வது. இன்று, உண்மையான இஸ்லாமிய புத்தகங்களை எழுதவும் வெளியிடவும் சுதந்திரம் இருப்பதால் அவற்றை கற்றுக்கொள்வது மிகவும் எளிதானது. இந்த சுதந்திரத்தை வழங்கும் அரசுக்கு ஒவ்வொரு முஸ்லிமும் ஆதரவு அளிக்க வேண்டும்.

அஹ்லுஸ்ஸுன்னா நம்பிக்கை மற்றும் நடைமுறைகளை (இல்முல் ஹால்) கற்காத வர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கு கற்பித்து கொடுக்காதவர்கள் இஸ்லாத்தி லிருந்து விலகி நிராகரிப்பின் படுகுழியில் விழும் ஆபத்தை எதிர்நோக்குகிறார்கள். அப்படியானவர்களின் பிரார்த்தனைகள் ஏற்கப்பட மாட்டாது. பிறகு, அவர்களால் எப்படி அவநம்பிக்கையிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள முடியும்? ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கூறினார்கள்: “**அறிவு இருக்கும் இடத்தில் இஸ்லாம் இருக்கிறது. அறிவு இல்லாத இடத்தில் இஸ்லாம் இல்லை.**” ஒருவர் பசியால் மரணிக்க கூடாது எனின், சாப்பிடவேண்டும் குடிக்கவேண்டும். இதே போன்று நாம் நிராகரிப்ப வர்களிடமும் இஸ்லாத்தின் எதிரிகளிடமும் ஏமாந்து விடாமல் இருக்க, நமது மார்க் கத்தை கற்க வேண்டும். நமது முன்னோர்கள் **இல்ம்-அல்-ஹால்** நூற்களை கற்பதற்கு அடிக்கடி கூடினார்கள். தங்கள் மார்க்கத்தை கற்று, அதன் மூலம் முஸ்லிம்களாக வாழ்ந்தார்கள். இஸ்லாத்தை அனுபவித்தார்கள். அவர்கள் இந்த ஆனந்தமான ஒளியை எங்களிடம் குறைவின்றி சரியாக ஒப்படைத்தனர். ஆகவே, எஞ்சியிருக்கும் முஸ்லீம் களுக்காகவும் உள்ளே அல்லது வெளியே இருக்கும் எதிரிகளினால் நம் குழந்தைகள் ஏமாந்துவிட கூடாது என்பதற்காகவும், மிகவும் தேவையான தடுப்பு நடவடிக்கையாக அஹ்ல் சுன்னாவின் அறிஞர்களால் தயாரிக்கப்பட்ட இல்ம் அல்-ஹால் நூல்களை நாமும் கற்று எமது சிறுவர்களையும் கற்க வைப்பதாகும்.

தங்கள் குழந்தைகள் முஸ்லிமாக இருக்க விரும்பும்

பெற்றோர்கள் தங்கள் குழந்தைக்கு **குர்ஆன் அல்-கரீமை** எப்படி படிக்க வேண்டும் என்று கற்றுக்கொடுக்க வேண்டும். நாங்களும் கற்று எங்கள் குழந்தைகளுக்கும் கற்றுக்கொடுப்போம். எமக்கு வாய்ப்பு இருக்கும் போது நாங்களே பொறுப்புதாரி. மேலும் அவர்கள் பள்ளிக்கு செல்லும்போது அவர்களால் கூட இயலாது கடினமாக இருக்கும். சீரழிவு நடந்த பிறகு புலம்புவதில் பயனில்லை. பொய்யான நூற்கள், செய்தித்தாள்கள், பத்திரிகைகள், மற்றும் வானொலி நிகழ்ச்சிகள், ஜின்தீக்குகள் மற்றும் இஸ்லாத்தின் எதிரிகளின் இணையதளங்கள் தொலைக்காட்சிகளை நாம் நம்பக்கூடாது.

**ரத்துல் முஹ்தார்** மூன்றாவது தொகுதியில் இப்னு ஆபிதீன் (ரஹிமஹுமுல்லாஹு தஆலா) ஜிந்தீக்குகளை வரையறுத்துள்ளார்; நம்பிக்கையற்ற நயவஞ்சகர்கள், அவர்கள் எந்த மதத்தையும் நம்பவில்லை என்றாலும், அவர்கள் முஸ்லிம்கள் போன்று நடிக்கிறார்கள். அவநம்பிக்கையை ஏற்படுத்தும் விஷயங்களை இஸ்லாமியர்கள் போன்று கற்பிக்கின் றார்கள். இவ்வாறு முஸ்லிம்களை இஸ்லாத்தில் இருந்து வெளியேற்ற முயல்கின்றனர்.

**கேள்வி:** “குழப்பவாதிகளின் நூல்களின் மொழிபெயர்ப்புகளை படித்த ஒருவர் கூறு கின்றார்: ‘**குர்ஆன் அல்-கரீமின்** விளக்கங்களை (தஃப்சீர்) நாம் படிக்க வேண்டும். எங்கள் மார்க்கத்தை மற்றும் **குர்ஆன் அல்-கரீமை** கற்கும் வேலையை மார்க்க அறிஞர் களுக்கு ஒப்படைப்பது ஆபத்தானது பயங்கரமானது **குர்ஆன் அல்-கரீம்** “ஓ மார்க்க அறிஞர்களே” என்று கூறவில்லை. அதில், “ஓ முஸ்லிம்களே” மற்றும் “ஓ மனிதகுலமே” என்று தான் கூறுகிறது. எனவே, ஒவ்வொரு முஸ்லிமும் **குர்ஆன் அல்-கரீமை** புரிந்து கொள்ள வேண்டும். வேறு யாரிடமும் இந்த வேலையை எதிர்பார்க்க கூடாது.”

இந்த நபர் “அனைவரும் தஃப்சீர் மற்றும் ஹதீஸ் புத்தகங்களை படிக்க வேண்டும் என்று விரும்புகிறார். இஸ்லாமிய அறிஞர்கள் மற்றும் அஹ்லு சுன்னாவின் உயர்ந்த மக்களால் எழுதப்பட்ட கலாம், ஃபிக்ஹ் மற்றும் இல்ம் அல்-ஹால் ஆகிய நூல்களைப் படிப்பதை அவர் பரிந்துரைக்கவில்லை. ரஷித் ரிதாவின் வெளியீடு (முஹம்மது அப்துவின் மாணவர், மறைவு 1935/1354) **இஸ்லாம்தா பிர்லிக் வே ஃபிக் மெஷெப்லரி** தலைவர், மதவிவகார அலுவலகம் (வெளியீடு எண். 157;1974/1394) இது வாசகர்களிடையே பெரும் குழப்பத்தை

ஏற்படுத்தியது. அதன் பல பக்கங்களில், குறிப்பாக நூலின் "ஆறாவது உரையாடல்" கூறுகிறது :

[அவர்கள் (முகல்லிதுகள், நான்கு மத்ஹபுகளில் ஒன்றை பின்பற்றுபவர்கள்) முஜ்தஹிது இமாம்ககளை நபித்துவத்தின் தரத்துக்கு உயர்த்தியுள்ளனர். அவர்கள் நபிகளாரின் ஹதீதுகளுடன் உடன்படாத முஜ்தஹிதின் கூற்றை ஹதீஸுக்கு ஹதீஸ் விரும்பி னார்கள். அவை ரத்துசெய்யப்பட்ட ஹதீஸ் (நாஸக்) ஆக இருந்திருக்கலாம். அல்லது அவர்களின் இமாமின் பார்வையில் மற்றொரு ஹதீஸ் இருந்திருக்கலாம் என்று கூருகிறார்கள். அவர்களின் கணிப்பில் தவறு இருந்திருக்கலாம் மேலும் அவர்கள் விஷயம் என்ன என்பதை அறியாமல் இருந்திருக்கலாம். அந்த நபர்களின் சொற்படி செயல்படுவதன் மூலம் தவறில்லாத நபியின் ஹதீஸை ஒதுக்கி வைப்பதனால் இந்த முகல்லிதுகள் முஜ்தஹிதுகளுடன் முரண்படுகின்றனர். அவர்கள் குர்ஆனுடன் கூட முரண்படுகிறனர். அவர்கள் முஜ்தஹித் இமாமை தவிர யாரும் குர்ஆனை புரிந்து கொள்ள முடியாது என்று கூறுகிறார்கள். ஃபக்கீஹு மற்றும் முகல்லிதுகளின் இந்த வார்த்தைகள் அதை அவர்கள் யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களிடமிருந்து எடுத்துக் கொண்டதாக காட்டுகின்றன. மாறாக, குர்ஆனை மற்றும் ஹதீஸ்கள் புரிந்துகொள்வது மனிதர்களால் எழுதப்பட்ட ஃபிக்ஹ் புத்தகங்களை புரிந்து கொள்வதை விட எளிது. அரபி வார்த்தைகளையும் இலக்கணங்களையும் நன்றாக புரிந்து கொண்டவர்களுக்கு குர்ஆன் மற்றும் ஹதீஸ்களை புரிந்து கொள்வதில் சிரமம் இருக்காது.

அல்லாஹ் தன் சொந்த மார்க்கத்தின் விளக்கத்தை வெளிப்படையாக கூற வல்லவன் என்ற உண்மையை பூமியில் யார்தான் மறுக்க முடியும்.? ரசூலுல்லாஹ் அல்லாஹ் எதை அர்த்தம் கொள்கிறான் என்பதை புரிந்து கொள்வதில் அதிக திறன் கொண்ட வரும், மற்றவர்களைவிட சிறப்பாக விளக்க முடியுமானவர் என்பதையும் யார்தான் எதிர்க்க முடியும்? நபிகளாரின் விளக்கங்கள் முஸ்லீம்களுக்கு போதுமானதாக இல்லை என்று கூறுவது, அவரது தொடர்பு கடமையை (தப்லீக்) துல்லியமாக நிறைவேற்ற முடியாதவர் என்றா அர்த்தம்?. பெரும்பாலான மக்களால் குர்ஆனையும் சுன்னாவையும் புரிந்து கொள்ள முடியவில்லை

என்றால், அல்லாஹ் எல்லா மக்களுக்கும் வேதத்தின் மற்றும் ஸுன்னா சட்டங்களை விதித்திருக்க மாட்டான். ஒருவர் அதன் ஆதாரங்களுடன் எதை நம்புகிறார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அல்லாஹ் தக்லிதை (ஒரு மத்ஹபை தழுவுவதை) ஏற்கவில்லை. முகல்லிதுகள் [ அவர்கள் ஒரு மத்ஹபுக்கு தகவமைத்து கொண்டவர்கள்] அவர்களின் தந்தையை மற்றும் பாட்டன் மார்களை பின்பற்றுவது மன்னிக்க தக்கதாக கருதப்பட மாட்டாது. குர்ஆன் வசனங்கள் தக்லீது அல்லாஹ் ' வினால் ஒருபோதும் அங்கீகரிக்கப்படவில்லை என்பதை காட்டுகின்றன. மார்க்கத்தில் நம்பிக்கை தொடர்பான (உசூல், ஈமான்) பகுதியை புரிந்து கொள்வதை விட **ஃபுரு** (இஸ்லாத்தில் கட்டளையிடப்பட்ட செயல்கள்) சம்பந்தப்பட்ட பகுதியை அதன் சான்று களிலிருந்து புரிந்து கொள்வது எளிது. கடினமான ஒன்றுக்கு அல்லாஹ் குற்றம் பிடிக்கும்போது, எளிதான ஒன்றுக்கு குற்றம் பிடிக்க மாட்டானா? சில அரிதான விடயங்களுக்கு விதிகளை பெறுவது கடினமாக இருக்கும். இருந்தும், அவற்றை அறியாமல் இருப்பதும், நடைமுறை படுத்தாததும் மன்னிப்பாக கருதப்படும். ஃபிக்ஹு உடையவர்கள் அநேக பிரச்சனைகளை அவர்களே கண்டு பிடித்தனர். அவற்றுக்கான விதிகளை அவர்களே உருவாக்கினார்கள். அவர்கள் அவற்றுக்கு ராயி (தனிப்பட்ட தீர்ப்பு), கியாஸ் ஜாலி (வெளிப்படையான ஒப்புவமை), மற்றும் கியாஸ் காஃபி (மறைக்கப்பட்ட ஒப்புவமை) எனும் விடயங்களை அவற்றுக்கு ஆவணங்களாக முன் வைத்தார்கள். இந்த விஷயங்கள் இபாதத் துறையிலும் பரவவிடப்பட்டது. அவற்றுக்கு பகுத்தறிவு மூலம் அறிவை பெறுவது சாத்தியமற்றது. இதனால், அவர்கள் மதத்தை பலமடங்கு விரிவு படுத்தினார்கள். முஸ்லிம்களை பிரச்சனைகளுக்கு உட்படுத்தி னார்கள். நான் கியாஸை மறுக்க வில்லை; இபாதத் என்ற துறையில் கியாஸ் இல்லை என்று சொல்கிறேன். ஈமானும் இபாதத்தும் நபிகள் நாயகத்தின் காலத்திலேயே பூரணப்படுத்தப்பட்டு விட்டன. யாரும் அதற்குள் எதையும் சேர்க்க முடியாது. முஜ்தஹிது இமாம்கள் மக்களை பின்பற்றும் (தக்லித்) இலிருந்து தடை செய்தார்கள்.]

"இந்த அறிக்கை மத்ஹபை பின்பற்றாத ரஷீத் ரிதாவின் புத்தகம் **இஸ்லாம்தா பிர்லிக் வே ஃபிக்**

**மெஷெப்லேரி**லிருந்து தெரிவு செய்யப்பட்டது. அனைத்து மதுஹபு அற்றவர் களின் நூற்களை போன்று, நான்கு இமாம்களின் மத்ஹபுகளை பின்பற்றுவதை தடை செய்வதுடன் ஒவ்வொரு வரும் தஃப்சீர் மற்றும் ஹதீஸ்களை கற்க வேண்டும் என்று உத்தரவிடுகின்றது, அதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:** மத்ஹபி அல்லாதவர்கள் எழுதிய பந்திகளை கவனத்துடன் படித்தால், அவர்கள் அலங்காரமான வார்த்தைகள் மூலம் அவர்களது வழி தவறிய சிந்தனைகளையும் பிரிவினை எண்ணங்களையும் நியாயமற்ற தொடரான வாதங்கள் மற்றும் தவறான அறிக்கைகள் மூலம் முஸ்லீம்களை ஏமாற்ற முயல்கிறார்கள் என்பதை ஒருவர் எளிதாக பார்க்கலாம். அறியாதவர்கள் அவருடைய அறிக்கை தர்க்கம் மற்றும் பகுத்தறிவின் கட்டமைப்புக்குள் அறிவை அடிப்படையாக கொண்டது என்று நினைப்பவர் அவருடைய பொறிக்குள் விழலாம், ஆனால் கற்றவர்கள், கூரியபார்வை கொண்டவர்கள் அவர்களின் வலையில் சிக்கமாட்டார்கள்.

முஸ்லிம்களை நித்திய அழிவை நோக்கி மக்களுக்கு வழிகாட்டும் மத்ஹபு அழிப்பு மற்றும் ஸுன்னி எதிர்ப்பு அபாயத்திற்கு எதிராக, இளைஞர்களை எச்சரிப்பதற்காக, இஸ்லாமிய அறிஞர்கள் (ரஹிமஹுமுல்லாஹு தாலா) பதினான்கு நூற்றாண்டுகளாக ஆயிரக்கணக்கான மதிப்புமிக்க நூல்களை எழுதியுள்ளார்கள். பின்வருவது யூசுப் அன்-நபஹானி (இறப்பு பெய்ரூட், 1932/1350) எழுதிய **ஹுஜ்ஜத்தல்லாஹி அலல்-ஆலமின்** எனும் நூலின் சில பகுதிகளின் மொழிபெயர்ப்பு மேலே உள்ள கேள்விக்கான பதிலாக தரப்படுகிறது:

“**குர்ஆன் அல்-கரீம்** இலிருந்து எல்லோராலும் அஹ்காமை (விதிமுறைகள், தீர்வுகளை) பெற முடியாது. முஜ்தஹிது இமாம்களால் கூட **குர்ஆன் அல்-கரீம்** இன் அனைத்து விதி முறைகளையும் பெற முடியாது என்பதால், ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், குர்ஆன் அல்-கரீம் இலிருந்து விதிகளை ஹதீதுகள் வழியாக விளக்கினார்கள். குர்ஆன் அல்-கரீம் அவர்களால் மட்டுமே விளக்கப்பட்டது, ஹதீஸை சஹாபத் அல்-கிராம் மற்றும் முஜ்தஹிது இமாம்கள் மட்டுமே புரிந்து கொள்ள முடியும். அவர்கள் அவற்றை புரிந்து கொள்வதற்காக, முஜ்தஹிது இமாம்களுக்கு **அக்லி**

(நுண் அறிவு, பகுத்தறிவு, அறிவியல்) மற்றும் **நக்லி** (இறக்கப்பட்ட, மத) அறிவு, சக்தி வாய்ந்த புரிதல், கூரிய பார்வை, மிகவும் தெளிந்த உள்ளம், மற்றும் பல உயர் தகமைகளை அல்லாஹுு தாலா வழங்கினான். இந்த அனைத்து நற்பண்புகளுக்கும் முன்னால் தக்வா (ஹறாமை செய்வதிலிருந்து தன்னை பாதுகாத்து கொள்வது). அதற்கு மேலாக அவர்களின் இதயங்களில் தெய்வீக ஒளி இருந்தது. இந்த நற்பண்புகளின் உதவியுடன், நமது முஜ்தஹிதுகள் அல்லாஹுு தஆலா மற்றும் ரசூலுல்லாஹ் (அலைஹி சலாம்) அவர்களின் வார்த்தைகளில் அர்த்தம் என்ன என்பதை புரிந்து கொண்டனர். மற்றும், அவர்களால் புரிந்துகொள்ள முடியாதவற்றை **கியாஸ்** மூலம் அவற்றுக்கான தீர்வுகளை கண்டார்கள்.

நான்கு **அ'இம்மத்தல்-மதாஹிப்** (நான்கு அஹ்லுஸ்ஸுுன்னா மத்ஹபுகளின் ஸ்தாபக இமாம்கள்) ஒவ்வொருவரும் அவர்களின் சொந்தக்கருத்தில் இருந்து தாங்கள் பேச வில்லை என்று தெரிவித்தனர் தங்கள் மாணவர்களிடம் கூறினார்கள்: 'நீங்கள் ஸஹீ ஹான ஹதீதை கண்டால், எனது வார்த்தையை ஒதுக்கிவிட்டு, ரஸுூலுல்லாஹ் (அலைஹி-ஸலாம்) இன் ஹதீதை பின்பற்றுங்கள் என்று கூறினார்கள்!. நமது நான்கு மத்ஹபு இமாம்களின் இந்தக் கட்டளையை பெற்றவர்கள் முஜ்தஹித்களான ஆழ்ந்த அறிஞர்கள். இந்த அறிஞர்கள் தர்ஜிஹ் (ஆராய்ந்து, ஒப்பீடு, முன்னுரிமை) உடையவர்கள். தங்கள் மத்ஹபுகளின் (தலைவர்கள்) தங்கள் இஜ்திஹாத்களுக்கு அடிப்படையாக கொண்ட ஆவணங்களில் உள்ள ஹதீஸ்களை படித்து, ஹதீதுகளை அறிவித்தவர்களின் விபரங்களை ஆராய்ந்து புதிதாக கண்டுகொண்ட சஹீஹான ஹதீஸ்களில் அவற்றில் எவை பின்னர் அறிவிக்கப்பட்ட ஹதீஸ்கள் மற்றும் பல்வேறு தரவுகளை ஆராய்ந்து அதன் மூலம் எது அதிகம் விரும்பப்பட வேண்டும் என்பதை புரிந்து கொண்டனர். அல்லது, முஜ்தஹிது இமாம் [இமாம் அல்-மத்ஹப்] ஒரு சம்பவத்தை அல்லது சூழ்நிலை (மசாலா) பற்றி அதை தீர்ப்பதற்குரிய ஹதீஸ் ஆவணம் அவருக்கு கிடைக்க வில்லை என்பதால் கியாஸ் மூலம் முடிவு செய்வார், அவரது மாணவர்கள் தாங்கள் பெற்ற ஹதீது ஷரீபை கொண்டு வேறுவிதமாக முடிவு செய்வார்கள். இருப்பினும், இஜ்திஹாது செய்யும் போது, இமாமினால் நிறுவப்பட்ட விதிகளுக்கு அப்பால் மாணவர்கள் செல்லவில்லை. அவர்களுக்குப் பிறகு வந்த முஜ்தஹிது முஃப்திகளும் ஃபத்வாக்களை இதே முறையில்

வெளியிட்டனர்.

இங்கு எழுதப்பட்டவைகளிலிருந்து புரிகிறது, நான்கு மத்ஹபுடைய இமாம்களை பின் பற்றி வரும் முஸ்லிம்கள் மற்றும் அவர்களின் மத்ஹபுகளில் படித்த முஜ்தஹிதுகள் அல்லாஹு தஆலா வினதும் அவனுடைய தூதரினதும் விதிகளை பின்பற்றி வருகின்றனர். இந்த முஜ்தஹித்கள் வேறு யாராலும் புரிந்து கொள்ள முடியாத குர்ஆன் அல்-கரீம் மற்றும் ஹதீஸ் ஷரீப் விதிகளை புரிந்து கொண்டார்கள். மற்றும் அவர்கள் புரிந்து கொண்டதை கூறினார்கள். முஜ்தஹித்கள் குர்ஆன் அல்-கரீம் மற்றும் ஹதீதுகளில் விளங்கி கூறிய வற்றை முஸ்லிம்கள் பின்பற்றி (தக்லீது) செய்து வாழ்கிறார்கள். ஏனெனில் அல்லாஹு தஆலா சூராஅன்-நக்hல் 43வது வசனத்தில்: **உங்களுக்கு தெரியவில்லை என்றால், தெரிந்தவர்களிடம் கேளுங்கள்.**[1] என்று அறிவித்துள்ளான். அல்லாஹு

---

[1] இந்த வசனம் குர்ஆன் அல்-கரீம் மற்றும் ஹதீது ஷரீபை அனைவரும் சரியாக புரிந்துகொள்ள முடியாது; சரியாகச் சொன்னால், அவற்றை புரிந்து கொள்ள முடியாத மக்களும் இருக்கலாம் என்பதை காட்டுகிறது. புரிந்து கொள்ள முடியாத மக்கள், குர்ஆன் அல்-கரீம் மற்றும் ஹதீதுஷரீபை தானாக விளங்குவதற்கு முயற்சி செய்யவேண்டாம் என்றும், அவர்கள் அவற்றை அறிந்தவர்களிடம் கேட்டு அறிந்துகொள்ள வேண்டும் என்றும் கட்டளையிடுகிறது. எல்லோரும் குர்ஆன்அல்-கரீம் மற்றும் ஹதீஸ் ஷெரீபின் அர்த்தங்களை சரியாக புரிந்து கொண்டிருந்தால் 72 வழிதவறிய குழுக்கள் தோன்றியிருக்காது. இந்தக் குழுக்கள் வெளிப்படுவதற்கு காரணமானவர்கள் அனைவரும் ஆழமாக கற்றுக் கொண்டவர்கள், ஆனால் அவர்களில் எவராலும் நாஸில் (குர்ஆன் அல்-கரீம், ஹதீஸ் ஷெரீப்) உள்ள அர்த்தங்களை சரியாக புரிந்து கொள்ள முடியவில்லை. அவைகளை தவறாகப் புரிந்து கொண்டு, அவர்கள் சரியான வழியிலிருந்து விலகிச்சென்று மில்லியன் கணக்கான முஸ்லிம்களுக்கு அழிவை ஏற்படுத்தினர். அவர்களில் சிலர் குர்ஆன் வசனங்க ளுக்கும் மற்றும் ஹதீஸ்களுக்கும் தவறான அர்த்தங்களைக் கொடுப்பதில் மிகவும் தீவிரமாக இருக்கின்றனர். சரியான வழியைக் கொண்ட முஸ்லிம்களை 'காஃபிர்கள்' என்றும் 'மார்க்கத்திலிருந்து வெளியேறியவர்கள்' என்றும் அழைப்பதன் காரணமாக நேர்வழியிலிருந்து வெகுதூரம் சென்றுவிட்டனர். கஷ்ஃப் அஷ்-ஷுபுஹாத் என்ற புத்தகம் துருக்கிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு துருக்கிக்கு ஒரு இரகசிய வழியில் கொண்டுவரப் பட்டுள்ளது. அதில் அஹ்ல்அஸ் ஸுன்னா'வின் நம்பிக்கையைக் கொண்ட முஸ்லிம்களை கொலைசெய்து அவர்களின் சொத்துக் களை பறிமுதல் செய்வது முபா (அனுமதிக்கப்பட்டது) என்று கூறியுள்ளது.

தஆலாவின் அன்புக்குரிய நபி (சல்லல்லாஹு அலைஹி வசல்லம்) அவர்களின் உம்மாவில் மட்டுமே நான்கு மத்ஹபின் இமாம்களுக்கு இஜ்திஹாத் செய்து தங்கள் மத்ஹபுகளை நிலை நாட்டி, இந்த மத்ஹபுகளில் முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றுபடும் பாக்கியத்தை வழங்கினான். அல்லாஹு தஆலா ஒருபுறம், இ'திகாத் (ஈமான், நம்பிக்கை) க்குரிய இமாம்களை உருவாக்கினான், மறுபுறம், மத்ஹபுகளின் இமாம்களை உருவாக்குவதன் மூலம் தனது மார்க்கத்தை சிதைவு படாமல் பாதுகாத்தான். இந்த பாக்கியம் கிறிஸ்தவ மற்றும் யூத மதத்தில் இல்லாமல் போனதால், அவர்களின் மதங்கள் சிதைக்கப்பட்டு, மாற்றப்பட்டு விளையாட்டு பொருட்கள் ஆகிவிட்டன.

"இஸ்லாமிய அறிஞர்களின் ஒருமித்த கருத்துப்படி, ரசூலுல்லாஹ் (அலைஹி ஸலாம்) அவர்களின் மறைவுக்கு 400 ஆண்டுகளுக்குப் பிறகு இஜ்திஹாதைப் பயன்படுத்தக்கூடிய திறன்பெற்ற ஆழ்ந்து கற்றறிந்த அறிஞர்கள் எவரும் தோன்றவில்லை. தற்காலத்தில் இஜ்திஹாது அவசியம் செய்ய வேண்டும் என்று வாதிடுபவர்கள் யாராகினும் அவர் மனநிலை பாதிக்கப்பட்டவராக அல்லது இஸ்லாத்தை நன்கு கற்காதவராக இருக்க வேண்டும். சிறந்த மார்க்க அறிஞர் ஜலால்அத்தீன் அஸ்ஸுயுத்தி அப்தர்-ரஹ்மான் (ரஹிமஹுல்லாஹு தஆலா (மறைவு எகிப்து, 1505/911) அவர்கள் தான் இஜ்திஹாதுக்குரிய தரத்தை அடைந்து விட்டதாக கூறினார். சமகால அறிஞர்கள் இரண்டு வெவ்வேறு பதில்கள் இருந்த ஒரு கேள்வியை கொடுத்து அதில் எந்த பதில் மிகவும் நம்பகரமானது என்பதை சொல்லும்படி அவரிடம் கேட்டார்கள். அவற்றுக்கு அவரால் பதில் சொல்ல முடியவில்லை. அவர் மிகவும் வேலைகளுடன் இருப்பதால் இதற்காக எந்த நேரத்தையும் ஒதுக்க முடியாது என்றார். இருப்பினும், அவர் ஒரு ஃபத்வாவில் இஜ்திஹாத்தின் மிகக்குறைந்த நிலை இஜ்திஹாதை பயன்படுத்துமாறு கேட்கப்பட்டார். அப்படிப்பட்ட ஒரு ஆழமாக கற்றறிந்த அறிஞர் அஸ்-சுயூதி ஃபத்வாவில் இஜ்திஹாது பயன்படுத்துவதை தவிர்த்தார் என்பதை பார்க்கும் போது, முழுமையான (முத்லக்) இஜ்திஹாதை பயன்படுத்துமாறு மக்களை கட்டாய படுத்துபவர்களை நாம் என்ன என்று அழைப்பது. அவர்களை மன நோயாளி என்றோ அல்லது மார்க்கம் தெரியாதவர்கள் என்றோ சொல்லக்கூடாதா?. இமாம் அல்-கஸ்ஸாலி (ரஹிமஹுல்லாஹு தாலா) (மறைவு.

துஸ் 1111/505) அவர் காலத்தில் முஜ்தஹிது இருக்கவில்லை என்று இஹ்யா உலூமுத்தீன் எனும் தனது நூலில் கூறியுள்ளார்கள்.

"முஜ்தஹித் அல்லாத ஒரு முஸ்லீம் அவருடைய மத்ஹபின் இமாமுடைய தீர்ப்புடன் சம்பந்தப்பட்ட உடன்படாத ஒரு ஸஹீஹான ஹதீஸை கற்றுக்கொண்ட பிறகு, அவர் தனது மத்ஹபின்படி அதை செய்வதில் சங்கடத்தை உணருவாராயின், நான்கு மத்ஹபுகளுக்குள் அந்த ஹதீஸின் அடிப்படையில் இஜ்திஹாது செய்த இன்னொரு முஜ்தஹிதை கண்டுபிடிக்க வேண்டும், பின்னர் அந்த முஜ்தஹிதை சேர்ந்த மத்ஹபை.[1] பின்பற்றி அந்த ஹதீஸின் அடிப்படையில் அந்த காரியத்தை செய்ய வேண்டும். ஏனெனில், இஜ்திஹாது தரத்தை எட்டாதவர்களுக்கு நாஸ்ஸிலிருந்து (குர்ஆன்அல்-கரீம் ஹதீஸ் ஷரீஃபு ) விதிகளை வரையறுப்பதற்கு அனுமதிக்கப்பட வில்லை.

இப்போது தாம் முழுமையான இஜ்திஹாத் என்ற தரத்தை அடைந்துவிட்டதாக சில அறியாதவர்கள் கூறுகின்றனர். அவர்கள் நாஸிடமிருந்து விதிகளை வரையறுக்கலாம் என்றும் அவர்கள் இனி நான்கு மத்ஹபுகளில் ஒன்றை பின்பற்ற தேவையில்லை என்றும் கூறி அவர்கள் பல ஆண்டுகளாக பின்பற்றி வரும் மத்ஹபை கைவிடுகிறார்கள். மத்ஹபுகளை அவர்களின் குறைவான பகுத்தறிவினால் மறுக்க முயல்கிறார்கள். அவர்கள் எம்மை போன்ற மார்க்க அறிஞர்களின் கருத்தை பின்பற்றமாட்டோம் என்ற அறிவீனமான, முட்டாள் தனமான அறிக்கைகளை வெளியிடுகிறார்கள். ஷைத்தானால் ஏமாற்றப்பட்டு, அவர்களின் நஃப்சின் தூண்டுதலினால் அவர்கள் உயர்ந்தவர்கள் என்று வாதிக்கின்றார்கள். அவர்கள் அப்படி சொல்வதன் மூலம் அவர்கள் தங்கள் மேன்மையை வெளிப்படுத்தவில்லை, ஆனால் அவர்களின் மதியீனத்தை வெளிப்படுத்துகிறார்கள் என்பதை அவர்களால் உணர முடியவில்லை. அவர்களில் சில அறிவில்லாத வழி தவறி யவர்கள், ஒவ்வொருவரும் தஃப்சீர் புத்தகங்களையும் சஹீஹ் அல்-புகாரியையும் படித்து சட்டங்களை பெறவேண்டும் என்று கூறுவதையும் எழுதுவதையும்

[1] பெரும் அறிஞர் அல்-இமாம் யஹ்யா அன்-நவவி (ரஹிமா-அல்லாஹுˇ தாலா–மறைவு. டமாஸ்கஸ், 1277/676) இதை தனது **ரவ்தத் அத்தாலிபீன்** என்ற புத்தகத்தில் விரிவாக விளக்கியுள்ளார்கள்

பார்க்கிறோம்..

ஓ என் முஸ்லீம் சகோதரனே! அத்தகைய முட்டாள்களை மார்க்க வாதிகள் என்று நட்பு கொள்வதையும் அவர்களின் இட்டுக்கட்டப்பட்ட நூல்களை படிப்பதையும் கண்டிப்பாக தவிர்த்து விடுங்கள். உங்கள் இமாமின் மத்ஹபை பற்றிப் பிடித்து கொள்ளுங்கள்!. நீங்கள் நான்கு மத்ஹபுகளில் எதை வேண்டுமானாலும் தெரிவு செய்யலாம் ஆனால் (ருக்ஸாஸ்) இலகுவான வசதிகளை ஒன்று சேர்க்க அனுமதி இல்லை. மதுஹபுகளை ஒருங்கிணைப்பது '**தல்ஃபிக்**' என்று அழைக்கப்படுகிறது.[1] "ஹதீதுகளை படித்து சரியாக புரிந்து கொள்ளக்கூடிய முஸ்லிம்கள் உங்களின் மதுஹபின் ஆவணங்களான ஹதீதுகளை கற்று வரவேற்கத்தக்க செயல்களை செய்யுங்கள். ஹதீதுகளில் தடை செய்யப்பட்ட

செயல்களை தவிருங்கள். பின்வருவனவற்றையும் கற்றுக் கொள்ளுங்கள்: இஸ்லாமிய மார்க்கத்தின் மகத்துவம், மதிப்பு, ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் பரிபூரணம், மற்றும் அல்லாஹு தஆலாவின் திருநாமங்கள், பண்புகள், ரசூலுல்லாஹ்வின் வாழ்க்கை, நல்லொழுக்கங்கள் மற்றும் அற்புதங்கள், இந்த உலகின் மற்றும் மறுமையின் வரிசை உயிர்த்தெழுதல், தீர்ப்பு, சொர்க்கம் மற்றும் நரகம்; மலக்குகள், ஜீன்கள், பண்டைய உம்மாக்கள், தீர்க்கதரிசிகள், அவர்களின் வேதங்கள்; ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் மேன்மைகள்; அவரது அஹ்லு பைத்துகள் (உடனடி உறவினர்கள்), அவருடைய ஸஹாபாக்களின் வாழ்க்கை; இறுதி நாளின் அடையாளங்கள், இம்மை மறுமை பற்றி அறிவு. அது

---

[1] '**தல்ஃபிக்**' என்பது மத்ஹபுகள் எதற்கும் இணங்காத ஒரு வழிபாட்டு செயல் குறிக்கிறது, ஏனெனில் நான்கு மத்ஹபுகளிலும் உள்ள எளிதான வழிகளை கலந்து நிகழ்த்தப்படுவது. ஒருவர் மதுஹபுகளில் ஒன்றை பின்பற்றி ஒரு இஸ்லாமிய நடைமுறையை செய்வது அந்தமத்ஹபில் சஹீஹ் (செல்லுபடியாகும்) ஆகும். அந்த செயல் மற்ற மத்ஹபுகளிலும் சஹீஹ் (ஏற்றுக்கொள்ள க்கூடியது) ஆக இருப்பதற்காக ஒருவர் அதற்கு மேலதிகமாக மற்ற மூன்று மதுஹபுகளின் நிபந்தனைகளையும் முடியுமான வரை கவனிக்கிறார். எனின் அது 'தக்வா' என்று அழைக்கப்படுகிறது, இது மறுமையில் அதிக தவாப் (வெகுமதிகள்) அடைவதற்கு காரணமாக இருக்கும்.

தொடர்பான விரிவான தகவல்கள் ரசூலுல்லாஹ்(ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் ஹதீதுகளில் குவிந்துள்ளன.

"இங்கே எழுதப்பட்டவை புரிந்து கொள்ளப்பட்டால், முஜ்தஹிதுகளின் அந்த மார்க்க தீர்ப்புகள் ஹதீதுகளின் அடிப்படையில் பயனற்றவை என்று சொல்பவர் அறிவற்றவர் என்பது தெளிவாகும். ஹதீஸ்களில் கொடுக்கப்பட்ட எண்ணற்ற தகவல்களில் இபாதத்துகள் மற்றும் முஆமலாத்துகளை (மக்களிடையே உறவுகள், இஸ்லாமிய வணிகம் சட்டம்) போன்றவை போதிக்கும் ஹதீஸ்கள் மிகக் குறைவு. சில அறிஞர்களின் கூற்றுப்படி, சுமார் 500 உள்ளன [மீண்டும் வருவதையும் சேர்த்து, 3000க்கு மேல் இல்லை]; மிகக் குறைவான ஹதீஸ்கள் மத்தியில், நான்கு மத்ஹபுகளின் இமாம்களில் ஒருவர் ஒரு ஸஹீஹான ஹதீதை கேட்டிருக்க மாட்டார்கள் என்று கருத முடியாது. அனைத்து ஸஹீ ஹான ஹதீதும் நான்கு மத்ஹபு இமாம்களினால் குறைந்த பட்சம் ஒருவரால் ஆவண மாக பயன்படுத்தப்பட்டது. ஒரு முஸ்லிம் தங்கள் சொந்த மத்ஹபில் ஒரு ஸஹீஹான ஹதீஸுடன் உடன்படாத ஒரு குறிப்பிட்ட செயலை பார்த்தால் அவர் அந்த செயலை அந்த ஹதீஸை அடிப்படையாக கொண்ட மற்றொரு மத்ஹபின் இஜ்திஹாதை பின்பற் றுவதன் மூலம் செய்ய வேண்டும். ஒருவேளை அந்த நபர் பின்பற்றும் மத்ஹபின் இமாமும் குறித்த ஹதீதை பற்றி கேள்விப்பட்டிருந்தார், இருந்தும், அவர் மிகவும் ஸஹீஹ் என்று புரிந்து கொண்ட மற்றொரு ஹதீஸை பின்பற்றி அல்லது, பின்னர் கூறப்பட்ட ஹதீது முந்தையதை ரத்துசெய்தது, அல்லது முஜ்தஹிதுக்குத் தெரிந்த வேறு சில காரணங்களுக்காக, அவர் முந்தைய ஹதீஸை ஒரு ஆவணமாக எடுத்துக் கொள்ளாமல் இருந்திருக்கலாம். ஒரு ஹதீஸ் ஸஹீஹானது என்பதை புரிந்து கொண்ட முஸ்லிமுக்கு தனது அந்த ஹதீதுக்கு உடன்படாத மத்ஹபின் தீர்ப்பை விட்டுக் கொடுத்து ஹதீதை பின்பற்றுவது நல்லது. இருப்பினும், இந்த விஷயத்தில் அவர், அந்த ஹதீஸை தனது இஜ்திஹாதில் இந்த விஷயத்திற்கு பயன்படுத்திய மற்றொரு மத்ஹபை பின்பற்ற வேண்டும். ஏனெனில் அந்த இரண்டாவது மத்ஹபின் இமாம், அந்த நபருக்கு தெரியாத அந்த தீர்ப்பின் ஆவணங்கள் அறிந்தவர், அந்த ஹதீதுக்கேற்ப செயல்படுவதைத் தடுக்க எதுவும் இல்லை என்று கண்டு பிடித்தவர். இருந்தபோதிலும், அந்நபர் அந்த விஷயத்தை அவர் சார்ந்திருக்கும்

சொந்த மத்ஹபுக்கு இணங்க செயல்படுத்தவும் அனுமதிக்கப் படுகின்றது. சந்தேகத்திற்கு இடமின்றி அவருடைய மதுஹபுடைய இமாம் அவரது தீர்ப்புக்கு ஒரு நல்ல ஆவணத்தை நம்பியிருந்தார். மேலும், மத்ஹபுகளின் இஜ்தி ஹாதுடைய எந்த ஒரு இமாமும் குர்'ஆனிலிருந்தும், சுன்னா விலிருந்தும் விலகவில்லை என்பதால், ஒரு முகல்லிது (,மதுஹபை கடைப்பிடிப்பவர்) ஆவணங்களை அறிந்திருக்க வேண்டியதில்லை. இஸ்லாத்தில் இது மன்னிக்கத்தக்கது என்று கருதப்படுகின்றது. அவர்களின் மத்ஹபுகள் குர்'ஆன் மற்றும் சுன்னாவின் விளக்கங்களாகும். அவர்கள் குர்'ஆனிலும் மற்றும் சுன்னாவிலும் உள்ள அர்த்தங்களையும் விதிகளையும் முஸ்லிம் களுக்கு அவற்றை புரிந்துகொள்ளும் வகையில் விளக்கினார்கள். அவற்றை கிதாபுகளில் எழுதினார். நான்கு மத்ஹபுடைய இமாம்களின் (ரஹிமஹுமுல்லாஹு தஆலா அலைஹும் அஜ்ம'ஈன்) இஸ்லாத்துக்கு செய்த இந்த மகத்தான சேவை, அல்லாஹு தஆலா அவர்களுக்கு உதவவில்லை என்றால், அவ்வாறு செய்வதற்கு மனித சக்தி போதுமாக இருந்திருக்காது. இந்த மத்ஹபுகளும் ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) உண்மையான நபி மற்றும் இஸ்லாம் உண்மையான மார்க்கம் என்பதற்கு மிகச் சிறந்த சான்றுகளில் ஒன்று. எங்கள் அ'இம்மத் அல்-மதாஹிபின் இஜ்திஹாதுகளில் வேறுபாடு, நடை முறைகள் தொடர்பான (ஃபுரு அத்தீன், குர்ஆன், ஹதீதின் போதனை களின் அடிப்படையில் இஸ்லாமிய பிக்ஹு மார்க்க ஷரீஅத் விஷயங்களில் மட்டுமே இருந்தது). அவர்களுக்கிடையில் நம்பிக்கை பற்றிய (உசூலுத்தீன், இ'திகாத் அல்லது ஈமான்) அறிவில் எந்த கருத்து வேறுபாடும் இருக்கவில்லை. மேலும், ஹதீஸ்களில் இருந்து எடுக்கப்பட்ட மார்க்கத்தின் அத்தியாவசிய நடைமுறைகளின் போதனைகளில் எதிலும் ஒருவருக்கொருவர் வேறுபடவில்ல. ஹதீதின் ஆவணங்கள் தவத்தூர் (மீண்டும் மீண்டும் தொடர்ந்து, சந்தேகத்திற்கு இடமின்றி உண்மையான பல ஆதாரங்கள், பரவலான அறிக்கைகள், இஸ்லாத்தின் அசல் தகவல்கள்) மூலம் தெரிவிக்கப்பட்டன. அவர்கள் நடைமுறைகள் பற்றிய அறிவில் சில அம்சங்களில் மட்டுமே வேறுபடுகிறார்கள். இந்த வேறுபாடு ஆவணங்களின் சரியான தன்மையை அவர்கள் புரிந்து கொள்வதில் உள்ள வேறுபாட்டினால் உருவானது. அவர்களுக்கு இடையில் இந்த சிறிய வித்தியாசம் [அல்லாஹ்வின்]

உம்மாவின் மீது கொண்ட கருணையினால் ஏற்பட்டவை. முஸ்லிம்கள் அவர்கள் விரும்பும் மற்றும் எளிதாக காணும் எந்த மத்ஹபையும் பின்பற்ற அனுமதி உண்டு. ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) இந்த வேறுபாட்டை நன்மையான செய்தியாக முன்னறிவிப்பு செய்தார்கள். அது முன்னறிவித்தபடி நடந்தது.

"இஃதிகாதுடைய அறிவில் இஜ்திஹாதை பயன்படுத்த அனுமதி இல்லை. அதாவது வழிதவறுவதற்கு வழிவகுக்கலாம் என்பதால் இஸ்லாத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டிய விடயங்களுக்கு இஜ்திஹாது இல்லை. அது பெரும்பாவம். நம்பிக்கை தொடர்பானது விஷயங்களில் சரியான வழி ஒன்றே உள்ளது: **அஹ்லுஸ்-சுன்னா வல்ஜமா'அத்**. ஹதீதில் நடைமுறைகளில் ஏற்படும் வேறுபாடுகளுகள் (அல்லாஹ்வின்) கருணை என்று கூறப் பட்டுள்ளது. "ஒரு விடயத்தில் நான்கு மத்ஹபுகளின் தீர்ப்புகளும் ஒன்றுக்கொன்று வேறுபடும் போது, ஒரு தீர்ப்பு மட்டுமே சரியானது. இந்த சரியான வழியில் நடப்பவர் களுக்கு இரண்டு தவாபுகள் வழங்கப்படும், மற்றும் தவறான தீர்ப்புகளில் ஒன்றின்படி செயற்படுபவர்களுக்கு ஒரு தவாப் வழங்கப்படும். மத்ஹபுகள் இறுக்கமாக இருப்பது அது உண்மை என்பதை வெளிப்படுத்துகின்றது. ஒரு மதுஹபை விட்டு வெளியேறவும், மற்றொரு மத்ஹபின் நடைமுறையின் தீர்ப்பை பின்பற்றவும் அனுமதிக்க படுகிறது. ஆனால், நன்கு அறியப்பட்ட அஹ்லுஸ்ஸுன்னா நான்கு மத்ஹபுகளை தவிர, வேறு எந்த மத்ஹபுகளையும் அல்லது சஹாபா கிராம்களினது மதுஹபைகூட பின்பற்ற அனுமதிக்கப்பட வில்லை. ஏனெனில் அவர்களின் மத்ஹபுகள் எழுத்து வடிவில் வைக்க ப்பட வில்லை, மேலும் அவை மறைந்து விட்டன. இப்போது அறியப்பட்ட நான்கு மதுஹபை தவிர வேறு எந்த மத்ஹபையும் பின்பற்றுவதற்கான வாய்ப்பு இல்லை என்று இமாம் அபுபக்கர் அஹ்மத் அர்ராஸி (ரஹிமஹுல்லாஹு தாலா மறைவு 980/370), ஒருமனதாக அறிவிக்கப்பட்டதாக தெரிவித்தார்கள், இஸ்லாத்தின் அறிஞர்கள் சஹாபத் அல்-கிராமை [நேரடியாக] பின்பற்ற அனுமதிக்கப்பட வில்லை. மத்ஹபுகளுடைய முஜ்தஹிதுகளின் மேன்மையை புரிந்துகொள்ள விரும்புவோருக்கு குறிப்பாக நான்கு அஇம்மத் அல்-மதாஹிபை பரிந்துரைக்கிறேன்,

அவர்களின் மத்ஹபுகள் குர்'ஆன் மற்றும் சுன்னாவில் இருந்து விலகி செல்லவில்லை மற்றும் அவர்கள் இஜ்மா மற்றும் கியாஸ் மூலம் அறிவித்த விதிகள் அவர்களின் சொந்த கருத்துக்கள் அல்ல. அவை குர்'ஆன் மற்றும் சுன்னாவில் இருந்து எடுக்கப்பட்டவை என்று தெரிவிக்கின்றன. இமாம் அப்துல் வஹ்ஹாப் ஆஷ் ஷரானி (ரஹ்மஹுல்லாஹு தாலா)."[1]வின் **அல்-மிசான் அல்-குப்ரா** மற்றும் **அல்- மீசான் அல்-கித்ரிய்யா** ஆகிய நூல்களை கற்க வேண்டும். "**குரான் அல் கரீம்** 'மார்க்க அறிஞர்கள்' என்று கூறவில்லை என்று சொல்வது சரியல்ல. "அறிஞர்களை (உலமா) மற்றும் அறிவை (இல்ம்) போற்றும் பல்வேறு ஆயத்துக்கள் உள்ளன. ஹஸ்ரத் அப்தல் கனி அன்-நப்லூசி (இ.1731/1143) தனது ஆக்கமான **அல்-ஹதிகா**வில் எழுதியுள்ளார்கள்: "சூராஅல்-அன்பியா 7வது வசனம் கட்டளையிடுகிறது: **'உங்களுக்கு தெரியாத வற்றை திக்ருடைய மனிதரிடம் கேளுங்கள்'** 'திக்ர்' என்பது (அல்லாஹு தஆ லாவை நினைவு கூர்வது) 'அறிவு'. இந்த வசனம் அறியாத மனிதர்கள், அறிஞர்களை கண்டுபிடித்து அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்று கட்டளையிடுகின்றது. **சூரா ஆல இம்ரான்** 7வது வசனத்தில்: **'அறிவை உடையவர்கள் மட்டுமே தெளிவற்ற ஆயத்தின் அர்த்தங்களை புரிந்து கொள்வார்கள்**. அதே சூராவின் 18வது வசனத்தில்: **'அல்லாஹு தஆலா நிலைத்திருப்பவன், அவன் ஒருவன், அறிவுடையவர்களால் புரிந்து கொள்ளப் பட்டு சாட்சியம் சொல்லப்பட்டது'**;

**சூரா அல்-கஸஸின்** 80வது வசனத்தில்: **'அறிவுடையவர்கள் அவர்களிடம் கூறினார் கள், "உங்களுக்கு என்னகேடு! அல்லாஹு தஆலாவை நம்பிக்கை கொண்டு நற்செயல் களை செய்பவர்களுக்கு** மறுமையில் **கொடுக்கப்படும் பரிசு உலகத்தில் கொடுக்கப் படும் நன்மைகளை விட**

---

[1] யூசுஃப் அன்-நபஹானியின், **ஹுஜ்ஜத்-அல்லாஹி அலல்-ஆலமின்**, பக். 771ல் அரபு மொழி மூலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட, நீண்ட மேற்கோட்கள், எங்களுடைய எல்லா நூல்களிலும் (அடைப்பு குறிக்குள்) இடம் பெற செய்யப்பட்டுள்ளவாறு மற்ற நூற்களிலிருந்து பெற்ற தகவல்களையும் கொண்டுள்ளது. மொழிபெயர்க்க பட்ட அரபு அசல் நூல் உரையிலிருந்து அவற்றைப் பிரிக்க அடைப்புக்குறிக்குள் போடப்பட்டுள்ளது. அரபு அசல் நூல் 1974/1394 இல் இஸ்தான்புல்லில் ஆஃப்செட் மூலம் மறு உருவாக்கம் செய்யப்பட்டது.

மேலானது "

சூரா ரூம் 56வது வசனத்தில்: 'அறிவு மற்றும் நம்பிக்கை கொடுக்கப்பட்டவர்கள் கூறுவார்கள் இது தான் உலகில் இருக்கும் போது நீங்கள் மறுத்த மீள எழுப்பும் நாள்"; சூரா இஸ்ராயில் 107, 108வது வசனத்தில்: 'ஞானம் கொடுக்கப்பட்டவர்கள் குர்ஆன் அல்-கரீமை கேட்டவுடன், சிரம்பணிந்து, கூறுவார்கள் "எங்கள் இறைவனிடம் எந்த குறையும் இல்லை, அவன் வாக்குறுதியை மீறாதவன்";

சூரா ஹஜ்ஜின் 54 வது வசனத்தில்:"அறிவு ஞானம் கொடுக்கப்பட்டவர்கள் குர்ஆன் அல்-கரீம் அல்லாஹு தஆலாவின் வார்த்தையாகும்' என்பதை திட்டமாக அறிந்து கொள்கி றார்கள்"; சூரா அங்கபூத்தின் 49வது வசனத்தில்: "குர்ஆன் அல்-கரீம் மெய்யான அறிவு கொடுக்கப்பட்டவர்களின் இதயங்களில் பதிந்து விடும்";

சூரா சபாவின் 6வது வசனத்தில்: அறிவுடையோருக்கு குர்ஆன் அல்-கரீம் அல்லாஹு தஆலாவின் வார்த்தை என்பதை அறிவார்கள். மேலும் அவர்கள் அவனுடைய பொருத்தத்தை அடைய செய்கிறான்';

சூரா அல்-முஜாதலா 11வது வசனத்தில்: "கல்வி ஞானம் உடையவர்களுக்கு சுவர்க்கத்தில் உயர் பதவிகள் வழங்கப்படும்"';

சூரா அல்-ஃபாத்திர் 28 வது வசனத்தில்: "அறிவு உடையவர்கள் மட்டுமே அல்லாஹு தாலாவை அஞ்சுகிறார்கள்"'; மற்றும்

சூரா அல்-ஹுஜுராத்தின் 13வது வசனத்தில்: 'உங்களில் எவர் அல்லாஹு தஆலாவை அதிகம் அஞ்சுபவரோ அவர் மிகவும் மதிப்பு மிக்கவர்"

அல்-ஹதிகா எனும் நூலின் அதன் 365வது பக்கத்தில் மேற்கோள் காட்டப்பட்ட ஹதீதுகளில் கூறப்பட்டுள்ளது: 'மக்களுக்கு நல்லவற்றை கற்பிப்பவருக்கு 'அல்லாஹு தஆலாவும் மலக்குகளும் மற்றும் அனைத்து உயிரினங்களும் பிரார்த்தனை செய்கின்றார்கள்; 'தீர்ப்பு நாளில், முதலில் தீர்க்கதரிசிகளும், பின்னர் அறிஞர்கள் மற்றும் தியாகிகள் பரிந்துரை செய்வார்கள்;

'ஓ மனிதர்களே! அறிஞர்களிடம் கேட்பதன் மூலம் அறிவை பெறலாம் என்பதை அறிந்து கொள்ளுங்கள். மேலும் 'அறிவை கற்று கொள்ளுங்கள்! அறிவை கற்பது ஒரு இபாதா. அறிவை கற்றுக்கொடுக்கும்

**ஆசிரியருக்கும் கற்பவருக்கும் ஜிஹாதின் வெகுமதி வழங்கப்படும். அறிவை போதிப்பது தருமம் செய்வது போன்றது. அறிஞரிடமிருந்து அறிவை கற்பது தஹஜ்ஜுத் (ஸலாத்) தொழுவது போன்றது'.** குலாசா என்ற ஃபத்வா கிரந்தத்தில் அதன் ஆசிரியர் தாஹிர் புகாரி (ரஹிமஹுல்லாஹு தஆலா: மறைவு 1147/542) எழுதியுள்ளார்கள்: ஃபிக்ஹு நூல்களை படிப்பது, இரவில் நின்று வணங்குவதை விட அதிக தவாபை தருகிறது. ஏனெனின் அறிஞர்கள் அல்லது அவர்களின் நூல்களிலிருந்து ஃபர்ளுகளையும் தடைகளையும் கற்றுக்கொள்வது ஃபர்ளு ஆகும். ஃபிக்ஹ் நூல்களை வரிசையாக படிப்பதுடன், கற்றுக்கொண்டதை நிறைவேற்றுவது.

ஒரு ஹதீஸ் ஷரீபில் அறிவிக்கப்பட்டுள்ளது: **'அறிவை கற்றுக் கொள்வது அனைத்து மேலதிக வணக்கங்களை விடவும் மிகவும் தகுதியானது, ஏனெனில் இது, ஒருவர் தனக்காகவும், மற்றவர்களுக்கு கற்பிப்பதற்கும் பயனுள்ளதாக இருக்கும்; 'மற்ற வர்களுக்கு கற்று கொடுப்பதற்காக கற்றுக்கொள்ளும் ஒருவர் சித்தீக்குகளை (உண்மையை உரைப்பவர்) போன்று வெகுமதியை பெறுவார்.'** இஸ்லாமிய அறிவை, அதை போதிக்கும் ஒரு வழிகாட்டியிடம், மற்றும் அவர்களின் நூல்களிலிருந்து மட்டுமே கற்கமுடியும். இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும் வழிகாட்டிகள் தேவையில்லை என்று கூறுபவர்கள் பொய்யர்கள் அல்லது ஜிந்தீக்குகள், அவர்கள் முஸ்லிம்களை ஏமாற்று கிறார்கள் மற்றும் அவர்கள் மக்களை அழிவுக்கு இட்டு செல்வார்கள். மார்க்க நூல் களில் உள்ள அறிவு குர்ஆன் அல்-கரீம் மற்றும் ஹதீஸ் ஷரீஃபு ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டது.

அல்லாஹுதஆலா ரசூலுல்லாஹ் (அலைஹிசலாம்) அவர்களை அறிவிப்பதற்கும் குர்ஆன் அல்-கரீமை போதிக்கவும் அனுப்பினான். சஹாபத்அல்-கிராம் ரசூலுல்லாஹ்விடமிருந்து குர்ஆன் அல்-கரீமில் உள்ள அறிவை அவர்களிடம் கற்றுக் கொண்டார்கள். இஸ்லாமிய அறிஞர்கள் அதை சஹாபா-கிராமிடமிருந்து கற்றுக்கொண்டனர். அனைத்து முஸ்லிம் களும் இஸ்லாமிய அறிஞர்களிடம் இருந்தும் அவர்களின் நூல்களிலிருந்தும் கற்றுக் கொண்டனர். .ஹதீதுகளில் அறிவிக்கப்பட்டுள்ளது: **"அறிவு ஒரு புதையல். அதன் திறவு கோல் கேட்டு கற்றுக்கொள்வது";**

**"அறிவை கற்றுக்கொள்ளுங்கள், கற்பியுங்கள்!"**

“எல்லாவற்றுக்கும் ஒரு ஆதாரம் இருக்கிறது. **தக்வாவின் ஆதாரம் ஆரிஃப்களின் இதயமாகும்** ”,

“ மேலும், **அறிவை கற்பிப்பது பாவங்களுக்கான பரிகாரமாகும்.**”

அல்-இமாம் அர்-ரப்பானி (ரஹ்மத்துல்லாஹி தஆலா அலைஹி) **மக்தூபாத்**தின் முதல் தொகுதியின் 193வது கடிதத்தில் எழுதியுள்ளார்கள்: “ஒரு முகல்லஃப் (பருவமடைந்த, புத்தியுள்ள மற்றும் மிகவும் மார்க்க பொறுப்புள்ளவர்) முதலில் தனது ஈமான் மற்றும் இஃ’திஹாதை சரிசெய்ய வேண்டும், அதாவது அஹ்லுஸ்-சுன்னா வல்ஜமா’அத் அறிஞர் களினால் எழுதப்பட்ட நம்பிக்கை பற்றிய அறிவை கற்று அதன்படி நம்பிக்கை கொள்ள வேண்டும். அல்லாஹுதஆலா அந்த அறிஞர்களின் முயற்சிகளுக்காக நிறைவான கூலியை அவர்களுக்கு வழங்குவானாக. ஆமீன்! மறுமையில் தண்டனையிலிருந்து பாதுகாப்பு என்பது அவர்கள் கூறியதை நம்புவதில் தங்கியுள்ளது. [அவர்களின் வழியை பின்பற்றுபவர்கள் **ஸுன்னி** முஸ்லிம்கள் என்று அழைக்கப் படுகிறார்கள்.] அவர்கள் மட்டுமே ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) மற்றும் அவரது சஹாபா (ரிள்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மஈன்) களின் அடிச்சுவடுகளை பின்பற்றுபவர்கள். **குர்ஆன் அல்-கரீமி**லிருந்தும் மற்றும் சுன்னாவிலிருந்தும் புரிந்து கொண்டு அறிவிக்க ப்பட்ட அறிவு மற்றும் போதனைகளில் மிக சரியானதும், பெறுமதி மிக்கதுமான போதனைகள் அந்த பெரிய அறிஞர்களினால் **குர்ஆன் அல்-கரீமி** லிருந்தும் **சுன்னா** விலிருந்தும் புரிந்து கொண்டு அறிவிக்கப்பட்டவை மட்டுமே.

அனைத்து பித்’அத்வாதிகளும், அதாவது ஒவ்வொரு சீர்திருத்தவாதியும் வழி தவறிய வர்கள், மற்றும் மத்ஹபில்லாதவர்கள் அவர்களின் குறுகிய பார்வையின் காரணமாக அவர்கள் அவர்களின் சொந்த தீய சிந்தனைகளை குர்’ஆன் மற்றும் சுன்னாவிலிருந்து பெற்றதாக கூறுகின்றனர். அவர்கள் அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்களை இழிவுபடுத்தவும் குறை கூறவும் முயற்சிக்கின்றனர். அவர்கள் குறிப்பிட்டபடி, அவர்களின் எல்லா எழுத்துக்களும் விரிவுரைகளும் குர்’ஆனிலிருந்தும் சுன்னாவிலிருந்தும் பெறப்பட்டதாக கூறப்படுவதை சரியானது என்று ஏற்றுக்கொள்ள முடியாது, அவர்களின் பகட்டு பிரச்சாரத்தினால் ஏமாந்து விடவும் கூடாது.

"ஹனஃபி மதுஹபு ஃபிக்ஹில் சிறந்த இஸ்லாமிய அறிஞர் ஹஸ்ரத் ஃபள்லுல்லாஹ் பின் ஹசன் துர்புஷ்தி அவர்களால் பாரசீக மொழியில் எழுதப்பட்ட **அல்-முதாமத்** எனும் கிதாபில் அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஅ அறிஞர்கள் அறிவித்த உண்மையான மிகவும் மதிப்புமிக்க நம்பிக்கை பற்றி விளக்குகிறார். இது வெளிப்படையாக எழுதப்பட்டதால், புரிந்து கொள்வது எளிது. அவர் 1263/661ல் மறைந்தார். இந்நூல் 1989/1410ல் ஹக்கிகத் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டது.

"நம்பிக்கை தொடர்பான விடயங்களை திருத்திய பிறகு, நாம் **ஹலால்** (இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டது), **ஹராம்** (இஸ்லாம் தடைசெய்தவை), **ஃபர்ளு** (இஸ்லாத்தின் கட்டளைகள்), **வாஜிப்** (அவசியம், கட்டாயமானது), **சுன்னா** (அல்லாஹு த'ஆலா கட்டளையிடாதவை, ரசூலுல்லாஹ் அலைஹிஸலாம் அவர்கள் விரும்பி செய்த இபாதத்), **மன்தூப்** (பரிந்துரைக்கப்பட்ட செயல்கள், செய்தால் வெகுமதி கிடைக்கும்) மற்றும், **மக்ருஹ்** (விரும்ப படாதவை), என்பவற்றை அஹ்லு ஸுன்னா அறிஞர்களால் எழுதப்பட்ட ஃபிக்ஹு நூல்களிலிருந்து கற்று அதற்கு ஏற்ப செயல்பட வேண்டும். இந்த அறிஞர்களின் மேன்மையை புரிந்துகொள்ள முடியாத அறிவற்றவர்களினால் வெளியிடப்படும் வழி தவறிய புத்தகங்களை நாங்கள் கற்ககூடாது. அஹ்லு ஸுன்னாவின் நம்பிக்கைக்கு பொருந்தாத நம்பிக்கையை கொண்ட முஸ்லிம்கள் மறுமையில் நரகத்திற்கு செல்வதி லிருந்து தப்ப முடியாது. அல்லாஹுதஆலா எம்மை அதிலிருந்து பாதுகாப்பானாக!. ஒரு முஸ்லிமின் நம்பிக்கை சரியானதாக இருந்து, இபாதத்தில் தளர்வாக இருந்தாலும், அதற்காக அவர்கள் மனந்திரும்ப வில்லை என்றாலும் மன்னிக்கப்படலாம். அவர்கள் மன்னிக்கப்படா விட்டால் அவர்கள் தண்டனையை பெற்ற பிறகு நரகத்திலிருந்து காப்பாற்றப்படுவார்கள். ஒருவரின் முக்கிய நோக்கம் நம்பிக்கையை சரிசெய்வதே. காஜா உபைத்-அல்லாஹ் அல்-அஹ்ரார் (கத்தசல்லாஹு தஆலா சிர்ரஹுல் அஸீஸ்-மறைவு .சமர்கண்ட்,1490/895) கூறினார்: 'எனக்கு அனைத்து கஷ்ஃபுகளும் (தெய்வீக மர்மங்களும் வெளிப்பட்டு) மற்றும் அனைத்து கராமத்துகளும் வழங்கப்பட்டிருந்தும், நான் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஆ'வின் நம்பிக்கையை நான் இழந்துவிட்டேன் என்றால் நான் அழிந்தேன். என்னிடம் கஷ்ஃப் அல்லது

கராமா இல்லை மற்றும் பல தவறுகள் இருந் தாலும், நான் அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅ என்ற நம்பிக்கையை பரிசாக பெற்றி ருந்தால், நான் வருத்தப்பட மாட்டேன் என்று கூறியுள்ளார்கள்.

"இன்று, இந்தியாவில் முஸ்லிம்கள் மிகவும் மோசமாக நலிவடைந்து போயுள்ளனர் இஸ்லாத்தின் எதிரிகள் ஒவ்வொரு திசையிலிருந்தும் தாக்குகின்றார்கள். இன்று இஸ்லாத்திற்கு சேவை செய்வதற்காக ஒரு நாணயம் வழங்கப்படுவது, வேறு சில நேரங்களில் வழங்கப்பட்ட ஆயிரக் கணக்கான நாணயங்களை விட அதிக தவாபை பெற்றுக்கொள்ளும் செயலாகும். அஹ்லுஸ் சுன்னத் வல்ஜமாஅ நம்பிக்கை மற்றும் நடை முறைகளை கற்பிக்கும் புத்தகங்களைப் பெற்று அவற்றை கிராம மக்களுக்கும் மற்றும் இளைஞர்களுக்கும் விநியோகிப்பது இஸ்லாத்திற்கு செய்ய வேண்டிய மிகப்பெரிய சேவையாகும். இந்த சேவையை வழங்குபவர்கள் மக்களில் மிகவும் சாதித்தவர்கள் மற்றும் அதிர்ஷ்டசாலிகள். அவர்கள் அதைப்பற்றி மகிழ்ச்சியடைய வேண்டும். அல்லாஹ் வுக்கு நன்றி செலுத்த வேண்டும். இஸ்லாத்துக்கு சேவை செய்வது எப்போதும் நன்மையானது .

ஆனால் இதுபோன்ற சமயங்களில், இஸ்லாம் பலவீனமடையும் போது, பொய் மற்றும் அவதூறுகள் மூலம் இஸ்லாத்தை அழிப்பதற்கு பல முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. ஆதலால் அஹ்லுஸ் ஸுன்னா நம்பிக்கையைப் பரப்புவதற்கு முயற்சிப்பது மிகவும் உயர்ந்தது. ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அவருடைய சஹாபாக்களுக்கு கூறினார்கள்: '**நீங்கள் அப்படிப்பட்ட காலத்தில் வாழ்கிறீர்கள், அல்லாஹு தாலாவின் கட்டளைகள் மற்றும் தடைகளில் பத்தில் ஒன்பது பங்கிற்கு கீழ்ப்படிந்து, ஆனால் மற்ற ஒன்றுக்கு கீழ்படியவில்லை என்றால் நீங்கள் அழிந்து விடுவீர்கள். நீங்கள் தண்டனை செய்யப்படுவீர்கள்!. உங்களுக்கு பிறகு, கட்டளை களில் மற்றும் தடைகளில் பத்தில் ஒரு பங்கை மட்டுமே மக்கள் கடைப்பிடிக்கும் ஒரு காலம் வரும், அவர்கள் காப்பாற்ற படுவார்கள்.**'[1] இந்த ஹதீது ஷரீஃப் சுட்டிக்காட்டிய நிகழ்காலம் இதுதான். இதில்

---

[1] மிஷ்காத்-உல் மசாபிஹ், தொகுதி. 1, ப. 179; அத் திர்மிதி , கிதாபுல் பித்தன் 79வது கட்டுரை.

நம்பிக்கை யற்றவர்களுக்கு எதிராக போராடுவதும்[1] இஸ்லாத்தை தாக்குபவர்கள் யார் என்று அறிந்து அவர்களை வெறுப்பதும் அவசியமானது. அஹ்லுஸுன்னா அறிஞர்களின் பேச்சுக்களை அவர்களின் நூல்களை பரப்புவதற்கு நீங்கள் அற்புதங்களை பெற்றவராகவோ அல்லது அறிஞராகவோ இருக்க வேண்டிய அவசியமில்லை. ஒவ்வொரு முஸ்லிமும் அதை செய்வதற்கு பாடுபட வேண்டும். வாய்ப்பை

நழுவ விடக்கூடாது. தீர்ப்பு நாளில் ஒவ்வொரு முஸ்லிமும் இது குறித்து விசாரிக்க படும், ஏன் இஸ்லாத்திற்கு சேவை செய்யவில்லை என்று கேட்கப்படும். இஸ்லாத்தை போதிக்கும் புத்தகங்களை விநியோகிப்பதற்கு முயலாதவர்கள், மற்றும் இஸ்லாமிய போதனைகளை பரப்பும் மக்களுக்கும் நிறுவனங்களுக்கும் உதவி செய்யாதவர்கள் மிகவும் கடினமாக தண்டிக்க படுவார்கள். மன்னிப்பு கோருவதும், காரணங்கள் கூறுவதும் ஏற்கப்படாது. என்றாலும் நபிமார்கள் (அலைஹி சலாம்) மனிதர்களில் மிக உயர்ந்த வர்களாக, குறிப்பிடத் தக்கவர்களாகவும் இருந்த போதிலும், அவர்கள் ஒருபோதும் தங்கள் சொந்த வசதியை மட்டும் பார்த்துக்கொள்ள வில்லை. அல்லாஹு தஆலாவின் முடிவில்லா இன்பத்துக்கான மார்க்கத்தை பரப்புவதற்கு, இரவும் பகலும் பாடுபட்டனர். அவர்களிடம் அற்புதங்களை கேட்டவர்களுக்கு; '**அற்புதங்கள் அல்லாஹு தஆலா' வினால் நடத்தப்படுபவை அவனுடைய மார்க்கத்தை அறிவிப்பதே எனது கடமை**' என்று பதிலளித்தார்கள். இந்த நோக்கத்திற்காக அவர்கள் உழைத்தபோது, அல்லாஹு தஆலா அவர்களுக்கு உதவினான், அற்புதங்களையும் நடத்தினான். நாமும், அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்கள் (ரஹிமஹுமுல்லாஹு தஆலா) நூல்களை போதனைகளையும் பரப்ப வேண்டும். இளைஞர்கள், நண்பர்களுக்கு, காபிர்களான எதிரிகளின் கீழ்த்தரமான தீங்குகள் பற்றியும்,

---

[1] வலிமை மூலம் ஜிஹாத் (ஜிஹாத் கத்லி) என்பது அரசினால் மட்டும், அதன் ராணுவத்தின் மூலம் செய்யப்படுகிறது. இந்த வகையான ஜிஹாதை செய்பவர் முஸ்லீம்கள் சிப்பாய். அவர்களுக்கு அரசால் கொடுக்கப்பட்ட கடமையை செய்வது. மேலும், **மக்துபாத்தி**ன் 65வது கடிதத்தில் எழுதப்பட்டபடி, ஜிஹாத் கவ்லி, பேச்சு மற்றும் எழுத்து மூலம் செய்யப்படுகிறது. ஜிஹாத் கத்லியை விட சிறந்தது (அதிக தவாபுகளை சம்பாதிப்பது).

அவர்களின் சூழச்சிகள் பற்றியும், முஸ்லிம்களை தூற்றுபவர்கள், துன்புறுத்துபவர்கள்[1] பற்றியும் எடுத்துக்கூற வேண்டும்.

செல்வம், அதிகாரம், மற்றும் தொழில் திறமைகள் மூலம் இந்த நோக்கத்திற்காக உழைக்காதவர்கள் நரகத்தின் தண்டனையிலிருந்து தப்ப முடியாது. இந்த நோக்கத்தில் ஈடுபடும் போது எதிர்கொள்ளும் துன்பம், கவலைகள் மற்றும் துன்புத்தல்களை பெரும் மகிழ்ச்சியாக மற்றும் பெரிய இலாபமாக கருத வேண்டும். நபிமார்கள் (அலைஹி முஸ்லிம்களுக்கும் கற்றுக்கொள்ள வழிகாட்டினார்கள். அந்த அறிஞர்களில் நான்கு பேர் மிக முக்கியமானவர்கள். முதலாவது **அல்-இமாமுல்-அஃலம் அபுஹனிஃபா நுமான் இப்னு தாபித்** (ரஹிமஹுல்லாஹு தஆலா). அவர் மிகப்பெரிய இஸ்லாமிய அறிஞர் களில் ஒருவர். அஹ்லு சுன்னாவின் தலைவர். அவர் 699/80 இல் கூஃபாவில் பிறந்து பாக்தாத்தில் ஷஹீதாக்கப்பட்டார்கள் [2].

இரண்டாவது இமாம் **மாலிக் இப்னு அனஸ்** (ரஹிமஹுல்லா ஹு தஆலா), மிகச் சிறந்த அறிஞர். [**ரத்துல்முஹ்தார்** இல்] 708/90 முதல் 795/ 179 வரை மதீனாவில் 89 ஆண்டுகள் வாழ்ந்தார்கள் என்று இப்னு ஆபிதீன் எழுதியுள்ளார்கள் இவரது பாட்டனார் மாலிக் பின் அபி அமீர். மூன்றாவது இமாம் **முஹம்மது இப்னு இத்ரீஸ்அஷ்-ஷாபி** (ரஹி மஹுல்லாஹுதஆலா), அனைத்து இஸ்லாமியர்களாலும் உயர்வாக மதிக்கப்பட்ட அறிஞர். அவர் 767/150ல் பாலஸ்தீனத்தின் காஸாவில் பிறந்து 820/204ல் எகிப்தில் மறைந்தார். நான்காவது இமாம் **அஹ்மத் இப்னு ஹன்பல்**

---

[1] அவர்களிடம் சொல்வது வதந்தியாக இருக்காது, ஆனால் அம்ர் பில் மரூஃப் (அல்லாஹு தாலாவின் கட்டளைகள் கற்பித்தல் கடமை). ஒவ்வொரு முஸ்லிமும் அவர்கள் செல்வாக்கு செலுத்தக்கூடிய மக்களுக்கு அதைக் கற்பிப்பதற்கு அஹ்லுஸ் சுன்னாவின் நம்பிக்கையைக் கற்றுக் கொள்ள வேண்டும். நூல்கள், அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்களின் போதனைகளை உள்ளடக்கிய பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளை வாங்கி இளைஞர்களுக்கும் தெரிந்தவர்களுக்கும் அனுப்ப வேண்டும். அவற்றை அவர்கள் படிக்க வைப்பதற்கும் நாங்கள் கடினமாக உழைக்க வேண்டும். மேலும், இஸ்லாத்தின் எதிரிகளின் உண்மையான நோக்கங்கள் வெளிப்படுத்துகின்ற புத்தகங்களை விநியோகிக்க வேண்டும்.

[2] அவருடைய சரிதை **சுன்னத் வழி** மற்றும் **Endless Bliss** ல் விவரமாக தரப்பட்டுள்ளது

(ரஹிமஹுல்லாஹுதஆலா, 780/164 ல் பாக்தாதில் பிறந்து அங்கேயே 855/241ல் காலமானார். அவர் இஸ்லாத்தின் முக்கிய

தூண்களில் ஒருவர். இன்று இந்த நான்கில் ஒரு இமாமை பின்பற்றாதவர்கள் பெரும் ஆபத்தில் உள்ளனர். அவர்கள் மார்க்கத்துக்கு எதிரான கொள்கைகளில் உள்ளனர். இவர்களை தவிர இன்னும் பல அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்களின் உண்மையான மத்ஹபுகளும் அன்று இருந்தன. ஆனால், நூல்களிலோ எழுத்துக்களிலோ இருக்க வில்லை. காலப்போக்கில் அந்த மத்ஹபுகள் மறைந்து விட்டன. உதாரணமாக, மதீனாவின் ஏழு பெரிய அறிஞர்கள் **அல்-ஃபுகஹா அஸ்-சபா** என்று அழைக்கப்பட்டனர். மற்றும் **உமர் இப்னு அப்துல் அஸீஸ், சுஃப்யான் இப்னு உயய்னா** (மக்காவில் மறைவு.813/198), **இஸ்ஹாக் இப்னு ரஹாவைஹ், தாவுத் அத்-தாய், அமீர் இப்னு ஷராஹில் அஷ்- ஷாபி, லைத் இப்னு சாத், அமாஷ், முஹம்மது இப்னு ஜரிர் அத்-தபரி, சுஃப்யான் அத்-தவ்றி** (பஸ்ராவில் மறைவு 780/161), மற்றும் அப்தர்-ரஹ்மான் அவ்சாய் (ரஹிமஹு (முல்லாஹு தஆலா) அவர்களில் உள்ளவர்கள்.

அனைத்து சஹாபா அல்-கிராம் (ரழியல்லாஹு தஆலா அன்ஹும் அஜ்மஈன்) சரியான வழிகாட்டுதலுக்கான "நட்சத்திரங்களாக இருந்தனர். அவர்களில் யாராகிலும் ஒருவர் முழு உலகையும் சரியாக வழிநடத்த போதுமானதாக இருந்தனர், ஒவ்வொருவரும் அவரவர் மத்ஹபுக்குரிய முஜ்தஹிதாக இருந்தார்கள். அவற்றில் பெரும்பாலான மத்ஹபுகள் ஒரே மாதிரியாக இருந்தன. ஆனாலும், அவர்களின் மத்ஹபுகள் தொகுக் கப்படவில்லை, அவை புத்தகங்களில் எழுதப்பட்டாலும், அவற்றைப் பின்பற்றுவதற்கு நம்மால் இயலாது. நான்கு இமாம்கள் அவர்களின் மத்ஹபுகளில் நம்பிக்கை கொள்ள வேண்டிய மற்றும் செய்ய வேண்டிய விடயங்களை சேகரித்து தொகுத்து அவர்களும், அவர்களின் மாணவர்களும் சேர்ந்து விளக்கினார்கள். அவர்கள் குர்'ஆன் மற்றும் சுன்னா வில் உறுதியாக இருந்தனர். இன்று ஒவ்வொரு முஸ்லிமும் மேலே குறிப்பிடப்பட்ட நான்கு இமாம்களில் ஒருவரின் மத்ஹபை பின்பற்றி அந்த மத்ஹபுக்கு[1] ஏற்ப இபாதத் (வணக்க வழிபாடுகளை) செய்ய வேண்டும். இந்த நான்கு

[1] இந்த நான்கு மத்ஹபுகளில் எதையும் பின்பற்ற விரும்பாத ஒருவருக்கு அஹ்லுஸ் ஸுன்னாவுடன் தொடர்பு இல்லை.

இமாம்களின் மாணவர் களிடையே இரண்டு பேர் அறிஞர்களாகி ஈமான் (இஸ்லாமிய நம்பிக்கை) பற்றிய போதனைகளை பரப்புவதில் மிக உயர்ந்த தரங்களை பெற்றனர். இதனால் ஈமானுடைய இஃதிகாதில் இரண்டு மத்ஹபுகள் தோன்றின. இந்த இரண்டு இமாம்களின் மதுஹபுகள் மட்டுமே **குர்ஆன்அல்-கரீம்** மற்றும் ஹதீஸ் ஷரீபின்படி சரியான நம்பிக்கையை போதிக்கின்றன. அஹ்லுஸ் சுன்னாவின் நம்பிக்கையை உலகம் முழுவதும் பரப்பிய இந்த இமாம்கள் இரட்சிப்பின் குழு (அல்-ஃபிர்கத் அன்-நஜியா)ஆகும். அவற்றில் ஒருவர் **அபுஅல்-ஹசன்அலி அல்-அஷ்'அரி** (ரஹிமஹுல்லாஹு தாலா, பிறப்பு பஸரா 879/226, மறைவு. பக்தாத், 941/330). மற்றவர் **அபுமன்சூர் அல்-மாத்துருதி** (ரஹிமஹுல்லாஹு தஆலா. மறைவு சமர்கண்ட , 944/333). நம்பிக்கை கோட்பாடுகளில், ஒவ்வொரு முஸ்லிமும் இந்த இரண்டு பெரிய இமாம்களில் ஒருவரை பின்பற்ற வேண்டும். அவ்லியாக்களின் சூபித்துவ தரிக்காக்கள் (வழிகள், தஸவ்வுஃப் உத்தரவுகள்) என்பன சரியானவை. அவ்லியா என்பவர் அல்லாஹு தஆலாவினால் நேசிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டவர்கள். அவ்லியாக்கள் கராமத்தை உடையவர்கள். அவர்களின் அனைத்து கராமத்துக்களும் துல்லியமானவை மற்றும் உண்மையானவை. அவர்கள் இஸ்லாத்தில் இருந்து அணுவளவு கூட விலகவில்லை.[1] அல்-இமாம்

---

[1] ஒவ்வொரு நூற்றாண்டிலும் மார்க்கத்தை அவர்களின் உலக இலாபங்களுக்கான வழிமுறையாக பயன் படுத்திய பொய்யர்களும், மதவெவ்ழி தவறியவர்களும், முர்ஷித் (முதிர்ந்த ஆன்மீக வழிகாட்டி) என்ற வேடத்தில் முன்வந்தவர்கள் அல்லது மார்க்கத்தில் அதிகாரம் பெற்றவர்கள் இருந்திருக்கிறார்கள். இன்று, எல்லா தொழில்துறைகளிலும், ஒவ்வொரு கலைகளிலும் உத்தியோகபூர்வ நிலையிலும் தீயவர்கள் இருக்கிறார்கள். மற்றவர்களின் துன்பத்தில் தங்கள் நலன்களையும் இலாபங்களையும் தேடும் மனிதர்களை பார்க்கும்போது, அவர்களுடன் தொடர்பு வைத்திருந்த அனைத்து தொழிலாளர்களையும் மக்களையும் குறைகூறுவது அநீதியானது: அது மற்றவர்களை சுரண்டுபவர்களுக்கு உதவும். வழிதவறிய மார்க்க வாதிகள், தரீக்கின் தப்பானவர்கள் ஆகியோர் இருப்பதன் காரணமாக இஸ்லாமிய அறிஞர்களை, தசவ்வுபுடைய பெரியார்களை அல்லது சரித்திரத்தில் கௌரவமான சேவை செய்த பெரியோர்களை மக்கள் தவறாக பேசுவதற்கு நாம் இடம் கொடுக்க கூடாது. அவர்களை அவதூறு செய்பவர்கள் அநியாயக்காரர்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

அப்துல்லாஹ் அல்-யாஃபி (மறைவு மக்கா, 1367/76)

கூறினார்கள்: "ஃகௌது அத்-தகலைன் மவ்லானா அப்துல் காதிர் அல்-ஜிலானி (கத்த சல்லாஹு தஆலா சிர்ரஹுல்அஸீஸ்- மறைவு. பாக்தாத்,1161/561). அவர்களின் கராமத்துகள் அனைத்தும் சந்தேகிக்கவோ மறுக்கவோ முடியாத அளவுக்கு பரவலாக அறியப்பட்டவை. தவத்துர் (தொடர்ச்சியான சங்கிலி தொடரான, சந்தேகத்திற்கு இடமின்றி அறிவிக்கப்பட்ட உண்மையான இஸ்லாமிய தகவல்கள்) நம்பகத் தன்மைக்கான ஆதாரம் கொண்டவை.

வலுவான கட்டாய நிர்ப்பந்தம் **தருரா** இல்லாத நிலையில் நிராகரிப்பை ஏற்படுத்தும் வார்த்தைகளை ஒருவர் வெளிப்படையாக கூறியதாக அறிந்து கொள்ளப்பட்டால் அன்றி தொழுகையை நிறைவேற்றும் வழிதவறியவர் ஒருவரை 'நிராகரிப்பவர்' என்று அழைப் பதற்கு அனுமதிக்கப்படவில்லை. அவர் நிராகரிப்பவராகவே இறந்தார் என்று நிச்சயமாக அறியப்படாத வரை நாம் அவர்களை சபிக்க முடியாது. ஒரு காஃபிரை கூட சபிப்பதற்கு அனுமதி இல்லை. அந்த விஷயத்தில், ஹஸரத் ஹுசைன் ரழியல்லாஹுதஆலா அன்ஹு அவர்களை கொலை செய்த ஹஸரத் முஅவியா ரழியல்லாஹுதஆலா அன்ஹுவின் மகன் யஸீதை கூட சபிக்காமல் இருப்பது நல்லது.

5. ஈமானின் ஆறு அடிப்படைகளில் ஐந்தாவது "**இறுதி நாள் (அல்-யவ்மல்-ஆகிர்) மீது நம்பிக்கை வைப்பது**." இது ஒரு நபர் மரணிக்கும் நாளில் தொடங்கி தீர்ப்பு நாள் வரை தொடர்கிறது. அதற்கு பிறகு வருவதற்கு இரவு இல்லை மற்றும் அது இந்த உலகத்திற்கு பிறகு வருகிறது என்பதால் அது "கடைசிநாள்" என்று அழைக்கப்படுகிறது. இந்த ஹதீது ஷரீபில் குறிப்பிடப்பட்டுள்ள "நாள்" என்பது நமக்கு தெரிந்த பகல் அல்லது இரவு போன்றது அல்ல. இது சில நேரத்தை குறிக்கிறது. தீர்ப்பு நாள் எப்போது வரும் என்று தெரிவிக்க படவில்லை. யாராலும் அதன் நேரத்தை மதிப்பிட முடியவில்லை. ஆயினும் கூட, எங்கள் நபி (அலைஹி ஸலாம்) அவர்கள் அதன் பல அறிகுறிகளை சுட்டிக் காட்டினார்கள். ஹஸ்ரத் அல்-மஹ்தி[1] (அலைஹி சலாம்) வருவார்; ஈஸா

---

[1] ஹஸ்ரத் அல்-மஹ்தி அலைஹி சலாம், நமது அல்லாஹ்வின் அருட்கொடையான நபியின் வழித் தோன்றலாக இருப்பார். அவரது பெயர் முஹம்மது மற்றும்

(அலைஅலைஹி சலாம்) அவர்கள் வானத்திலிருந்து டமஸ்கஸுக்கு வருவார்கள். தஜ்ஜால்[1] தோன்றுவான்.

யஃஜூஜ் மற்றும் மஃஜூஜ்[2] என்பவர்கள் உலகம் முழுவதையும் குழப்பத்தில் ஆழ்த்து வார்கள்.; சூரியன் மேற்கில் உதிக்கும்; வன்முறை நிலநடுக்கம் ஏற்படும்; மார்க்க அறிவு மறைந்துபோகும்; பாவம் மற்றும் தீமைகள் அதிகரிக்கும்; மதச்சார்பற்ற, ஒழுக்கக் கேடான, நேர்மையற்றவர்கள் மக்கள் தலைவர்களாக மாறுவார்கள்; அல்லாஹு தஆலா வின் கட்டளைகள்

---

அவருடைய தந்தையின் பெயர் அப்துல்லா. அவர் முஸ்லிம்களுக்கு தலைமை தாங்குவார். இஸ்லாத்தை வலுப்படுத்தி எல்லா இடங்களிலும் எத்தி வைப்பார். அவர் ஈஸா (அலை) அவர்களை சந்திப்பார். அவர்கள் ஒன்றாக தஜ்ஜாலுடன் சண்டையிட்டு அத்-தஜ்ஜாலைக் கொல்வார்கள். அவரது காலத்தில் காலப்போக்கில், முஸ்லிம்கள் எல்லா இடங்களிலும் குடியேறி, வசதியாகவும் எளிதாகவும் வாழ்வார்கள்.

[1] தஜ்ஜால் (கிறிஸ்தவர்களால் அண்டிகிறிஸ்ட் என்றும், மஸீஹ் என்றும் அழைக்கப்படுகிறான், ஏனென்றால் அவனுடைய புகழ் உலகம் முழுவதும் பரவுவி) இருக்கும். வடக்கு ஈரானின் குராசானில் ஒரு யூதரின் மகன் மற்றும் இஸ்லாத்தின் எதிரி எண்ணற்ற படைவீரர்களுக்கு கட்டளையிடுவான். முஸ்லிம்களை கொன்று மத்திய கிழக்கில் அசௌகரியம் மற்றும் சீர்குலைவை ஏற்படுத்துவான். அதிகம் இரத்தம் சிந்திய பிறகு, அவன் ஹஸ்ரத் மஹ்தியால் கொல்லப்படுவான். இது அப்துல் வஹ்ஹாப் அஷ்- ஷரானி எழுதிய **முக்தசரு தத்கீரத் அல்-குர்துபி** யில் குறிப்புகளுடன் எழுதப்பட்டுள்ளது. (ஹக்கிகாத் பதிப்பகத்தின் மறு உருவாக்கம், 2000/1421) தஜ்ஜாலின் பெயர் இப்னு அஸ்-சயாத்.

[2] குர்ஆன் அல்-கரீமில் ய'ஃஜூஜ் மற்றும் ம'ஃஜூஜ் (கொக் மற்றும் மாகொக்) இரண்டு தீய மக்கள், அவர்கள் மிகவும் பழங்காலத்தில் ஒரு சுவருக்கு பின்னால் விடப்பட்டனர், அவர்கள் உலகின் கடைசிகாலத்தில் பூமியில் பரவுவார்கள். தொல்பொருள் ஆராய்ச்சி நகரங்களைக் கண்டறிவதற்காக நிலத்தின் அடியிலும், மலை உச்சிகளில் கடல் படிமங்களும் ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் இன்னும் அந்த சுவர் கண்டுபிடிக்க படவில்லை, அந்த மக்களும் கண்டுபிடிக்கப்படவில்லை. இன்று நாம் இன்று கண்டு கொண்டிருக்கும் அல்லது அறிந்து வைத்திருக்கும் எண்ணற்றவர்களாக இருக்கலாம். இன்றைய பில்லியன் கணக்கான மக்கள் இந்த இருவரில் இருந்து தோன்றியவர்கள் என்று நினைக்கிறார்கள். அந்த இரண்டு பேரும் பூமியில் பெருகிப் பரவுவார்கள். ஒரு சிலர், அவர்களுடைய இடம் எது என்று இன்று தெரிய வில்லை.

தடுக்கப்படும்; ஹராம்கள் எல்லா இடங்களிலும் நடைபெறும்; எமனில் இருந்து நெருப்பு வரும்; கடல்கள் மற்றும் மலைகள் துண்டுகளாக உடையும்; சூரியனும் சந்திரனும் இருண்டு போகும்; கடல்கள் ஒன்றுடன் ஒன்று கலந்து, கொதித்து உலர்ந்து போகும். பாவமான செயல்களை செய்யும் ஒரு முஸ்லீம் (இஸ்லாமிய சட்டத்தை மீறுபவர்) **ஃபாசிக்** என்று அழைக்கப்படும். ஃபாசிக்குகளும் நம்பிக்கையற்றவர்களும் அவர்களின் கப்ருகளில் சித்திரவதை (அதாப்) செய்யப்படுவார்கள். இந்த உண்மைகளை நம்பிக்கை கொள்ள வேண்டியது அவசியம். இறந்தவர்கள் மரணத்திற்கு பிறகு அறியாத புது வாழ்க் கைக்கு வருகிறார்கள். அவர்கள் சந்தோசமான வாழ்க்கையை அல்லது தண்டனையை அனுபவிப்பார்கள். அது ஹதீதுகளில் வெளிப்படையாக அறிவிக்கப்பட்டுள்ளது போல் **முன்கர், நக்கீர்** என்ற இரண்டு மலக்குகள் இரண்டு பயங்கரமான தோற்றத்தில், கேள்வி கேட்பதற்கு கபுருகளுக்கு வருவார்கள். கபுரில் கேள்விகளில் சில அறிஞர்களின் படி சில நம்பிக்கைகள் பற்றியதாக இருக்கும் மேலும் சில அறிஞர்களின்படி அனைத்து நம்பிக்கைகளையும் பற்றியதாக இருக்கும். இந்த காரணத்திற்காக, நாங்கள் பின்வரும் கேள்விகளுக்கான பதில்களை நம் குழந்தைகளுக்கு கற்பிக்க வேண்டும்:

உனது ரப் (படைத்தவன்) யார்? உனது மதம் என்ன? நீர் எந்த நபியின் (உம்மா) சமூகத்தை சேர்ந்தவன்? உனது புனித நூலின் பெயர் என்ன? உனது கிப்லா எது? உனது இ'திகாத் (ஈமான்) மற்றும் அமலில் உனது மத்ஹபு என்ன? இது **தத்கிரத்அல்-குர்துபியில்** (முகம்மது குர்துபி மாலிகியால் எழுதப்பட்டுள்ளது மறைவு. 1272/671) ஸுன்னி அல்லாத வர்களால் சரியாக பதில் கூற முடியாது. சரியான பதில்களை கூறுபவர்களின் கபுறுகள் விசாலமாக்கப்படும். மற்றும் சொர்க்கத்திற்கு ஒரு சாளரம் திறக்கப்படும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காலையிலும் மாலையில் அவர்கள் சொர்க்கத்தில் தங்களுடைய [எதிர்கால] இடங்களை பார்க்கிறார்கள், மலக்குகள் அவர்களுக்கு நற்செய்தி வழங்குவார்கள். துல்லியமாக பதில் சொல்ல முடியாதவர்கள் மிகக்கடுமையாக இரும்புச் சட்டங்களால் தாக்கப்படுவார்கள். எல்லா உயிரினங்களும் மனிதன் மற்றும் ஜின்களை தவிர அவர்களின் அழுகையை கேட்கின்றன. அவர்களின் கபுறுகள் மிகவும் நெருக்க மாக்கப்படும். அவர்கள் தங்கள் எலும்புகள் பின்னிப்பிணைவதை போல் உணர்வார்கள். நரகத்தின் துளைகள் திறக்கப்

படுகின்றன. அவர்கள் காலையிலும் மாலையிலும் நரகத்தில் தங்கள் [எதிர்கால] இடங்களை பார்க்கிறார்கள். அவர்கள் மீண்டும் உயிர்த்தெழும் வரை கபுறுகளில் கடுமையாக தண்டனை செய்யப்படுகிறார்கள்.

இறுதி நாளில் மரணத்திற்கு பின்னர் மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்படுவதை நம்புவது அவசியம். சதை மற்றும் எலும்புகள் அழுகி, மண்ணும் வாயுவுமாக மாறிய பிறகு மீண்டும்

ஒன்று சேர்க்கப்படும்.; ஆத்மாக்கள் அவர்களுக்கு சொந்தமான உடல்களின் உள்ளே நுழையும், அனைத்து மனிதர்களும் தங்கள் கல்லறைகளிலிருந்து எழுவார்கள்.[1] இந்த நேரம் **கியாமத் நாள்** என்று அழைக்கப்படும். அனைத்து உயிரினங்களும் கடைசி நாளில் ஒன்று கூட்டப்படும் **மஹ்ஷர்** இடத்தில் கூடுவார்கள். நன்மை, தீமை பதிவு ஏடுகள் உரியவர்களிடம் பறந்து செல்லும். எல்லாம் வல்ல அல்லாஹுதஆலா, பூமி, வானம், நட்சத்திரங்கள் மற்றும் அனைத்து துகள்களையும் படைத்தவன் இவற்றை நடத்தி வைப்பான். அவனுடைய தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) இவை நடக்கும் என்று அறிவித்தார்கள். அவர் கூறியது எல்லாம் நிச்சயமாக நடந்தேறும்..

இறையச்சமுள்ள சாலிஹான நல்லவர்களின் பதிவேடுகள் வலது புறத்திலும், பாவம் செய்த (ஃபாசிக்), தீயவர்களின் பதிவேடுகள் அவர்களின் பின்புறம்

---

[1] தாவரங்கள் காற்று மற்றும் நீர் மற்றும் உப்புகளில் இருந்து கார்பன் டை ஒக்சைடை உறிஞ்சுகின்றன (கனிமபொருட்கள்) மண்ணிலிருந்து அவற்றை ஒன்றோடொன்று இணைத்து சேதன பொருட்களை, நமது உறுப்புகளின் உயிருள்ள பொருள்களை உருவாக்குகின்றன. பல ஆண்டுகள் எடுக்கும் ஒரு இரசாயன தாக்கம் ஒரு வினை ஊக்கி பயன்படும் போது ஒரு வினாடிக்கும் குறைவான நேரத்தில் நடக்கும் என்பது இன்று தெரிந்தது. அதுபோல அல்லாஹு தஆலா நீர் கரியமல வாயுவை ஒன்றிணைத்து மற்றும் கல்லறைகளில் கனிம பொருட்களுடன் சேரும் போது சேதன பொருட்கள் உருவாக்கம் நடைபெறும். மேலும், ஒரு கணத்தில் அவற்றுக்கு உயிர் வாழும் உறுப்புகள் உருவாகும்.. முக்பீர் அஸ்-சாதிக் (உண்மை உரைத்தவர் , நபிகள் நாயகம்(ஸல்)) இவ்வாறே நாம் மறுமை வாழ்விற்கு வருவோம்) என அவர்கள் அறிவித்தார்கள். இது, இந்த உலகில் இது ஏற்கனவே நிகழந்துள்ளது என்பதை அறிவியல் நிரூபிக்கிறது.

அல்லது இடது புறத்தில் இருந்து கொடுக்கப்படும். நல்லது அல்லது கெட்டது, பெரியது சிறியது, இரகசியமாக அல்லது வெளிப்படையாக செய்யப்பட்ட ஒவ்வொரு செயலும் அந்த எட்டில் எழுதப்பட்டிருக்கும். கிறாமன் காத்திபீன் மலக்குகள் அறிந்திராத செயல்கள் கூட மனித உறுப்புகளின் சாட்சி யத்தில் மற்றும் அல்லாஹு தஆலாவின் சாட்சியம் மூலமாகவும் வெளிப்படும். அவன் அனைத்தையும் அறிந்தவன். ஒவ்வொரு செயலுக்கும் கேள்வி கணக்குகள் மற்றும் தீர்ப்பு இருக்கும். தீர்ப்பு நாளின் போது, ஒவ்வொரு இரகசிய செயல்களும் அல்லாஹுத்தஆலா நாடினால் வெளிப்படுத்தப்படும். மலக்குகள் அவர்கள் பூமியிலும் வானங்களிலும் என்ன செய்தார்கள் என்று விசாரிக்க படுவார்கள். நபிமார் (அலைஹி ஸலாம்) அவர்கள் அல்லாஹு தஆலாவின் கட்டளைகளை மக்களுக்கு எப்படி அறிவித்தார்கள். மனிதர்கள் தீர்க்கதரிசிகளுக்கு எப்படி வழிப்பட்டார்கள், அவர்களுக்கு கட்டளையிடப்பட்ட கடமை களை எப்படி நிறைவேற்றினார்கள். மேலும் ஒருவருக்கொருவர் மற்றவரின் உரிமை களை எப்படி மதித்தார்கள் என்று விசாரிக்கப்படும். தீர்ப்புநாளில், ஈமான் கொண்டவர்கள் அவர்களின் செயல்களும் ஒழுக்கங்களும் அழகாக இருப்பவர்களுக்கு வெகுமதிகளும் ஆசீர்வாதமும் கிடைக்கும். மோசமான நடத்தை மற்றும் தீயசெயல்களை உடையவர்கள் கடுமையாக தண்டிக்க படுவார்கள்.

அல்லாஹு தஆலா, அவனுடைய தயவு மற்றும் கருணையினால் அவன் தேர்ந்தெடுக்கும் முஸ்லிம்கள் சிலரது பாவங்களை மன்னிப்பான். குஃப்ர் (நிராகரிப்பு) மற்றும் ஷிர்க் (இணைவைப்பை) தவிர. அவன் விரும்பினால், ஒவ்வொரு பாவத்தையும் நீதியுடன் மன்னிப்பான். அவன் விரும்பினால் ஒரு சிறிய பாவத்திற்காக தண்டனையும் செய்வான். குஃப்ர் மற்றும் ஷிர்க்குடன் இறந்தவர்களை மன்னிக்கமாட்டேன் என்று அறிவிக்கின்றான். அனைத்து மானிடருக்கும் நபியான முஹம்மது (அலைஹி சலாம்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாத வேதத்தையுடைய அல்லது வேதமில்லாத, காபிர்கள் மற்றும் இஸ்லாத்தின் கோட்பாடுகளில் [கட்டளைகள், தடைகள்] ஒன்றை கூட ஏற்காதவர்கள் நிச்சயமாக நரகத்தில் தண்டனையை அனுபவிப்பார்கள்.

நியாயத்தீர்ப்பு நாளில், செயல்கள் மற்றும் நடத்தைகளை எடைபோடுவதற்கு மீசான் (தராசு) இருக்கும். அது நமக்கு தெரிந்தவற்றிருந்து வேறுபட்டது.

அதன் தட்டுகளில் ஒன்று பூமியையும் வானத்தையும் தாங்கும் அளவுக்கு பெரியதாக இருக்கும். நல்ல செயல் களுக்கான தட்டு பிரகாசமாகவும் அர்ஷின் வலது புறமாகவும் சொர்க்கத்துக்கு பக்கத் திலும் இருக்கும். பாவங்களுக்கான தட்டு இருட்டாகவும் இடது புறமாகவும் நரகத்துக்கு அருகிலும் இருக்கும். இந்த உலகில் செய்துவந்த செயல்கள், வார்த்தைகள், எண்ணங்கள் மற்றும் பார்வை என்பன அங்கு உருவங்களை எடுக்கும், மேலும் நல்ல செயல்கள் அங்கே பிரகாசமான உருவங்களாகவும் மற்றும் தீமைகள் இருண்ட மற்றும் வெறுக்கத்தக்க உருவங்களில் இருக்கும்.அவை உலகில் உள்ள தாராசுகளை ஒத்திருக்காத அந்த தராசில் நிறுக்கப்படும். அதிக சுமைகளை சுமக்கும் தட்டு மேலே செல்லும் இலகுவான சுமையை சுமக்கும் தட்டு கீழே இறங்கும் என்று கூறப்பட்டுள்ளது. அறிஞர்கள் சிலரின் கூற்றுப்படி பல்வேறு தராசுகள் இருக்கும். இன்னும் பலர்: "அது எப்படி இருக்கும், எவ்வளவு இருக்கும் என்பது இஸ்லாத்தில் தெளிவாக கூறப்படவில்லை. எனவே அதை பற்றி சிந்திக்காமல் இருப்பது நல்லது.

சிராத் என்ற பாலம் அல்லாஹு தாலாவின் கட்டளையின் பேரில் நரகின்மேல் கட்டப் படும். அனைவருக்கும் அந்த பாலத்தை கடப்பதற்கு உத்தரவிடப்படும். அன்றைய தினம் அனைத்து நபிமார்களும் "அல்லாஹ்விடம் எங்களை காப்பாற்று! என்று பிரார்த்திப்பார்கள்." சொர்க்கத்திற்கு செல்ல வேண்டியவர்கள் பாலத்தை எளிதாக கடந்து சொர்க்கத்தை அடைவார்கள். சிலர் மின்னல் வேகத்திலும், சிலர் காற்றுடன், மற்றும் சிலர் குதிரைகள் பாய்வதைப் போலவும் கடந்து செல்வார்கள். சிராத் பாலம் ஒரு முடியை விட மெல்லிய தாகவும், அது வாளை விட கூர்மையாகவும் இருக்கும். இவ்வுலகில் நீங்கள் இஸ்லாத்தை தழுவிக்கொள்வதும் இதே அம்சத்தை போன்றது. இஸ்லாத்தை நீங்கள் சரியாக பின்பற்றுவது என்பது ஸிராத்தை கடப்பதை போன்றது. இவ்வுலகில் தங்களின் சிற்றின்ப ஆசைகளுடன் (நஃப்சின் தாக்கத்துடன்) போராடும் சிரமத்தை தாங்கி கொள்கின்றவர்கள் இங்கே சிராத்தை எளிதாக கடப்பார்கள். அந்த நஃப்ஸ் காரணமாக இஸ்லாத்தை பின்பற்றாதவர்கள் ஸிராத்தை சிரமத்துடன் கடப்பார்கள். இந்த காரணத்திற்காக, இஸ்லாம் சுட்டிக்காட்டும் சரியானபாதை "ஸிராத்அல்-முஸ்தகிம்"

(உண்மையான பாதை) என்று அழைக்கப்படுகிறது. இந்த பெயர்களில் உள்ள ஒற்றுமையின் படி, இஸ்லாத்தின் பாதையில் இருப்பது சிறாத்தை கடப்பது போன்றது என்பதை காட்டுகிறது. நரகத்திற்கு தகுதியானவர்கள் ஸிராத்திலிருந்து கீழே நரகத்தில் விழுவார்கள்.

சொர்க்கத்தின் மிகவும் சுவையான தேன்நதி ஹவ்ள் அல்-கவ்தர் என்று அழைக்கப்படும் ஆறு இருக்கும். அது எங்கள் எஜமான் முஹம்மது முஸ்தபா (சல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அது ஒரு மாதகால பயணம் தூரம் போன்று மிக பெரியதாக இருக்கும். அதன் திரவம் பாலைவிட வெண்மையாக இருக்கும். மேலும் அதன் வாசனை கஸ்தூரியை விட இனிமையாக இருக்கும். அதை சுற்றி நட்சத்திரங்களை விட ஏராளமாக குடிநீர் கண்ணாடி பாத்திரங்கள் உள்ளன. அதன் பாணத்தை அருந்துபவர் நரகத்தில் இருந்தாலும் தாகம் எடுக்காது.

**ஷஃபாஅத்** (பரிந்துரை) இருக்கும் என்று நம்ப வேண்டும். நபிமார்கள், வலிமார்கள், சாலிஹான முஸ்லிம்கள், மலக்குகள் மற்றும் அல்லாஹு தஆலாவினால் அனுமதிக்க பட்டவர்கள், தவ்பா செய்யாமல் இறக்கும் முஸ்லிம்களின் சிறிய மற்றும் பெரிய பாவங்களின் மன்னிப்புக்காக பரிந்துரை செய்வார்கள். அவர்களின் பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படும். [எங்கள் நபி (சல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கூறினார்கள்: "**என் உம்மாவின் மத்தியில், பெரும் பாவங்கள் செய்தவர்களுக்காக நான் பரிந்து பேசுவேன்**"]. மறுஉலகில், பரிந்துரை ஐந்து வகையானதாக இருக்கும்:

**முதலாவதாக**, நியாயத்தீர்ப்பு செய்யும் இடத்தில் அதிக கூட்டம் காரணமாக நீண்ட நேரம் காத்திருப்பதனால் சோர்வடைந்து, புலம்புபவர்களுக்கு தீர்ப்பை விரைவு படுத்துமாறு கேட்கும் பாவிகளுக்கு பரிந்து பேசப்படும்;

**இரண்டாவதாக**, கேள்விகள் எளிதாகவும் வேகமாகவும் கேட்கும் வகையில் பரிந்துரை இருக்கும்;

**மூன்றாவதாக**, பாவம் செய்த முஸ்லிம்கள் சிராத்திலிருந்து நரகத்தில் விழாமல் இருப்பதற்காக பரிந்துரை செய்யப்படும். அதனால் அவர்கள் நரகத்தின் சித்திரவதை யிலிருந்து காப்பாற்ற படுவார்கள்.

**நான்காவதாக**, கடுமையான பாவம் செய்த முஸ்லிம்களை நரகத்திலிருந்து வெளியே எடுத்துக்

கொள்வதற்காக பரிந்துரை இருக்கும்

**ஐந்தாவதாக**, சொர்க்கத்தில் முஸ்லீம்களை உயர்ந்த தரத்துக்கு முன்னேற்றுவதற்காக பரிந்துரை செய்யப்படும். அங்கு எண்ணிலடங்கா அருட்கொடைகளும் வசதிகளும் நிரந்தர தங்குதல் இருக்கும் என்றாலும், அங்கு எட்டு தரங்களும், ஒரு நபரின் தரம் அவர்களின் நம்பிக்கையின் அளவு மற்றும் நற்செயல்களின் விகிதத்தில் இருக்கும். சொர்க்கமும் நரகமும் இப்போதும் உள்ளன. சொர்க்கம் ஏழு வானங்களுக்கு மேலே உள்ளது. நரகம் எல்லாவற்றிற்கும் கீழே உள்ளது. எட்டு சொர்க்கங்களும் ஏழு நரகங்களும் உள்ளன. சொர்க்கம் பூமி, சூரியன் மற்றும் வானத்தை விட பெரியது. நரகம் சூரியனை விட மிக பெரியது.

6. ஈமானின் ஆறு பர்ளு (அத்தியாவசியங்களில்) கடைசியாக "**கத்ர் மீது நம்பிக்கை வைப்பது**, **அது நன்மையும் (கைர்) தீமையும் (ஷர்ரு) அல்லாஹு தஆலாவிடமிருந்து வந்தவை.**" நல்லது மற்றும் கெட்டது, நன்மை மற்றும் தீங்கு அல்லது லாபம் மற்றும் நஷ்டம் அனைத்தும் அவனது விருப்பப்படி மனிதர்களுக்கு வருகிறது. அகராதியில், '**கத்ர்**' என்றால் 'அளவிடுதல், ஒரு அளவு; முடிவு, ஒழுங்கு; மிகுதியும் பெரிதும்.' ஏதாவது ஒன்று இருப்பதற்கான அல்லாஹு தஆலாவின் நித்திய விருப்பம் கத்ர் (நியதி) என்று அழைக்கப்படுகிறது. கத்ரின் நிகழ்வு, அதாவது; விரும்பிய காரியம் '**களா**' என்று அழைக்கப்படுகிறது. களா கத்ர் ஆகியவை மாறிமாறி பயன் படுத்தப்படுகின்றன. அதன்படி, களா என்பது அல்லாஹு தஆலாவின் இருந்த மற்றும் இருக்கப் போகும் விஷயங்களின் நித்திய நியதி, கடந்தகால நித்தியத்திலிருந்து நித்திய எதிர்காலம் வரை உருவாக்க பட்டது. கத்ர் என்பது களாவுக்கு இணக்கமாக எதையும் உருவாக்குவது என்று பொருள், குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இல்லை. நித்திய கடந்த காலத்தில், நடக்கவிருக்கும் அனைத்தையும் அவன் அறிந்திருந்த அறிவுகளாக மற்றும் கதர் என்று அழைக்கப்படுகிறது.

பண்டைய கிரேக்க தத்துவவாதிகள் இதை **அல்-இனாயத் அல்-அசலியா** (நித்திய தயவு) என்று அழைத்தனர். அனைத்து உயிரினங்களும் களாவில் இருந்து வந்தவை. கடந்த நித்தியத்தில் அவனுடைய

அறிவின்படி படைப்புகளை உருவாக்குவது **களா, கத்ர்** என்று அழைக்கப்படுகிறது. கத்ரை நம்புவதில் உறுதியாக தெரிந்து கொள்ள வேண்டியது; அவன் நித்தியத்தில் ஒன்றை உருவாக்க விரும்பினால், அது நிச்சயமாக அவன் விரும்பியபடி உருவாக்கப்படும், குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இல்லை என்று நம்பவேண்டும்; அவன் உருவாக்க தீர்மானிக்காத பொருட்கள் உருவாக்க வில்லை (இருக்கவில்லை) என்பதும் அல்லது அவன் உருவாக்க வேண்டாம் என்று தீர்மானித்த விஷயங்கள் இருப்பது என்பதும் சாத்தியமற்றவை.

அனைத்து விலங்குகள், தாவரங்கள், உயிரற்ற உயிரினங்கள் [திண்மங்கள், திரவங்கள், வாயுக்கள், நட்சத்திரங்கள், மூலக்கூறுகள், அணுக்கள், எலக்ட்ரோன், மின்காந்த அலைகள், ஒவ்வொரு உயிரினத்தின் இயக்கம் ஒவ்வொன்றும், உடல் இயக்கம்கள், இரசாயன மற்றும் அணு தாக்கங்கள், ஆற்றலின் தொடர்புகள், வாழும் உயிரினங்களில் உடலியல் நிகழ்வுகள்,] எல்லாவற்றின் இருப்பு அல்லது இல்லாமை, மனிதர்களின் நல்ல மற்றும் தீமையான செயல்கள், இம்மையிலும் மறுமையிலும் அவர்களுக்கான தண்டனைகள் அனைத்தும் அல்லாஹு தஆலா வின் நித்திய அறிவில் இருந்தன. அவன் நித்தியத்தில் அனைத்தையும் அறிந்திருந்தான். கடந்த நித்திய காலத்திலிருந்து நித்திய எதிர்காலம் வரை நடக்கும் விஷயங்கள், அவற்றின் தனித்தன்மைகள், இயக்கங்கள் மற்றும் ஒவ்வொரு நிகழ்வும், அவன் நித்தியத்தில் அறிந்தவற்றின்படி அவனால் உருவாக்கப் பட்டவை. மனிதர்களின் அனைத்து நல்ல மற்றும் தீய செயல்கள், இஸ்லாத்தில் அவர்களின் நம்பிக்கை அல்லது அவநம்பிக்கை, அவர்களின் விருப்பத்துடன் அல்லது விருப்பமின்றி செய்யப்படுகின்றவை அனைத்து செயல்களும் அல்லாஹு தஆலா வினால் உருவாக்கப்பட்டவை. அவன் ஒருவனே அனைத் தையும் உருவாக்குகிறான். அவன் அவற்றை சில வழிகள் மூலம் உருவாக்குகின்றான். "**அல்லாஹுதாலா அனைத்தையும் சில வழிமுறைகள் மூலம் உருவாக்குகின்றான்**". உதாரணமாக, நெருப்பு எரிகிறது. உண்மையில், அல்லாஹுதாலா ஒருவனே எரிவதை உருவாக்குகிறான். நெருப்புக்கும் எரிவதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஆனால் அவனது வழக்கம், நெருப்பு எதையும் தொடாத வரை அவன் எரிவதை

நிகள்த்துவதில்லை[1]. அல்லாஹு தஆலா ஒருவனே எரிவதை செயல்படுத்துகிறான். அவனுக்கு நெருப்பு இல்லாமலும் எரிக்க முடியும்.

ஆனால் அவனுடைய வழக்கம் நெருப்பை கொண்டு எரிப்பது. அவன் எரிக்க விரும்பவில்லை என்றால் அவன் தீயைக்கூட எரிப்பதை தடுக்கிறான். அவன் இப்ராஹிம் (அலைஹி-ஸலாமை) நெருப்பு எரிக்க விட வில்லை; அவரை மிகவும் அதிகமாக நேசித்தான்.

---

[1] தீ எரி வெப்பநிலையை அடைவதை தவிர வேறு எதையும் செய்யாது. சேதன பொருட்களில் கார்பன் மற்றும் ஹைட்ரஜனை ஆக்ஸிஜனுடன் இணைப்பது நெருப்பல்ல. அல்லது எலக்ட்ரான்களுக்கு இயக்கங் களை வழங்குவதும் அது அல்ல. இந்த உண்மையை உணர முடியாதவர்கள் நெருப்பு இவற்றை செய்கிறது என்று கருதுகிறார்கள். அது நெருப்பும் அல்ல, ஆக்ஸிஜனும் அல்ல, வெப்பமும் அல்ல, எலக்ட்ரான் இயக்கமும் அல்ல இந்த எரிக்கும் வினையை உருவாக்குவது அல்லாஹு தாலா மட்டுமே. இவை அனைத்தையும் எரிப்பதற்கான வழிமுறையாக நெருப்பை உருவாக்கியுள்ளான். இதைப்பற்றிய அறிவு இல்லாதவர் நெருப்பு எரிக்கிறது என்று நினைக்கிறார். தொடக்கப் பள்ளியை முடித்த ஒருவர் "நெருப்பு எரிகிறது" என்ற அறிக்கையை ஏற்கவில்லை, பதிலாக காற்று எரிகிறது" என்று கூறுகிறான். ஜூனியர் உயர் நிலை பள்ளியை முடித்த ஒருவர் இதை ஏற்கவில்லை, மேலும், "காற்றில் உள்ள ஆக்ஸிஜன் எரிகிறது" என்று கூறுகிறார். உயர்நிலையில் முடிக்கும் நபர் எரியும் ஆக்சிஜனின் விசேஷம் அல்ல, ஆனால் எலக்ட்ரோன்களை ஈர்க்கின்ற எந்த மூலகமும் எரிக்கின்றது என்று கூறுகிறார். ஒரு பல்கலைக்கழக மாணவர் சக்தி மற்றும் பொருட்களை கவனத்தில் கொள்கிறார். ஒரு நபருக்கு எவ்வளவு அதிகமாகத் தெரியும் என்பதை பொறுத்து அவர் ஒரு விஷயத்தின் உட்புறத்தை நெருங்கி, விஷயங்களுக்குப் பின்னால் பல காரணங்கள் உள்ளன என்பதை உணர்கிறார். நபிமார்கள் (அலைஹிமுஸ்ஸலாம்) அறிவு மற்றும் அறிவியலில் உயர்ந்த நிலையில் இருந்தவர்கள், எல்லாவற்றின் யதார்த்தத்தையும் காணக் கூடியவர்கள். இஸ்லாமிய அறிஞர்கள் அந்த மாபெரும் மனிதர்களின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, அவர்களின் அறிவுப் பெருங்கடலில் இருந்து சில துளிகளை பெற்றனர். ஒவ்வொரு விஷயத்தையும் சுட்டிக் காட்டினார்கள். இன்று ஆக்கப்பூர்வமானதாக, கருதப்படுவது இன்று உண்மையில் திறனற்றது மற்றும் எளிமையான காரண காரியங்கலாகும் மற்றும் அதன் உண்மையான படைப்பவன் நடைபெற வைப்பவன் அல்லாஹு தாலா மட்டுமே இடைத்தரகர்கள் அல்ல.

அவன் தனது வழக்கத்தை நிறுத்திவைத்தான்[1]. அல்லாஹுதஆலா நாடினால் அனைத்தையும் இடைநிலை காரணி இல்லாமல் படைத்திருக்க முடியும். நெருப்பின்றி எரியும், உண்ணாமலேயே நமக்கு ஊட்டமளிக்கும். மேலும் நாங்கள் விமானம் இல்லாமல் பறக்கவும், வானொலி இன்றி நீண்ட தூரத்தில் இருந்து கேட்கவும் முடியும். ஆனால் அவன் மனிதர்களுக்கு அனைத்தையும் சில **இடைநிலை காரணிகள்** மூலம் உருவாக் குவதன் மூலம் பல நலன்களை அருளினான். அவன் சில விஷயங்களை சில இடைநிலை காரணிகள் மூலம் உருவாக்க விரும்பினான். அவனது சில பணிகள் இடைநிலை காரணிகளின் கீழ் உள்ளன. அவனது அதிகாரம் அதற்கு பின்னால் மறைக்கப்பட்டுள்ளது. அல்லாஹுதாலா ஒன்றை உருவாக்க விரும்பியவன் அதை பெறுவதற்கு[2] அதற்குரிய வழிமுறைகளை வைத்துக்

---

[1] உண்மையில், அல்லாஹு தாலா நெருப்பு எரிவதை தடுக்கும் பொருட்களையும் படைக்கிறான். இரசாயனவியலாளர்கள் அந்த பொருட்களை கண்டுபிடித்து வருகின்றனர்.

[2] விளக்கு ஏற்ற விரும்புவோர் தீப்பெட்டிகளைப் பயன்படுத்துகின்றனர்; ஆலிவ் எண்ணெய்யை பிரித்தெடுக்க விரும்புபவர்கள் அழுத்தும் கருவிகளை பயன்படுத்துகிறார்கள்.; தலைவலி உள்ளவர்கள் மாத்திரை எடுத்துக்கொள்கிறார்கள்; சொர்க்கத்திற்கு சென்று அளவற்ற அருளைப்பெற விரும்புப வர்கள் இஸ்லாத்திற்கு தங்களை மாற்றிக்கொள்கிறார்கள்; துப்பாக்கியால் தங்களைத் தாங்களே சுட்டுக் கொண்டவர்கள் அல்லது விஷம் குடிப்பவன் சாவான்; வியர்வை தண்ணீரை குடிப்பவர்கள் தங்கள் ஆரோக்கியத்தை இழக்க நேரிடும்; பாவம் செய்து ஈமானை இழந்தவர்கள் நரகத்துக்கு செல்வார்கள். ஒருநபர் எந்தவிதமான இடைநிலை பொருட்களை பாவித்தாலும், அந்த இடைநிலை பொருளை ஒரு வழிமுறையாக பாவிக்கப்பட்ட அந்த நோக்கத்தை அல்லது பொருளை பெறுவார். இஸ்லாமிய புத்தகங்களை படிப்பவர் இஸ்லாத்தை கற்றுக்கொள்வதுடன் அவர் அதை பாராட்டுவதுடன், முஸ்லிம் ஆகவும் மாறிவிடுகிறார். மதம் இல்லாதவர்கள் மத்தியில் அல்லது மதுஹபு இல்லாதவர்கள் மத்தியில் வாழ்பவர்கள் அவர்கள் சொல்வதை கேட்டு, அவர்கள் இஸ்லாத்தை அறியாதவர்களாகி விடுகிறார்கள். இஸ்லாத்தை அறியாதவர்களில் பெரும்பாலானோர் காஃபிர்களாக மாறுகிறார்கள். ஒரு நபர் வாகனத்தில் ஏறியதும், அது எந்த இடத்திற்குச் செல்லுமோ அங்கு அவர் செல்கிறார்.

கொள்கிறான். அல்லாஹு தஆலாவின் இடை நிலைகாரணி மூலம் செய்யவில்லை ஆயின் யாருக்கும் எவரிடத்திலும் தேவையிருக்காது. எல்லோரும் எல்லாவற்றையும் அவனிடமே நேரடியாக கேட்பார்கள் மற்றவர் உதவி செய்ய வேண்டும் என்றில்லை; உயர்ந்த மற்றும் கீழ்நிலை அதிகாரிகள், போர்மன் மற்றும் தொழிலாளி, மாணவர், ஆசிரியர் என்று பல மக்களிடையே சமூக உறவுகள் இருக்காது. இதனால் இந்த உலகமும் அடுத்த உலகமும் கோளாறுகள் உடையதாக இருக்கும். அழகான, அருவருப்பான, நல்ல மற்றும் தீய, கீழ்ப்படியும் மற்றும் கீழ்ப்படியாத மக்களுக்கிடையே எந்த வித்தியாசமும் இருக்காது. அல்லாஹுத்தஆலா நாடியிருந்தால் அவனது படைக்கும் வழக்கம் வேறு ஏதாவது வழியில் இருந்திருக்கும். அவன் எல்லாவற்றையும் அதற்கு ஏற்றால்போல் படைத்திருப்பான். உதாரணமாக, அவன் விரும்பியிருந்தால், காஃபிர்களை, உலகில் இன்பங்களுக்கு அடிமையானவர்களை, பிறரை துன்புறுத்துபவர்களை, மற்றும் வஞ்சகர்களை அவன் சொர்க்கத்தில் சேர்த்து வைப்பான். அவன் விசுவாசிகளை, வழிபடுபவர்களை, மற்றும் நன்மை செய்பவர்களை நரகத்தில் வைப்பான். ஆனால் இறை வசனங்கள் மற்றும் ஹதீஸ்கள் அல்லாஹு தஆலா அவ்வாறு நாடவில்லை என்பதை காட்டுகின்றன.

அல்லாஹுதஆலா மனிதர்களின் அனைத்து விருப்பமான, தன்னிச்சையான, மற்றும் விருப்பமற்ற செயல்களையும், இயக்கங்களையும் படைப்பவன். அவன் மனிதர்களில் **இக்தியார்** (தெரிவு) மற்றும் **இராதா** (நாட்டம்) என்பவற்றை அவர்களின் விருப்பமான மற்றும் தன்னிச்சையான செயல்களின் உருவாக்கத்திற்கு 'வழிமுறையாக' படைத்தான். மனிதர்கள் செயல்களை செய்ய விரும்பும் போது அல்லாஹு தஆலாவும் நாடினால் இந்த செயல்களை உருவாக்குகிறான். மனிதன் விரும்பவில்லை அல்லது நாடவில்லை அல்லாஹ்வும் நாடவில்லை என்றால் அவனும் உருவாக்க மாட்டான். அவன் மனிதனின் விருப்பம் மீது மட்டுமல்ல, அவன் நாடினாலும் உருவாக்குகின்றான். அவன் மனிதனின் விருப்பத்தின் மீது உருவாக்குவது என்பது நெருப்பு ஒரு பொருளை தொட்டால் எரிவது போன்றது, அல்லாஹ் அதை எரிய வைக்கின்றான். நெருப்பு பொருளை தொடாவிட்டால் அது எரியாது. ஒரு கத்தி எதையாவது தொடும் போதுதான் வெட்டுகின்றது., அவன் வெட்டுதலை உருவாக்குகிறான். வெட்டுவது கத்தி அல்ல,

அல்லாஹு தஆலாதான். அவன் கத்தியை வெட்டுவதற்கான வழிமுறையாக ஆக்கினான். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவன் மனிதனின் விருப்பமான செயல்களை ஒரு காரணமாக (**சபப்**) மூலம் உருவாக்குகிறான். இந்த செயல்களை மனிதன் தேர்ந்தெடுக்கிறான் மற்றும் விரும்புகிறான். இருப்பினும், இயற்கையில் இயக்கங்கள் மனிதனின் விருப்பத்தை சார்ந்தது இல்லை, ஆனால் வேறுசில காரணங்கள் மூலம் அல்லாஹுதஆலாவின் நாட்டத்தினால் உருவாக்கப்படுகின்றன. அல்லாஹுவை தவிர படைப்பவன் இல்லை. அவன் மட்டுமே சூரியனின், கோள்களின் துகள்கள், சொட்டுகள், செல்கள், கிருமிகள் மற்றும் அணுக்களின் மற்றும் ஒவ்வொரு பொருட்களின் அசைவையும் ஒவ்வொரு இயக்கத்தையும் உருவாக்கு பவன். இருப்பினும், உயிரற்ற பொருட்களின் இயக்கங் களுக்கும் மனித மற்றும் விலங்குகளின் தன்னார்வ செயல் மற்றும் இயக்கங்களுக்கு இடையே ஒரு வேறுபாடு உள்ளது. ஒரு மனிதன் அல்லது விலங்கு ஒரு செயலை விரும்பி தெரிவு செய்யும்போது அல்லாஹு தஆலாவும் நாடினால், அவன் மனிதனை அல்லது விலங்கை செயல்பட செய்து, அவனுடைய செயலை உருவாக்குகிறான். மனிதனின் செயல் மனிதனின் சக்தியில் இல்லை. உண்மையில், அவன் எப்படி செயல்படுகிறான்[1] என்பதுகூட அவனுக்கு தெரியாது. உயிரற்ற பொருட்களின் இயக்கங்களில் விருப்பம், தெரிவு இல்லை. நெருப்பு எதையாவது தொடும்போது அல்லாஹு தஆலா நெருப்பு எரிவதை உண்டாக்குகிறான். அது நெருப்பின் விருப்பத்தினாலோ அல்லது எரிக்கும் விருப்பத்தினாலோ அல்ல[1]. மனிதனின் விருப்பமான செயல்கள் இரண்டு காரணிகளின் பின்னணியில் நிகழ்கின்றன. முதலாவது அவனுடைய இதயத்தின் தெரிவு, விருப்பம் மற்றும் சக்தி ஆகியவை அடங்கும். அந்த விஷயத்தில், மனிதனின் செயல்கள் **கஸ்ப்** (அடைதல்) என்று அழைக்கப்படுகின்றது, இது மனிதனின் பண்புகளில் ஒன்று.

இரண்டாவது, அல்லாஹு தஆலாவின் படைப்பு, உருவாக்கம் நடைபெறுகிறது. அவனது உத்தரவுகள், தடைகள், வெகுமதிகள் மற்றும் தண்டனைகள் அனைத்தும் மனிதனுக்கு **கஸ்ப்** கொடுக்கப்பட்டதால்

[1] மனிதனின் ஒவ்வொரு செயலும் பல பௌதீக, மற்றும் இரசாயன நிகழ்வுகளின் விளைவாகும்.

தான் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சூரா அஸ்-ஸஃப்பத்தின் 96வது வசனத்தில் அல்லாஹுதாலா கூறுகிறான்: "**அல்லாஹ் உன்னையும் உன் செயல்களை யும் படைத்தான்.**" இந்த வசனம் மனிதனின் செயல்களில், கஸ்ப் அல்லது இதயத்தின் விருப்பம் மற்றும் **இராதத் ஜூசிய்யா** (பகுதி சுதந்திரமான விருப்பம்) இருப்பதை மட்டும் காட்ட வில்லை. இது மனிதனின் செயல்களில் எந்த நிர்ப்பந்தமும் இல்லாத தற்கான ஆதாரமும் ஆகும். இந்த காரணத்தினால், [செயல்கள் மனிதனுடையது] "மனிதனுடைய செயல்கள்" என்று நாம் சொல்வது போல், "அலி அடித்தார், உடைத்தார்" என்று கூறலாம். ஆனால் ஒவ்வொன்றும் களா மற்றும் கத்ர் கொண்டு படைக்கப் பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டுகிறது. செயல்களின் உருவாக்கத்தில் கஸ்ப் காரண மாகவும் விளைவை ஏற்படுத்துவதாகவும் கூறப்படுகிறது. இருப்பினும், ஒரு விருப்பமான செயலை நிகழ்த்துவதில் கஸ்ப் எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை என்று கூறுவது தவறாகாது. ஏனெனில் மனிதனால் விரும்பப்பட்ட செயலும் உருவாக்கப்பட்ட செயலும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டதல்ல. மனிதன் தான் விரும்பியதை செய்ய முடியாது; அவன் விரும்பாத விஷயங்கள் கூட நடக்கலாம். மனிதன் தான் விரும்பிய அனைத் தையும் செய்தான் என்றால், அவன் விரும்பாத எதுவும் நடக்காது என்றால், பின்னர் அவன் மனிதனாக மாட்டான், ஆனால் தெய்வீகத்தை கோரும் ஒருவனாகும். அல்லாஹு தஆலா'வின் இரக்கம் மற்றும் கருணையினால் மனிதர்களுக்கு அவனுடைய ஏவல் மற்றும் விலக்கலை கடைப்பிடிக்க தேவையான அளவுக்கு மட்டும் சக்தியையும் ஆற்றலையும் கொடுத்தான். உதாரணத்துக்கு, ஆரோக்கியமான மற்றும் வசதிபடைத்த ஒருவர் வாழ்நாளில் ஒருமுறை ஹஜ் செய்ய முடியும்; அவர் வருடத்திற்கு ஒரு மாதம் (ரமலான் மாத) நாட்களில் நோன்பு நோற்க முடியும்; அவனால் ஒரு நாளைக்கு ஐந்து முறை, ஃபர்ளு ஸலாத்தை தொழுவதற்கு முடியும்; அதிகபணம் அல்லது சொத்துக்கள் உள்ளவன், நிசாப் தொகையை அடைந்தவர், சொத்தில் நாற்பதில் ஒருபங்கை தங்கமாக அல்லது வெள்ளியாக முஸ்லீம்களுக்கு ஜகாத்தாக செலுத்தலாம். எனவே, மனிதன் தான் விரும்பிய செயல்களை அவன் விரும்பினால் செய்யலாம், அவன் விரும்பவில்லை என்றால் அவன் செய்யாமல் விடுவான். அல்லாஹுதஆலா'வின் மகத்துவம் இங்குகூட உணர்த்தப்படுகிறது.

அறியாதவர்கள் மற்றும் முட்டாள்கள் களா, கத்ருடைய அறிவை புரிந்து கொள்ள முடியாததால், அஹ்லுஸ்ஸுன்னா அறிஞர்கள் கூறியதை அவர்கள் நம்ப வில்லை. மனிதனின் ஆற்றல் மற்றும் விருப்பத்தை சந்தேகிக்கின்றனர். அவர்கள் மனிதன் திறமையற்றவன் மற்றும் அவனது விருப்பமான செயல்களில் நிர்ப்பந்திக்க படுகிறான் என்று நினைக்கின்றார்கள். சில சந்தர்ப்பங்களில் விரும்பியவாறு செயல்பட முடியாத அந்த மனிதரை பார்த்து, அவர்கள் அஹ்லு-சுன்னாவை தவறாக பேசுகிறார்கள். அவர்களின் இத்தகைய தவறான அறிக்கைகள் அவர்களுக்கு நாட்டம் மற்றும் விருப்பம் இருப்பதை காட்டுகின்றன.

ஒரு செயலை செய்வதும் செய்யாமல் இருப்பதற்குமான திறன் **குத்ரா** (சக்தி) சம்பந்த பட்ட விஷயம். ஒரு செயலை செய்ய விரும்புவதும், செய்ய வேண்டாம் என்று தேர்ந்தெடுப்பதும் **இக்தியார்** (தெரிவு) எனப்படும். ஒரு செயலை செய்ய விரும்புவது **இறாதா** (நாட்டம்) எனப்படும். ஒருசெயலை ஏற்றுக்கொள்வது அல்லது அதை நிராகரிக் காமல் இருப்பது **ரிளா** (ஒப்புதல்) என்று அழைக்கப்படுகிறது. எப்பொழுது (குத்றா) சக்தி மற்றும் (இறாதா) விருப்பம் அவை பயனுள்ளதாக இருக்கும் நிலையில் சேரும்போது நிகழ்வது, **கல்க்** (படைப்பு) நடைபெறுகிறது. ஒருவேளை அவை பலனளிக்காமல் ஒன்று சேர்வது **கஸ்ப்** (அடைதல்) எனப்படும். தெரிவு செய்யும் எவரும் படைப்பாளியாக இருக்க வேண்டியது அவசியமில்லை. இதேபோல், விரும்பிய அனைத்தும் ஒப்புதலை பெறக்கூடியதாக இருக்க வேண்டியது அவசியமில்லை. அல்லாஹுதாலா **காலிக்** (படைப்பாளன்) என்றும் **முக்தார்** (தெரிவு செய்பவன்) என்றும் அழைக்கப்படுகிறான், மற்றும் மனிதன் **காசிப்** (கஸ்ப் உடையவர்), மற்றும் முக்தார் (விருப்பம் உள்ளவன்).

அல்லாஹு தாஆலா விரும்பி தாத்'களை (அல்லாஹு தஆலா விரும்புபவை) மற்றும் மனிதர்களின் பாவங்களையும் உருவாக்குகிறான். இருந்தும் அவன் தாத்'களுக்கு ஒப்புதல் கொடுக்கிறான் பாவங்களை வெறுக்கிறான். அனைத்தும் அவனுடைய நாட்டப்படியே படைத்தல் மூலம் உருவாகின்றன. சூராஅல்-அன்ஆம்'மின் 102வது வசனத்தில், அவன்: **"அனைத்தையும் படைத்த அல்லாஹ்வை தவிர வேறு நாயன் இல்லை."**என்று பிரஸ்தாபிக்கிறான்.

வழிதவறிய **மு'ஃதசிலா** குழு உறுப்பினர்களுக்கு விருப்பத்துக்கும் சம்மதத்திற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை பார்க்க முடியவில்லை, குழப்பமடைந்து கூறினார்கள்: "மனிதன் விரும்பும் செயலை தானே உருவாக்குகிறான்." அவர்கள் களா, கத்ரை மறுத் தார்கள். **ஜப்ரிய்யா** என்று அழைக்கப்படும் வழிதவறிய குழு முற்றிலும் குழப்பமான நிலையில் இருந்தது; படைப்பு இல்லாமல் விருப்பம் இருக்கலாம் என்பதை அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. மனிதனுக்கு விருப்பம் இல்லை என்று நினைத்து, அவர்களை கல்லுக்கும் மரத்துக்கும் ஒப்பிட்டார்கள். அல்லாஹு தஆலா நம்மை அந்த மதவெறி குழுக்களை விட்டும் பாதுகாப்பானாக! அவர்கள் கூறினார்கள்: "மனிதர்கள் பாவிகள் அல்ல. அல்லாஹ் ஒருவன் தான் எல்லா தீமைகளையும் செய்ய வைக்கிறான். ஜப்ரியாவின் உறுப்பினர்கள் கூறுவது போல் மனிதர்களிடம் தெரிவும் விருப்பமும் இல்லை என்றால், அல்லாஹு தஆலா தீமைகளையும் பாவங்களையும் பலவந்தமாக செய்ய வற்புறுத்தியிருந்தால், கை கால்கள் கட்டப்பட்ட நிலையில் மலையிலிருந்து கீழே தூக்கி எறியப்பட்ட ஒரு மனிதனின் இயக்கத்துக்கும், கீழே நடந்து சுற்றி கொண்டு பார்த்துக் கொண்டிருக்கின்ற மனிதனின் இயக்கத்துக்கும் இடையே எந்த வித்தியாசமும் இருக்காது. உண்மையில், முந்தையது வலுக்கட்டாயமாக கீழே உருள வேண்டிய கட்டாயம், பிந்தியது அவரது சொந்த விருப்பத்துடன் கீழே இறங்குவது. அவர்களுக்கு இடையேயான வித்தியாசத்தை பார்க்க முடியாதவர்கள், ஆயத்துகளை மறுக்கும் குறுகிய நோக்க முடையவர்கள். அல்லாஹு தஆலாவின் ஏவல் மற்றும் விலக்கல் தேவையற்றவை என அவர்கள் கருதுகின்றனர். மு'ஃதஸிலா (கதரியா என்றும் அழைக்கப்படும்) குழுவின் நம்பிக்கை 'மனிதன் தான் விரும்பியதை உருவாக்குகிறான் என்ற அனுமானம் **அல்லாஹ் மட்டுமே எல்லாவற்றையும் படைத்தவன்**" என்ற ஆயத் அல்-கரிமாவை மறுப்பதுடன், படைப்பதில் அல்லாஹு தஆலாவுக்கு மனிதனை ஒரு பங்காளியாக ஆக்குகின்றது.

ஷியாக்களும், முஃதஸிலாக்களை போன்று, மனிதன் அவனுக்கு தேவையானதை உருவாக்குகிறான் என்று கூறுகிறார்கள். அதற்கு ஆதாரமாக கழுதையை, அடித்து செலுத்திய போதிலும் சிற்றோடையை கடக்காது என்று கூறுகிறார்கள். ஒரு

மனிதன் எதையாவது செய்ய விரும்பியும் அல்லாஹுதஆலா அதை செய்ய நாடவில்லை என்றால் அல்லாஹுதஆலா 'வுடைய நாட்டம்தான் நடக்கும் என்று அவர்கள் நினைக்க மாட்டார்கள். அபொழுது, முஃதஸிலாவின் வாதம் தவறானது; அதாவது, ஒரு மனிதன் தான் விரும்பும் அனைத்தையும் உருவாக்கவோ செய்யவோ முடியாது; அவர்கள் கூறுவது போல் மனிதன் நாடியதெல்லாம் நடந்தது என்றால் அல்லாஹுதஆலா திறனற்றவனாக இருக்க வேண்டும். அல்லாஹுதஆலாவின் சக்தி எல்லையற்றது, பலவீனத்திலிருந்து வெகு தூரமானவன். அவன் விரும்பியது மட்டுமே நடக்கும். அவன் ஒருவனே அனைத்தையும் படைக்கிறான். "மனிதன் இதை உருவாக்கினான்," "நாம் அதை உருவாக்கினோம்" அல்லது அவர்கள் அதை உருவாக்கினார்."[1] போன்ற வார்த்தைகளை கூறுவது

---

[1] மேலே விவரிக்கப்பட்டுள்ள படி, மனிதனின் தெரிவான செயல்கள் பௌதீக, இரசாயன, மற்றும் உடலியல் நிகழ்வுகள் பலவற்றின் மூலம் நடக்கின்றன. அவை மனிதனின் விருப்பத்தில் தங்கியில்லாதது மற்றும் அவன் அறியாதது. இந்த நுணுக்கத்தை உணர்ந்த ஒரு நியாயமான விஞ்ஞானி, "நான் செய்தேன்" என்று சொல்ல வெட்கப்படுவார். அவரது விருப்பமான செயல்களை "நான் செய்தேன்" என்று சொல்வது ஒருபுறம் இருக்கட்டும். அவர் அல்லாஹுதாலாவிடம் தனது பணிவை உணர்வார். எனினும், குறுகிய அறிவு மற்றும் அடக்கம் குறைந்தவர் எந்த இடத்திலும் எதையும் சொல்ல வெட்கப்படமாட்டார். அல்லாஹுதஆலா பூமியில் அனைத்து மக்கள் மீதும் கருணை காட்டுகிறான். அவர்களுக்கு தேவையானதை உருவாக்கின் றான். அவர்களுக்கு இந்த உலகத்தில் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கும் மறு உலகில் முடிவில்லாத பேரின்பத்தை அடைவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்களுக்கு தெளிவாக அறிவித்து இருக்கின்றான். தங்கள் சொந்த நஃப்ஸ், கெட்ட நண்பர்கள், தீங்கு விளைவிக்கும் புத்தகங்கள், மற்றும் ஊடகங்களின் மதங்களுக்கு எதிரான கொள்கைகளினால் ஏமாற்றப்பட்டதன் விளைவாக உண்மையான வழியை விட்டுவிட்டு குஃப்ர் (மறுப்பு) வழியைப் பின்பற்றியவர்களில் அல்லாஹு தஆலா தான் நாடியவர்களை நேர்வழியின் பக்கம் இழுக்கிறான். அவன் கொடூரமானவர்களுக்கு மற்றும் வரம்புகளை மீறியவர்களுக்கு இந்த ஆசீர்வாத த்தை வழங்குவதில்லை. அவர்களை, அவர்கள் விரும்பி சேர்ந்திருந்த நிராகரிப்பின் சதுப்பில் குழிக்குள் வீழ்ந்து அதில் நிரந்தரமாக தங்க வைக்கிறான்.

எழுதுவது மிகவும் அருவருப்பானது. இது அல்லாஹுு தஆலா மீது அகௌரவத்தை ஏற்படுத்துகிறது. இது நிராகரிப்பை ஏற்படுத்துகின்றது.

# ஷரஃப் அத்தீன் முனீரி (ரஹிமஹுல்லாஹு தாஆலா) அவர்களின் இரண்டு கடிதங்கள்

## இடைநிலை வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம்

ஷரஃபத்தீன் அஹ்மத் இப்னு யஹ்யா முனீரி (ரஹ்மத்துல்லாஹி அலைஹி மறைவு. 1380/782), இந்தியாவில் கல்விகற்ற சிறந்த இஸ்லாமிய அறிஞர்களில் ஒருவர். அவர்கள் எழுதிய பாரசீக **மக்துபாத்**தின்[1] 18வது கடிதத்தில் எழுதியுள்ளார்:

"பெரும்பாலான மக்கள் சந்தேகங்கள் மற்றும் கற்பனையில் செயல்படுவதன் மூலம் தவறாக போகிறார்கள். இத்தகைய தவறான எண்ணம் கொண்டவர்களில் சிலர்: 'அல்லாஹு தஆலாவுக்கு எங்கள் வணக்க வழிபாடுகள் (இபாதத்) தேவையில்லை. நமது இபாதத்தினால் அவனுக்கு எந்த நன்மையும் இல்லை. மக்கள் அவனை வணங்குவது அல்லது அவனுக்கு கீழ்ப்படியாமல் இருப்பது அவனது மகத்துவத்துக்கு முன் பிரயோசன மற்றது. 'இபாதத் செய்பவர்கள் தங்களை வீணாக சிரமத்திற்கு

---

[1] மக்துபாத்தின் இந்த கடித தொகுப்பில் தொகுப்பில் 100 கடிதங்கள் உள்ளன. அது 1339/741ல் தொகுக்கப்பட்டு 1911/1329ல் இந்தியாவில் அச்சிடப்பட்டது. இதன் கையெழுத்துப்பிரதி இஸ்தான்புலில் உள்ள சுலைமானியே நூலகத்தில் உள்ளது. **இர்ஷாத் அஸ்ஸாலிகீன்** மற்றும் **மதின் அல்-மானி** என்பன ஷரஃப்-அத்தீன் அஹ்மத் இப்னு யாஹ்யா முனிரி (ரஹிமாஹுல்லாஹு தஆலா) அவர்களின் மற்ற இரண்டு மதிப்புமிக்க நூல்கள். யஹ்யா முனிரி இந்தியாவின் பீகாரில் வசித்து வந்தார், அவரது அடக்கஸ்தலம் அங்கு உள்ளது. முனீர் என்பது பீகாரில் உள்ள ஒரு கிராமம். அவரது விரிவான சுயசரிதை ஷா அப்தல்-ஹக் அத் தஹ்லவி' (ரஹிமஹுல்லாஹு தாலா) வினால் எழுதப்பட்டுள்ளது. தஹ்லவியின் பாரசீகப் படைப்பு **அக்பர் அல்-அக்யார்**, இது 1914/1332 இல் இந்தியாவின் தேவுபந்தில் வெளியிடப்பட்டது, பின்னர் பாகிஸ்தானின் லாகூரில் மீள்பதிப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.

உள்ளாக்குகின்றனர் என்று கூறுகின்றனர். இந்த கருத்து தவறானது. இஸ்லாத்தை அறியாதவர்கள் அல்லாஹு தஆலாவுக்கு இபாதத்து பயனுள்ளதாக இருப்பதனால் கட்டளையிட பட்டது என்று கருதுவதால் அவ்வாறு கூறுகிறார்கள். இதுவும் மிகவும் தவறானது. சாத்தியமற்ற ஒன்றை சாத்தியமானது என்று குழப்புவது. ஒருவர் செய்யும் எந்த இபாதாவும் அவருக்கு மட்டுமே பயனுள்ளதாக இருக்கும். அல்லாஹு தாலா சூரத் ஃபாத்திரின் 18 வது வசனத்தில் இது அவ்வாறு தான் என்று தெளிவாக அறிவிக்கிறது.

இந்த தவறான எண்ணத்தை கொண்டிருப்பவன். ஒரு நோயுற்றவனை போன்றவன். மருத்துவர் உணவு குறைப்பை பரிந்துரைக்கிறார், ஆனால் அவன் அதை செய்யாமல் 'நான் உணவை குறைக்கா விட்டால் டாக்டருக்கு தீங்கு விளைவிக்காது.' என்று கூறுவதை போன்றது. அவன் மருத்துவருக்கு தீங்கு விளைவிக்காது என்று சொல்வது சரிதான், ஆனால் அது அவனுக்கு தீங்கு விளைவிக்கும். மருத்துவர் நோயாளிக்கு உணவு கட்டுப் பாட்டை விதித்தது நோயாளியின் நோயை குணப்படுத்த உதவும் என்பதால், மருத்து வருக்கு பயனுள்ளதாகும் என்பதால் அல்ல. அவர் மருத்துவரின் ஆலோசனையை பின்பற்றினால் குணமடைவார் என்பதனால். அவர் அவ்வாறு செய்யாவிட்டால், அவர் இறந்து விடுவார், மேலும் இது மருத்துவருக்கு தீங்கு விளைவிக்காது. வேறு சில தவறாக சிந்திப்பவர்கள் எந்த இபாதத்தையும் செய்வதில்லை, தடுக்கப்பட்ட செயல்களை செய்வதை நிறுத்துவதுமில்லை. அதாவது அவர்கள் இஸ்லாத்திற்கு கட்டுப்படுவதில்லை. அவர்கள். 'அல்லாஹ் கிருபையுடையவன் (**கரீம்**) இரக்கமுள்ளவன் (**ரஹீம்**)' என்று கூறுகிறார்கள். அல்லாஹ் முடிவின்றி மன்னிப்பவன், மனிதர்களிடம் மிகவும் இரக்கம் காட்டுபவன், அவன் யாரையும் தண்டிப்பதில்லை என்று கூறுகிறார்கள். அவர்கள் முதல் வசனத் தில் கூறியது சரிதான். ஆனால் கடைசி அறிக்கை தவறு. இந்த விஷயத்தில், ஷைத்தான் அவர்களை ஏமாற்றி கீழ்ப்படியாமை எனும் தீமைக்கு வழி கெடுக்கிறான். நியாயமாக சிந்திக்கும் ஒரு மனிதன் ஷைத்தானின் வழியில் ஏமாறமாட்டான். அல்லாஹு தாலா கருணையும் இரக்கமும் கொண்டவன் மட்டுமல்ல, ஆனால் மிக கடுமையாக தண்டிக்கின்றவனும் கூட. அல்லாஹு தஆலா பலரை இந்த உலகில் வறுமை மற்றும் பிரச்சினைகளுடன் வாழ வைப்பதை நாம் காண்கின்றோம். அவன்

தயக்கமின்றி பல மனித உயிர்களை வேதனையில் வாழ செய்கின்றான். மிகவும் இரக்கமுள்ளவன், ரஸ்ஸாக் (உணவளிப்பவன்) இருந்தாலும், விவசாய த்தில் ஈடுபட்டு கஷ்டப்படாது விட்டால், அவன் ஒரு சிறு துண்டு ரொட்டி கூட கொடுக்கமாட்டான். எல்லோரையும் வாழவைப்பவன் என்ற போதிலும், உண்ணாமல், குடிக்காமல் ஒருவரை உயிர் வாழ விடமாட்டான், மருந்து சாப்பிடாத ஒரு நோயாளியை குணப்படுத்த மாட்டான். வாழ்வதற்கு, நோயுற்று விடாமல் இருப்பதற்கு, சொத்துக்களை பெற்றுக்கொள்வது போன்ற அனைத்து உலக பேறுக ளுக்கும் அவன் வழிமுறைகளை உருவாக்கியுள்ளான். இந்த உலக அருட்கொடைகளை பெறுவதற்கான அதற்குரிய வழிமுறைகளை பற்றி பிடிக்காதவர்களுக்கு கொடுக்காமல் இருப்பதில் இரக்கம் காட்ட மாட்டான்.

இரண்டு வகையான மருத்துவங்கள் இருக்கின்றன: பௌதீக மருத்துவம் மற்றும் ஆன்மீக மருத்துவம். எல்லா விதமான நோய்களையும் குணப்படுத்துவதற்கு அன்னதானம் கொடுப்பது, பிரார்த்தனை செய்வது என்பன ஆன்மீக மருத்துவம். பின்வரும் ஹதீதுகள்: **“உங்களில் நோய் உள்ளவர்களை அன்னதானம் கொடுப்பதன் மூலம் சுகப் படுத்துங்கள்**. மேலும் **“இஸ்திஃபார் செய்வது கொண்டு** (அஸ்தக்ஃபிருல்லாஹ்’ என்று சொல்வது-யாஅல்லாஹ் என்னை மன்னித்து விடு!) **என்று அடிக்கடி கூறுவது எந்த நோயையும் குணப்படுத்தும் மருந்து**.” பௌதீக மருந்துகள் எண்ணிக்கையில் நிறைய உள்ளன. அவை பரிசோதனைகள் மூலம் கற்றுக்கொள்ள படுகின்றன. ஆண்மீக மருத்துவம் பௌதீக மருத்துவத்தை கண்டுபிடிக்கவும் உதவுகிறது. அதே மாதிரியே மறுஉலகின் நற்பேறுகளை அடைவது. அல்லாஹுதஆலா இதயத்திற்கும் ஆன்மா வுக்கும் விஷமான அவநம்பிக்கை மற்றும் அறியாமை என்பவற்றையும் படைத்தான்: இவை ஆபத்தானவை. சோம்பல் ஆன்மாவை நோய்வாய்ப்பட செய்கிறது; மருந்து பயன் படுத்தப்படாது விட்டால் ஆன்மா நோய்வாய்ப்பட்டு இறக்கின்றது. அவநம்பிக்கைக்கும் அறியாமைக்கும் ஒரே மருந்து அறிவுஞானம் (மரிஃபா). சோம்பலுக்கு மருந்து தொழுகை மற்றும் அனைத்து வகையான இபாதத்துகளையும் செய்வது. ஒரு நபர், ‘அல்லாஹ் இரக்கமுள்ளவன், விசத்தின் தீங்கிலிருந்து என்னை பாதுகாப்பான் என்று கூறி விஷத்தை உட்கொண்டால் அவர் விஷத்தின் தீங்கினால்

நோய்வாய்ப்பட்டு இறந்துவிடுவார். வயிற்றுப்போக்கு உள்ள ஒரு நபர் ஆமணக்கு எண்ணெயைக் குடித்தால், [அல்லது ஒரு நீரிழிவு நோயாளி சர்க்கரை அல்லது சர்க்கரை உணவுகளை] சாப்பிட்டால், அவர் மோசமாகி விடுவார். மனித உடல் மென்மையானது என்பதால், அதற்கு பல்வேறு அடிப்படை தேவைகள் [உணவு, உடை மற்றும் குடியிருப்பு] தேவைப்படுகின்றன. அவற்றை கண்டுபிடித்து தயாரிப்பது மிகவும் கடினம். இஸ்லாத்திற்கு இணங்க அவற்றை பயன்படுத்த வேண்டும். இந்த பணிகளை எழிதாகவும் வசதியாகவும் நிர்வாகிப்பதற்கு மனிதர்களில் **நப்ஸ்** எனப்படும் உந்துசக்தி படைக்கப்பட்டுள்ளது. இந்த சக்தி விலங்குகளிடம் படைக்கப்படவில்லை. நஃப்ஸ் உடலுக்கு தேவையான விடயங்களை விரும்புகிறது. அந்த விடயங்களை அதிகமாக செய்வதில் மகிழ்வு பெறுகிறது. நஃப்ஸின் ஆசைகள் ஷஹ்வா (காமம்) என்று அழைக்கபடுகின்றது. மனக்கட்டுப்பாடு இல்லாமல் இருக்கும் ஒருவரில் அதன் பயன்பாடு தேவைக்கு அதிகமாக இருக்குமாயின் அது இதயத்திற்கும் உடலுக்கும் மற்றவர்களுக்கும் தீங்கு விளைவிகின்றது; அது பாவமாக இருக்கும். [தயவுசெய்து **முடிவில்லா பேரின்பம்** முதலாவது பகுதியின், பதின் மூன்றாவது அத்தியாயத்தின் இறுதி பகுதியை பார்க்கவும்.]

தவறாக சிந்திக்கும் மற்றொரு குழு, அவர்களின் ஷஹ்வா (காமம்), கதப் (கோபம்) மற்றும் இஸ்லாத்தில் வெறுக்கப்பட்ட ஆசைகளிலிருந்து தங்களை விடுவித்து கொள்ளும் நோக்கில் ரியாதா (சுயமறுப்பு)க்கு உள்ளாகி பசியால் அவதிப்படுகிறார்கள். அவர்கள் இஸ்லாம் அவற்றை முற்றாக ஒழிக்க ஆணையிடுகிறது என்று நினைக்கின்றார்கள். அவர்களை பசியால் நீண்ட காலமாக தவித்த பிறகும் அவர்களின் இந்த தீய ஆசைகள் நீங்காமல் இருப்பதை காண்கிறார்கள். இஸ்லாம் சாத்தியமற்ற ஒன்றை கட்டளை யிடுகிறது என்று முடிவு செய்கிறார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: ‘இஸ்லாத்தின் இந்த கட்டளையை செய்ய முடியாது. மனிதன் அவனது இயல்பில் இருக்கும் பழக்க வழக்கங் களிலிருந்து விடுபட முடியாது. அவை ஒரு நபரின் நிறத்தை மாற்ற முயற்சிப்பது போன்றது. முடியாத ஒன்றை முயற்சி செய்வது ஒருவருடைய வாழ்க்கையை வீணாக்கு வதாகும் என்று அவர்கள் தவறான சிந்தனையில் செயல்படுகிறார்கள். உண்மையில், இஸ்லாம் அவ்வாறு கட்டளையிடுகிறது

என்ற அவர்களின் கூற்று சுத்தமான அறியாமை மற்றும் முட்டாள்தனம். ஏனெனில் இஸ்லாம் கோபம் மற்றும் காமம் போன்ற மனித அம்சங்கள் அகற்றும்படி கட்டளையிடவில்லை. அத்தகைய கூற்று ஒரு அவதூறு இஸ்லாத்திற்கு எதிரானது. இஸ்லாம் அவ்வாறு கட்டளையிட்டிருந்தால், இஸ்லாத்தின் எஜமானர் முஹம்மது(அலைஹி சலாமுக்கு இந்த அம்சங்கள் இருந்திருக்காது. உண்மையில் அவர் கூறினார்: '**நான் ஒரு மனிதன். எல்லோரையும் போல எனக்கும் கூட கோபம் வரும்.**" அவ்வப்போது கோபப்படுவார். அவரது கோபம் எப்போதும் அல்லாஹு தஆலாவுக்காக இருந்தது.

அல்லாஹுத்தஆலா **குர்ஆன்அல்-கரீமி**ன் சூரா ஆல இம்ரான் 134 வது வசனத்தில் '**அவர்கள் தங்கள் கோபத்தை வெல்லக்கூடியவர்கள்**' என்று போற்றுகிறான். கோபம் அடையாதவர்களை அவன் புகழவில்லை. காமத்தை அகற்றுவதை ஆதரிக்கின்ற தவறாக சிந்திப்பவரின் கூற்று முற்றிலும் ஆதாரமற்றது. உண்மையில், ரசூலுல்லாஹ் (ஸல் லல்லாஹு அலைஹி வசல்லம்) அவர்கள் ஒன்பது பெண்களை (ரழி-அல்லாஹு தஆலா அன்ஹுன்னா) மணந்தார்கள் என்பது அந்த நபரின் அறிக்கை தவறானது என்பதை தெளிவாக காட்டுகிறது. ஒருவன் தன் இச்சையை இழந்தால், மருந்து உட்கொள்வதன் மூலம் அவன் மீண்டும் பெற வேண்டும். கோபமும் அவ்வாறு தான்; ஒரு மனிதன் அவனது மனைவி மற்றும் குழந்தைகளை கோபத்தின் அம்சத்துடன் பாதுகாக்கமுடியும். இந்த அம்சத்தின் உதவியுடன் இஸ்லாத்தின் எதிரிகளுக்கு எதிராக அவர் சண்டையிடுகிறார் (ஜிஹாத்). இச்சை இருப்பதன் காரணமாக, அவரது மரணத்துக்கு பிறகு அவருக்கு குழந்தைகள் இருப்பதாக மரியாதை மற்றும் புகழுடன் பேசப்பட வேண்டும் என்றும் ஆசைப்படுவது. இவை இஸ்லாத்தால் விரும்பப்பட்ட மற்றும் போற்றப்படும் விஷயங்கள். இஸ்லாம் காமம் கோபம் இரண்டையும் அழிக்காமல் கட்டுப்படுத்தி, அவற்றை இஸ்லாத்துக்கு இணங்க பயன்படுத்த வேண்டும் என்று கட்டளையிடுகிறது. இது ஒரு குதிரைவீரன் அல்லது ஒரு வேட்டைக்காரன் அவனுடைய குதிரை அல்லது நாயை விட்டு விடக்கூடாது ஆனால் அதை பயன்படுத்தும் விதத்தில் அதை அடக்க வேண்டும் என்பதை ஒத்ததாகும். வேறு வார்த்தையில் கூறுவதானால், காமம் மற்றும் கோபம் ஆகியவை வேட்டைக்காரனின் நாய் மற்றும் ஒரு குதிரை வீரனின் குதிரை போன்றது.

இவை இரண்டும் இல்லாமல் அடுத்த உலக பாக்கியங்களை அடைய முடியாது. ஆனால் அவற்றை இஸ்லாத்திற்கு ஏற்றவாறு பயன்படுத்துவதற்கு அவற்றுக்கு பயிற்சி தேவைப்படுகிறது. அவர்கள் பயிற்சி பெறுவதற்கு பதிலாக, மிகையாகி, இஸ்லாத்தின் வரம்புகளை மீறுவார்கள் எனின், அவற்றை அழிவுக்கு வழிகாட்டுகிறார்கள். சுயகட்டுப்பாடு என்பது இந்த இரண்டு அம்சங்களிலிருந்தும் விடுபடாமல் பயிற்சி அளித்து அவற்றை இஸ்லாத் துக்கு கீழ்ப்படிய வைப்பது. இது அனைவருக்கும் சாத்தியமானது. அணுசக்தியை பயன்படுத்துவது அல்லது ஜெட் விமானங்கள் போன்ற வற்றைக் கண்டுபிடிப்பது நாகரீகம் அல்ல; அவற்றை பயன் படுத்தி மனித குலத்திற்கு சேவை செய்வதே நாகரீகம். மேலும், இது இஸ்லாத்தை பின்பற்றுவதன் மூலம் அடையக்கூடியது.

தவறாக சிந்திப்பவர்களில் நான்காவது குழு, “நித்தியகாலத்தில் எல்லாம் முன்னரே தீர்மானிக்க பட்டது” என்று கூறி அவர்களே ஏமாறுகிறார்கள். ஒரு குழந்தை பிறப்பதற்கு முன்பே, அது சயீத் (பக்தியுள்ளவர், சொர்க்கத்திற்கு தகுதியானவர்), அல்லது ஷகீ (பாவி , தீயவர், நரகத்திற்கு தகுதியானவர்) என்று தீர்மானிக்கப்படுகிறது. இது பின்னர் மாறாது. எனவே, வணங்குவது பயனற்றது என்று கூறுகிறார்கள்.’

ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்) களா மற்றும் கத்ர் மாறாது, எல்லாமே நித்தியத்தில் முன்னரே தீர்மானிக்கப்பட்டது என்று கூறியபோது; ஸஹாபா அல்-கிராம் மேற்கூறியவாறே. நாங்கள் ‘நித்தியமான முன்னறிவிப்பில் நம்பிக்கை வைத்து இபாதத்துகளை செய்யாமல் இருப்போம் என்று கூறினார்கள். ஆனால் ரசூலுல் அல்லாஹ் (ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்) பதிலளித்தார்: **“வழிபாடுகளை செய்யுங்கள்! ஒவ்வொருவருக்கும் அவருக்காக நித்தியத்தில்! விதிக்கப்பட்டதை செய்வது எளிதாக இருக்கும்”.** நித்தியத்தில் பக்தியுடையவர் என்று தீர்மானிக்கபட்ட ஒருவர் பக்திமான்கள் செய்வதையே செய்வார். இதற்கு உதாரணம்; நித்தியத்தில் பக்திமான்கள் என்று தீர்மானிக்க பட்டவர்களின் வழிபாடுகள் மற்றும் செயல்திறன் களும், அல்லாஹு தாலாவுக்கு கீழ்படியாத தீயவர்கள் என்று நித்தியத்தில் தீர்மானிக் கப்பட்டவர்களின் நடத்தைகளும். உணவையும் மருந்தையும் உட்கொண்டு ஆரோக்கிய மாக

வாழ்வார்கள் என முன்னரே தீர்மானிக்கப்பட்டவர்கள் மற்றும், நோய்வாய் படுவதற்கு முன்னரே உணவையும் மருந்தையும் சாப்பிடாமல் நோயுற்று இறக்கும் விதியை கொண்ட மக்களையும் போன்றவர்கள். பசியால் மற்றும் நோயினால் இறப்பார்கள் என்ற விதியை கொண்ட மக்கள் உணவு மற்றும் மருந்தின் பயனை பெற்று கொள்ளாதவர்கள். முன்கூட்டியே பணக்காரர் ஆகுவார் என்று நிர்ணயிக்கப்பட்ட ஒரு நபருக்கு சம்பாதிக்கும் வழிகள் திறக்கப்படுகின்றன. கிழக்கில் இறப்பார் என்று விதிக்கப்பட்ட ஒரு நபருக்கு மேற்கு நோக்கி செல்லும் வழிகள் மூடப்பட்டுள்ளன.

இஸ்றாயில் (அலைஹி-ஸலாம்) அல்லாஹ்வின் தூதர் சுலைமான் (அலைஹி-ஸலாம்) அவர்களை சந்திக்க வந்த ஒரு சம்பவம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இஸ்றாயில் (அலைஹி-ஸலாம்) அங்கு அமர்ந்திருந்த மக்களில் ஒருவரை உன்னிப்பாக பார்த்தார். மலக்கின் கடுமையான தோற்றத்தை கண்டு அந்த மனிதன் பயந்தார். இஸ்றாயில் (அலைஹி-ஸலாம்) அவர்கள் மறைந்ததும், அவர் இஸ்றாயீலிடமிருந்து தப்புவதற்கு தன்னை ஒரு மேற்கு நாட்டிற்கு அழைத்து செல்வதற்கு காற்றுக்கு கட்டளையிடுமாறு சுலைமான் (அலைஹி சலாமிடம்) வேண்டினார். இஸ்றாயில் (அலைஹி சலாம்) திரும்பி வந்தபோது, சுலைமான் (அலைஹி-ஸலாம்) அவர் அந்த மனிதனின் முகத்தை உன்னிப்பாக பார்த்தது ஏன் என்று கேட்டார். இஸ்றாயில் (அலைஹி-ஸலாம்)கூறினார், ஒரு மணி நேரத்தில் ஒரு மேற்கு நகரத்தில் அவருடைய ஆன்மாவைப் பறிக்கும்படி நான் கட்டளையிடப்பட்டேன். ஆனால் நான் அவரை உங்களின் சபையில் பார்த்த போது என்னால் அவரை ஆச்சரியத்துடன் பார்க்காமல் இருக்க முடியவில்லை. பின்னர் கட்டளையை நிறை வேற்றுவதற்கு மேற்கு நோக்கி சென்று அங்கு அவரைப் பார்த்தேன், அவனுடைய உயிரை பறித்துக் கொண்டேன்'[1] என்று கூறினார். இந்த சம்பவத்தில் காணப்படு கின்ற படி, நித்திய முன்னறிவிப்பு ஒரு கட்டளை இல்லை, ஆனால் அறிவு. நித்திய முன்னறிவிப்பு நிகழ்வதற்காக, அந்த மனிதன் இஸ்றாயில் (அலைஹி-ஸலாமை) பயந்தார், சுலைமான் (அலைஹிசலாம்) அவருடைய விருப்பத்தை நிறைவேற்றினார்; நித்திய முன்னறிவிப்பு

---

[1] இந்த சரித்திரம் மஸ்னவியில் ஜலாலுத்தீன் ரூமி என்பவரால் விரிவாகக் கூறப்படுகிறது. 1273/672 இல் கொன்யாவில் காலமானார்

என்பது ஒரு தொடரான வழிமுறையின் மூலம் நிறைவேற்ற ப்பட்டது. அதேபோல், நித்தியத்தில் பக்தியுடயவர் என்று நிச்சயிக்கப்பட்டவர் ரியாதாவை மேற்கொண்டு அவரது கெட்ட பழக்கங்களிலிருந்து விடுபட்டு ஈமானை நிரம்ப பெற்ற வராகுவார். சூராஅல்-அன்ஆம் 125வது வசனம் கூறுகிறது: '**அல்லாஹு தாலா தான் விரும்பும் மனித சிருஷ்டியின் இதயத்தில் இஸ்லாத்தை வைத்து நேர்வழிக்கு வழிகாட்டுகிறான்**'. நித்தியத்தில் தீயவராக மாறி நரகம் செல்வார் என்று முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட ஒருவர் வழிபாடுகளை செய்ய வேண்டிய அவசியமில்லை என்ற சிந்தனையை பெறுவார். ஒரு நபர் பக்தியுடயவரா அல்லது தீயவரா என்பது நித்தியத்தில் முன்னரே தீர்மானிக்கப்பட்டது என்ற இந்த எண்ணத்தால் ஒருவர் வழிபாடுகளை செய்யாமல் இருப்பது அவர் நித்தியத்தில் தீயவர் என்று தீர்மானிக்கப்பட்டது என்பதை காட்டுகிறது.

அதேபோல், ஒரு நபரின் அறியாமை நித்தியத்தில் முன்னரே தீர்மானிக்க பட்டிருந்தால் அவருடைய சிந்தனை 'எல்லாம் அறியாமை நித்தியத்தில் முன்னரே தீர்மானிக்க பட்டுள்ளது என்பதுதான். அவருக்கு கற்றல் அல்லது அறிதலால் எந்த பயனும் இல்லை. இதனால் அவர் எதையும் படிப்பதில்லை, கற்பதில்லை. அவர் அறியாதவனாகவே இருந்து விடுகிறார். ஒருநபர் விவசாயம் செய்து ஏராளமாக அறுவடை செய்வார் என்று முன்னரே தீர்மானிக்க பட்டிருந்தால், அவர் தனது வயலை உழுவதற்கும் விதை விதைப்பதற்கும் நிறைய கொடுக்கப்படுகிறது. இதேபோன்று நித்தியத்தில், பக்திமான் களாக நிச்சயிக்க பட்டவர்கள் நம்பிக்கை கொண்டு நல்லமல் செய்வார்கள். கீழ்ப்படியா தவர்கள் தீயவர் என்று நிச்சயிக்க பட்டவர்கள் மறுப்பார்கள், கீழ்ப்படிய மாட்டார்கள். புரிந்து கொள்ள முடியாத சிலர் இதை விளங்காமல்; நித்தியத்தில் பக்தியுள்ளவர் என்று நிச்சயிக்க பட்டவர்களுக்கு நம்பிக்கையும் வழிபாடுகளும் எதற்கு. மேலும் நித்தியத்தில் தீயவர் என்று நிச்சயிக்கப்பட்டவர்களுக்கு அவநம்பிக்கை மற்றும் கீழ்ப் படியாமைக்கும் என்ன சம்பந்தம்?' என்று கூறுகிறார்கள். அவர்களின் குறுகிய பார்வையுடன், அவர்கள் இந்த தொடர்பை புரிந்து கொள்ளவும், அவர்களின் சொந்த அறிவைக்கொண்டு அனைத்தையும் தீர்க்கவும் முயற்சி செய்கிறார்கள். ஆனால் மனித பகுத்தறிவு வரம்புக்குட்பட்டது. பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட விடயங்களை புரிந்து கொள்ள முயற்சிப்பது முட்டாள்தனம். அவ்வாறு

சிந்திப்ப வர்களை முட்டாள்கள் என்று தீர்மானிக்க வேண்டும். ஈஸா (அலைஹிசலாம்) அவர்கள் கூறினார்கள்: 'பார்வையற்ற வர்களாக பிறந்தவர்களை பார்க்க வைப்பதோ அல்லது இறந்தவர்களை உயிர்ப்பிக் கவோ எனக்கு கடினமாக இருக்கவில்லை, ஆனால் ஒரு மடையனுக்கு உண்மையை என்னால் விளக்க கூட முடியவில்லை. அல்லாஹு தாலா, எல்லையற்ற அறிவு மற்றும் மறைக்கப்பட்ட ஞானம் (ஹிக்மா)வை கொண்டு சில மனிதர்களை வானவர்களின் தரத்திற்கும் மற்றும் அதற்கு உயர்ந்த தரத்திற்கும் உயர்த்துகிறான். இன்னும் சிலரை நாய்களின் அல்லது பன்றிகளின் தரத்துக்கும் தாழ்த்தப்படுகின்றனர்."

ஹஸ்ரத் ஷரஃபுத்தீன் அஹ்மத் இப்னு யஹ்யா முனீறி தனது நூலின் 76 வது கடிதத்தில் குறிப்பிடுகிறார்: '**சாதா**' என்றால், சொர்க்கத்திற்கு தகுதியான தரத்தை மற்றும் முடிவற்ற மகிழ்ச்சியை உண்டாக்கும் பக்தியை குறிக்கும். '**ஷக்கவா**' என்றால் நரகத்திற்கு தகுதி யான 'பாவிகளின் நிலையை குறிக்கும். சாதா மற்றும் ஷக்கவா அல்லாஹு தஆலாவின் இரண்டு கருவூலங்களை போன்றவை. முதல் கருவூலத்தின் திறவுகோல் புனிதமான செயல் (தாத்,இபாதா). இரண்டாவது கருவூலத்தின் திறவுகோல் 'பாவம்'. அல்லாஹு தஆலா நித்தியத்தில் ஒரு நபர் ஸ'யித் (சாதா, பக்திமான்) அல்லது ஷகி (ஷகவா, தீமை) என்பதை அறிந்திருந்தான். அல்லாஹு தாலாவின் இந்த அறிவு '**கதர்**(விதி); நித்தியத்தில் பயபக்தி யுடையவராக அறியப்பட்ட ஒருவர் அல்லாஹு தாலாவுக்கு கீழ்ப்படிகிறார். நித்தியத்தில் தீயவராக அறியப்பட்ட ஒரு நபர் எப்பொழுதும் பாவங்களை செய்வார். இந்த உலகில் அனைவரும் தங்களின் சொந்த செயல்களை வைத்து பக்தியுள்ளவர் அல்லது தீயவர் என்பதை புரிந்து கொள்ள முடியும். இந்த வழியில் மார்க்க அறிஞர்கள் எப்போதும் மறுஉலகத்தை மனதில் கொண்டவர்கள், ஒரு நபர் பக்தி உள்ளவரா அல்லது தீயவரா என்பதை புரிந்து கொள்கிறார்கள். ஆனால், இவ்வுலகின் வசதிகளினால் ஈர்க்கப்பட்ட மார்க்க பதவிகளை வகிப்பவர்களுக்கு அது தெரியாது. ஒவ்வொரு கௌரவமும் நற்பேறும் அல்லாஹு தஆலாவுக்கு கீழ்ப்படிவதிலிருந்து, **இக்லாஸு**டன் வணங்குவது மூலம் கிடைக்கின்றது. ஒவ்வொரு தீங்கும் பிரச்சினையும் பாவமான செயல்களிலிருந்து உருவாகின்றன. கஷ்டங்களும் துன்பங்களும் பாவம் செய்வதினால் வருகிறது.

ஆறுதலும் வசதிகளும் எளிமையுடன் கீழ்ப்படிவதன் மூலம் வருகின்றன[1]. தன் வாழ்நாளை ஜெருசலமில் உள்ள அக்ஸா மசூதியில் தொழுகை மற்றும் இபாதத்து செய்வதில் கழித்த ஒரு மனிதன் இருந்தார்; அவர் வணக்கம் மற்றும் இக்லாஸ் ஆகிய வற்றுக்குரிய நிபந்தனைகளை கற்கவில்லை ஆதலால் அவர் ஒரு சஜ்தாவை புறக்கணித்தார், அதன் காரணமாக அவர் முற்றிலுமாக அழிக்கப்படும் அளவுக்கு இழந்தார். இருப்பினும், அஸ்ஹாப் அல்-கஹ்ஃபுடைய நாய் 'சித்தீக்குகளுக்கு (நல்லவர்கள், உண்மை பேசுபவர்கள்) பின்னால் சில அடிகள் நடந்தது. அழுக்காக இருந்தாலும், அது ஒருபோதும் சீரழிக்கப்படாத அளவு மேன்மைக்கு உயர்த்தப்பட்டது, பின்னர் தாழ்ந்த நிலைக்கு ஒருபோதும் ஆளாக வில்லை. இந்த நிலை மனிதர்களுக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது; அறிஞர்களால் பல நூற்றாண்டுகளாக இந்த புதிரை தீர்க்க முடியவில்லை. மனித பகுத்தறிவு அதில் மறைந்திருக்கும் தெய்வீக ஞானத்தை புரிந்துகொள்ள முடியாது. அல்லாஹுதஆலா ஆதம் (அலைஹிசலாமு)க்கு கோதுமையை உண்ண வேண்டாம் என்று கூறினான், ஆனால் அவரை உண்ணட்டும் என்று விட்டுவிட்டான். ஏனெனில் அவர் அதை உண்பார் என்று நித்தியத்தில் அறிந்திருந்தான்; அல்லாஹு தாலா ஆதம் (அலைஹி சலாம்) அவர்களுக்கு ஸஜ்தா செய்யும்படி ஷைத்தானுக்கு கட்டளையிட்டான், ஆனால், அவன் அவரை ஸஜ்தா செய்ய வேண்டாம் என்று நாடினான்; அல்லாஹு தஆலா, நாம் அவனை அறிய வேண்டும் என்றான். ஆனால் இக்லாஸ் இல்லாதவர்கள் அவனை அறிவதற்கு அவன் நாடவில்லை.

[இந்த விடயங்களை] ஆன்மீக வழியில் பயணிப்பவர்கள் அவர்களால் எதையும் புரிந்து கொள்ள முடியவில்லை என்று சொல்வதை தவிர வேறு எதையும் சொல்ல முடியவில்லை. பிறகு, நாம் எப்படி எதையும் சொல்ல முடியும்?

---

[1] இது அல்லாஹு தாலாவின் தெய்வீக வழக்கம். இதை யாராலும் மாற்ற முடியாது. நாங்கள் நமது நஃப்ஸுக்கு எளிதாகவும் இனிமையாகவும் இருக்கும் ஒன்றை சாதா (நித்திய மகிழ்ச்சியை உண்டாக்கும் பக்தி) என்று கருதக்கூடாது. . நாம் நஃப்ஸுக்கு கடினமான மற்றும் கசப்பான விஷயங்கள் ஷகாவா (பாவம், தகுதியான நரகத்தின் நிலை) அல்லது அழிவு என்றும் நினைக்கக்கூடாது

அல்லாஹு தாலாவுக்கு நம்பிக்கை மற்றும் மனிதர்களின் வணக்க வழிபாடு தேவை யில்லை, அல்லது நம்பிக்கையின்மை அல்லது பாவம் செய்வது அவனுக்கு தீங்கு விளைவிக்காது. அல்லாஹுதாலாவுக்கு படைப்பினங்கள் ஒருபோதும் தேவையில்லை. அவன் அறிவை அவநம்பிக்கையை அகற்றுவதற்கும், அறியாமையை பாவம் செய்வதற் கான ஒரு வழியாகவும் ஆக்கினான். நம்பிக்கையும் வணக்கமும் அறிவிலிருந்து உருவா கின்றது; அவநம்பிக்கையும் பாவமும் அறியாமையிலிருந்து உருவாகின்றன. நற்செயல் (தாத்) சிறியதாக இருந்தாலும் தவிர்க்க கூடாது! பாவம் மிகவும் மோசமானது சிறிதாக தோன்றினாலும் தவிர்க்கப்பட வேண்டும்!.

இஸ்லாமிய அறிஞர்கள் கூறியுள்ளனார்கள்; மூன்று விடயங்கள் மற்ற மூன்று விடயங்களை ஏற்படுத்தும்: நற்செயல்கள் அல்லாஹு தஆலாவின் ரிளா(பொருத்தம்) ஏற்படுவதற்கு காரணமாகும்; பாவம் அவனுடைய கோபத்தை(கதப்) உண்டாக்கும்; ஈமான் மரியாதை மற்றும் கண்ணியத்தை அடைவதற்கு காரணமாகிறது. இதன் காரணத்தினால், நாம் ஒரு சிறிய பாவத்தைகூட செய்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்; அந்த பாவத்தில் அல்லாஹுதஆலாவின் கோபம் இருக்கலாம். நாம் அஹ்லுஸ்ஸுன்னா நம்பிக்கையுள்ள ஒவ்வொருவரும் நம்மை விட உயர்ந்தவராக இருக்கலாம் என்று கருத வேண்டும். அவர் அல்லாஹுத்தஆலா மிகவும் நேசிக்கும் மனிதனாக இருக்கலாம். நித்தியத்தில் தீர்மானிக்கப்பட்ட ஒருவரின் விதியையும் ஒருபோதும் மாற்ற முடியாது. அல்லாஹு தஆலா நாடினால், அவன் எப்பொழுதும் பாவம் செய்யும், எந்த ஒரு நற்செயலையும் செய்யாத ஒரு முஸ்லிமை மன்னிப்பான். சூராஅல்-பகராவின் 30வது வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது; வானவர்கள், '**ஓ அல்லாஹ்! நீ உலகமெங்கும் குழப்பத்தை ஏற்படுத்தி இரத்தம் சிந்தும் உயிரினங்களையா படைக்கப்போகிறாய்?** என்று கேட்டபோது அல்லாஹு தஆலா அவர்கள் குழப்பம் செய்ய மாட்டார்கள் என்று கூறவில்லை. ஆனால் '**உங்களுக்குத் தெரியாததை நான் அறிவேன்**' என்று கூறினான். அதன் அர்த்தம்: 'நான் தகுதியற்றதை தகுதியுடையதாக ஆக்குவேன், தொலைவில் இருப்பவர்களை அருகில் வர செய்வேன், தாழ்த்தப்பட்டவர்களை நான் மரியாதைக்கு உரியவர்களாக ஆக்குவேன். நீங்கள் அவர்களை

அவர்களின் நடத்தையை கொண்டு மதிப்பிடுங்கள், ஆனால் நான் அவர்களின் இதயங்களில் உள்ள நம்பிக்கையை பார்க்கிறேன். நீங்கள் பாவம் இல்லாமல் இருப்பவர்களை உங்கள் கணக்கில் எடுங்கள்; அவர்கள் எனது கருணையை நம்புகிறார்கள். உங்கள் அப்பாவித் தனத்தை நான் விரும்புவதால், முஸ்லிம்களின் பாவங்களை மன்னிக்க விரும்புகிறேன். எனக்கு தெரிந் ததை உங்களால் அறிய முடியாது. நான் நம்பிக்கையாளர்களை எனது எல்லையற்ற நற்பேறுகளையும் எனது அன்பையும் நித்திய கருணை மூலம் அடைய செய்கிறேன்.

அல்-இமாம் அர்-ரப்பானி (ரஹ்மத்துல்லாஹி அலைஹி) பல்வேறு கடிதங்களில் எழுதி யுள்ளார்கள்: "அல்லாஹு தஆலா ஏவியவை **ஃபர்ளு** என்றும், விலக்கியவை **ஹராம்** என்றும் அழைக்க படுகின்றன. அனுமதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டவை **முபாஹ்** [செயல்கள், சொற்கள், நடத்தைகள்] அவை ஃபர்ளு அல்லது ஹராம் அல்ல. ஃபர்ளுகளை செய்வது, ஹராமானவற்றை தவிர்ப்பது, மற்றும் அல்லாஹு தஆலாவின் பொருத்தத்தை பெறுவதற்கு **முபாஹ்**'வான விடயங்களை செய்வது **இபாதா** என்று அழைக்கப்படுகிறது. ஒரு வணக்கம் இபாதா சஹீஹ் (செல்லுபடியானது) ஆக இருப்பதற்கு, மக்பூல் (அல்லாஹு தலாவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது, மிகவும் விரும்பப்பட்டது) ஆக இருப்பதற்கும் 1-**இல்மை** கற்றுக்கொள்வது அவசியம், 2-**அமலி**ன் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். 3-**இக்லாஸ்**' உடன் அதை நிறைவேற்ற வேண்டும்.

"ஒரு முஸ்லீம், ஃபர்ளு மற்றும் ஹராமை நம்பினாலும், சோம்பேறித்தனம் அல்லது தீய நண்பர்களின் பாதிப்பு காரணமாக இபாதத்துகளை நிறைவேற்றாமலும், அதற்காக வருந்தி மன்னிப்பு கேட்காமல் மரணித்தால், அவர் செய்த பாவங்களுக்கான தண்டனை முடியும் வரை அவன் நரகத்தில் நெருப்பினால் தண்டிக்கப்படுவார். ஃபர்ளு என்றால் என்ன என்பதை கற்றுக்கொள்ள தவறிய ஒரு நபர் அல்லது அவர் அதை அறிந்து இருந்தும் அதற்கு முக்கியத்துவமும் கொடுக்காமல், அவற்றை நிறைவேற்றாமல், அதற்கு மனம் வருந்தாமலும் அல்லாஹ்வுக்கு பயப்படாமலும் இருந்தால் அவர் இஸ்லாத்தை விட்டும் வெளியேறி காபிராக மாறுவார். அவர் என்றென்றும் நரக நெருப்புக்கு ஆளாகுவார். இது ஹராத்தை செய்பவர்களுக்கும் பொருந்தும். "ஒரு நபர் வணக்கங்களின் அவசியமான விதிகள்,

நிபந்தைகளை பற்றி அறியாமல் செய்யப்படும் அவருடைய வணக்கம் இக்லாசுடன் நிறைவேற்றினாலும் சஹீஹாக இருக்காது. அவ்வணக்கங்களை அவர் முற்றிலும் செய்யாதவர் போல் நரக நெருப்புக்கு ஆளாகுவார். அவசியமான, நிபந்தைகளை அறிந்து அவற்றை கவனத்தில் கொண்டு இக்லாசுடன் நிறைவேற்றப்படும் வணக்கம் சஹீஹனது. அது அவர்களுக்கு நரக வேதனையை ஏற்படுத்தாது. இருப்பினும், அவர்கள் அதை இக்லாஸுடன் செய்யவில்லை என்றால், அவருடைய வணக்கமும் வேறு எந்த தர்மங்களும் மக்பூல் ஆகாது. அவர்கள் அதற்காக தவாப் எதையும் சம்பாதிக்க மாட்டார்கள். இப்படிப்பட்ட வணக்கங்களுக்கும் ஏனைய தர்மங்கள் மற்றும் நற்செயல் களுக்கும் அல்லாஹு தஆலா தனது வெறுப்பையே வெளிப்படுத்துகிறான். **இல்ம்** மற்றும் **இக்லாஸ்** இல்லாமல் செய்யப்படும் வணக்கங்கள் பயனற்றது. அவநம்பிக்கை, பாவம், மற்றும் தண்டனைகளிலிருந்து அது பாதுகாக்காது. வாழ்நாள் முழுவதும் இது போன்ற வணக்கங்களை செய்த அநேக நயவஞ்சகர்கள் ஈமான் அற்றவர்களாக மரணிப்பதை கண்டுள்ளனர். இல்ம் மற்றும் இக்லாஸ் உடன் செய்யப்படும் வணக்கம் (இபாதத்) ஒருவரை நிராகரிப்பில் இருந்தும் பாவத்தில் இருந்தும் பாதுகாப்பதுடன் அவர் இவ்வுலகில் அஸீஸ் (மிகவும் மதிக்கத்தக்கவராக) ஆக்குகின்றது. அவர்களின் மறுமை வாழ்க்கையை பொறுத்தவரை அல்லாஹு தஆலா சூரா அல்-மாயிதா'வின் 9 வது வசனத்தில் மற்றும் சூரா அல்-அஸ்ரில் வாக்களிக்கின்றான்: 'அவர்கள் நரகத்தில் தண்டனையிலிருந்து காப்பாற்றப்பட்டு இருப்பார்கள்'. அல்லாஹு தஆலா அவனது வாக்குறுதிகளில் உண்மையாக இருக்கிறான். அவன் நிச்சயமாக தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவான்.]

# நித்தியமாக இருப்பவன் அல்லாஹுதஆலா, அவன் ஒருவன்.

## அனைத்து படைப்புகளும் இருக்கவில்லை, அவை இல்லாதவை ஆகிவிடும்.

நமது புலன் உறுப்புகள் மூலம் நம்மை சுற்றியுள்ள விடயங்களை நாம் அறிந்து கொள் கிறோம். புலன் உறுப்புகளில் தாக்கம் செலுத்தும் விடயம் **படைப்புகள்** (படைத்தவை, இருப்பவை). நமது ஐந்து புலன்களின் மீது தாக்கம் செலுத்துபவை பண்பு அல்லது குணம் என்று அழைக்கப்படுகின்றன. அவை ஒன்றிலிருந்து மற்றொன்று வேறுபடுகின்றன. ஒளி, ஒலி, நீர், காற்று மற்றும் கண்ணாடி அனைத்தும் இருக்கும் படைப்புகள். அவற்றில் பருமன், எடை மற்றும் கனவளவு கொண்டவை; வேறுவிதமாக கூறுவதானால் ஒரு வெளியில் இடத்தை பிடித்துக்கொள்பவை சடப்பொருள் அல்லது பொருள் என்று அழைக்கப்படுகிறது. மூலப் பொருட்கள் அவற்றின் பண்புகள் அல்லது குணாதிசயங்களால் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. காற்று, நீர், கல், கண்ணாடி ஒவ்வொன்றும் சடப் பொருட்கள். ஒளி மற்றும் ஒலி பொருட்கள் அல்ல, ஏனெனில் அவை இடத்தை ஆக்கிர மிக்க வில்லை அல்லது எடை இல்லை. ஒவ்வொரு படைப்பும் ஆற்றல் அல்லது சக்தியை கொண்டுள்ளது; அதாவது, அவை வேலை செய்யமுடியும். ஒவ்வொரு மூலப்பொருளும் மூன்று நிலைகளில் இருக்கலாம்: திண்மம், திரவம் மற்றும் வாயு. திண்ம பொருட்களுக்கு வடிவங்கள் உள்ளன. திரவம் மற்றும் வாயு அவை இருக்கும் கொள்கலனின் வடிவத்தை எடுத்துக்கொள் கின்றன. அவற்றுக்கு குறிப்பிட்ட வடிவம் இல்லை. வடிவம் கொண்ட சடப்பொருள் பொருள் என்று அழைக்கப்படுகின்றது. பெரும்பாலான பொருட்கள். உதாரணமாக, சாவி, முள், இடுக்கி, மண்வெட்டி மற்றும் ஆணி வெவ்வேறு வடிவங்களை கொண்ட வெவ்வேறு பொருட்கள். ஆனால் அவை அனைத்தும் ஒரே மூலப் பொருளினால் அதாவது; இரும்பினால் ஆனது. இரண்டு வகையான மூலப் பொருட்கள் உள்ளன: மூலகங்கள் மற்றும் சேர்வைகள்.

ஒவ்வொரு பொருளிலும் எப்போதும் மாற்றங்கள் நிகழுகின்றன. உதாரணமாக, அசையக்கூடியது, அதன் இடத்தை மாற்றலாம், அல்லது பெரியதாகவோ அல்லது சிறியதாகவோ மாறலாம், அதன் நிறம் மாறலாம். அது ஒரு உயிராக இருந்தால் நோய் வாய்ப்படலாம் அல்லது இறக்கலாம். இந்த மாற்றங்கள் **நிகழ்வுகள்** என்று அழைக் கப்படுகின்றன. ஒரு வெளிப்புற தாக்கங்கள் இல்லாமல் பொருளில் எந்த மாற்றமும் ஏற்படாது. பொருளின் சாராம்சத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாத ஒரு நிகழ்வு **பௌதீக நிகழ்வு** என்று அழைக்கப்படுகிறது. ஒரு துண்டு காகிதத்தை கிழிப்பது ஒரு பௌதீக நிகழ்வு. ஒரு பொருளில் ஒரு பௌதீக நிகழ்வு நடப்பதற்கு சில சக்திகளின் தாக்கம் இருக்க வேண்டும். பொருட்களின் கலவை அல்லது சாரத்தை மாற்றும் நிகழ்வுகள் இரசாயன நிகழ்வுகள் என்று அழைக்கப்படுகிறது. ஒரு காகிதம் எரிந்து சாம்பலாக மாறும்போது, ஒரு இரசாயன நிகழ்வு நடைபெறுகிறது. ஒரு பொருள் மற்றொரு பொருளின் தாக்கத்தினால் பாதிக்கப்படும்போது ஒரு இரசாயன நிகழ்வு நடக்கலாம். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மூலப்பொருட்களுடன் தொடர்பு கொள்ளும் போது மூலப்பொருட்கள் ஒவ்வொன்றிலும் ஏற்படும் மாற்றம் **இரசாயன தாக்கம்** 'chemical reaction' என்று அழைக்கப்படுகிறது. மூலப்பொருட்களுக்கு இடையேயான இரசாயன எதிர்தாக்கத்தில், அதாவது ஒன்று மற்றொன்றின் மீது தாக்கம் நிகழும்போது, அவற்றின் மிகச்சிறிய அலகு **அணு** என்று அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு மூலப்பொருளும் அணுக்களால் ஆனது.

அணுக்களின் கட்டமைப்புகள் ஒரே மாதிரியாக இருந்தாலும், அவற்றின் அளவுகள் மற்றும் எடைகள் வேறுபட்டவை. இன்று 118 வகையான அணுக்கள் தெரிய வந்துள்ளன. மிக பெரிய அணு கூட மிகவும் சக்தி வாய்ந்த நுண்ணோக்கி மூலம் பார்க்க முடியாத அளவுக்கு சிறியது. ஒத்த அணுக்கள் ஒன்றாக சேரும்போது அவை ஒரு **மூலகத்**தை உருவாக்கு கின்றன. 118 வகையான அணுக்கள் இருப்பதினால் 118 வகையான மூலகங்கள் உள்ளன. இரும்பு, கந்தகம், பாதரசம், ஆக்ஸிஜன் மற்றும் கார்பன் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மூலகம். வெவ்வேறு வகை மூலகங்கள் ஒன்று சேரும்போது ஒரு சேர்வையை உருவாக்குகின்றன. இலட்சக் கணக்கான சேர்வைகள் உள்ளன. நீர், அல்கஹோல், உப்பு மற்றும் சுண்ணாம்பு

ஆகியவை சேர்வைகள். சேர்வைகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மூலகங்களால் உருவாகின்றன.

அனைத்து சடப்பொருட்களும், அதாவது மலைகள், கடல்கள், அனைத்து வகையான தாவரங்கள் மற்றும் விலங்குகள் 118 மூலகங்களால் ஆனவை. அனைத்து உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருட்களின் கட்டிட கற்கள் 118 மூலகங்கள் ஆகும். அனைத்து பொருட்களும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட 118 மூலகங்களின் சேர்வையால் உருவாகின்றன. காற்று, மண், நீர், வெப்பம், ஒளி, மின்சாரம் மற்றும் கிருமிகள் ஆகியவை சேர்வைகளை பிரிக்கின்றன, அல்லது வேறு பொருட்களுடன் ஒன்றிணைந்து வேறு சேர்வைகளை உண்டாக்குகின்றன. எந்த மாற்றமும் காரணமின்றி நடக்காது. இந்த மாற்றங்களினால், அணுக்கள், மூலகங்களின் அலகுகள், பொருள் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு இடம் பெயர்கின்றன, அல்லது ஒரு பொருளை பிரிந்து சுதந்திரம் அடைகின்றன. நாங்கள் பொருட்கள் மறைந்து போவதை காண்கிறோம், ஆனால், அவற்றை வெளிப்புற கண்ணோட்டத்தின் மூலம் தீர்மானிப்பதால் நாம் இது "மறைவு "அல்லது "தோற்றம்" என்பதாக தவறாக புரிந்து கொள்ளப்படுகின்றன; ஆனால், அவை வேறு பொருட்களாக மாறுவதை தவிர வேறில்லை; ஒரு பொருள் காணாமல் போவது, அதாவது கல்லறையில் உள்ள ஒரு சடலம், நீர், வாயுக்கள் மற்றும் மண் போன்ற புதிய பொருட்களாக மாறுகிறன. ஒரு மாற்றம் மூலம் உருவாகும் புதிய பொருட்கள் நமது புலன் உறுப்புகளை பாதிக்காத காரணத்தால், அவை உருவாகின்றன என்பதை நம்மால் உணர முடியவில்லை. இதன் காரணத்தினால் நாம் முந்திய பொருள் மறைந்து விட்டது என்று கூறுகிறோம். ஆனால் அது ஒரு மாற்றத்திற்கு உட்பட்டது.

118 மூலகங்களின் ஒவ்வொரு தன்மையும் மாறுவதையும் காண்கிறோம். ஒவ்வொரு மூலகத்திலும் பௌதீக மற்றும் இரசாயன மாற்ற நிகழ்வுகள் நிகழ்கின்றன. ஒரு மூலகம் மற்றொன்றுடன் (அல்லது பிற ஒன்றுடன்) சேர்வையில் இணையும்போது அது அயனேற்றம் அடைகிறது, அதாவது, அதன் அணுக்கள் எலக்ட்ரான்களை இழக்கின்றன அல்லது பெறுகின்றன. இவ்வாறு மூலகத்தின் பௌதீக மற்றும் இரசாயனவியல் பண்புகளில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்கின்றன. ஒவ்வொரு மூலகத்தின் அணுவும் ஒரு உட்கரு (nucleus) மற்றும் **எலக்ட்ரான்கள்** எனப்படும் பல்வேறு சிறிய துகள்களினால் ஆனது. கரு (nucleus)

என்பது அணுவின் மையத்தில் உள்ளது. ஹைட்ரஜனை தவிர அனைத்து மூலகங்களின் அணுக்களின் கருக்கள் புரோட்டன் எனப்படும் துகள்களால் ஆனது. அது நேர்மின் ஏற்றத்தை கொண்டதும், மின்னேற்றத்தை கொண்டிராத **நியுற்ரோன்**' களையும் கொண்டது. எலக்ட்ரோன் என்பது கருவை சுற்றி நகரும் எதிர் மின் ஏற்றத்தை கொண்ட ஒரு சிறிய துகள்கள். எலக்ட்ரான்கள் ஒவ்வொரு கணமும் அவற்றின் சுற்றுப்பாதையில் சுழல்வதுடன் அவற்றின் சுற்றுப் பாதையை மாற்றுகின்றன.

கதிரியக்க (radioactive) மூலகங்களின் அணுக்களில் மாற்றங்கள் நிகழ்கின்றன என்பது அவதானிக்கப்பட்டு, நிரூபிக்கப்பட்டுள்ளது. அணுக்களின் கருக்களில் நடைபெறும் பிளவுகள் மற்றும் இணைவுகள் fissions and fusions என்று அழைக்க படுகின்றன. மேலும், இந்த அணுக்கரு பிளவுகளில் ஒரு அணு வேறொன்றாக மாறுவதுடன் மற்றும் அவற்றின் இடை குறைவடைந்து சக்தியாக மாறுகின்றது. இந்த மாற்றம் யூத பௌதீகவியலாளரான ஐயன்ஸ்டீன் (இறப்பு .1955/1375). ஆல் கூட முறைப்படுத்தப்பட்டது. எனவே, சேர்வைகளை போலவே, அணுக்களிலும் மாற்றம் நடைபெறுகின்றன. ஒன்றிலிருந்து வேறு ஒன்றாக மாறுகின்றது. ஒவ்வொரு உயிருள்ள அல்லது உயிரற்ற பொருளும், மாற்றங்கள் அதாவது பழையது மறைந்து புதியது இருப்புக்கு வருகின்றது. இன்று இருக்கும் ஒவ்வொரு உயிரினமும், தாவரமும் அல்லது விலங்குகளும் இருப்பவை அல்ல, வேறு உயிரினங்கள் இருந்தன. மற்றும் எதிர்காலத்தில், தற்போதுள்ள உயிரினங்கள் எதுவும் எஞ்சியிருக்காது, அவை மறைந்து வேறு சில உயிரினங்கள் படைப்புகள் உருவாகும். அனைத்து உயிரற்றவைகளின் நிலையும் இதுதான். அனைத்து உயிருள்ள மற்றும் உயிரற்ற படைப்புகள்; அதாவது; இரும்பு மற்றும் அதன் சேர்வைகள், கல், எலும்பு, மற்றும் அனைத்து துகள்களும் எப்போதும் மாறக்கூடியது, அதாவது பழையவை மறைந்து, புதியவை உருவாகின்றன. உருவாகும் பொருளின் பண்புகளும் மறைந்து போன பொருள்களின் பண்புகளும் ஒரேமாதிரி இருக்கும் போது, இந்த மாற்றத்தை மனிதனால் கவனிக்க முடியாமல், பொருள் எப்போதும் இருப்பதாக கருதுகிறான். இதற்கு ஒரு உதாரணம் ஒரு அசையும் படம்; இங்கு முன்வந்த ஒரு வித்தியாசமான படத்துக்கும் குறுகிய நேர இடை வெளியில் பின்னர் வரும் படத்துக்கும் இடையில் இருக்கும் வித்தியாசத்தை,

பார்வையாளரின் கண்ணால் கவனிக்க முடியாது. அதே படம் திரையில் நகர்கிறது என்று நினைத்துக்கொள்வோம். ஒரு துண்டு காகிதம் எரிந்து சாம்பலாகின்ற போது, காகிதம் காணாமல் போனது என்று சொல்கிறோம். மற்றும் சாம்பல் உருவானது, ஏனெனில் இந்த மாற்றத்தை கவனிக்கின்றோம். பனிக்கட்டி உருகும் போது, பனி மறைந்து தண்ணீர் வந்தது என்று சொல்கின்றோம்.

**ஷர்ஹ் அல்-அகைத்** என்ற நூலின் தொடக்கத்தில் எழுதப்பட்டுள்ளது: அனைத்து படைப்புகளும் அல்லாஹு தாலாவின் இருப்பை குறிக்கின்றன என்பதால், அனைத்து படைப்புகளும் (அல்லாஹுதஆலாவை தவிர மற்ற அனைத்தும்) '**ஆலம்**' என்று அழைக் கப்படுகின்றது. மேலும், படைப்புகளில் ஒரே வகையான படைப்புகள் ஒவ்வொன்றும் ஆலம் என்று அழைக்கப்படுகிறது. உதாரணமாக, மனிதர்களின் ஆலம் (உலகம்), வானவர்களின் ஆலம், விலங்குகளின் ஆலம், உயிரற்றவைகளின் ஆலம். அல்லது ஒவ்வொரு பொருளும் ஒரு ஆலம் என்று அழைக்கப் படுகிறது."

இது செய்யித் ஷரீப் அலி ஜுர்ஜானி (மறைவு. ஷிராஸ், 1413/816) அவர்களின் **ஷர்ஹ் அல்-மவாகிஃப்** என்ற கிதாபின் 441வது பக்கத்தில் எழுதப் பட்டுள்ளது", எல்லா படைப்புகளும் அதுவே ஆலம், படைப்புகள் (**ஹாதித்**) வேறு வார்த்தையில், அவை இல்லாமல் இருந்தன, பின்னர் தோன்றின. [நாங்கள் படைப்புகள் எப்பொழுதும் ஒன்று மற்றொன்றில் இருந்து வருகின்றன என்பதை மேலே விளக்கினோம்.] பொருள்களின் மூலப்பொருள் மற்றும் பண்புகள் ஆகிய இரண்டும் பின்னர் உருவாக்கப்பட்டன. இந்த விஷயத்தில், நான்கு வெவ்வேறு நம்பிக்கைகள் உள்ளன: (முஸ்லீம்கள், யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் (பார்சிகள், ஜோராஸ்ட்ரியர்கள்) நெருப்பை வணங்குபவர்களின், கருத்துப்படி மூலப் பொருட்களின் பண்புகள் பின்னர் படைக்கப்பட்டவை.

அரிஸ்டாட்டில் மற்றும் அவரை பின்பற்றும் தத்துவவாதிகளின் கூற்றுப்படி, மூலப் பொருள்(matter) மற்றும் பொருட்களின் பண்புக்கூறுகள் இரண்டும் நித்தியமானவை. அவை இல்லாமையிலிருந்து தோன்றவில்லை எப்போதும் இருந்தன என்றனர். நவீன இரசாயனவியல் இந்த வாதம் தவறு என்று நிரூபிக்கிறது. அவ்வாறு நம்பும் அல்லது சொல்லும் நபர் இஸ்லாத்தை விட்டு வெளியே செல்கிறார் மற்றும்

காஃபிராக மாறுகிறார். மேலும், அவிசென்னா (இப்னு சினா ஹுஸைன்) (இறப்பு. 1037/428) மற்றும் முஹம்மது ஃபராபி (இறப்பு. டமாஸ்கஸ்,950/339) பொருட்கள் நித்தியமானவை என்று கூறினர்.

அரிஸ்டாட்டிலுக்கு முந்தைய தத்துவஞானிகளின் கூற்றுப்படி, பொருட்களின் சாரம் நித்தியமானது ஆனால் பண்புக்கூறுகள் பின்னர் உருவாக்கப்பட்டன. இன்று பெரும் பாலான விஞ்ஞானிகள் இந்த தவறான நம்பிக்கையில் உள்ளனர். பொருட்களின் சாரம் பின்னர் உருவாக்கப்பட்டதாக யாரும் கூறவில்லை, பண்புகள் நித்தியமானவை. கிரேக்க தத்துவஞானி கேலன் (கலெனஸ்) இந்த நான்கு வகைகளில் எதையும் முடிவு செய்ய முடியவில்லை.

பொருட்களும் அதன் பண்புகளும் பின்னர் உருவாக்கப்பட்டவை என முஸ்லிம்கள் பல வழிகளில் நிரூபிக்கின்றார்கள். முதல் வழி; பொருட்களின் சாரம் மற்றும் அதன் அனைத்து துகள்களும் எப்போதும் மாறிக்கொண்டே இருக்கும் என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டது. மாற்றமடையும் எதுவும் நித்தியமாக இருக்க முடியாது; அது பின்னர் உருவாக்கப்படுகின்றது. ஒவ்வொரு பொருளின் உருவாக்கத்தின் செயல் முறையும் அதற்கு முந்திய பொருளில் இருந்து வருகிறது. அது நித்திய கடந்த காலம் வரை பின்னோக்கி செல்ல முடியாது. இந்த மாற்றங்கள் ஒரு தொடக்கத்தை கொண் டிருக்க வேண்டும், அதாவது சில ஆரம்ப பொருட்கள் ஒன்றும் இல்லாத நிலையில் இருந்து படைக்கப்பட்டிருக்க வேண்டும். தொடக்க பொருள் ஒன்றுமில்லாமல் உருவாக்க படவில்லை. அதன் செயல்முறை தொடர்ச்சியானது என்றால், அதாவது; ஒரு பொருள் மற்றொரு பொருளிலிருந்து உருவாகும் முறை முடிவற்ற கடந்த காலத்திற்கு வெகு தொலைவில் சென்றால், ஒன்றிலிருந்து மற்றொன்று உருவாகும் பொருட்களுக்கான ஆரம்பம் இருக்காது. மற்றும் எந்த பொருளும் இன்று இருக்கவும் முடியாது. பொருட்களின் தற்போதைய இருப்பு மற்றும் அவை ஒன்றிலிருந்து மற்றொன்று உருவானது அவை ஒன்றுமில்லாமல் இருந்து உருவாக்கப்பட்ட ஆரம்ப பொருட்களிலிருந்து பெருகிவிட்ட உண்மையை காட்டுகிறது.

மேலும், வானத்திலிருந்து விழும் ஒரு கல் எல்லையற்ற இடம் அல்லது முடிவில்லா உயரத்திலிருந்து அல்லது (நித்திய) நேரத்திலிருந்து வந்தது எனக்கூற முடியாது. இந்த வார்த்தைகள்

'ஆரம்பம் அல்லது எல்லை இல்லாதது. முடிவிலியில் இருந்து வருகிறது என்பது இல்லாமையில் இருந்து வருகிறது என்பதை குறிக்கிறது. மற்றும் முடிவிலியில் இருந்து வருகிறது என்று கூறப்படும் ஒரு பொருள் வராமலே விட்டிருக்கலாம். அது அறிவுக்கு ஒத்துவராதது, விஞ்ஞானத்தில் ஏற்றுக்கொள்ள முடியாதது. அதேபோல், மனிதனின் பெருக்கமும் ஒருவரிட மிருந்து மற்றொன்று, நித்தியத்திலிருந்து வரவே முடியாது. அவை முதலில் இல்லாமையில் இருந்து படைக்கப்பட்ட முதல் மனிதன் தொடங்கி பெருகியிருக்க வேண்டும். ஒன்றும் இல்லாத நிலையிலிருந்து முதல் மனிதன் வரவில்லை. மேலும், மனிதர்களின் பெருக்கம் ஒருவரிடமிருந்து ஒருவர் பெருக்கம் முடிவில்லாத ஆரம்பத்திலிருந்து வந்தது என்று கூறினால், எந்த மனிதனும் இருந்தி ருக்கவில்லை என்பது அவசியம். இந்த அறிக்கை எல்லா உயிரினங்களுக்கும் பொருந்தும். ஒன்றிலிருந்து மற்றொன்று பிறக்கின்ற ஆரம்ப பொருட்கள் எதுவும் இல்லாமல் உருவாக்கப்பட்டது எதுவும் இல்லை. அவ்வாறு வந்தது அவ்வாறு போகும் என்று கூறுவது நியாயமற்றது, அறிவியலில் ஏற்றுக்கொள்ள முடியாதது மற்றும் படிப்பறிவற்றவர்களின் கூற்று. ஒன்றுமில்லாமையில் இருந்து உருவாக்கப்பட்டதாக தோன்றினாலும், மாற்றம் என்பது நித்தியமாக இருப்பதை குறிக்கவில்லை. அதாவது, அது **வாஜிப் அல்-வுஜூத்** (இன்றியமையாத இருப்பு) என்ற தரத்தை காட்டவில்லை. ஆனால் **மும்கின் அல்-வுஜூத்** என்பது (அது இல்லாமை இலிருந்து இருப்புக்கு வரலாம், இருப்பு நிலையிலிருந்து அது இல்லாமைக்கு போகலாம்).

**கேள்வி**: "ஆலத்தை (எல்லா படைப்பினங்களையும்) படைத்தவன் மற்றும் அவனது பண்புகள் நித்தியமானவை எனின், ஆலம் கூட நித்தியமாக இருக்க முடியாதா?"

**பதில்**: படைத்தவன் நித்தியமானவன் என்பதற்கு நாங்கள் எப்போதும் சாட்சியாக இருக்கிறோம். படைப்பின் சாரம்கள் மற்றும் துகள்களை பல்வேறு வழிகளில் அல்லது காரணத்தினால் அவன் மாற்றுகிறான். அதாவது, அவன் அவற்றை அழித்து அவற்றுக்கு பதிலாக மற்றவைகளை உருவாக்குகிறான். நித்திய படைப்பாளன், அவன் விரும்பிய போது, ஒன்றிலிருந்து மற்றொன்றை உருவாக்குகிறான். அவ்வாறு தான், ஒவ்வொரு படைப்புகளின் உலகத்தையும் (ஆலம்), ஒவ்வொரு பொருளையும் ஒவ்வொரு துகளையும் சில வழிகளில்,

உருவாக்கு கிறான். அல்லாஹு தஆலா அவன் நாடிய போதெல்லாம் அவற்றை எந்த காரணம், வழிகள் இல்லாமலும் உருவாக்க முடியும். படைப்பினங்களின் உலகம் (ஆலம்) பிற்காலத்தில் உருவாக்கப்படுகின்றன என்று நம்புகின்ற ஒருவர், அவை மீண்டும் இல்லாதவை ஆகிவிடும் என்றும் நம்புகிறார். இல்லாத நிலையில் இருந்து படைக்கப்பட்ட படைப்புகள் மீண்டும் இல்லாமல் போகலாம் என்பது வெளிப்படை. பல படைப்புகள் இல்லாமல் போவதை இப்போதும் நாம் காண்கின்றோம்.

ஒருவர் முஸ்லிமாக இருப்பதற்கு, மூலப்பொருள்கள் மற்றும் அனைத்து படைப்புகளும் ஒன்றுமில்லாத நிலையிலிருந்து படைக்கப்பட்டன, மேலும் அவை மீண்டும் இல்லாமல் ஆகிவிடும் என்ற உண்மையை நம்புவது அவசியம். பொருள் இல்லாத நிலையி லிருந்து தோன்றுவதையும், மீண்டும் இல்லாமல் போவதையும் அதாவது, அவற்றின் வடிவங்கள், பண்புகள் மறைந்து விடுவதையும் காண்கின்றோம். பொருள்கள் இல்லாமல் போகும் போது அவற்றின் மூலப் பொருட்கள் உள்ளன, இருப்பினும், நாம் மேலே விளக்கியது போல், இவை நித்தியமானவை அல்ல. ஆனால் அவை மிக நீண்ட காலத்திற்கு முன்பு அல்லாஹு தஆலாவினால் உருவாக்கப்பட்டவை. இறுதி நாளில் அவற்றை மீண்டும் அழிப்பான்.

இன்றைய விஞ்ஞான அறிவு இந்த உண்மையை நம்புவதை தடுக்கவில்லை. அதை நம்பாமல் இருப்பது விஞ்ஞான அறிவியலை மறுப்பதுடன் இஸ்லாத்திற்கு எதிரான விரோதத்தையும் குறிக்கின்றது. இஸ்லாம் விஞ்ஞான அறிவியலை நிராகரிக்கவில்லை. அது சமய அறிவு மற்றும் கடமையான வணக்க வழிபாட்டின் கல்வியை கற்பது தவிர்க்கப்படுவதை ஏற்கவில்லை. விஞ்ஞான அறிவு இஸ்லாத்தை மறுக்கவில்லை, உண்மையில், அது இஸ்லாத்தை உறுதிப்படுத்துவதுடன் சரிகாண்கின்றது. நாம் மேலே விளக்கியபடி, எந்த நிகழ்வும் தானாக நடக்க முடியாது என்பதால் பிரபஞ்சம் பின்னர் தோன்றிய காரணத்தினால் அதை இல்லாமையிலிருந்து உருவாக்கிய படைப்பாளி ஒருவன் இருக்க வேண்டும். இன்று, ஆயிரக்கணக்கான மருந்துகள், வீட்டு பொருட்கள், எலெக்ட்ரோனிக் உபகரணங்கள், தொழில்துறை மற்றும் வணிகபொருட்கள், ஆயுதங்கள் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படுகின்றன. அவற்றில் பெரும்பாலானவை ஆராய்ச்சி மற்றும் நூற்றுக் கணக்கான பரிசோதனைகளுக்கு பிறகு

அதிநவீன முறையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவற்றில் ஒன்று 'தானாகவே' உருவானது என்று யாராவது சொல்வார்களா? இல்லை, இவை தெரிந்தே விரும்பி செய்யப்பட்டது மற்றும் அவை அனைத்திற்கும் ஒரு தயாரிப்பாளர் தேவை என்று சொல்கிறார்கள்;

இந்நிலையில், கோடிக்கணக்கான உயிருள்ள மற்றும் உயிரற்றதாக காணப்படும் படைப்புகள், பல நூற்றாண்டுகளாக புதிதாக நுட்பமான முறையில் கண்டுபிடிக்கப்பட்ட பெரும்பாலானவை, அறியப்படாத கட்டமைப்புகளுடன் காணப்படுபவை, அவை தாமா கவே தற்செயலாக தோன்றி இருப்புக்கு வந்ததாக கூறுவது எவ்வளவு போலித்தனம், கடினமான பிடிவாதம் அல்லது சுத்த முட்டாள்தனம் இல்லை என்றால் வேறு என்னவாக இருக்கும்?. இவற்றிலிருந்து, ஒவ்வொரு பொருளையும் இயக்கத்தையும் உருவாக்கும் படைப்பாளன் ஒருவன் இருப்பது தெளிவாகின்றது. இந்த படைப்பாளன் **வாஜிப் அல்-வுஜூத்**, அவன் இல்லாமல் இருந்து பின்னர் உருவானவன் அல்ல. படைப்பாளி ஆரம்பம் முடிவு எதுவுமின்றி எப்போதும் உள்ளவனாக இருக்க வேண்டும். அவனது இருப்புக்கு எதுவும் தேவையற்றவன். அவன் எப்போதும் இருந்திருக்க வில்லை என்றால் **மும்கின் அல்-வுஜூத்** அல்லது **ஹாதித்** ஆக வேண்டி இருக்கும். அதாவது; படைப்பாளன் படைப்பை ஒத்ததாக, உயிரினங்களின் உலகம் போன்ற ஒரு உயிரினமாக இருந்தி ருப்பான். ஒரு படைப்பை போன்று அவன் இல்லாமையில் இருந்து படைக்க பட்டிருப்பான் அல்லது, மாற்றங்கள் மூலம், மற்றொரு உயிரினத்திலிருந்து, அதுவும் மற்றொரு படைப்பாளனால் உருவாக்கப்பட்டு இருக்க வேண்டும். இவ்வாறு எண்ணற்ற [தொடர்ச்சியான] படைப்பாளிகள் அவசியம்; நாம் மேலே விளக்கியது போல் அதே வழியில் சிந்தித்தால், உயிரினங்களில் ஏற்படும் மாற்றங்கள் எல்லையற்றதாக இருக்க முடியாது. படைப்பாளிகளும் எல்லையற்ற எண்ணிக்கையில் இருக்க முடியாது என்பது புரியும். மற்றும் அந்த உருவாக்கம் முதல் படைப்பாளனால் தொடங்கப்பட்டது. ஏனெனில், படைப்பாளர்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஒருவரையொருவர் உருவாக்கி பின்நோக்கி பார்க்கும்போது, நித்தியத்தில், தொடங்குவதற்கு எந்த படைப்பாளனும் இருந்திருக்கமாட்டார். எனவே, படைக்கப்படாத முதல் படைப்பாளி தான் அனைத்து படைப்புகளின்

தனித்துவமான படைப்பாளன். அவனுக்கு முன்னும், பின்னும் படைப்பாளன் இல்லை. படைப்பாளன் படைக்கப்படவில்லை, எப்போதும் இருக்கின்றவன். அவன் ஒரு கணம் இல்லாமல் போனான் என்றால், எல்லா உயிரினங்களும் இருக்கும் நிலையி லிருந்து அழிந்து போயிருக்கும். **வாஜிப் அல்-வுஜூது**க்கு எந்த வகையிலும் எதுவும் தேவையில்லை. அவன் பூமி, வானங்கள், அணுக்கள் மற்றும் உயிரினம் அனைத்தையும் ஒரு வழக்கமான மற்றும் நுட்பமான வரிசையில் படைத்தவன் சர்வ வல்லமை யுள்ளவன் , எல்லாம் அறிந்தவன், அவன் விரும்பும் எதையும் ஒரே நேரத்தில் உருவாக்க கூடியவன், தனித்தவன் மற்றும் மாற்றம் அடையாதவன்.

படைப்பாளன் சர்வவல்லமை படைத்தவனாகவும், எல்லையற்ற சக்தியை உடைய வனாகவும், எல்லாம் அறிந்தவனாகவும் இல்லை என்றால், அத்தகைய வழக்கமான நுட்பமான வரிசையில் படைப்புகளை அவனால் உருவாக்க முடியாது. மேலும், ஒன்றுக்கு மேற்பட்ட படைப்பாளிகள் இருந்தால் அவர்கள் படைக்கும் விருப்பத்தில் அவர்களுக் கிடையே ஒற்றுமை இருக்காது. யாருடைய விருப்பங்கள் செய்யாமல் கைவிடப்பட்டதோ அவன் படைப்பவனாக இருக்க முடியாது. இன்னும் படைக்கப்பட்டவை அனைத்தும் கலப்படமாக இருக்கும்.

படைப்பாளனில் எந்த மாற்றமும் ஏற்படாது. பிரபஞ்சத்தை படைக்கும் முன் அவன் எப்படி இருந்தானோ இப்போதும் அப்படியே இருக்கிறான். அவன் எல்லாவற்றையும் இல்லா மையில் இருந்து படைத்தது போல், அவன் இப்போதும் அனைத்தையும் படைக்கின்றான். இல்லையெனில், அவனில் ஏற்படும் ஏதாவது மாற்றம், ஒரு படைப்பாக இல்லாமை யிலிருந்து படைக்கப்பட்டதை குறிக்கும். அவன் எப்போதும் இருந்து கொண்டிருக்கிறான், என்றும் அழியாதவன் என்பதை மேலே விளக்கியுள்ளோம். எனவே, அவனிடம் எந்த மாற்றமும் ஏற்படாது. ஆரம்பத்தில் சிருஷ்டிகளுக்கு அவன் தேவைப்பட்டது போல், அவன் ஒவ்வொரு கணமும் அவைகளுக்கு தேவைப்படுகிறான். அவன் மட்டுமே எல்லாவற்றையும் உருவாக்குகிறான். மாற்றங்கள் அனைத்தையும் செய்கிறான். அனைவரும் இணக்கமாக இருப்பதற்கும், மனிதர்கள் நாகரீகமாக வாழ்வதற்கும் அவன் எல்லாவற்றையும் ஒரு வழிமுறை மூலம் உருவாக்குகிறான். அவன் காரணங்களை உருவாக்குவது போல், அவற்றின் தாக்கத்தையும்

அவற்றின் செயற்திறனையும் உருவாக்குகிறான். இங்கு மனிதனின் பணி, பொருட்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகளுக்கு ஒரு ஊடகமாக இருப்பது மட்டுமே.

பசிக்கும்போது உண்பது, நோயுற்றால் மருந்து உட்கொள்வது, ஒரு மெழுகு வர்த்தியை ஏற்றுவதற்கு தீப்பெட்டியை உரசுவது, ஹைட்ரஜனை பெறுவதற்காக துத்தநாகத்தின் மீது சிறிது அமிலத்தை ஊற்றுவது, சிமந்தை உருவாக்குவதற்கு களிமண்ணுடன் சுண்ணாம்பு கலந்து சூடாக்குவது, பாலை பெற்றுக் கொள்வதற்காக பசுவிற்கு உணவு அளிப்பது, மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு நீர் மின்சார நிலையத்தை நிர்மாணிப்பது, தொழிற் சாலைகள் அமைப்பது ஆகிய அனைத்தும் காரணிகளை பயன்படுத்தி அல்லாஹு தஆலா புதிய விடயங்களை உருவாக்கு வதில் மனிதன் ஊடகமாக செயல்படுவ தற்கான எடுத்துக்காட்டுகள். மனிதனின் விருப்பமும் சக்தியும் கூட அல்லாஹு தஆலாவினால் படைக்கப்பட்ட (கருவிகள்) வழி முறையாகும். அல்லாஹு தஆலா வின் மனிதர்கள் கருவிகள் என்பதாகும். அல்லாஹு தாலா இந்த முறையில் படைக்க விரும்புகிறான். இந்த வகையில் பார்க்கும்போது, "மனிதன் அத்தகைய விடயங்களை உருவாக்கினான்" என்று கூறுவது பகுத்தறிவுக்கு, மற்றும் மார்க்கத்துக்கு பொருந்தாத அறிவற்ற வார்த்தையாக இருக்கும்".

மனிதர்கள் தங்களை படைத்த தனித்துவமான படைப்பாளனை நேசிக்க வேண்டும். அவன் அவர்களை வாழவைத்து அவர்களுக்கு அவசியமான தேவைகளை உருவாக்கி அனுப்புகிறான். அவர்கள் அவனுடைய ஊழியர்களாகவும் அடிமைகளாகவும் இருக்க வேண்டும்; அதாவது மனித உயிரினம் அல்லாஹுதஆலாவை வணங்கி வழிபட வேண்டும். தற்போதைய நூலின் அறிமுகத்தில் உள்ள கடிதத்தில் இது விரிவாக எழுதப்பட்டுள்ளது. இந்த தவிர்க்க முடியாத இருப்பை கொண்ட தனித்தவனான இறைவனின் பெயர் **அல்லாஹ்** என்று தனிப்பட்ட முறை யில் அறிவித்தான். அல்லாஹு தஆலா தனிப்பட்ட முறையில் அறிவித்த இந்த இறைவனின் பெயரை மாற்றுவதற்கு மனிதர்களுக்கு உரிமை இல்லை. அதை உரிமை இன்றி மாற்றுவதற்கு செய்யப்படும் செயல் மிகவும் தவறானது, அருவருப்பானது.

கிறிஸ்தவர்களும் அவர்களின் குருமார்களும் படைப்பாளர்கள் மூன்றுபேர் இருப்பதாக நம்புகிறார்கள். மேலே நாம் முன்வைத்த வாதங்களில் ஒரே ஒரு படைப்பாளி மட்டுமே இருக்கிறான் என்ற உண்மையை நிரூபிக்கின்றன. மேலும், அவர்களால் முன்வைக்க படுகின்ற வாதங்கள் ,கிறிஸ்தவமும் குருமார்களும் போலியானவர்கள் மற்றும் மதவெறி கொண்டவர்கள் என்பதை நிரூபிக்கின்றன.

## "ஸலஃபிய்யா"

அஹ்லுஸ்ஸுன்னா அறிஞர்கள் ரஹ்மத்துல்லாஹி தஆலா அலைஹிம் அஜ்மஈன்களின் நூல்களில் "ஸலஃபிய்யா" அல்லது "ஸலஃபிய்யா மத்ஹபு" என்ற பெயரில் எதையும் குறிப்பிடவில்லை என்று ஆரம்பத்திலேயே கூறுகிறேன். இந்த பெயர்கள், பிற்காலத்தில் மத்ஹபு இல்லாதவர்களால் அஹ்லுஸ்ஸுன்னா மத்ஹபுகள் எதையும் பின்பற்றாத வர்களால் புனையப்பட்டது. மத்ஹபற்றவர்களின் நூல்கள் மார்க்கம் தெரியாதவர்களால் அரபியில் இருந்து மொழி பெயர்க்கப்பட்டு பரப்பி விடப்பட்டன. அவர்களின் கூற்றுப்படி:

["அஷ்அரிய்யா, மாதுறுதியா மதுஹபுகள் நிறுவப்பட முன்னர் அனைத்து சுன்னிகளும் பின் பற்றிய மதுஹபுக்கு வழங்கப்பட்ட பெயர் ஸலஃபிய்யா. அவர்கள் சஹாபாக்கள் மற்றும் தாபிஊன்களின்[1] அடிச்சுவடுகளை பின்பற்றினார்கள். ஸலஃபிய்யா என்பது சஹாபாக்கள், தாபியூன்கள் மற்றும் தபஅத்-தாபிஈன்களின் மதுஹப். நான்கு பெரிய இமாம்களும் இந்த மது ஹபை சேர்ந்தவர்கள். ஸலஃபியா மத்ஹபை பாதுகாக்கும் முதல் புத்தகம் இமாம்-அல்-அ'ஃளம் எழுதிய அல்ஃபிக்ஹ் அல்-அக்பர். இமாம் கஸ்ஸாலி எழுதிய இல்ஜாம் அல்-அவாம் அனில்-கலாம் என்ற நூலில் ஸலஃபிய்யா மதுஹபின் அத்தியா வசியமானவை ஏழு என்று அறிவித்துள்ளார். அவர்களுக்கு பின்னர் வந்தவர்கள் (முதாக்கிரின்), இல்ம்

---

[1] **சஹாபத் அல்-கிராம்**: நபி (அலாஹி-ஸலாம்) அவர்களை குறைந்தபட்சம் ஒருமுறை பார்த்த முஸ்லிம்கள்; தோழர்கள். தாபிஊன் (அல்-இளாம்): சஹாபத் அல்-கிராமைப் பார்த்து ஹதீஸ்களை அறிவித்தவர்கள் இரண்டாம் தலைமுறை முஸ்லிம்கள். தாபிஊன்களில் ஒருவரை பார்த்த முஸ்லிம் அறிஞர்கள் **தப உத்தாபிஊன்கள்**

அல்-கலாம் (ஈமான் பற்றிய அறிவு, நம்பிக்கைகள்) அல்-இமாம் அல்-கஸ்ஸாலியின் தோற்றத்துடன் தொடர்ந்தது. ஆரம்ப கால கலாமுடைய அறிஞர்களின் மதுஹபுகள் மற்றும் இஸ்லாமிய தத்துவவாதிகளின் கருத்துக்களை படித்தபின் **அல்-இமாம் அல்-கஸ்ஸாலி** இல்ம்-அல்-கலாமின் முறைகளில் மாற்றங்களை செய்தார். அவர் இல்ம் அல்-கலாமை மறுக்கும் நோக்கில் தத்துவ சிந்தனைகளை செருகினார். அர்-ராதி மற்றும் அல்-அமிதி கலாமை தத்துவத்துடன் இணைத்து அதை அறிவின் ஒரு கிளையாக ஆக்கப்பட்டது. அல் பைதாவி கலாமும் தத்துவமும் பிரிக்க முடியாதவையாக ஆக்கினார். முதாக்கிரின்களின் இல்ம் அல் கலாம் ஸலஃபிய்யா மத்ஹபு பரவுவதை தடுத்தது.

இப்னு தைமிய்யாவும் அவரைப் பின்பற்றிய இப்னு அல் கய்யும் அல் ஜவ்ஸியாவும் ஸலஃபிய்யா மத்ஹபை உயிர்ப்பிக்க முயற்சி செய்தனர். அது பின்னர் இரண்டாக பிரிந்தது: ஆரம்பகால ஸலஃபிகள் அல்லாஹு த'ஆலாவின் பண்புகள் மற்றும் முத்தஷாபிஹ் நாஸ்கள் (மறைவான அர்த்தங்களை கொண்ட ஆயத்துகள் மற்றும் ஹதீதுகள் பற்றி விபரிக்கவில்லை. பின்னர் வந்த ஸலஃபிகள் அவை பற்றிய விபரங்களின் முக்கியத் துவத்தை வலியுறுத்தினர். பிற்கால ஸலஃபிகளான இப்னு தைமியாவும் அவரை பின்பற்றிய இப்னு அல்கய்யும் அல்ஜவ்ஸியா போன்றவர்கள் இந்த வகையை சேர்ந்தவர்கள். ஆரம்ப கால மற்றும் பிற்கால ஸலஃபிகள் இருவரும் அஹ்லுஸ்-ஸுன்னா அல்-கஸ்ஸா (அஹ்லுஸ் ஸுன்னா' வழி) என குறிப்பிட படுகின்றனர். அஹ்லுஸ்ஸுன்னா கலாமின் அறிஞர்கள் சில நாஸ்களை விளக்குவதை தவிர்த்தார்கள். ஆனால் ஸலஃபியாக்கள் அதை எதிர்த்தனர். அல்லாஹ்வின் 'முகமும்' அவனது 'வரவும்' மனிதனின் முகம் மற்றும் வருவதை போன்றது என்று கூறுவதில் ஸலஃபியாக்கள் முஷப்பிஹா (அல்லாஹு தஆலாவை ஒரு ஜடப்பொருள் என்று நம்புவர்கள்) இலிருந்து வேறு படுகிறார்கள்.]

**அல்-அஷ்அரி** மற்றும் **அல்-மாதுரிதி** மத்ஹபுகள் பின்னர் நிறுவப்பட்டவை என்று கூறுவது சரியல்ல. இந்த இரண்டு பெரிய இமாம்களும் சலஃப் அஸ்-சாலிஹீன் (முதல் மூன்று தலைமுறை முஸ்லீம்கள்; சஹாபா அல்-கிராம், தாபிஊன், தபஅத்தாபியீன்') களினால் அறிவிக்கப்பட்ட நம்பிக்கை அமைப்பு (இ'ஃதிகாத்) பற்றிய அறிவை இளைஞர் களுக்கு புரியும் வகையில் விளக்கினார்கள், அதை வகைப்படுத்தினார்கள் போதித் தார்கள். அல்-இமாம்

அல்-அஷ்அரி அல்-இமாம் அஷ்-ஷாஃபியை பின்பற்றுபவர்களின் சங்கிலித்தொடரில் இருந்தார். மற்றும் அல்- இமாம் அல்-மாதுரிதி அல்-இமாம் அல்-அஃலம் அபு ஹனிஃபாவை பின்பற்றுபவர்களின் சங்கிலி தொடரில் இணைந்தவராக இருந்தார். அல்-அஷ்அரி மற்றும் அல்-மாதுரிதி அவர்கள் இஃதிகாதில் அவர்களின் எஜமானர்களின் பொதுவான மத்ஹபுக்கு வெளியே செல்லவில்லை; அவர்கள் புதிதாக மத்ஹபுகளை கண்டு பிடிக்கவில்லை. இந்த இருவருக்கும் மற்றும் அவர்களின் எஜமானர்கள் நான்கு இமாம்களின் மத்ஹபுகளுக்கும் ஒரே ஒரு இ'ஃதிகாத் இருந்தது. அது **அஹ்ல் அஸ்-சுன்னா வல் ஜமாஅ** என்ற பிரசித்தி பெற்ற பெயரில் அறியப்படுகின்ற இ'ஃதிகாதில் உள்ள மதுஹப் ஆகும். இந்த இ'ஃதிகாத் அல்லது நம்பிக்கை கொண்டுள்ள மக்கள் குழுவினர் வைத்திருக்கும் நம்பிக்கைகளும் சஹாபா அல்-கிராம், தாபிஊன் மற்றும் தபஉத்-தாபியீன்களின் நம்பிக்கைகளும் ஒரே மாதிரியானவை.

அல்-இமாம் அல்-அஃலம் அபு ஹனிஃபா அவர்களின் நூல் **அல்-ஃபிக்ஹ் அல்-அக்பர்**, அஹ்லுசுன்னா மத்ஹபை பாதுகாக்கின்றது. அந்த நூலிலோ இமாம் அல்-கஸ்ஸாலி' யின் **இல்ஜாம் அல்-அவாம் அனில்-கலாம்**' **இல்** 'ஸலஃபிய்யா' என்ற வார்த்தையே கிடையாது. இந்த இரண்டு நூற்கள் மற்றும் **அல்-கவ்ல் அல்-ஃபஸ்ல்**,[1] என்ற **அல்-ஃபிக்ஹ் அல்-அக்பர்** என்ற நூலின் வர்ணனைகளில் ஒன்று, அஹ்லுஸ்-சுன்னாவின் மத்ஹபை போதிப்பதுடன் மதவெறி, வழிதவறிய குழுக்களுக்கும் மற்றும் தத்துவவாதிகளுக்கும் பதில் அளிக் கின்றன. அல்-இமாம் அல்-கஸ்ஸாலியின் **இல்ஜாம் அல்-அவாம்** என்ற தனது நூலில் கூறுகிறார்கள்: "இந்த நூலில் நான் தெரிவிக்கிறேன், இ'ஃதிகாதில் உள்ள குழுக்களில், ஸலஃப் மத்ஹபு உண்மையானது. இந்த மத்ஹபை விட்டு விலகுபவர்கள் பித்'அத்து வாதிகள் என்பதை நான் விளக்க வேண்டும். ஸலஃபின் மத்ஹபு என்பது சஹாபா அல்-கிராம் மற்றும் தபிஊன்களின் இ'ஃதிகாத் என்று பொருள். இந்த மதுஹபின் அத்தியா வசியமானவைகள் ஏழு." **இல்ஜாம்** எனும் நூல் 'ஸலஃபு' மத்ஹபின் ஏழு அவசியமான வைகளை

[1] **இல்ஜாம்** மற்றும் **அல்-கவ்ல் அல்-ஃபஸ்ல்** ஆகிய புத்தகங்கள் இஸ்தான்புல்லில் உள்ள ஹக்கிகத் வெளியீட்டினால் மறுபதிப்பு செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பிடுகிறது. அவை "ஸலஃபிய்யா" மதுஹபின் அத்தியாவசியமானவை என்று கூறுவது நூலின் எழுத்தை சிதைப்பதுடன் இமாம் அல்-கஸ்ஸாலியை தவறாக சித்தரிக்கின்றது. அஹ்லு ஸுன்னா'வின் அனைத்து நூல்களிலும் எடுத்துக்காட்டாக, பிக்ஹுடைய மிகவும் மதிப்புமிக்க **அத்-துர்ர் அல்-முக்தாரி**ன் "சாட்சி" எனும் அத்தியா யத்தில், '**ஸலஃப்**' மற்றும் '**கலஃப்**' பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது:

"ஸலஃப்' (முன்னோடிகள்) என்பது சஹாபத் அல்-கிராம் மற்றும் தாபிஊன்களுக்கு மறுபெயர். அவர்கள் **ஸலஃப் அஸ்-ஸாலிஹீன்** என்றும் அழைக்க படுகிறார்கள். மேலும் அஹ்லுஸ்-சுன்னாவின் அறிஞர்கள் ஸலஃப் அஸ்-ஸாலிஹி னுக்கு பின் வந்தவர்கள் '**கலஃப்**.' (வாரிசுகள்) என்று அழைக்கப்படுகிறார்கள். இமாம் அல்-கஸ்ஸாலி, இமாம் அர்-ராதி மற்றும் அல்-இமாம் அல்-பைதாவி, ஸலஃப் அஸ்ஸாலிஹினின் மத்ஹபில் இருந்தனர். அவர்கள் காலத்தில் தோன்றிய பித்ஆ குழுக்கள் இல்முல் கலாமை தத்துவத்துடன் கலந்தனர். உண்மையில், அவர்கள் தங்கள் ஈமானின் விதிகளை தத்துவத்தின் மீது நிறுவினர். **அல்-மிலால் வன்-நிஹால்** என்ற நூல் அந்த வழி தவறிய குழுக்களின் நம்பிக்கைகள் பற்றிய தகவல்களை விரிவாகத் தருகிறது. அந்த ஊழல் குழுக்களுக்கு எதிராக அஹ்லுஸ்ஸுன்னாவின் இஃதிகாதை பாதுகாத்தும், அவர்களின் வழி தவறிய கருத்துக்களை மறுத்தும், இந்த மூன்று இமாம்களும் அவர்களின் தத்துவ கருத்துகளுக்கு எதிராக மிக விரிவான பதிலளித்தார்கள். அவர்களின் பதில்கள் அஹ்லுஸ்ஸுன்னா மது ஹபுடன் தத்துவம் கொண்ட கலப்பு என்று அர்த்தப்படுத்தவில்லை; மாறாக, அவர்கள் கலாமுடைய அறிவை தத்துவ சிந்தனைகளிலிருந்து தூய்மை படுத்தினார்கள்.

அல்-பைதாவியின் நூல்களில் அல்லது ஷெய்க்-ஜாதாவின் தஃப்சீரில் தத்துவ சிந்தனை களோ முறைகளோ இருக்கவில்லை. ஷெய்க்-ஜாதாவின் தஃப்சீரில், உள்ள அதன் சிறு குறிப்புகள் மிகவும் மதிப்பு மிக்கது. இந்த உயர்ந்த இமாம்கள் தத்துவத்தில் தங்களை ஈடுபடுத்தி கொண்டனர் என்று கூறுவது மிகவும் அசிங்கமான அவதூறு. அஹ்லுஸ் ஸுன்னாவின் அறிஞர்களுக்கு எதிராக இப்னு தைமியா தனது **அல்-வாசிதா** என்ற நூலில் முதலில் அவதூறு செய்தார். மேலும், இப்னு தைமிய்யா மற்றும்

அவரது சீடர் இப்னு அல்-கய்யிம் அல்-ஜவ்ஸியா **ஸலஃபிய்யா** மத்ஹறை புதுப்பிக்க முயன்றார்கள் என்று கூறுவது, சரியான பாதையில் உள்ளவர்களுக்கும் மற்றும் வழி தவறியவர்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை பிரதிபலிக்கிறது. இந்த இரண்டு பேருக்கும் முன்பு அங்கு "ஸலஃபிய்யா" என்ற மத்ஹபோ 'ஸலஃபிய்யா' என்ற வார்த்தை கூட இருக்கவில்லை. அவர்கள் எப்படி அதை உயிரப்பிக்க முயற்சி செய்தார்கள் என்று கூற முடியும்?. இவர்களுக்கு முன் ஸலஃப் அஸ்ஸாலிஹீன் என்ற ஒரே ஒரு மதுஹபுதான் இருந்தது. அது, ஒரே உண்மையான இத்திகாத், **அஹ்லு அஸ்-சுன்னா வல் ஜமாஅ**. இப்னு தைமியா இந்த சரியான மத்ஹறை சிதைக்க முயன்று பல பித்'ஆக்களை வகுத்தார். தற்போதைய மதுஹபு அல்லாத பேச்சுவன்மையுள்ள மத சீர்திருத்த வாதிகளின் ஊழல் சிந்தனைகள் புத்தகங்களுக்கு ஒரே ஆதாரம், இப்னு தைமியாவின் பித்ஆக்கள் மட்டும்தான். சரியான பாதையை பின்பற்றும் இளைஞர்களை சம்மதிக்க வைப்பதற்காக இந்த மதவெறியர்கள் கொடூரமான தந்திரத்தை வகுத்தார்கள். அவர்கள் "சலஃப்அஸ்-சாலிஹீன்" என்ற பெயரை ஸலஃபிய்யா" என்று மாற்றி இப்னு தைமிய்யாவின் பித்ஆக்கள் மற்றும் ஊழல் கருத்துகளை நியாயப்படுத்தி இளைஞர்களை தனது வழிக்கு இழுத்துச் செல்கின்றனர். சலஃப் அஸ்-ஸாலிஹீனின் வாரிசுகளான அறிஞர்களுக்கு தத்துவம் மற்றும் பித்ஆவின் கறைகளை தீட்ட முயற்சித்தார்கள். மேலும், அவர்களின் இட்டுக் கட்டப்பட்ட பெயரான ஸலஃபிய்யா' விலிருந்து விலகியதாகவும் அவர்களை குற்றம் சாட்டினார்கள்.

அவர்கள் இப்னுதைமியாவை ஒரு முஜ்தஹித் ஆக, ஸலஃபிய்யாவை உயிர்பித்து எழ வைக்கும் ஒரு ஹீரோவாக முன் வைத்தார்கள். இருப்பினும், அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்கள் (ரஹ்மத்துல்லாஹி தாலா அலைஹிம் அஜ்மஈன்), ஸலஃப் அஸ்ஸாலிஹீன் களின் வாரிசுகளாக இருந்தவர்கள் அஹ்லுஸ்-சுன்னாவின் இஃதிகாத் போதனைகளை பாதுகாத்து வருகின்றனர். அது ஸலஃப் அஸ்-ஸாலிஹீன்களின் மதுஹறை உருவாக்கியது. அவர்களின் நூல்களில், தற்காலம் வரை இப்னு தைமியா, அஷ்-சவ்கானி போன்றோர் ஸலஃப் அஸ்-ஸாலிஹீன்களின் வழியிலிருந்து விலகி விட்டனர், முஸ்லிம்களை அழிவுக்கு மற்றும் நரகத்தை நோக்கியும் இழுத்து செல்கின்றனர் என்று அறிவித்தார்கள்.

**அத்-அவஸ்ஸூலி பின்-நபி வபிஸ்ஸாலிஹீன், உலமா அல்-முஸ்லிமின் வல்-முகாலி ஃபுன், ஷிஃபாஅஸ்-சிகம்** மற்றும் **தஃதிர் அல்-ஃபுஆத் மின் தனசில்-இ'ஃதிகாத்**, எனும் நூல்களை, மற்றும் பிந்திய நூலின் முன்னுரையை படிப்பவர்கள் "புதிய ஸலஃபிய்யா" என்று அழைக்கப்படுபவர்கள் நம்பிக்கையில் ஊழல் செய்யும் சதிகாரர்கள் என்பதையும், முஸ்லிம்களை அழிவுபாதைக்கு அழைத்து செல்பவர்கள், இஸ்லாத்தை உள்ளிருந்து தகர்ப்பவர்கள் என்பதையும் உணர்வார்கள்.

தற்போது சிலர் 'ஸலஃபிய்யா' என்ற பெயரை உச்சரிக்கிறார்கள். ஒவ்வொரு முஸ்லிமும் நன்கு அறிந்து கொள்ள வேண்டும் சலஃபிய்யா மத்ஹபு என்ற பெயரில் இஸ்லாத்தில் எதுவும் இல்லை, ஆனால் ஹதீஸ் ஷரீஃபுகளில் போற்றிப் புகழப்பட்ட முதல் இரண்டு இஸ்லாமிய நூற்றாண்டுகளில் முஸ்லிம்களாக வாழ்ந்த சலஃப்அஸ்-சாலிஹீன்களின் மத்ஹப் மட்டுமே உள்ளது. மூன்றாம் மற்றும் நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த இஸ்லாமிய அறிஞர்கள் **கலஃப் அஸ்-ஸாதிக்கீன்** என்று அழைக்கப்படுகிறார்கள். இந்த மாண்புமிகு மக்களின் இஃதிகாத், **அஹ்ல் அஸ்ஸூன்னா வல் ஜமாவின் மதுஹப்** என்று அழைக்கப்படுகிறது. இது ஈமான் (நம்பிக்கை)யின் மதுஹப். ஸலஃப் அஸ்-ஸாலிஹீன் வைத்திருந்த ஈமான், சஹாபத் அல்-கிராம் மற்றும் தாபிஊன்களின் ஈமானும் அதுதான். அங்கு அவர்களின் நம்பிக்கைகளுக்கு இடையே வேறுபாடு இல்லை. உலகில் இன்று பெரும்பாலான முஸ்லிம்கள் அஹ்லுஸ் சுன்னாவின் மத்ஹபில் உள்ளனர். அனைத்து வழிதவறிய எழுபத்திரண்டு பித்'ஆ குழுக்கள் இஸ்லாத்தின் இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிறகே தோன்றின. அவற்றில் சிலவற்றை நிறுவியவர்கள் முன்பு வாழ்ந்திருந்தாலும், அவர்களின் நூற்கள் தாபிஊன்களின் காலத்துக்கு பின்னர் எழுதப்பட்டு அவர்கள் குழுக்களாக தோற்றுவிக்கபட்டனர். அவர்கள் அஹ்லுஸ் சுன்னாவிற்கு கீழ்ப்படிய வில்லை.

ரசூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம்) அவர்கள் அஹ்லுஸ் ஸுன்னா நம்பிக்கைகளை வெளிப்படுத்தினார்கள். சஹாபா அல்-கிராம் ஈமானின் போதனை களை இந்த மூலத்திலிருந்து பெற்றனர். தாபிஊன் அல்-இளாம் (மிகவும் மதிக்கப்படும் தாபிஊன்) அவர்களின் முறைப்படி, இந்த போதனைகளை சஹாபா அல்-கிராம்களிட மிருந்து கற்றுக்கொண்டார்கள். அவர்களின் வாரிசுகள்

அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர்; அதன் மூலம் அஹ்லுஸ் ஸுன்னாவின் போதனைகள் நக்ல் (அறிவிப்பாளர்களின் சங்கிலி தொடர்) மற்றும் தவத்தூர் (தொடர்ச்சியான, பல சங்கிலி தொடர்கள் வழியாக வந்த ,சந்தேகமற்ற, உண்மையான தகவல்) மூலம் நம்மை வந்தடைந்தன. இந்த போதனைகளை பகுத்தறிவு வழிமூலம் ஆராயமுடியாது. அறிவாற்றலால் அவற்றை மாற்ற முடியாது, அது அவற்றை புரிந்து கொள்வதற்கு மட்டுமே உதவும். அதாவது, புரிந்து கொள்வதற்கும், மற்றும் அவற்றின் சரியான மதிப்பை உணர்வதற்கும் புத்தி அவசியம். அனைத்து ஹதீதுடைய அறிஞர்களும் அஹ்லுஸ் ஸுன்னா நம்பிக்கையை கொண்டிருந் தார்கள்.

அமல் (வழிபாடுகள், ஃபிக்ஹ்) தொடர்பான நான்கு மதுஹபுகளின் இமாம்கள் இந்த மதுஹபில் இருந்தனர். மேலும், அல்-மாதுரிதி மற்றும் அல்-அஷ்அரி, இருவரும் இ'ஃதிகாத் (நம்பிக்கைகள்) தொடர்பான நமது மத்ஹபின் இமாம்கள் அஹ்ல் சுன்னா மதுஹபில் இருந்தனர். இந்த இரு இமாம்களும் அந்த மதுஹபை பிரகடனப்படுத்தினார்கள். அவர்கள் எப்போதும் இந்த மதுஹபை வழி தவறியவர்களிடம் இருந்தும், பண்டைய சதுப்பு நில கிரேக்க தத்துவத்தில் சிக்கிக்கொண்ட பௌதீக வாதிகளிடமிருந்தும் பாதுகாத்து வந்தனர். அவர்கள் சமகாலத்தில் வாழந்தாலும், அவர்கள் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்தார்கள், என்பதால் அவர்களை சாடுபவர்களின் பகுத்தறிவு நடத்தைகளும் இமாம்களின் பாதுகாப்பு முறைகளும் வேறானவை மற்றும் விமர்சனங்களும் வேறுபட்டன. ஆனால் அவர்கள் வெவ்வேறு மதுஹபுகளை சேர்ந்தவர்கள் என்று அர்த்தமல்ல. ஆயிர கணக்கான, ஆழமாக கற்றறிந்த அறிஞர்கள், இமாம்கள் மற்றும் அவ்லியாக்கள் இந்த இருவருக்கு பின்னர் பல நூற்றாண்டுகளாக தோன்றினார்கள். அவர்களின் நூற்களை படித்த பின்னர் அவர்கள் இருவரும் அஹ்லுஸ் ஸுன்னா மத்ஹபை சேர்ந்தவர்கள் என்று ஒருமித்த கருத்தை தெரிவித்தார்கள்.

அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்கள் வெளிப்படையான அர்த்தங்களை கொண்ட நாஸ்களை அவற்றின் நேரடி அர்த்தங்களாக, அதாவது ஆயத்துகள் மற்றும் ஹதீதுகளுக்கு அவற்றின் தெளிவான அர்த்தங்களைக் கொடுத்தது அவற்றை கையாண்டனர். அவர்கள் அத்தகைய நாஸ்களை (த'வில்) விளக்கவோ அல்லது அதன் அர்த்தங்களை மாற்றவோ இல்லை. அவ்வாறு

செய்வதற்கு ஒரு தருரா (வலுவான தேவை அல்லது நிர்ப்பந்தம்) இருந்தால் தவிர. அவர்கள் அவர்களின் தனிப்பட்ட தகவல்கள் மற்றும் கருத்துக்களை கொண்டு எந்த மாற்றமும் செய்யவில்லை. ஆனால் வழிதவறிய குழுக்களை சேர்ந்தவர்கள் மற்றும் மதுஹபு அற்றவர்கள் வணக்கங்களில் (இபாதத்) மற்றும் ஈமானுடைய போதனைகளை கிரேக்க தத்துவ ஞானிகளிடம் இருந்து மற்றும் இஸ்லாத்துக்கு எதிரிகளாக இருந்த தவறான விஞ்ஞானிகளிடமிருந்து அவர்கள் கேட்டதற்கு ஏற்ப மாற்ற தயங்கவில்லை.

இஸ்லாத்தின் பாதுகாவலர்களாக மற்றும் ஸுன்னி அறிஞர்களின் ஊழியர்களாக ஒட்டோமான்கள் இருந்தார்கள். கிறிஸ்தவ மிஷனரிகளின் பல நூற்றாண்டு முயற்சி, பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் அருவருப்பான கொள்கைகள், மற்றும் அதன் அனைத்து பொருளாதார சக்திகளின் பலத்தின் விளைவாக ஒட்டோமான் சாம்ராஜ்ஜியம் எப்போது துண்டு துண்டாக உடைந்ததோ, அப்பொழுது மதுஹபற்ற வழிதவறியவர்கள் வாய்ப்பை பயன் படுத்திக்கொண்டார்கள். அவர்கள் அபத்தமான பொய் சூது தந்திரங்களுடன், அஹ்லு ஸுன்னாவை தாக்கி இஸ்லாத்தை உள்ளிருந்து தகர்க்க ஆரம்பித்தார்கள். குறிப்பாக சவூதி அரேபியா போன்ற நாடுகளில் அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்கள் சுதந்திரமாக பேசக்கூட அனுமதிக்கப்படவில்லை. வஹ்ஹாபிகளால் வழங்கப்பட்ட அளவிட முடியாத தங்கம், உலகம் முழுவதும் எல்லா இடங்களிலும் இந்த ஆக்கிரமிப்பு பரவ உதவியது. பாகிஸ்தான், இந்தியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளின் அறிக்கைகளின்படி மார்க்க அறிவு குறைந்த, அல்லாஹு தஆலாவுக்கு அச்சமற்ற மார்க்கவாதிகள் சிலருக்கு இந்த ஆக்கிரமிப்பாளர்களை ஆதரிப்பதற்கு ஈடாக பதவிகள் மற்றும் அடுக்கு மாடி வீடுகள் வழங்கப்பட்டன. குறிப்பாக இளைஞர்களை ஏமாற்றி அவர்களை அஹ்லுஸ் ஸுன்னா மத்ஹபிலிருந்து பிரிப்பதற்கு அவர்களின் விசுவாசமற்ற தன்மையை காட்டிய தீயவர்கள் அந்த நலன்களை பெற்று கொண்டார்கள். மதரஸாக்களில் முஸ்லிம் மாணவர்கள் (இஸ்லாமிய கல்வி நிறுவனம்) மற்றும் முஸ்லிம்களின் குழந்தைகளை தவறாக வழி நடத்தும் வகையில் அவர்கள் எழுதிய புத்தகம் ஒன்றின் ஆசிரியர்: "நான் இந்த புத்தகத்தை மத்ஹபுகளின் மதவெறியை ஒழித்து, அனைவரும் தங்கள் மத்ஹபுகளில் நிம்மதியாக வாழ உதவி செய்யும் நோக்கில் எழுதியுள்ளேன்" என்று

கூறுகிறார். இவருடைய நோக்கம் மதுஹபுகளின் மதவெறியை ஒழிப்பதற்கான தீர்வு அஹ்லுஸ் சுன்னாவை தாக்கி, அஹ்லுஸ்ஸுன்னா அறிஞர்களை இழிவுபடுத்துவது. அவர் இஸ்லாத்தை ஒரு குத்து வாளினால் தாக்குகிறார், பின்னர் அதனால் முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ்வதற்காக இதை செய்வதாக கூறுகிறார். புத்தகத்தின் மற்றொரு இடத்தில், அவர் கூறுகிறார்: "ஒரு நபர் [ஒரு கேள்வியை] யோசித்து சரியான விடையை பெற்றால் முடிவில், அவருக்கு பத்து மடங்கு வெகுமதி அளிக்கப்படும். அவர் தவறி விட்டால், அவர் ஒரு வெகுமதியை பெறுவார் என்று கூறுகிறார்." அதன் படி, இது உண்மையாக இருந்தால், ஒரு கிறிஸ்தவர் அல்லது முஷ்ரிக் (அல்லாஹு தஆலாவுக்கு இணை கற்பிப்பவர்கள்) அதாவது ஷிர்க்வாதிகள் எல்லோரும், அவர்களின் எண்ணத்திற்காக வெகுமதியை பெறுவார்கள். மற்றும் அவர்களின் சரியான எண்ணத்துக்கு பத்து தவாப்கள் கிடைக்கும்! நமது நபி (ஸல்லல்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்) அவர்களுடைய ஹதீது ஷரீபை எப்படி மாற்றுகிறார் பாருங்கள். அவர் எப்படி ஹதீதுடன் விளையாடுகிறார்!. ஹதீஸ் ஷரீஃபு கூறுகின்றது:"**ஒரு முஜ்தஹிது, [அமல் தொடர்பான] விதிகளை பிரித்தெடுப்பதற்கு, ஒரு ஆயத் கரிமாவிலிருந்து அல்லது ஒரு ஹதீஸ் ஷரீஃபிலிருந்து சரியான முடிவை பெற்றால், அவருக்கு பத்து தவாப்கள் வழங்கப்படும். அவர் தவறுசெய்தால் அவருக்கு ஒரு தவாப் கொடுக்கப்படும்.**" இங்கு சொல்லப்பட்ட தவாபுகள் சிந்தித்த அனைவருக்கும் வழங்கப்படவில்லை, ஆனால் இஜ்திஹாதுடைய தரத்திற்கு முன்னேறிய இஸ்லாமிய அறிஞருக்கு வழங்கப்படும். மேலும் அவை அவர்களின் ஒவ்வொரு சிந்தனைக்கும் அல்ல, ஆனால் விதிகளை பிரித்தெடுக்கும் வேலைக்காக நாஸ்கள் [அமல் தொடர்பான], அவர்களின் வேலை ஒரு இபாதா (இஸ்லாமிய ஷரீஅத் கடமை). ஒவ்வொரு இபாதாவிற்கும் வழங்கப்படுவது போல் இதற்கும் தவாப் வழங்கப்படுகிறது.

ஸலஃப் அஸ்-ஸாலிஹீன்கள் மற்றும் அவர்களின் வாரிசுகளான முஜ்தஹிது அறிஞர்களின் காலத்தில், அதாவது இஸ்லாத்தின் நான்காவது நூற்றாண்டின் இறுதி வரை மாறி வரும் வாழ்க்கை நிலைமைகள் காரணமாக ஒரு புதிய விஷயம் தோன்றினால், முஜ்தஹிது அறிஞர்கள் நாள்தோறும் இரவு பகலாக உழைத்தனர். **அல்-அதில்லத் அஷ் ஷரியா** எனப்படும்

நான்கு ஆதாரங்களில் இருந்து உய்த்தறிந்து முடிவுகளை பெற்றார்கள். அனைத்து முஸ்லிம்களும் அவர்களின் மத்ஹபுடைய இமாம்கள் உய்த்தறிந்த முடிவுகளை பின்பற்றி அதை கையாண்டார்கள். அவ்வாறு செய்த பெரிய அறிஞர்களுக்கு பத்து தவாப்கள் அல்லது ஒன்று வழங்கப்படும். நான்காம் நூற்றாண்டுக்கு பிறகு, இந்த முஜ்தஹிதுகள் உய்த் தறிந்தவைகளை பின்பற்றி மக்கள் தொடர்ந்தனர். அந்த நீண்ட காலகட்டத்தில், எந்த ஒரு முஸ்லிமுக்கும் அவர்களின் எந்த விஷயத்திலும் தீர்வு கிடைக்காமல் விடப்பட வில்லை. ஆனால் பின்னர் வந்த எந்த அறிஞர்களும் அல்லது முஃப்திகளும் ஏழாவது நிலை முஜ்தஹித்களின் நிலைக்கு கூட கல்வி கற்கவில்லை. எனவே, இன்று நாம் நான்கு மத்ஹபுகளில் ஒன்றின் அறிஞர்களின் புத்தகங்களை படித்து புரிந்து கொள்ள முடியுமான ஒரு முஸ்லீம் ஒருவரிடம் கற்றுக் கொள்ள வேண்டும். மற்றும் அவரிடம் உள்ள மொழி பெயர்த்த புத்தகங்களிலிருந்து நமது இபாதத் மற்றும் அன்றாட வாழ்க்கையை அவற்றிற்கு ஏற்ப அமைத்து கொள்ள வேண்டும். அல்லாஹு தஆலா குர்ஆன் அல்-கரீமில் உள்ள அனைத்து விதிகளையும் பிரகடனப் படுத்தினான். அவனுடைய தூதர் நபிகள் நாயகம் (அலைஹி சலாம்) அவர்கள் அனைத்தையும் விளக்கினார்கள். அஹ்லுஸ்-ஸுன்னா அறிஞர்கள், சஹாபத் அல்-கிறாமிடம் இருந்து அவற்றை கற்றுக்கொண்டனர். அவர்கள் அவற்றை தங்கள் புத்தகங்களில் எழுதினார்கள். இந்த புத்தகங்கள் இப்போது உலகில் எல்லா இடங்களிலும் கிடைக்கின்றன. உலகின் எந்த பகுதியிலும் இறுதிநாள் வரை வரக்கூடிய ஒரு புதிய விடயத்தை செய்யும் முறையை இந்த புத்தகங்களில் உள்ள தகவல்களுடன் ஒப்பிடலாம். இந்த விடயம் சாத்தியமானது **குர்ஆன் அல்-கரீமின்** ஒரு அதிசயம் (**மு'ஃஜிசா**), என்பதுடன் இஸ்லாமிய அறிஞர்களின் ஒரு அசாதாரண அற்புதம் (**கறாமா**). உண்மையில், ஒருவர் எதிர்கொள்ளும் விவகாரத்தை எப்படி செய்வது என்பதை ஒரு உண்மையான ஸுன்னி முஸ்லிமிடம் கேட்டு கற்று கொள்வது மிகவும் அவசியமானது. மார்க்க கடமை செய்யும் மத்ஹபி அல்லாத ஒருவரிடம் கேட்கின்ற ஒருவர் ஃபிக்ஹ் நூல்களுக்கு முரணான பதில்களை பெறுவதுடன் தவறான வழியில் நடத்தப்படுகிறார்.

மேலே விளக்கியதுபோல், பாகிஸ்தான் மற்றும் இந்தியாவைச் சேர்ந்த இளைஞர்கள் மதுஹபு அல்லாதவர்களினால் ஏமாற்றப்படுகிறார்கள்.

அவர்கள் அரபு நாடுகளில் சில ஆண்டுகள் தங்கியிருந்து, அரபு மொழியை பேச கற்றுக்கொண்டு அவர்களின் நேரத்தை கேளிக்கை, இன்பங்கள் மற்றும் பாவமான விழியில் வாழ்க்கையை கழித்தவர்கள், அஹ்லுஸ் ஸுன்னாவுக்கு விரோதமான மத்ஹபு அற்றவர்களிடமிருந்து ஒரு முத்திரை யிட்ட காகிதத்தை பெற்றவர்கள். இவர்களின் போலியான டிப்ளோமாவை பார்த்து அரபு மொழி பேசுவதை கேட்டு இளைஞர்கள் அவர்கள் மார்க்கவாதிகள் என்று நினைக் கிறார்கள். இருப்பினும், அவர்கள் ஃபிக்ஹ் நூல்களை புரிந்து கொள்ள முடியாதவர்கள். அல்லது நூல்களில் உள்ள ஃபிக்ஹ் போதனைகள் எதுவும் அவர்களுக்கு தெரியாது. உண்மையில், அவர்கள் இந்த மதபோதனைகளை நம்புவதுமில்லை; அவர்கள் அவற்றை தவறானவை என்று அழைக்கிறார்கள்.

முந்திய இஸ்லாமிய அறிஞர்கள், கேள்விகளுக்கான பதில்களை ஃபிக்ஹு நூல்களில் தேடினார்கள், கேட்டவர்களுக்கு அவர்கள் கண்டறிந்த பதில்களைக் கொடுத்தனர். ஆனால் மத்ஹபில்லாத மார்க்க பதவிகளை வகிப்பவர்கள் ஃபிக்ஹு நூல்களை படிப்பதற்கு அல்லது புரிந்து கொள்வதற்கு தகுதியற்றவர்கள். அவருடைய அறிவற்ற தலைக்கும், குறைபாடுள்ள மனதிற்கும் என்ன தோன்றுகிறதோ அதை சொல்லி, கேள்வி கேட்பவர்களை தவறாக வழிநடத்துகிறார்கள். மேலும் அவர்களை நரகம் செல்லும் ஆளாக்கி விடுகிறார்கள். இதைத்தான் நமது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) கூறினார்கள்: "**நல்ல அறிஞர் மனிதகுலத்தில் சிறந்தவர். ஒரு கெட்ட அறிஞன் மனித குலத்தில் மிக மோசமானவன்**". இந்த ஹதீது ஷரீப் அஹ்லு ஸுன்னாவின் அறிஞர்கள் மனிதகுலத்தில் சிறந்தவர்கள் என்று காட்டுகின்றது. மத்ஹபில்லாதவர்கள் மனித குலத்தில் மிக மோசமானவர்கள். ஏனெனில் முந்தியவர்கள், ரசூலுல்லாஹ்வை பின் தொடர்ந்து மக்களுக்கு சொர்க்கத்திற்கு வழிகாட்டினார்கள். பிந்தியவர்கள் அவர்களின் மதவெறி எண்ணங்களுக்கு வழிகாட்டி, அதாவது; நரகத்திற்கு அழைத்து செல்கிறார்கள்.

மாஸ்டர் இப்னு கலீஃபா அலிவி, ஜாமி அல்-அஸ்ஹர் இஸ்லாமிய பல்கலை கழகத்தில் பட்டம் பெற்றவர், **அகீதத் அஸ்-ஸலபி வல்-கலாஃப்** என்ற நூலில் எழுதினார். "அல்லாமா அபுஸுஹ்ரா தனது **தாரிக் அல்மதாஹிபில் இஸ்லாமிய்யா** என்ற நூலில் எழுதியது போன்று; ஹிஜ்ரி நான்காம் நூற்றாண்டிற்கு

பிறகு ஹன்பலி மத்ஹபுடன் கருத்து வேறுபாடு கொண்ட சிலர் தங்களை **சலஃபிய்யீன்** என்று அழைத்துக் கொண்டனர். ஹன்பலி மத்ஹபை சேர்ந்த அபுல்-ஃபராஜ் இப்னு அல்-ஜவ்ஸி (ரஹ்மத்துல்லாஹி அலைஹி) மற்றும் பல அறிஞர்கள்; அந்த 'ஸலஃபிகள்' ஸலஃப் அஸ் ஸாலிஹீன்களை பின்பற்றுபவர்கள் அல்ல, அவர்கள் முஜஸ்ஸிமா கூட்டத்தை சேர்ந்த பித்அத்'வாதிகள் என்று பிரகடனம் செய்தார்கள். அவர்களின் **ஃபித்னா** (முஸ்லிம்களுக்கும் இஸ்லாத்துக்கும் தீங்கு விளைவிக்கும் அறிக்கைகள் மற்றும் செயல்கள்) முஸ்லிம்களுக்கிடையில் பரவுவதை தடுத்தார்கள். ஏழாம் நூற்றாண்டில் இப்னு தைமியா இந்த ஃபித்னாவை மீண்டும் தூண்டினார்."[1]

மத்ஹபு அற்றவர்கள் 'ஸலஃபிய்யா' என்ற பெயரை ஏற்று அழைக்கின்றனர். இப்னு தைமியா "சலஃபிகளின் பெரிய இமாம்". இந்த வாசகம் உண்மைதான் 'ஸலபி' என்ற சொல் அவருக்கு முன் இருக்கவில்லை. ஸலஃப் அஸ்ஸாலிஹீன்கள் தான் இருந்தார்கள், அவர்களுடைய மதுஹபு அஹ்லுஸ் ஸுன்னா. ஆனால் இப்னு தைமியாவின் மதவெறி நம்பிக்கைகள் வஹாபிகளுக்கும் மற்றும் மத்ஹபி அல்லாதவர்களுக்கும் ஆதாரமாக அமைந்தன. இப்னு தைமியா ஹன்பலி மத்ஹபில் படித்தவர், அவர் சுன்னியாக இருந்தவர். இருப்பினும், அவர் தனது அறிவை அதிகரித்து, ஃபத்வாவின் தரத்தை அடைந்த போது அவர் தனது சொந்த கருத்துக்களை பாராட்ட தொடங்கினார், அஹ்லுஸ்-ஸுன்னா அறிஞர்களை (ரஹ்மத்துல்லாஹி தாலா அலைஹிம் அஜ்மஈன்) விட தன்னை மேலாக கருதினார். அவருடைய அறிவின் அதிகரிப்பு அவரை வழி தவறுதலுக்கு கொண்டு சேர்த்தது. அவர் இப்போது ஹன்பலி மத்ஹபில் இருக்கவில்லை, ஏனெனில் நான்கு மதுஹபுகளில் ஒன்றில் அஹ்லுஸ் ஸுன்னா நம்பிக்கைகளை வைத்திருக்க வேண்டும். அஹ்லுஸ் ஸுன்னா நம்பிக்கை இல்லாதவர் ஹன்பலி மத்ஹபில் இருப்பதாக கூற முடியாது. மதுஹபு அற்றவர்கள் தங்கள் சொந்த நாட்டில் அஹ்லுஸ்-ஸுன்னாவை

---

[1] **அகிதத் அஸ்-சலஃபி வல்-கலாஃப்**, 340 பக்கங்கள், டமஸ்கஸில் அச்சிடப்பட்டது 1978/1398; ஸலபிகள் மற்றும் வஹாபிகளின் பல பித்அத்துக்கள். அஹ்லுஸ்ஸுன்னாவைப் பற்றிய அவதூறுகளும் அவற்றுக்கான பதில்களும் விவரமாக எழுதப்பட்டுள்ளன

சேர்ந்தவர்கள் செய்யும் மார்க்க கடைமைகளை குறை கூறுவதற்கு கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தி கொள்கிறார்கள். அவர்கள் அனைவரும் அஹ்லுஸ் -ஸுன்னா நூல்களை படிப்பதையும் அதன் போதனைகளை கற்றுக்கொள்வதையும் தடுக்கும் முயற்சிகள் தந்திரங்கள் செய்கிறார்கள். உதாரணமாக, ஒரு மதுஹபு இல்லாத ஒருவர், எனது பெயரை குறிப்பிட்டு, "மார்க்க அறிவில் மருந்தாளருக்கு அல்லது கெமிஸ் டுக்கு என்ன வேலை? அது என்ன வணிகமா? அவர் அவருடைய சொந்த துறையில் வேலை செய்ய வேண்டும், எங்கள் வேலையில் தலையிடக்கூடாது." என்றார். என்ன ஒரு அறியாமை, முட்டாள் தனமான கூற்று!. ஒரு விஞ்ஞானிக்கு மார்க்க அறிவு இருக்காது என்று அவர் நினைக்கிறார். முஸ்லீம் விஞ்ஞானிகள் தெய்வீக சக்தியை (இலாஹி உடைய சூரியனை) ஒவ்வொரு கணமும் கவனிக்கின்றார், **"படைப்பாளனும் படைப்பு களும்"** என்ற நூலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள உயர்ந்த படைப்பாளனின் பரிபூரணங் களை உணருகிறார் என்ற உண்மை அவருக்கு தெரியாது. மற்றும், தொடர்ந்து தஸ்பீஹ் செய்வதன் மூலம் அல்லாஹு தஆலாவுடைய எல்லையற்ற சக்தியுடன் ஒப்பிடும் போது படைப்புகளின் இயலாமையை கண்டு உறுதிப்படுத்துவது (தஷ்பிஹ்). அல்லாஹு தஆலா அவன் எல்லா குறைபாடுகளை விட்டும் வெகு தொலைவில் இருக்கிறான் என்பதை உணருவது (தன்சிஹ்).

பிரபல ஜெர்மன் அணுவிஞ்ஞானி பௌதீகவியலாளர் மேக்ஸ் பிளாங்க் இதை மிகத் தெளிவாக அவருடைய நூல் Der Strom ல் வெளிப்படுத்தினார். இருப்பினும், இந்த மத்ஹபு இல்லாத அறிவாளி, வெளிநாட்டிலிருந்து தன்னை போன்ற வழிதவறிய மதவெறியர்கள் வழங்கிய ஒரு காகிதத்தை நம்பி, அவர் அதை அந்த நாற்காலியில் இருந்து பெற்றிருக் கலாம், மற்றும் வெளிநாட்டில் இருந்து விநியோகிக்கப்படும் தங்கத்தினால் ஒருவேளை மகிழ்ச்சி அடைந்திருக்கலாம், மத அறிவில் அவருக்கு ஏகபோக உரிமை இருப்பதாக கருதுகிறார். அல்லாஹு தஆலா இந்த கேடுகெட்ட மனிதனுக்கும் நம் அனைவருக்கும் நேர்வழி காட்டுவானாக. மேலும் தவறான ஆவணங்களை பயன்படுத்தும் இது போன்ற மார்க்கத்தின் திருடர்களின் வலையில் இருந்து அப்பாவி இளைஞர்களை பாதுகாப்பானாக, ஆமீன்!

உண்மையில், நான் 30 ஆண்டுகளுக்கும் மேலாக

மருந்தாளர் மற்றும் இரசாயன பொறியாளராக என் தேசத்திற்கு அர்ப்பணிப்புடன் சேவை செய்தேன். இன்னும், மார்க்க கல்வியறிவு பெறுவதில் ஏழு ஆண்டுகள் இரவும் பகலும் உழைத்து, நான் **இஜாஸா**வுடன் (டிப்ளோமா, வைத்திருப்பவரின் மார்க்க கல்வி அறிவின் அதிகாரத்திற்கு சான்று) கௌரவிக்கப்பட்டேன். ஒரு சிறந்த இஸ்லாமிய மார்க்க அறிஞர் செய்யித் அப்துல் ஹகீம் அர்வாசி, ரஹ்மத்துல்லாஹி தஆலா அலைஹி) வழங்கிய இஸ்லாமிய அறிவு. விஞ்ஞான அறிவியல் மற்றும் மார்க்க அறிவின் மகத்துவத்தின் கீழ் நசுக்கப்பட்டு, நான் எனது இயலாமை முழுமையாக பார்த்தேன். இந்த புரிதலில் நான் அல்லாஹு தஆலாவின் ஒரு தகுதியான வேலைக்காரனாக இருக்க முயற்சித்தேன். எனது பயம் மற்றும் கவலைகளில் மிகப்பெரியது எனது டிப்ளோமாக்கள் மற்றும் இஜாசாவின் வசீகரத்தில் விழுந்தது என்று நான் கருதுகிறேன். இந்த விடயங்களில் நான் ஒரு அதிகாரி. எனது பயம் எவ்வளவு பெரியதாக இருந்தது என்பதை என்னுடைய அனைத்து எழுத்துக்களிலும் தெளிவாக தெரியும். நான் எனது சொந்த யோசனைகளை அல்லது கருத்துக்களை எனது எந்த புத்தகத்திலும் எழுதவில்லை. நான் எப்போதும் என் இளம் சகோதரர்களுக்கு அஹ்லுஸ்-ஸுன்னா அறிஞர்களின் மதிப்புமிக்க எழுத்துக்களை முன் வைத்தேன். அவற்றை அரபு மற்றும் பாரசீகத்திலிருந்து மொழி பெயர்ப்பதன் மூலம், அவற்றின் மதிப்பை புரிந்து கொண்டவர்களால் போற்றப்பட்டன. எனது பயம் அதிகமாக இருந்ததால் எனக்கு புத்தகம் எழுதும் எண்ணமே இருக்கவில்லை. **அஸ் ஸவாய்க் அல்-முஹ்றிகா** வின் முதல் பக்கத்தில் உள்ள ஹதீஸ் ஷரீபை பார்த்த போது: "**ஃபித்னா பரவலாகி விட்டால், அதை அறிந்தவர் உண்மையை மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால், அவர் அல்லாஹ்'வினாலும் அனைத்து மக்களாலும் சபிக்க பட்டவராக இருக்கலாம்**"!.

நான் யோசிக்க ஆரம்பித்தேன். ஒருபுறம், அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்களின் மேன்மையை நான் அறிந்து கொண்டேன். மார்க்க அறிவை புரிந்து கொள்வதில், அவர்களின் காலத்துக்கு ஏற்ற விஞ்ஞான அறிவியல் அறிந்து கொள்வதில் அவர்களுக்கு இருந்த மன ஆற்றலின் திறன், இபாதத் மற்றும் தக்வாவில் அவர்களின் விடா முயற்சியை கண்டு என்னை நான் தாழ்த்திக் கொண்டேன், எனது சொந்த அறிவை அந்த

பெரிய அறிஞர்களின் அறிவுக்கடலுடன் ஒப்பிடும்போது வெறும் துளி எனக் கருதினேன். மறுபுறம், அஹ்லுஸ்ஸுன்னா அறிஞர்கள் எழுதிய நூல்களில் மிகவும் குறைந்த எண்ணிக்கையில் உள்ளவையே பக்தியுள்ள மக்களால் மட்டும் படித்து புரிந்து கொள்ள முடியும். மற்றும் மார்க்க கடமை செய்பவர்கள் அறியாத வழிகேடர்களுடன் சேர்ந்து ஊழல் செய்து மார்க்கத்துக்கு எதிரான வழிதவறிய புத்தகங்களை எழுதி உள்ளனர் என்பதை கண்டு நான் வருத்தப்பட்டேன்; ஹதீஸ் ஷரீஃபில் அறிவிக்கப்பட்ட அழிவின் அச்சுறுத்தல் என்னை பயமுறுத்தியது. மேலும், என் அன்பான இளம் சகோதரர்கள் மீது நான் உணர்ந்த பரிவு மற்றும் கருணை அவர்களுக்கு சேவை செய்வதற்கு என்னை கட்டாய படுத்தியது. அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்களின் நூல்களிலிருந்து எனது தெரிவுகளை மொழிபெயர்க்க ஆரம்பித்தேன். எனக்கு கிடைத்த வாழ்த்துக்கள் மற்றும் பாராட்டுகள் எண்ணற்ற எழுத்துக்களுடன், அவ்வப்போது மதஹபு அற்றவர்களின் விமர்சனங்களையும் அவதூறுகளையும் சந்தித்தேன். எனது மனசாட்சியில் என் சொந்த இக்லாஸில், மற்றும் விசுவாசத்தில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. என்னை படைத்த அல்லாஹு தஆலா மீது நம்பிக்கை வைத்தும், அவனுடைய தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம்) அவர்களின் ஆசீர்வதிக்கப்பட்ட ஆன்மாவின் பொருட்டும், மற்றும் அவனது அர்ப்பணிப்புள்ள ஊழியர்கள் பொருட்டும் தவஸ்ஸுல் (பரிந்துரை தேடி), நான் எனது சேவையை தொடர்ந்தேன். அல்லாஹுதஆலா நம் அனைவரையும் அவன் திருப்தியடையும் உண்மையான வழியில் சேர்த்து வைப்பானாக! ஆமீன்.

சிறந்த ஹனஃபி அறிஞர் முஹம்மது பாஹித் அல்-முதியி, எகிப்தில் உள்ள ஜாமிஅல்-அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் தனது **தத்ஹிர் அல்-ஃபுஆத் மின் தனி சில்-இ'ஃதிகாத்**: என்ற நூலில் எழுதியுள்ளார்; “எல்லா மனிதர்களிலும் மிக உயர்ந்த மற்றும் பரிபூரண ஆன்மாக்கள் நபிமார் (அலைஹி ஸலாத்து வஸ்ஸலாம்) களிடம் உள்ளன. அவர்கள் பிழை, தவறு, அறியாமை, விசுவாசமின்மை, மதவெறி, பிடிவாதம், நஃப்ஸை பின்பற்றுதல், வெறுப்பு மற்றும் பொறாமை ஆகியவற்றில் இருந்து பாதுகாக்கப் பட்ட வர்கள். நபிமார்களுக்கு அல்லாஹு தஆலா வெளிப்படுத்திய போதனைகள், அவன் அறிவித்த கட்டளைகள் மற்றும் தடைகள் ஆகியவை அனைத்தும்

உண்மையானவை எதுவும் தவறானவையோ அல்லது கலப்படமோ அல்ல. நபியவர்களுக்கு பிறகு, அவருடைய சஹாபா (தோழர்கள்) மிகவும் உயர்ந்தவர்கள் முதிர்ச்சியடைந்தவர்கள். ஏனெனில் அவர்கள் நபியவர்களின் சுஹ்பாவில் (தோழமையில்) பயிற்சி பெற்றவர்கள், அவர் களினால் தூய்மை படுத்தப்பட்டவர்கள், அவர்கள் எப்பொழுதும் நபியிடமிருந்து கேட்ட வற்றை எடுத்துரைத்து விளக்கினார்கள். அவர்கள் தெரிவித்தவை அனைத்தும் உண்மையானவை, மற்றும் அவை மேற்கூறப்பட்ட தீமைகளிலிருந்து அப்பாற்பட்டவை. அவர்கள் ஒருவருக்கொருவர் மதவெறி அல்லது பிடிவாதத்தால் முறண்படவில்லை. அல்லது அவர்கள் தங்கள் நஃப்ஸை பின்பற்ற வில்லை. சஹாபா அல்-கிராம் ஆயத்துகள் மற்றும் ஹதீஸ்களுக்கு விளக்கம் கூறியது, அல்லாஹுதஆலாவின் மார்க்கத்தை தெரிவிப்பதற்கு இஜ்திஹாதை பயன்படுத்தியது ஆகியன அவன் மனித இனத்துக்கு மற்றும் இந்த முஸ்லிம் உம்மத்தின் மீது அவனுடைய மாபெரும் அருட்கொடையாகவும் அவனது அன்பான நபி முஹம்மது (அலைஹி-ஸலாம்) மீது அவன் கொண்டிருந்த இரக்கமாகும். சஹாபா அல்-கிராம்கள் நம்பிக்கை கொள்ள மறுக்கும் காபிர்களிடம் கடுமையாகவும், ஆனால் அவர்கள் ஒருவருக்கொருவர் மென்மையாகவும் அன்புடனும் இருந்தார்கள் என்று குர்ஆன் அல்-கரீம் அறிவிக்கின்றது. அவர்கள் தொழுகையை விடாமுயற்சியுடன் செய்தனர், மேலும் அவர்கள் அல்லாஹு தஆலாவிடமிருந்து அனைத்தையும் மற்றும் சொர்க்கத்தையும் எதிர்பார்த்தார்கள். அவர்களின் இஜ்திஹாது களில், ஒருமித்த கருத்தை (இஜ்மா) அடைந்தவை சரியாக இருந்தது. அவை அனைத்தும் மறுமையில் வெகுமதி (தவாப்) பெறுவதற்கு தகுதியானவையாகவும் இருந்தன. ஆனால் உண்மை ஒன்று தான்.

"சஹாபத் அல்-கிராமுக்கு பிறகு உயர்ந்தவர்கள், அவர்களை பார்த்தவர்கள், அவர்களின் ஸுஹ்பாவில் பயிற்சி பெற்ற முஸ்லிம்கள் அவர்கள்தான் **தாபியூன்** என்று அழைக்கப் படுகிறார்கள். அவர்கள் தங்கள் மார்க்க அறிவு முழுவதையும் சஹாபத் அல்-கிராமிடம் இருந்து பெற்றனர். தாபியீன்களுக்கு அடுத்து உயர்ந்தவர்கள் தாபியீன்களை பார்த்து அவர்களின் ஸுஹ்பாவில் பயிற்சி பெற்றவர்கள். அவர்கள் **தபஅத்-தாபியூன்** என்று அழைக்க படுகிறார்கள். அவர்களுக்கு பல நூற்றாண்டுகளுக்கு பிறகு கேள்வி கேட்கும் நாள் வரை வரும் மக்களிடையே, மிக உயர்ந்தவர்கள்

அவர்களின் போதனைகளை கற்று அவர்களின் அடிச்சுவடுகளை பின்பற்றி, அதற்கேற்ப தங்களை மாற்றிக் கொண்டவர்கள். மார்க்கத்தை பின்பற்றுபவர்கள் மத்தியில் **சலஃப் அஸ்-சாலிஹீன்** (முதல் மூன்று தலைமுறை முஸ்லீம்கள், சஹாபா,தாபியூன் மற்றும் தபிஅத்-தாபியூன்) களுக்கு பிறகு வருபவர்களில், அறிஞர்கள் மற்றும் புத்திசாலிகள் ரஸூலுல்லாஹ் (சல்லல்லாஹு அலைஹி வசல்லம்) மற்றும் ஸலஃப் அஸ்ஸாலிஹீன்களின் போதனை களுடன் அவர்களின் வார்த்தைகளிலும், செயல்களிலும் இணைந்து போகின்றவர்கள். அவர்கள் நம்பிக்கைகள் மற்றும் செயல்களில் அவர்களின் வழி எதிலும் மாறாதவர்கள், மற்றும் இஸ்லாத்தின் வரம்புகளை மீறாதவர்கள். தன்னைப்பற்றி மற்றவர்கள் தவறாக பேசுவதைக் கண்டு அஞ்சாதவர்கள். அவரையும் அவருடைய மதத்தை பற்றியும் தவறாக பேசுபவர்களை பின்பற்றாமல் சரியான பாதையிலிருந்து பிரியாதவர். அவர் அறியாத வர்களின் வார்த்தைகளை கேட்பதில்லை. அவர் தனது ஆய்வையும் பின்பற்றுவதில்லை, அதனால், அவர் முஜ்தஹித் இமாம்களின் நான்கு மத்ஹபுகளுக்கு வெளியே செல்வதும் இல்லை. முஸ்லிம்கள் அத்தகைய அறிஞரை கண்டுபிடித்து, அவர்களுக்கு தெரியாததை அவரிடம் கேட்டு அறிந்து கொள்ளவேண்டும். அவர்கள் செய்யும் எல்லா வற்றிலும் அவருடைய ஆலோசனையை பின்பற்ற வேண்டும், ஏனென்றால் அத்தகைய அறிஞர் அல்லாஹு தாலா அவனது மனித படைப்புகள்கள் தவறு செய்வதில் இருந்து பாதுகாத்து மற்றும் அவர்களை எப்போதும் சரியாக செயல் படுவதற்காக உருவாக்கிய ஆன்மீக மருந்துகளை (ஆன்மாவை குணப்படுத்தும் அறிவு) அறிந்து மக்களுக்கு தெரியப்படுத் துகிறார். அவர் நோயுற்று இருக்கும், மற்றும் புரிதல் குறைவாக உள்ள ஆன்மாக்களை குணப்படுத்த முடியுமானவர். அத்தகைய அறிஞர் என்ன சொன்னாலும், செய்தாலும் அது இஸ்லாத்திற்கு இணக்கமானது. அவர் எல்லாவற்றையும் சரியாக புரிந்து கொள்கிறார். ஒவ்வொரு கேள்விக்கும் அவர் சரியாக பதில் சொல்கிறார். தான் செய்யும் அனைத்துக்கும் அல்லாஹு தஆலாவின் ரிளா (ஒப்புதல்,திருப்தி) உண்டு. அல்லாஹு தஆலா அவனது ரிழாவுக்கான வழிகளை காட்டுகிறான். ஈமான் கொண்டவர்களையும் அதற்குரிய நிபந்தனைகளை நிறைவேற்றுபவர்களையும் அல்லாஹு தஆலா

அடக்கு முறை மற்றும் பிரச்சனையிலிருந்தும் காப்பாற்றுகிறான். அவன், அவர்கள் நூர் (பிரகாசம்), மகிழ்ச்சி மற்றும் முக்தியை அடைய செய்கிறான். அவர்கள் செய்யும் எல்லா வற்றிலும் எப்போதும் அவர்கள் எளிதாகவும் வசதியாகவும் இருக்கிறார்கள். மீண்டும் உயிர்த்தெழும் நாளில், அவர்கள் நபிமார்கள் சித்திக்குகள், தியாகிகள் மற்றும் சாலிஹான முஸ்லிம்களுடன் இருப்பார்கள்.

“மார்க்க பதவியிலுள்ள ஒருவர், அவர் எந்த நூற்றாண்டில் வாழ்ந்தாலும், நபிகள் நாயகத்தின், அவருடைய சஹாபாக்களின் வார்த்தைகளை பின்பற்றவில்லை என்றால், அவருடைய சொல், செயல், மற்றும் நம்பிக்கைகள் நபியவர்களின் போதனைகளுடன் இணங்கி போகவில்லை என்றால், அவர் தனது நஃப்ஸ் மற்றும் சொந்த எண்ணங்களை பின்பற்றி இஸ்லாத்தின் வரம்புகளை மீறினால், அல்லது அவர் தனது சொந்த அறிவை பின்பற்றி, இஸ்லாத்தின் நுட்பமான அம்சங்களை எதிர்த்தால், மேலும், அவரால் புரிந்துகொள்ள முடியாத நான்கு மத்ஹபுகளின் போதனைகளின் எல்லைகளை மீறினால், அவர் மார்க்க பதவியில் உள்ள ஒரு ஊழல் (குழப்ப)வாதி என்று தீர்மானிக்க ப்படும். அல்லாஹுதாலா; அவருடைய கண்கள் சரியானதை பார்க்க முடியாமலும், காதுகள் சரியான வார்த்தைகளை கேட்க முடியாமலும் அவரது இதயத்துக்கு முத்திரை வைத்துள்ளான். அவருக்கு மறுமையில் கடினமான தண்டனைகள் இருக்கும். அல்லாஹு தஆலா அவரை விரும்ப மாட்டான். இம்மாதிரியானவர்கள் நபிமார்களின் விரோதிகள். அவர்கள் தாங்கள் சரியான வழியில் இருப்பதாக நினைக்கிறார்கள். அவர்கள் தங்களின் சொந்த நடத்தையை விரும்புகிறார்கள். இருப்பினும், அவர்கள் ஷைத்தானை பின்பற்று பவர்கள். அவர்களில் மிகச்சிலரே சுய நினைவுக்கு வந்து சரியான வழியில் மீண்டும் சேர்கிறார்கள். அவர்கள் கூறுவதெல்லாம் கண்ணியமானதாகவும், மகிழ்ச்சியானதாகவும் அல்லது பயனுள்ளதாகவும் தெரிகிறது. ஆனால் அவர்கள் நினைப்பது விரும்புவது அனைத்தும் தீயவை. அவர்கள் முட்டாள்களை ஏமாற்றி துரோகம் மற்றும் அழிவுக்கு வழி நடத்துகிறார்கள். அவர்களின் வார்த்தைகள் பிரகாசமாகவும் களங்கமற்ற பனி போன்றும் தெரியும். ஆனால், உண்மையின் சூரியன் வெளிப்படும் போது, அவை உருகி மறைந்து விடும். இந்த மார்க்க பதவியில் உள்ள தீயவர்களின்

இதயங்கள் கருமையாகி விட்டன. அவர்கள் அல்லாஹு தாலாவினால் முத்திரை வைக்கப்பட்டு **அஹ்ல் அல்- பித்'ஆ அல்லது மத்ஹபு இல்லாதவர்கள்** என்று அழைக்கப்படுகின்றனர். அவர்கள் நம்பிக்கைகள் மற்றும் செயல்கள் குர்ஆன் அல்-கரீமுடன், ஹதீது ஷரீஃபுகள் மற்றும் இஜ்மா அல்-உம்மாவுடன் இணங்கி போகவில்லை. அவர்கள் சரியான வழியில் இருந்து விலகியதுடன் முஸ்லிம்களையும் தவறாக வழி நடத்துகிறார்கள். அவர்களை பின்தொடர் பவர்கள் நரகம் செல்வார்கள். இவ்வாறு சலஃப் அஸ்ஸாலிஹீன்களின் காலத்திலும், அவர்களுக்கு பின்னர் வந்த மனிதர்களிடையேயும் மார்க்க பதவி நிலையில் இருந்த வர்களிலும் வழிதவறிய பலர் இருந்தனர். முஸ்லீம்களுக்கிடையே அவர்கள் உடலின் ஒரு பகுதியில் புற்று நோய் போன்றவர்கள். இந்த பகுதி நீக்கப்பட்டால் தவிர, ஆரோக்கி யமான பாகங்கள் பேரழிவை விட்டும் தப்பாது. அவர்கள் தொற்று நோயால் பாதிக்க பட்டவர் போன்றவர்கள். இவர்களுடன் தொடர்பில் இருப்பவர்களும் பாதிக்கப் படுவார்கள். அவர்களால் நாம் பாதிக்கப்படாதபடி அவர்களை விட்டு விலகி இருக்க வேண்டும்."

ஊழல் மதத்துரோக வழியில் மிகவும் ஆபத்தான மனிதர்களில் ஒருவரான இப்னு தைமியா தீங்கு விளைவித்தார். அவரது புத்தகங்களில், குறிப்பாக **அல்-வாசிதா**வில், அவர் **இஜ்மாஅல்-முஸ்லிமீன்** உடன் உடன்பட வில்லை, **குர்ஆன் அல்-கரீம்** மற்றும் ஹதீஸ் ஷரீபில் உள்ள அறிவிப்புகளுடன் தெளிவாக முரண்பட்டதோடு ஸலஃப் அஸ் ஸாலிஹீன்களின் வழியையும் பின்பற்றவில்லை. தனது குறைபாடுள்ள மனதையும் குளறுபடியுள்ள தீய சிந்தனைகளையும் பின்பற்றி வழி தவறினார். அவர் விரிவான அறிவு படைத்தவராக இருந்தார். அல்லாஹு த ஆலா அவரது வழிகேட்டிற்கும் அழிவுக்கும் அவருடைய அறிவை காரணமாக்கினான். அவர் தனது நஃப்ஸின் ஆசைகளை பின் பற்றினார். அவர் சத்தியத்தின் பெயரில் தனது தவறான மற்றும் மதவெறி கருத்துக்களை பரப்ப முயன்றார். மிகச்சிறந்த இஸ்லாமிய அறிஞர் இப்னு ஹஜர் அல்-மக்கி (ரஹ்மத்-அல்லாஹி தஆலா அலைஹி) தனது **அல்-ஃபதாவா அல்-ஹதீதியா** என்ற நூலில்: "அல்லாஹுதஆலா இப்னுதைமிய்யாவை வழிகேட்டிலும் அழிவுக்குள்ளும் தள்ளினான். அவரை குருடனாகவும் செவிடாகவும் ஆக்கினான் என்று எழுதியுள்ளார்கள். பல அறிஞர்கள்

அவரது செயல்கள் ஊழல் நிறைந்தவை மற்றும் அவருடைய அறிக்கைகள் பிழையானவை என்பதை ஆவணங்களுடன் நிரூபித்தார்கள். இஸ்லாமிய அறிஞர்கள் அபுல் ஹசன் அஸ்-சுப்கி, அவரது மகன் தாஜ்அத்-தின் அஸ்-சுப்கி, மற்றும் இமாம் அல்-இஸ்இப்னு ஜமா ஆகிய பெரிய அறிஞர்களின் நூல்களை படிப்பவர்கள், அவருடைய காலத்தின் ஷாஃபிஈ, மாலிகி மற்றும் ஹனபி அறிஞர்கள் அவருக்கு கூறிய பதில்கள் மற்றும் எழுதிய அறிக்கைகளை படித்தவர்கள் நாங்கள் கூறுவது சரி என்று உணர்வார்கள்.

“இப்னு தைமிய்யா தஸவ்வுஃபுடைய அறிஞர்களை பற்றி அவதூறுகளை பேசினார். மேலும், இஸ்லாத்தின் முக்கிய தூண்களாக இருந்த ஹஸ்ரத் உமர் மற்றும் ஹஸ்ரத் அலி (ரலியல்லாஹு த’ஆலா அன்ஹும்) அவர்கள் மீது சாடவும் அவர் தயங்கவில்லை. அவருடைய வார்த்தைகள் கண்ணியம் மற்றும் மரியாதையின் வரம்பை மீறின. மேலும் அவர் ‘செங்குத்தான பாறைகளில்’ அம்புகளை எறிந்தார் (அந்த புகழ் பெற்ற மேதைகள் மீது). அவர் சரியான வழியை கடைப்பிடிக்கும் அறிஞர்களை பித்அத் உடையவர்கள், வழிகேடர்கள் மற்றும் அறியாதவர்கள் என்றும் விவரித்தார்.

“இஸ்லாத்தில் ஏற்றுக்கொள்ள முடியாத கிரேக்க தத்துவஞானிகளின் ஊழல் கருத்துகள் தசவ்வுபுடைய மகான்களின் நூல்களில் இடம் பெற்றுள்ளது என்று அவர் கூறினார். அவற்றை தனது தவறான வழிதவறிய சிந்தனைகள் மூலம் நிரூபிக்க முயன்றார். உண்மையை அறியாத முஸ்லிம் இளைஞர்கள் அவரது வஞ்சகமான எழுத்துக்களால் தவறாக வழிநடத்தப்படலாம். உதாரணமாக, அவர் எழுதினார்:

[‘தஸவ்வுஃபு உடையவர்கள் தாங்கள் **லவ்ஹுல்-மஹ்பூலை**[1] பார்ப்பதாக கூறுகின் றார்கள். இப்னுசினா(அவிசென்னா) போன்ற தத்துவஞானிகள் அது **அன்-நஃப்ஸ் அல் ஃபலகியா** என்று கூறுகிறார். மனித ஆன்மா முக்தி அடையும் போது, விழிப்பு நிலையில் அல்லது தூக்கத்தில் ஆன்மா **அன்-நஃப்ஸ் அல்-ஃபலகியா** அல்லது **அல்-அக்ல் அல்-ஃபாலு**டன் ஒன்றுபடுகின்றது. இந்த

[1] லவ்ஹுல் மஃஹ்பூல் பற்றிய விரிவான தகவலுக்கு முடிவற்ற பேரின்பம், மூன்றாவது பாசிகல், அத்தியாயம் 36 இல் பார்க்கவும்

இரண்டோடும் இணைந்த பிறகு, உலகில் நடக்க இருக்கும் அனைத்துக்கும் காரணமான அவற்றில் இருக்கும் விடயங்கள் (மனித ஆன்மா)வுக்கு தகவல் ஆகின்றன என்று அவர் கூறுகிறார்கள். இவை கிரேக்க தத்துவ ஞானிகளால் கூறப்படவில்லை ஆனால் இப்னு சினா மற்றும் அவரை போன்று பின்னர் வந்தவர்களால் கூறப்பட்டது. இமாம் அபுஹமித் அல்-கஸ்ஸாலி, முகியித்தீன் இப்னு அல்-அரபி, அந்தலூசியன் தத்துவஞானி குத்புத்தீன் முஹம்மது இப்னு சபின் மற்றும் அவர்களை போன்றவர்களினாலும் கூறப்பட்டது. அவை தத்துவவாதிகளின் அறிக்கைகள். அவ்வாறானவை இஸ்லாத்தில் இல்லை. இவ்வாறான கூற்றுகள் மூலம் அவர்கள் சரியான பாதையில் இருந்து பிரிந்தார்கள். அவர்கள் ஷீஆக்களின் இஸ்மா யிலிய்யா, கராமிதிகள், பாத்தினிகள் போன்று முல்ஹிதுகள் ஆனார்கள். அவர்கள் அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்களின், ஹதீதுடைய அறிஞர்களின் புழைல் இப்னு இயாத் போன்ற தஸவ்வுபுடைய அறிஞர்கள் சரியான பாதையிலிருந்து விலகினார்கள். ஒரு புறம் தத்துவஞானத்தில் ஈர்க்கப்பட்டும் மறுபுறம் முஃ'தசிலா, குறாமிய்யா போன்ற பிரிவுகளுக்கெதிராகவும் போராடினார்கள்.

தசவ்வுபில் மூன்று குழுவினர் உள்ளனர்: முதலாவது ஹதீதையும் சுன்னாவையும் பின்பற்றுபவர்கள். இரண்டா வது குறாமிய்யா போன்று வழி தவறியவர்கள். மூன்றாவது இக்ஃவான் அஸ்சபா'வின் நூல்களையும் அபுஹய்யானின் போதனைகளையும் பின் பற்றுபவர்கள். இப்னு அறபி மற்றும் இப்னு சபீன் போன்ற தத்துவவாதிகள் அவற்றை தசவ்வுப் என்ற பெயரில் வெளியிட்டனர். இப்னு சினாவின் **ஆகீர் அல்-இஷாரத் அலா மகமில்-ஆரிஃபீன்** என்ற நூல் அது போன்ற பல அறிக்கைகளை கொண்டுள்ளது. மேலும், அல்-இமாம் அல்-கஸ்ஸாலியும் அதே போன்ற அறிக்கைகளை அவருடைய **அல்-கிதாப் அல்-மத்னுன், மிஷ்கத் அல்-அன்வர்** போன்ற அவரது சில நூற்களில் எழுதினார். உண்மையில், அவரது நண்பர் அபுபக்கர் இப்னு அல்-அரபி அதிலிருந்து அவரை காப்பாற்ற முயற்சித்தார். அவருடைய கவனத்தை தத்துவத்துடன் சிதறடித்து விட்டதாக எச்சரித்தார். ஆனால் அவரது எச்சரிக்கை தோல்வியடைந்தது. மறுபுறம், அல்-இமாம் அல்-கஸ்ஸாலி தத்துவவாதிகள் நம்பிக்கை அற்றவர்கள் என்று

கூறினார். அவரது வாழ்க்கையின் இறுதி கட்டத்தில் அவர் **சஹிஹ் அல்-புகாரியை** ஓதினார். சிலர் இது அவர் எழுதிய கருத்துக்களை கைவிட வைத்தது என்றார்கள். வேறு சிலர் அவரை குறை கூறுவதற்காக அந்த அறிக்கைகள் மற்றவர்களால் அல்-இமாம் அல்- கஸ்ஸாலிக்கு புனையப்பட்டது என்று கூறினார்கள். இமாம் அல்- கஸ்ஸாலி பற்றி பல்வேறு செய்திகள் உள்ளன. இந்த வகையில். சிசிலியில் கல்வி கற்ற ஒரு மாலிகி அறிஞர் முஹம்மது மசாரி, அண்டலூசிய அறிஞர் துர்துஷி, இப்னு அல்-ஜவ்சி, மற்றும் இப்னு உகைல் மற்றும் பலர் பல விஷயங்களை கூறியுள்ளார்கள்."]

"மேலே மேற்கோள் காட்டப்பட்ட இப்னு தைமியாவின் கூற்றுக்கள் அஹ்லுஸ் ஸுன்னா அறிஞர்களை பற்றிய அவருடைய தீய எண்ணங்களை தெளிவாக காட்டுகின்றன. சஹாபத் அல்-கிராம்களின் மிக பெரியவர்களில் ஒருவர் மீதும் இது போன்ற அவதூறு களை கூறினார். அஹ்லுஸ்ஸுன்னாவின் பெரும்பாலான அறிஞர்கள் வழிதவறியவர்கள் என்று களங்கப்படுத்தினார். இதற்கிடையில், அல்லாஹ்வின் பெரிய வலி மற்றும் **குதுப் அல்-ஆரிஃபீன்** ஹஸ்ரத் அபுல்-ஹசன் அஷ்-ஷாதுலியின் நூற்கள் **ஹிஸ்ப் அல் - கபீர்** மற்றும் **ஹிஸ்ப் அல்-பஹ்ர்** மீதும் அவதூறுகளை கூறினார். தஸவ்வுப்பின் பெரியார் முஹ்யித்தீன் இப்னு-அல்அறபி, உமர் இப்னு அல்-ஃபரித், இப்னு சபின் மற்றும் ஹல்லாஜ் ஹுசைன் இப்னு மன்சூர் போன்றவர்களை கெட்ட வார்த்தைகளை கொண்டு இழிவு படுத்தினார். அவரது காலத்து அறிஞர்கள் அவர் ஒரு பாவி மற்றும் வழி தவறியவர் என்று ஒருமனதாக அறிவித்தனர். இன்னும் சிலர் அவர் நம்பிக்கை அற்றவர்[1] என்று ஃபத்வாவை வெளியிட்டார்கள்.

[ஹிஜ்ரி 705 (1305)ல் இப்னு தைமியாவுக்கு எழுதப்பட்ட கடிதம் ஒன்று இவ்வாறு கூறுகிறது: 'ஓ என் முஸ்லீம் சகோதரனே, தன்னை சிறந்த அறிஞர் மற்றும் இக்கால இமாம்? என்று கருதிக்கொள்பவரே. அல்லாஹ்வுக்காக

---

[1] ஆழ்ந்த அறிவு பெற்ற இஸ்லாமிய அறிஞரான அப்த் அல்-கானி அன்-நப்லூசி அவர்கள் எழுதிய அல்-ஹதிகாத் அன்-நதியா என்ற புத்தகத்தில் 363 மற்றும் 373 வது பக்கங்களில் தஸவ்வுஃபுடைய இந்த மேலானவர்களின் பெயர்களை எழுதி அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருரு வலி என்றும், மேலும் அவர்களைப் பற்றி தவறாகப் பேசியவர்கள் அறியாதவர்கள் மற்றும் மூடர்கள் என்றும் கூறியுள்ளார்கள்.

உன்னை போற்றினேன். உமக்கு எதிராக இருந்த அறிஞர்களை நான் விரும்பவில்லை. ஆனால் நான் போற்று வதற்கு பொருத்தமில்லாத உமது வார்த்தைகளை கேட்டு குழப்பமடைந்தேன். ஒரு ஞானிக்கு சூரியன் மறைகின்ற போது இரவு தொடங்கும் என்பதில் சந்தேகம் இருக்கிறதா? நீர் சரியான பாதையில் செல்வதாகவும், **அல்-அம்ரு பில் மஃரூப், வன் நஹ்யி அனில்- முன்கர்** செய்து கொண்டிருப்பதாகவும் கூறினீர். உமது நோக்கம் மற்றும் எண்ணம் என்னவென்று அல்லாஹு தாலாவுக்கு தெரியும். ஆனால் ஒருவரின் இக்லாஸ் என்பது அவரது செயல்களில் இருந்து புரிகிறது. உமது செயல்கள் உனது வார்த்தைகளின் அட்டையை கிழித்துவிட்டது. தனது நஃப்ஸை பின்பற்றி மற்றும் நம்பத்தகாத வார்த்தைகளினால் ஏமாற்றப்பட்டு நீர் உமது காலத்தில் வாழும் மக்களை மட்டும் அவதூறு செய்யவில்லை, மறைந்தவர்களையும் நம்பிக்கை அற்றவர்கள் என்று வகைப்படுத்தியுள்ளீர். உமது காலத்தில் வாழ்ந்தாலும் ஸலஃப் அஸ்-ஸாலிஹின்களின் வாரிசுகளை தாக்குவதில் திருப்தியற்று சஹாபத் அல்-கிராம்கள் மீதும் அவதூறு செய்துள்ளீர். குறிப்பாக அவர்களில் மிகப் பெரியவர் ஒருவரை. பெரியவர் மறுமை நாளில் அவர் தனது உரிமைகளை கோருகின்ற போது நீர் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருப்பீர் என்று உம்மால் கற்பனை செய்து பார்க்க முடியுமா?. ஸாலிஹிய்யா நகரில் உள்ள ஜாமிஅல்-ஜபலின் மின்பரில் பிரசங்கம் செய்யும் போது, நீர் ஹஜ்ரத் உமர் (ரலியால்லாஹு அன்ஹு) அவர்களின் சில பிழையான அறிக்கைகள் காரணமாக பேரழிவுகள் நடந்தன என்று கூறினீர். என்ன பேரழிவுகள் நடந்தன? ஸலஃப் அஸ்-ஸாலிஹினிடம் இருந்து நீர் கேட்ட பேரழிவுகள் யாவை? நீர் ஹஸ்ரத் அலி (ரழியல்லாஹு தஆலா அன்ஹு) அவர்களிடம் முன்னூறுக்கும் மேற்பட்ட தவறுகள் இருந்தன என்று கூறினீர். ஹஸ்ரத் அலியிடம் இது உண்மையாக இருந்திருந்தால், உன்னிடம் சரியான கூற்று எப்போதாவது இருந்ததா? இப்போது நான் உமக்கு எதிராக செயல்பட ஆரம்பித் துள்ளேன். நீர் சரியான வரம்பை மீறியுள்ளதால், உனது அக்கிரமத்திலிருந்து முஸ்லிம் களை பாதுகாக்க முயற்சி செய்வேன். உமது சித்திரவதை வாழுகின்ற மற்றும் இறந்தவர்கள் அனைவரையும் சென்றடைந்து விட்டது. விசுவாசிகள் உனது தீங்கிலிருந்து தவிர்க்க வேண்டும்.

“தாஜுத்தின் அஸ்-சுப்கி, இப்னு தைமியாவின் சலஃப் அஸ்-சாலிஹினுடன் உடன்படாத விஷயங்களை பின்வருமாறு பட்டியலிட்டார்:

1- இப்னு தைமியா கூறினார் தலாக் ( இஸ்லாமிய விவாகரத்து) சரியாக உணரப்பட வில்லை [ஆகவே ஏற்புடையதல்ல]. குற்றப்பரிகாரமாக கஃப்பாரா தண்டப்பணம் செலுத்துவது அவசியம். இங்கே விவாகரத்தை ரத்துசெய்து, ஒரு உறுதிமொழிக்கு தேவையான அதிகஅளவு பணம் செலுத்தப்படவேண்டும். அவருக்கு முன் எந்த இஸ்லாமிய அறிஞர்களும் கஃபாரா செலுத்தப்படும்[1] என்று சொல்ல வில்லை.

2- அவர் கூறினார்: ஒரு பெண் மாதவிடாய் காலத்தில் ஹைளாக இருக்கும் நிலையில் அவளுக்கு சொல்லப்பட்டது செல்லுபடியாகாது.’

3- அவர் கூறினார்: ‘களா (அதன் உரிய காலத்திற்குப் பிறகு அந்த அமலை செய்வது) ஒரு தெரிந்தே தவிர்க்கப்பட்ட தொழுகை தேவையில்லை.

4- அவர் கூறினார்: ‘ஒரு பெண் மாதவிடாய் காலத்தின் போது கஃபாவை தவாஃப் செய்வது முபாஹ் (அனுமதிக்கப்பட்டது). அவள் கஃபாரா செலுத்த வேண்டிய தில்லை.

5- அவர் கூறினார்: ‘மூன்று தலாக் என்று கூறப்படும் தலாக் இன்னும் ஒரு தலாக்கே ஆகும். அப்படி கூறுவதற்கு பல வருடங்களுக்கு முன் முஸ்லிம்களின் ஒருமித்த (இஜ்மாஅல்-முஸ்லிமின்) முடிவுக்கு தனது எதிர்ப்பை திரும்ப த்திரும்ப வெளிபடுத்தினார்

6- அவர் கூறினார்: ‘இஸ்லாத்துக்கு பொருந்தாத ‘வரி’கள் அவற்றை கோருபவர்களுக்கு ஹலால் ஆகும்.

7- அவர் கூறினார்: வணிகர்களிடமிருந்து வசூலிக்கப்படும் இத்தகைய “வரி” கள், சகாத்துக்காக உத்தேசிக்கப்படாவிட்டாலும் கூட சக்காத்தில் அடங்கும்.

8- அவர் கூறினார்: எலி அல்லது அது போன்றது நீரில் இறக்கும் போது ‘நீர் நஜ்ஸ் ஆகாது (மத ரீதியாக

---

[1] **முடிவில்லா ஆனந்தம்** (**Endless Bliss**) எனும் நூலின் 6 வது பாகம் பதினைந்தாவது அத்தியாயத்தில், மற்றும் 5 வது பாகம் ஆறாவது அத்தியாயத்தில் ‘தலாக்’ வரையறுக்கப்பட்டு விரிவாக விளக்கப்பட்டுள்ளது

தூய்மையற்ற விஷயம்).

9- அவர் கூறினார்: 'ஜுனூபான (நிலையில் உள்ள முஸ்லிம் முழு உடலையும் கடமையான முழுக்கு செய்ய வேண்டும்) இரவில் குளிக்காமல் நஃபிலான அமலை, தொழுகையை செய்ய' அனுமதிக்கப்படுகிறது.

10- அவர் கூறினார்: 'வாக்கிஃப் (ஒரு சமூக நலன் நிறுவனத்துக்கு சொத்தை தானமளிக்கும் ஒரு வக்பு செய்பவர்) கூறிய நிபந்தனைகளை கருத்தில் கொள்ள வேண்டியதில்லை.

11- அவர் கூறினார்:'முஸ்லீம்களின் ஒருமித்த கருத்துடன் (இஜ்மாஅல்-உம்மா) உடன் படாதவர் நம்பிக்கையற்றவரோ, மறுப்பவராகவோ, அல்லது பாவியோ அல்ல.

12- அவர் கூறினார்: 'அல்லாஹுதாலா என்பவன் மஹல்-இல் ஹவாதித் மற்றும் துணிக்கைகளினால் ஆனவன்.

13- அவர் கூறினார்: 'குர்ஆன் அல்-கரிம் அல்லாஹு தாலாவின் தாத்தினால் (சாரம்) உருவாக்கப்பட்டது.

14- அவர் கூறினார்: ஆலம், அதாவது, அனைத்து படைப்புகளும் அவற்றின் வகைகளுடன் நித்தியமானவை

15- அவர் கூறினார்: 'அல்லாஹு தஆலா நல்லவற்றைப் படைக்க வேண்டும்.

16- அவர் கூறினார்:'அல்லாஹு தஆலாவுக்கு ஒரு உடல் மற்றும் திசைகள் உள்ளன; அவன் அவனுடைய இடத்தை மாற்றுகிறான்.

17- அவர் கூறினார்: 'நரகம் நித்தியமானது அல்ல; அது கடைசியில் வெளியேறும்.

18- அவர் நபிமார்கள் பாவமில்லாதவர்கள் என்ற உண்மையை அவர் மறுத்தார்.

19- அவர் கூறினார்: றஸூலுல்லாஹ் [சல்லால்லாஹு தஆலா அலைஹி வஸல்லம்] மற்றவர் களிடமிருந்து வேறுபட்டவரல்ல. அவருடைய பரிந்துரையின் மூலம் பிரார்த்தனை செய்ய அனுமதி இல்லை.

20- அவர் கூறினார்: றசூலுல்லாஹ்வை தரிசிக்கும் நோக்கத்துடன் மதீனா செல்வது பாவம்.

21- மேலும் அவர் கூறினார்: மேலும் பரிந்துரை (ஷஃபாஅத்துக்காக) கேட்க அங்கு செல்வது ஹராம்.

22- அவர் கூறினார்: '**தவ்ராத்** (தோராவின் அசல்) மற்றும் அல்-**இன்ஜில்** (**புதிய ஏற்பாட்டின்** அசல்) சொல்லகராதியில் அல்ல ஆனால் அர்த்தத்தில் மட்டுமே மாற்றப்பட்டுள்ளன.

"மேலே மேற்கோள் காட்டப்பட்ட பெரும்பாலான கூற்றுகள் இப்னு தைமியாவுக்கு சொந்தமானவை அல்ல என்று சில அறிஞர்கள் கூறியுள்ளார்கள். ஆனால் அல்லாஹு தஆலாவுக்கு திசைகள் இருப்பதாகவும், அவன் துனிக்கைகளால் ஆனவன் என்று அவர் கூறியதை மறுத்தவர் யாரும் இல்லை. [ஆனால் அவர் இந்த வார்த்தைகளை சொல்லி இருக்கக்கூடாது] பொதுவாக ஒப்புக்கொண்ட படி, அவரது அறிவு, மகத்துவம் மற்றும் மார்க்கம் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. ஃபிக்ஹு அறிவு , நீதி மற்றும் ஆய்வு உள்ள ஒருவர், முதலில் ஒரு விஷயத்தை ஆராய வேண்டும், பிறகு விவேகத்துடன் முடிவு செய்ய வேண்டும். குறிப்பாக, ஒரு முஸ்லிமை நம்பிக்கையற்றவர், ஈமானை இழந்தவர் அல்லது வழிதவறியவர் என்று மதிப்பிடுவதற்கு அல்லது அவருக்கு மரண தண்டனை வழங்கு வதற்கு மிக நுணுக்கமான விசாரணையும் எச்சரிக்கையும் தேவை."

சமீபத்தில் சிலர் இப்னு தைமியாவை பின்பற்றுவது நாகரீகமாகி விட்டது. அவரது மார்க்கத்துக்கு எதிரான எழுத்துக்களை பாதுகாத்து அவரது புத்தகங்களை மீண்டும் உருவாக்குகிறார்கள். குறிப்பாக அவரது **அல்-வசிதா**வில் **குர்ஆன் அல்-கரீம்**, ஹதீஸ் ஷரீஃபுகள், மற்றும் இஜ்மா அல்-முஸ்லிமின் உடன் ஒத்துப்போகாத அவரது கருத்துக்கள் ஆரம்பம் முதல் இறுதி வரை இந்நூலில் நிறைந்துள்ளது. இது பெரும் ஃபித்னாவையும் பிரிவையும் தூண்டுகிறது, சகோதரர்களிடையே பகையை உண்டாக்குகிறது. இந்தியாவில் உள்ள வஹாபிகள், மார்க்கத்தை அறியாத மனிதர்களும் மற்ற முஸ்லிம் நாடுகளில் அவர்களின் வலையில் சிக்கியுள்ளனர். இப்னு தைமிய்யா அவர்களுக்கு ஒரு தரமான போசகர். அவர்கள் அவருக்கு 'பெரிய முஜ்தஹித்' மற்றும் 'ஷெய்குல்-இஸ்லாம்' போன்ற பெயர்களை கொடுத்துள்ளனர். மார்க்கம் மற்றும் நம்பிக்கை என்ற பெயரில் அவர்களுடைய வழிதவறிய கொள்கைகளையும், ஊழல் நிறைந்த எழுத்துக்களையும் தழுவிக் கொண்டுள்ளனர்.

முஸ்லீம்களின் மத்தியில் இருந்து கொண்டு

பிரிவினையை உண்டாக்கி இஸ்லாத்தை உள்ளே இருந்து இடித்துதள்ளுகின்ற இந்த பயங்கரமான சுளியோட்டத்தை நிறுத்து வதற்கு, அஹ்லு-ஸுன்னா அறிஞர்களால் சாட்சியங்களுடன் மற்றும் ஆவணங்களுடன் அவரை மறுத்து எழுதப்பட்ட மதிப்புமிக்க புத்தகங்களை நாம் படிக்க வேண்டும். பெரிய இமாம் மற்றும் ஆழ்ந்த கற்றறிந்த அறிஞரான தக்கிஅத்தீன் அஸ்-சுப்கி (ரஹ்மத் துல்லாஹி தஆலா அலைஹி) தனது மதிப்புமிக்க எழுத்துக்கள் **ஷிஃபா அஸ்-ஸிகம் ஃபி ஜியாரதி கைரி லனம்** என்ற புத்தகம் மூலம் இப்னு தைமிய்யாவின் வழி தவறிய கருத்துக்களை தகர்த்து, அவருடைய பிடிவாதத்தை பிரபலப்படுத்துகிறார். இது அவரது தீய நோக்கங்கள் மற்றும் தவறான நம்பிக்கைகள் பரவுவதை தடுக்கின்றது.

# சொல் அகராதி

தஸவ்வுஃப் தொடர்பான பதிவுகளை ஹஸ்ரத் அஹ்மத் அல்-ஃபாருக்கி அஸ்-சிர்ஹிந்தி (இமாம் ரப்பானி) யின் **மக்துபாத்** மூலம் சிறப்பாக கற்றுக் கொள்ள முடியும்.

**அப்தஸ்த்**: வுளு

**ஆபித்**: அனைத்துவகை வணக்கங்ககளை செய்பவர்

**அதா**: மூன்று வகை வ ண க க ங க க ளை அவற்றுக்குரிய நேரத்தில் செய்வது

**அதப்**: இஸ்லாமியஒழுக்கம், உயர்ந்த ஒழுக்கம், மரியாதை, கண்ணியம்.

**அதலா**: நீதி, ஒவ்வொரு தீர்க்கதரிசிக்கும் இருந்த ஏழு தனித்தன்மைகளில் ஒன்று

**அதம்**: இல்லாதது. அனைத்து படைப்பும் அவை இருப்புக்கு வரமுன் இருக்கவில்லை

**ஆதத்**: பழக்கவழக்கங்கள், மரபுகள்.

**ஆதத் -இலாஹிய்யா**: காரணம்.

**அதாப்**: தண்டனை, வேதனை.

**அதான்**: (சலாத்)தொழுகைக்கு அழைப்பு.

**அ தில ல ா- அ ல -ஷரியா**:இஸ்லாத்தின் நான்கு ஆ த ார ங்களிலிருந்து(குர்ஆன்,சுன்னா , கிய ாஸ அ ல -புகஹா,இஜ்மாஅல்-உம்மா). பெறப்பட்டஅறிவு

**அஃப்ளல்-அல்-முகல்லஃபீன்**: உடல் ரீதியாக செய்ய வேண்டிய ஏவல், விலக்கல் மற்றும் செய வ த ற கு அனுமதிக்கப்பட்ட அல்லது தவிர்க்கப்பட்ட விஷயங் களை விளக்குகிறது

**அ ஃ ப வு**: மன்னிப்பு, பொதுமன்னிப்பு. அல்லாஹுு தஆலா பாவங்களை அழிக்கிறான் முற்றிலும் மன்னிக்கின்றான் மற்றும் தீர்ப்பு நாளில் (அந்த ப ாவ த திற (கு) வேறு ஒருவரையும் பொறுப்பாக்க மாட்டான்

**அஹாதீத்அஷ்-ஷரீஃப்**: முஹம்மது நபி (அலைஹி ஸலாம்) அவர்களின் சொல், செயல்கள் மற்றும் பழக்க வழக்கங்கள்

**அஹ்காம்அஷ்ஷரிய்யா**:இஸ்லாத்தின் சட்ட விதிகள்,

**அஹதித்குத்ஸி**:குர்ஆன் அல்-கரீமுக்கு அல்லாஹுு தஆலாவின் விளக்கம், ஆனால் முஹம்மது (அலைஹி சலாம்) அவர்களின் வார்த்தைகளில்

**அஹ்காம்-பிக்ஹிய்யா**: ஏவல் விலக்கல் சம்பந்த மான இஸ்லாமிய சட்ட விதிகள்

**அஹ்காம்இலாஹியா**:அல்லாஹுு வின் கட்டளைகள்

**அஹ்காம்இஸ்லாமியா**:இஸ்லாமிய ஏவல் வி லக்கல்.

**அ ஹ் க ாம் - இ ஜ் திஹ ாதிய் ய ா**: இஜ்திஹாதினால் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய அஹ்காமின் அறிவு

**அ ஹ ல - அ ல - கித ாப**: அல்லாஹுுதஆலாவின் வேதத்தை உடையவர்கள்

**அஹ்ல்-அல்-கிப்லா**: வணங்கும் போது க'ஃபாவை முன் நோக்குபவர்கள்

**அ ஹ் ல் - அ ஸ் ஸுுன் ன ா- வ ல் -ஜமாஅத்**: சரியான ந ம பிக கையுடைய முஸ்லிம்கள் சுன்னி முஸ்லீம் என்று அழைக்க ப்படுகிறார்கள்.

**அஹ்ல்-அஸ்ஸுுன்னா**: ஒருவர் முஸ்லிம் ஆக இருப்பதற்கு அல்லாஹ்வின் வார்த்தையின் மீதான நம்பிக்கை.

**அஹ்லு பைத்**: முஹம்மது

ந பிஅ லைஹிச ல ாமின குடும்பத்தினர்

**அஹ்மதிகள்**: இந்தியாவில் ஆ ங கிலேய ர க ள ின ஏ ற ப ாட டின ால இஸ்லாத்தைவிட்டு வெளியே றியவர்கள்

**அ'இம்மத்அல்-மதாஹிப்**: அஹ்ல்-அஸ் ஸுன்னா நான்குபெரிய மதுஹபுகளின் தலைவர்களான இமாம்கள்

**அஜ்ர்**: (தாத் (புனித யுத்தம்) செய்யும் ஒரு முஸ்லி முக்கு ஆகிரத்தில் கொடுக்கப்படும் தவாப் நன்மை மற்றும் நற்பேறுகள்)

**ஆகிரத்**: மறுமை.

**அக்லாக்**: இஸ்லாமியஅறம், ஒழுக்கம், நடத்தை.

**அல்இல்ம்அல்முத்தகத்தீம்**: நித்திய, தெய்வீக அறிவு

**அல்அதில்லத் அஷ்ஷரியா**: குர்ஆன் அல்-கரீம், ஹதீஸ் ஷரீஃப், இஜ்மா அல்- உம்மா, கியாஸ் அல்-ஃபுகாஹா ஆகிய நான்கு ஆதாரங்களில் இருந்து விடயங்களை எப்படி கையாள்வது என்ற அறிவை. முஜ்தஹிதுகளான அறிஞர்கள் பெற்றனர்.

**அல்-அத்ல்**:அல்லாஹுதஆலாவின் பெயர்களில் ஒன்று: நீதமானவன்

**அ ல் - அ ஹ் க ாம் இ ஸ் ல ாமிய ா**: செய்ய வேண்டிய வணக்க வழிபாடுகள் மற்றும் செய்ய கூடாத வை பற்றிய போதனைகள் **புரூ அத்தீன்** என்றும் அழைக்கப்படும்

**அலைஹிமுர்ரிள்வான்**: சஹாபாத் அல் கிராம் கள் மீது பிரார்த்தனை

**அலைஹிமுஸ் ஸலாத்து வஸ்ஸலாம்**: நபிமார் கள்மீது ஸலாம் கூறுதல் மற்றும் பிரார்த்தனை

**அ லைஹிமுஸ் - ஸ ல வ ாத து-அத்தஹிய்யாத்**:, அனைத்து வணக்க வழிபாடுகளும் அல்லாஹ் தஆலாவுக்காக, மற்றும் நபியவர்களுக்கு சலாம் மற்றும் சாந்தி சொல்லி பிரார்த்தனை:

**அ லைஹிமுஸ் - ச ல வ ாத து-வத்தஸ்லிமாத்**:நபிமார் கள்மீது ஸலாம், சாந்தியை பிரார்த்திப்பது

**அலைஹி-ஸலாம்**: ஒரு நபி அல்லது ஒரு (மலக்கு) வானவர்மீது சாந்தி உண்டாகட்டும்

**அஹ்காம்**: நிர்ணயிக்கப்பட்ட சட்ட விதிகள் மற்றும் முடிவுகள்

**அஹ்ல்அல்-பித்ஆ**: நாஸ்களின் வெளிப்படையான பொருள்மீது நம்பிக்கை காரணமாக அஹ்லுஸ் ஸுன்னாவின் உண்மையான வழியிலிருந்து பிரிந்தவர்கள். அவர்கள் நரகத்தின் தண்டனை யில் ந தி திய ம ாக இருக்கமாட்டார்கள். பின்னர் நரகத்திலிருந்து மீட்கப்பட்டு சொர்க்கத்துக்கு அனுப்ப படுவார்கள்

**அலைஹி-ஸலாத்து-வஸ்ஸலாம்**: முஹம்மது நபி (அலைஹி-ஸலாம்)மீது. சலாம் மற்றும் அமைதி யை பிரார்த்திப்பது

**ஆலம்**:அல்லாஹுதஆலாவை'தவி ர மற்றஅனைத்தும் மா-சிவா என்றும் அழைக்கபடுகிறது.

**அ ல ாம த** : இ துவேறொன் றின் இருப்பை குறிப்பது

**ஆலம்-அல்அம்ரு**: கட்டளைக்கு உட்பட்ட வர்கள் ஏனெனில் அவை 'ஆகு; என்ற ஒரே கட்டளை யை கொண்டு படைக்கப்பட்டவை

**ஆலம் அல் கபீர்**: பிரபஞ்சம் முழுவதும்.

**ஆலம்-கல்க்**: ஒன்பது அ டுக குக ளைகொண ட பொருட் களின் வகுப்புகள். கல்க் என்பது பொருட்களின் 'பரிமாணம்,'

**ஆலம்-மிதால்**: உருவகங்களின் உலகம், போன்ற ஒரு உலகம்,

**ஆலம்- சஃகிர்**: மனிதன்.

**ஆலம்-ஷஹாதத்**: காணக்கூடிய உலகம். நாம் பார்க்கும் இந்த ஜட உலகம்

**அல்-அம்ரு-**

**பில்மஃருஃப்**:அல்லாஹுதஆலாவின் கட்டளைகளை கற்பிக்கும். கடமை

**அல்-அஷரத்-அல்-முபாஷ்ஷரா**: சுவர்க்கம் செல்லும் நற்செய்தி பெற்ற பத்து பேர்

**அல்-அஸ்மாஅல்-ஹுஸ்னா**: குர்ஆன் அல்-கரீமில் வெளிப்படுத்தப்பட்ட அல்லாஹு தாலாவின் 99 திரு நாமங்கள், பெயர்கள்

**அலவிஸ்**: றாஃபிதிகள் அல்லது ஷியா என்றும் அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் மனிதர்கள் பாவங்களை உருவாககுகிறார்கள், அல்லாஹு தஆலா நன்மையை மட்டுமே படைக்கிறான் என்று நம்புகிறார்கள். இது தவறான நிலை.

**அல்பகா**: அல்லாஹு தஆலாவுக்குரிய அஸ்-சிஃபத் அத்-தாதிய்யாவின் ஆறு பண்புகளில் ஒன்று இது அல்லாஹுதஆலாவின் முடிவற்ற இருப்பு மற்று ம் ஒருபோதும் அழியாத நிலையை குறிக்கும்.

**அல்-ஃபாதிலா**: ரசூலுல்லாஹ் (அலைஹி சலாம்) அவர்களின் கற்பு, புனிதம் மற்றும் உயர் தரம்

**அல்-ஃபிர்காத்அன்-நஜிய்யா**: பாதுகாக்கபட்டவர் களின் குழு.

**ஆலிம்**: இஸ்லாமிய அறிஞர்

**அலிம்**: அல்லாஹுதஆலாவின் முழுமையான எட்டு பண்புகளில் ஒன்று, அனைத்தையும் அறிந்தவன் என்று பொருள். இல்ம் (சர்வ அறிவு).

**அல்-ஜப்ர்-அல்முதஹாக்கிம்**: கட்டாயபடுத்துவது , அதிகாரத்தால் கட்டாயப் படுத்தப்பட்டது.

**அல-கலிமத்-அல்-இலாஹியா**:தெய்வீக வார்த்தை

**அல்லாஹுஅக்பர்**: அல்லாஹ் மிகப் பெரியவன்.

**அல்-மக்கத்அல்-முகர்ரமா**: மக்கா, முஹம்மது நபி (அலைஹி-ஸலாம்) பிறந்த இடம் இஸ்லாத்தின் புனித நகரம்.

**அல்-மகாம்அல்-மஹ்முத்**: ரசூலுல்லாஹ் (அலைஹிஸலாம்) அவர்களுக்குரிய மகிமை, புகழின் உயர்ந்த தரம்

**அல்-முகாலாஃபதுன் லில்-ஹவாதித்**: சிஃபத் அத் தாத்தியா எனப்படும் ஆறு பண்புகளில் உள்ளது. அல்லாஹு தஆலாவின் தாத் (சுயம்), அல்லாஹு தஆலா ஏனைய படைப்புகளிலிருந்து எல்லா வகையிலும் வேறுபட்டவன்.

**அல்-கிதம்**: சிஃபத் அத் தாத்தியா எனப்படும் ஆறு பண்புகளில் உள்ளது. **தாத்** (சுயம், சாரம்), அல்லாஹுதஆலா ஆரம்பம் இல்லாதவன் மற்றும் கடந்த காலத்திலும் நித்தியமானவன்.

**அல்-கியாமு பி நஃப்ஸிஹி**: சிஃபத் அத் தாத்தியா எனப்படும் ஆறு பண்புகளில் உள்ளது. அல்லாஹு தஆலாவின் **தாத்**(சுயம்), அல்லாஹு தாலாவின் சொந்த நித்தியம், இருப்பு எதற்கும் தேவையற்று இருப்பது.

**அல்-வஹ்தானியா**: சிஃபத்அத் தாத்தியா எனப் படும் ஆறு பண்புகளில் உள்ளது. அல்லாஹு தாலாவின்**தாத்**(சுயம்),அல்லாஹுதஆலாவுக்கு துணை

இல்லை. சமனான அல்லது பொருத்த மான எந்த கூட்டாளியும் இல்லை

**அல்-வசீலா**: ரசூலுல்லாஹ் (அலைஹி சலாம்) இருக்கும் உயர் தரம். அல்லாஹுஃ தாலாவை அணுகுவதற்கான வழிமுறை.

**அல்-வுஜூத்**: சிஃபத் அத் தாத்தியா எனப்படும் ஆறு பண்புகளில் உள்ளது அல்லாஹுஃ தாலாவிற்கே சொந்தமான தேவையான இருப்பு.

**அல்-யவ்ம் அல்-ஆகிர்**: கடைசி,முடிவு நாள்.

**அமல்ஷரியா**: இஸ்லாம் கட்டளையிடும் செய்வத ற்கான காரியங்கள்

**அமல்:** நடைமுறைகள், செயல்கள்.

**அமானா**: ஒவ்வொரு தீர்க்கதரிசிக்கும் இருக்கும் ஏழுதனித்தன்மைகளில் ஒன்று நம்பகத்தன்மை.

**ஆமந்து**: இமானின் ஆறு கோட்பாடுகள் (விதிகள்), ஆமந்து பில்லாஹி வமலாயிகத்திஹி, வகுதுபி ஹி வருஸுலிஹி, வலயவ்மில்ஆகிரி, வபில் கத்ரி கைரிஹி வஷர்ரிஹி மினல்லாஹி தஆலா வ'ல்-ப'ஃது பதஅல் மௌத், ஹக்குன் அஷ்-ஹது அன் லாஇலாஹ இல்லல்லாஹுஃ வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹுஃ வ ரசூலுஹுஃ

**அல்ஹம்துலில்லாஹ்**: அல்லாஹுஃ தஆலாவுக்கே புகழும் நன்றியும்

**அல்ஹம்துலில்லாஹிவஸலாமுன் இ ப ாதிஹில ல தினஸ்தபா**:பிரார்த்தனையில் அல்லாஹுஃ தாலா வுக்கு நன்றி மற்றும் புகழ்வது மற்றும் ,தேர்ந் தெடுக்கப்பட்ட வணக்கவாளிகளுக்கு சலாம்

**அ ல் - ஹ வ் த் அ ல் - க வுத ர்**: தீர்ப்புநாளில் ரசூலுல்லாஹ் (அலைஹி சலாம்) அவர்களின் உம்மதத்தினர் கூடும் போது சொர்க்கத்தில் அனேக நன்மைகளை பெறு வார்கள். பால் போன்ற வெள்ளை நிற ஆறு அல்லது குளம் அதில் ஒன்று

**அல்-இல்ம்அல்-லதுன்னி**:அவ்லியாக்களின் இதயங் களுக்கு அல்லாஹுஃ தஆலாவினால் உத்வேகம் கொடுக்கப்பட்ட அறிவு

**அ மீருல - முமின ீன**: விசுவாசிகளின்தலைவர்

**அம்னல்அஸ்ல்**: நுபுவ்வாவிலிருந்து (நபித்துவம்) நீக்கப்படுவதற்கு எதிரான பாதுகாப்பு. இது ஒவ்வொரு தீர்க்கதரிசிக்கும் இருந்த தனித் தன்மைகள் ஏழில் ஒன்று

**அம்ர் பில் மரூஃப்**: இஸ்லாத்தின் கட்டளைகளை, சுன்னாவை போதிப்பது மற்றும் பரிந்துரைப்பது

**அம்ர்**: கலாம்-அல் இலாஹிய்யாவில் (அல்லாஹுஃ தாலாவின்பேச்சில்) உள்ள நிறைவேற்ற வேண்டிய கடைமைகள் பற்றி கூறுகிறது

**அன்சார்**: மக்கா வெற்றிக்கு முன் இஸ்லாத்தை தழுவிய மதீனாவாசிகள்

**அகாயித்**: நம்பிக்கைகள்.

**அக்கில்**: விவேகம் கொண்டவர்

**அக்ல்சலீம்**: தீயதை விட நல்லதை, பயனுள்ளதை தெரிவு செய்யும் அக்ல்

**அக்ல் சகீம்**: இந்த ஞானம் அதன் செயல்கள் மற்றும் சிந்தனைகளில் தவறு செய்வது. அதனால் துக்கம்,மனவருத்தம், தீங்கு மற்றும் துன்பத்தை அடைகிறது

**அ க ல**: அ றிவுத திற ன. மூளையிலிருந்து, ஷைத்தான் மற்றும் நஃப்ஸ் என்பவற்றிலிருந்து வரும் நல்ல, மற்றும் தீய அழுத்தங்களை ஆராய்ந்து வேறுபடு த்துகின்ற ஒரு சக்தி

**அக்லி**: அறிவுசார்ந்த, பகுத்தறிவு மற்றும் அறிவியல் அறிவு.

**அராஃப்**: சொர்க்கத்திற்கும் நரகத்திற்கும் இடை யில் உள்ள ஒரு கற்பனை இடம்

**ஆரிஃப்**: அறிவு உடையவர், ஞானி

**அஷ்'சபா'அத்துல்குப்ரா**:ரசூலுல்லாஹ் (அலைஹி -ஸலாம்) அவர்களின் உயர்ந்ததரம் கொண்ட பரிந்துரை

**அ ஸ் ம ாஅ ல் - ஹ ு ஸ் ன ா**: அல்லாஹு தஆலா வின்-1001பெயர்கள் மனிதர்களுக்கு வெளிப்படுத்தப் பட்டன. நபிமுஹம்மது (அலைஹி-ஸலாம்) அவர்களின் மார்க்கத்தில் அவற்றில் 99 - அஸ்மா அல்-ஹுஸ்னா' என்று அழைக்கப் படுகின்றன.

**அ ஷ் சிப த் - அ த் - த் தியா**: அ ல் ல ாஹு ுவுக் கே உரித்தா ன ஆறு பண்புகள். **தாத் உலூஹிய்யா** ((சுயமான தெய்வீகம் பண்புகள்). (**அல்-வுஜூத்**, **அல்-கிதம்**, **அல்-பகா**, **அல்-ஹ்தானியா**, **அல்-முகாலஃப லில்-ஹவாதித் அல்-கியாமு பி நஃப்ஸிஹி**).

**அ ஸ் - சிஃ ப த் அ த் - துபுதிய் ய ா**: அல்லாஹு தஆலா வின் உ லூஹிய ய த தின பரிபூரணமான எட்டு பண்புகள். **சிஃபத் அல்-ஹக்கிகிய்யா** என்றும் அழைக்கப்படுகிறது. [**ஹயாத்**-வாழ்வு, **இல்ம்**-சர்வஅறிவு, **சம்'உ**-கேட்டல், **பசர்**-பார்த்தல், **குத்ரா**-சர்வ வல்லமை), **கலாம்**-பேச்சு, **இராதத்** -தத்துவம், **தக்வின்**-படைப்பாற்றல். அல்லாஹு தாலா வின் எட்டு பண்புகளில் ஒ வ வொன றும தனித்துவமானவை, அவற்றின் சீரான நிலையில் எந்த மாற்றமும் இல்லை.அவற்றில் எதிலும் எந்த மாற்றமும் நடைபெறுவதில்லை. ஆனால் ஒவ் வொன்றும் அதனுடன் தொடர்புடைய படைப்பு களின் தரத்தில் வேறுபடுகின்றன.]

**அத்ஃபிபயான்**: அரபு மொழியில், ஒரு பெயர்ச் சொல்லின் அர்த்தத்தை விளக்குவதற்கு பாவிக்க ப்படும் ஒத்த கருத்து பெயர்ச்சொல், அத்ஃபி பயான் என்று அழைக்கப்படுகிறது.

**அர்-ரஹீம்**: அல்லாஹு தஆலாவின் பெயர். மிகவும் இரக்கமுள்ளவர் என்று பொருள்

**அ ர் ர ஹ் ம ான்** : அ ல் ல ாஹு தஅலாவின் பெய ர் அருள்பாலிப்பவன் என்று பொருள்

**அர்ஷ்**:எல்லா வானங்களையும் அனைத்து படைப்பு களையும் உள்ளடக்கிய எல்லையின் முடிவு

**அஸ்ஹாப்அல்-கஹ்ஃப்**: டார்சஸ் குகையில் இருந்த ஏழு நபர்கள் மற்றும் ஒரு நாய். ஒரு அழகிய செயலை செய்வதன் மூலம் உயர் தரத்தை பெற்றவர்கள். மார்க்கத்தின் எதிரிகள் அவர்களின் நிலத்தை ஆக்கிரமித்தபோது அவர்களின் இதயத் தில் உள்ள ஈமானை இழக்க நேரிடும் என்பதால் வேறு இடத்திற்கு இடம் பெயர்ந்தனர்.

**அஷ்அரி**: ஈமான் நம்பிக்கை சம்பந்தமான இரண்டு இ'திகாத்களில் ஒன்று. மாலிகி மற்றும் ஷாஃபி மதுஹபை பின்பற்றும் முஸ்லிம் ஒருவரின் நம்பிக்கை இதை பின்பற்றியது

**அஸ்ஹாப்**: முஹம்மது நபி (அலைஹி சலாம்) அவர்களின் தோழர்கள். அவர்கள் சஹாபத்-அல்-கிராம் என்றும் அழைக்கப்படுகிறார்கள்

**அ ஷ் ஹ ாப த ர ஜீஹ்** : இஜ்திஹாதுகளை ஒப்பீடு செய்ய

கூடிய திறன் கொண்ட அறிஞர்கள்

**பா(b)லிஃ**: பருவமடைதல்

**ப(b)கா**: ஆன்மீக மரணம்.

**ப(b)ஸர்**: அல்லாஹுதாலாவின் ப ர ிபூர ண ம ான எட்டுபண்புகளில் ஒன்று. அனைத்தையும் பார்ப்பவன் என்று பொருள்.

**ப(b)ஷீர்**: நற்செய்தியை அறிவிப்பவர், முஸ்லிம் களிடம் கேள்விகேட்கும் மலக்குகள் முப(b)ஷ் ஷிர் என்று அழைக்கப்படுவார்கள்.

**ப(b)சிரத்**: இதயத்தின் பார்வை. இதயத்தின் புரிந்து கொள்ளும் ஆன்மீக சக்தி

**பா(b)த்தின்**: இதயம் மற்றும் ஆன்மா.

**பா(b)த்தினி**: (குர்ஆன்அல்-கரீமின்) இரகசியமான , உட்பொருள்

**பை(b)த்-அல்-மால்**: இஸ்லாமியவரி, மற்றும் விநியோ கத்துக்கு பொறுப்பான நிதி நிர்வாக காப்பகம்

**பைய்யதுஅல்லாஹுவஜ்ஹாஹ்**: அல்லாஹு தஆலா ஒருவரின் முகத்தை பிரகாசமாக்குவா னாக என்று பிரார்த்திப்பது.

**பி(b)' ஃதா**: மக்களை சரியான பாதைக்கு அழைப்ப தற்காக அனுப்பப்படும் ஒரு தீர்க்கதரிசி

**பை(b)'அத்அர்-ரிள்வான்**:மரத்தின் அடியில், ரசூலுல் லாஹ் அலைஹிசலாம் அவர்களுக்கு விசுவாச உறுதிமொழிஎடுத்துக் கொண்ட 1400 முஸ்லிம்கள்

**அத்தஹியாத்**: துஆ; "அத்தஹிய்யாத்து லில்லாஹி வமுபாரகாத்து வஸ்ஸலவாத்து வத்தைய்யிபாத் து லில்லாஹி," என்று கூறப்பட்டது –அனைத்து பாராட்டுக்கள், அனைத்து பிரார்த்தனைகள் மற்றும் வணக்கங்கள் அல்லாஹு தாலாவுக்காக.

**அவ்லியா**: வலி என்பதன் பன்மை, அல்லாஹு தஆலா வினால் நேசிக்கப்பட்டவர்

**அவ்ரத்**: உடலின் அந்தரங்கமான பகுதிகள்.

**ஆயத் கரிமா**: குர்ஆன்அல்-கரீம் வசனங்கள்

**அய்ன் தாபித்தா**: நிலையான பொருள்.

**அ ஸ ாலி**: அ ல் ல ாஹு த ால ா ஒருபோதும் இருக்கா மல் இல்லை

**அஸீம்**: அவனும் அவனுடைய ப ண புக ளும பரிபூரணமானவை.

**அசிமத்**: ஒரு கட்டளையை ந ிறைவேற றுவ த ற கு, அதிகபலன் தரக்கூடிய கடினமான வழி

**அஸ்ரைல்**: தலைமையான மலக்குகள் நான்கு பேரில் ஒருவர்

**அஸ்வாஜி-தாஹிறாத்**: அல்லாஹு தஆலா'வின் தூதரின் தூய்மையான மனைவி மார்கள்

**ப(b)லஃஅத்**: பேசுவதிலும் எழுதுவதிலும் திறன் கொண்டவர்

**தஹ்ரி**: எந்த படைப்பாளனையும் நம்பாதவர்கள், நாத்திகர்கள்

**தாத்**: அல்லாஹு தாலாவின் சுயம்.

**தாத்-இலாஹி**: தெய்வீகமானவன் அவனே (அல்லாஹ் தாலா).

**தவ்க்ஸ்**: நேரடி அனுபவங்கள் மூலம் ஆன்மீக நிலைகளை சுவைத்தல்

**திக்ர்**: அறியாமையை வெளியேற்றுவது

**திக் ர் இ ல ாஹி**: அ ல் ல ாஹு வை நினைவூட்டுவது

**திம்மி**: இஸ்லாமிய அரசின் கீழ் சட்ட பூர்வமான பாதுகாப்புடன் வாழும் முஸ்லிம் அல்லாதவர்

**தீன்**: அல்லாஹுத்தஆலா, அவனுடைய தீர்க்க தரிசிகளுக்கு வெளிப்படுத்திய தெய்வீக வேத புத்தகங்கள் மூலம் நாம் அதை எப்படி பயன்

படுத்த வேண்டும் மற்றும் பயன்பெற வேண்டும் என்று நமக்கு அறிவுறுத்துகிறான். இந்த அறிவுறுத்தல் தீன் என்று அழைக்கப் படுகிறது.

**ளுஹா**: சூரிய உதயத்திற்கு ஒரு குறிப்பிட்ட நேரத்துக்கு பிறகு காலையில் குறைந்தது இரண்டு ரக்அத்துகள் தொழுமாறு அறிவுறுத்த ப்பட்டுள்ளது

**பி(b)த்அத்**:இஸ்லாத்தில்புதுமைகள்; (பன்மை: பித்அ')

**பி (b)த்'அத்-ஹசனா**: ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டில் இருந்து செய்யப்பட்ட சுன்னாவுக்கு மாற்ற மில்லாத புதுப்பித் தல் மற்றும் சீர்திருத்தங்கள்;

**பி(b)த்'அத் சய்யி'அ**: சுன்னாவுக்கு எதிராக இல்லாத புதுப்பித்தல் மற்றும் சீர்திருத் தங்கள், ஆனால் ஹிஜ்ரி முதல் நூற்றாண்டிற்கு பிறகு வந்தது

**பு(b)'ஃதிஃபில்லா**:அல்லாஹுதாலா வுக்காக காஃபிர் களை நோக்கி விரோதத்தை காட்டுவது

**பு(b)ராக்**: ஒரு வெள்ளை நிற, இவ்வுலகில் இல்லாத பாலினமற்ற வேகமாக செல்லக்கூடிய சொர்க் கத்தின் விலங்கு, முஹம்மது (அலைஹி-ஸலாம்) நபியை அவரது **மிஃராஜ்** பயணத்தின் போது சுமந்து சென்றது

**பு( b ) ர ஹ ானே- லிம மி**: விஞ்ஞானரீதியான கணித் தல் மூலம் புரிந்து கொள்வது

**கலீஃபா**: மார்க்க ஆட்சியாளர், (முஹம்மது நபி (அலைஹி-ஸலாம்) அவர்களின் வாரிசு

**தாய்ஸ்**: எழுப்பப்பட்ட மேடை

**ளலாலா**: வழி தவறிய குழுக்கள்.

**ளலாலாத்**: பிறழ்வு, தவறான வழி.

**தலில்**: ஆவணம், ஆதாரம்,சாட்சி .

**தாருல் ஹர்ப்**: இஸ்லாமிய ஆட்சியின் கீழ் இல்லாத நாடுகள்

**தாருல் இஸ்லாம்**: இஸ்லாம் ஆளும் மதமாக உள்ள நாடுகள். அங்கு முஸ்லிம்கள் தங்கள் மார்க்க நடைமுறைகளை சுதந்திரமாக செய்யலாம்

**தருரா**:ஒருவழிபாட்டு செயலை செய்யாமலிருப்ப தற்கு வலுவான நிர்ப்பந்தம்.

**.ஃபர்ள் அல்-கிஃபாயா**: (ஒரு சமூக கடமை).

**ஃபசாத்**: குழப்பம், கோளாறு.

**ஃ ப ாசிக** : இ ஸ ல ாமிய வரையறையை மீறுப வர், இழிவான பாவி.

**ஃ ப த ான ா**: அ திநுண் ண றிவு, ஒவ்வொரு தீர்க்கதரிசி க்கும் உள்ள ஏழு தனித் தன்மைகளில் ஒன்று

**ஃபத்வா**: அதிகாரம் இஸ்லாமிய மார்க்க அறிஞர் ஒருவரால் வழங்கப் படும் அ ங கீக ர ிக க ப ப ட ட மார்க்கதீர்ப்பு

**அப்ரார்**: நல்ல பழக்கவழக்கங்கள் மற்றும் பயனுள்ள செயல்கள் உள்ள முஸ்லிம்கள்

**அஸ்தகஃபிருல்லாஹ்**: பாவம் மற்றும் அறியாமை யிலிருந்து மனம் திருந்துவதற்கான பிரார்த்தனை

**அசலிய்யாத்**: இருப்பதற்கு ஆரம்பம் இல்லாத ஒன்று

**ஃபாஜிர்**: பாவம் செய்பவன்

**ஃபஹ்ரிஆலம்**: உலகின் மகிமை-முஹம்மது (ஸல்லல்லஹு அலைஹ் வசல்லம்)

**ஃபஹ்ரி காயினாத்**: பிரபஞ்சத்தின் மகிமை - முஹம்மது (ஸல்லல்லஹு அலைஹி வஸல்லம்)

**ஃபனா**: சுயஅழிவு, அல்லாஹு தஆலாவை தவிர அனைத்தையும்மறந்துவிடுவது **ஃபனாஃபில்லா**.சக்திவாய்ந்த காதலுடன் இருப்பது அது **ஃபனா கல்ப்** மற்றும் **ஃபனாநஃப்ஸ்** என்றும் அழைக்கப்படு கிறது.

**ஃபனாஃபிர்-ரசூல்** என்பது ரஸூலுல்லாஹ் (ஸல்லல்லாஹு அலைஹி வசல்லம்) மீது ஆழ்ந்த அன்பினால் பெறப்பட்டது

**பகிஹ்**: இல்முல் பிக்ஹின் அறிஞர்

**பக்கிர்**: ஒரு பக்தியுள்ள ஏழை முஸ்லிம். தனக்கு தேவை என்றாலும் உலக சொத்துக்கள் மீது ஆசை இல்லாதவர். இல்லை என்றாலும் அவரிடம் உள்ள சொத்துக்களை அல்லாஹுதாலாவின் பொருட்டு விட்டுக் கொடுப்பதற்கு தயங்காதவர் என்ற தரத்தில் உள்ளவர்.

**பக்ர்**: ஒருஉயர் பதவி. இதில் ஒருவர் தனக்கு தேவைப்படுவதைஅல்லாஹுதஆலாவிடமிருந்து மட்டுமே பெறுவதற்கு காத்திருப்பது.

**ஃபர்ள்**: இஸ்லாத்தின் கட்டளைகள் **ஃபர்ளு அல்-அய்ன்** அனைத்து முஸ்லிம்களும் கட்டாயம் செய்ய வேண்டியவை

களுக்கும், அவனது செயல்களுக்கு, எதிலும் எந்த தேவையும் இல்லாதவன்.

**க(g)ரிப்(b)**: துறந்தவர்கள்; அவர்களுக்கு உதவி மற்றும் ஆதரவளிக்க யாரும் இல்லாதவர்

**க(g)ஸ்ப்(b)**: மிரட்டி பணம் பறித்தல், அபகரித்தல்

**க(g)சா**: அல்லாஹு தாலாவின் பாதையில் போர் புரிதல்

**gகுஸ்ல்**: குளிப்பு, முழுக்கு, பிரசவம் மற்றும் மாதவிடாய், பாலியல் செயல்பாடுகளுக்குப் பிறகு, வணக்க வழிபாடு களை செய்ய முன் முழு உடலையும் கழுவுவது.

**ஃபய்ஸ்**: இதயத்தின் ஆன்மீக வளர்ச்சி. இதயத்துக்கு ஆன்மீக ஞானம், தொடர்பான தகவல்களை வழங்குவது

**பிக்ஹு**: குர்ஆன் அல்-கரீம் மற்றும் ஹதீஸ் போதனைகளின் அடிப்படையில் வகுக்கப்படும் இஸ்லாமிய சட்டம்

**பிராசாத்**: நுண்ணறிவு, தூர நோக்கு.

**ஃபிர்கத்அல்-எல்லா**: வழி தவறிய குழு, ஷியாக்கள்

**ஃபிரகத அல - மலுன** (சபிக்கப்பட்டவர் களின் குழு) வஹாபிகள் அல்லது நஜ்திகள். இவர்கள் சுன்னி களுக்கும் ஷீஆக்களுக்கும் விரோத மானவர்கள்

**ஃபிர்கத் அன்-நஜிய்யா**: நரகத்திலிருந்து பாதுகாக்க பட்டவர்களின் குழு

**ஃபிஸ்க்**: பாவம்

**ஃபித்னா**: முஸ்லீம்களுக்கும் இஸ்லாத்திற்கும் தீங்கு விளைவிக்கும் அறிக்கை அல்லது செயல்

**ஃப்ரீமேசன்ஸ்**: முஹம்மது நபி (அலைஹி சலாம்) அவர்களின் போதனைகளை நம்பாதவர்கள். எந்த மதத்திலும் இல்லாதவர்கள். மறுமை, இறந்த பின் திருப்பி எழுப்பப்படுவது, தீர்ப்பு நாள், சொர்க்கம் நரகம் என்பவற்றை ஏற்றுக்கொள்ளாதவர்கள்.

**ஃபுகஹா**: குர்ஆன் அல்-கரீம் மற்றும் ஹதீஸ் என்பவற்றை அடிப்படையாக கொண்டு இஸ்லாமிய சட்டத்தை (ஃபிக்ஹ்) தொகுத்த முஜ்தஹிதுகள்

**ஃபுறூ-அத்-தீன்**: ஷரீஅத் போதனைகள் செய்ய வேண்டிய நடைமுறைகள், மற்றும் செய்யக் கூடாத விஷயங்கள், உடலாலும் இதயத்தாலும் செய்யப்பட வேண்டியவை. மேலும் அவை **அல்-அஹ்காம் அல்-இஸ்லாமிய்யா** என்றும் அழைக்கப் படுகிறது.

**ஃபுரு**: இஸ்லாத்தில் கட்டளையிடப்பட்ட செயல்கள்

**கவ்து**: அல்லது **கவ்ஸ்**, ஒரு ஆன்மீகத்தை கடந்து செல்லும் அறிவு பெற்ற ஆன்மீக தலைவர்

**ஜின்**: நெருப்பிலிருந்து படைக்கப்பட்ட ஒரு உயிரினம், ம றைவ ான வ ர க ள , புத்திசாலிகள். தரவரிசையில் மலக்கு களை விட கீழ் நிலையில் இருப்பவர்கள்.

**கதப்**: கோபம்.

**கா(g)ஃபில்**: அல்லாஹுதஆலாவை மறந்தவர், உணர் வற்றவர்.

**க(g)னிமா**: போரில் கைப்பற்றப்பட்ட எதிரிகளின் சொத்து, யுத்தத்தின் மீதி

**க(g)னிய் முத்லாக்**: அல்லாஹுதாலாவுக்கு எதுவும் அவசியமில்லை. அவனுக்கும். அவனுடைய பண்பு

**ஃகீபத்**: ஒரு முஸ்லீம் அல்லது ஒரு திம்மியின் ரகசிய தவறுகள் பற்றி அவருக்கு பின்னால் பேசுவது. அது ஹராம்.

**ஹபீப்அக்ரம்**: பாக்கியம் பெற்ற அன்பர்

**ஹபீப்-அல்லாஹ்**: அல்லாஹு தஆலாவின் அன்புக் குரியவர்

**ஹதாஸ்**: வுழு அல்லது குளிப்பு இல்லாத நிலை

**ஹதீஸ்**: (ஹதீஸ் ஷரீஃப்) முஹம்மது (அலைஹி-ஸலாம்)அவர்களின் சொல்

**ஹதீஸ் குத்ஸி**: அல்லாஹு தாலாவின் வார்த்தை, முஹம்மது நபி (அலைஹி சலா)மின் அவர்களின் வ ார த தையில வெளிப்படுத்தப்பட்டது

**ஹாதித்**:பின்னர் படைக்கப்பட்டது

**ஹத்ரத்**: (அல்லது ஹஸ்ரத்) மரியாதையின் வெளிப்பாடு

**ஹஃபஸா**: அனைத்து மனிதர்களின் நல்ல மற்றும் கெட்ட செயல்களை பதிவு செய்யும் வானவர்கள். பதிவு செய்யும் நான்கு வானவர்களில் இருவர்

**ஹாபிஸ்**: ஒரு லட்சம் ஹதீஸ்கள் ஒன்றாக அவற்றை அறிவித்தவர்களின் வரிசை விபரங்களுடன் இதயத்தால் மனனமிட்டவர். (**காரி** பார்க்கவும்)

**ஹஜ்**: முஸ்லிம்களின் புனித யாத்திரை.

**ஹால்**: ஒரு ஆன்மீக நிலை.

**ஹலஃப் சாதிக்கீன்**: ஸலஃப் அஸ் ஸாலிஹீனுக்குப் பின் வந்த அஹ்லுஸ் சுன்னா அறிஞர்கள். ஹிஜ்ரி நானூறு ஆண்டு இறுதி வரை வாழ்ந்தவர்கள்

**ஹ ல ால** : இ ஸ ல ாத தில அனுமதிக்கப்பட்டது, சட்டபூர் வமானது

**ஹமலத் அல் அர்ஷ்**: அர்ஷை சுமக்கும் மலக்குகள்

**ஹம்து**: அல்லாஹு தாலாவுக்கு நன்றி பாராட்டு,

**ஹ மிய த - உ ல - ஜ ாஹிலிய ா**: வெறித த ன ம வைராக்கியம்,, தவறு ,நஃப்ஸின் மதவெறி.

**ஹன்னானா**: ரசூலுல்லாஹ் (அலைஹி சலாம்) தனியாகவிட்டு விலகிச் சென்ற போது அழுத காய்ந்த மரத்தின் அடி

**ஹகீகத்ஜமிஆ**: அனைத்தையும் தன்னுள் அடங்கி யுள்ளது

**ஹகீகத்**: உண்மை. ஹகீகத்தை அடைவதற்கு பாடு படுவது மற்றும் தஸவ்வுஃப் என்ற வழியில் முன்னேறுவது அவசியம்

**ஹுக்பா**: மறு உலகில் எண்பது ஆண்டுகள். மறுமையில் ஒரு வருடம் முந்நூற்று அறுபது நாட்கள் ஆகும். மறுமையில் ஒருநாள் இந்த உலகத்தின் எண்பது ஆண்டுகள் நீளமானது

**இஹாதத்**: எங்கும் சூழ்ந்து கொள்வது

**ஹக்**:உண்மையானது, சரியானது. மற்றும் அல்லாஹு

தஆலாவின் பெயர்களில் ஒன்று அல்-ஹக்

**ஹரஜ்**: கஷ்டம்.

**ஹராம்**: இஸ்லாத்தில் தடை செய்யபட்ட து

**ஹர்பிஸ்**:தார்-உல்-ஹர்பில் வாழும் நிராகரிப்பவர் மற்றும் இஸ்லாத்தின் அதிகாரத்தின் கீழ் இல்லாதவர்கள்

**ஹஷ்ர்**: அல்லாஹுஃ தஆலா மக்களை எழுப்பி தீர்ப்புக்காக கூட்டுவது

**ஹதிரா**: உயிரினங்களின் நினைவு.

**ஹவாரிஸ்**:நபிஈஸா அலைஹி-ஸலாமின் சிஷ்யர்கள்

**ஹவ்த் அல்-கவ்தர்**: சொர்க்கத்தில் மிக சுவையான தேன் நதி

**ஹய்**: அல்லாஹுஃத்தாலாவின் பரிபூரண மான எட்டு பண்புகளில் ஒன்று. என்றென்றும் உயிறுள்ளவன் என்று பொருள். ஹயாத் (உயிர் வாழ்க்கை).

**ஹஜ்ரத் ஆயிஷா**: ரசூலுல்லாஹ் (அலைஹி சலாமின்) மனைவி. ஹஸ்ரத் அபுபக்கர் (ரழி-அல்லாஹுஃ தஆலா அன்ஹுஃ அவர் களின் மகள்.

**ஹஸ்ரத்பாத்திமா**:ரசூலுல்லாஹ் (அலை ஹி ஸலாம்) அவர்களின் முதல் மகள்

**ஹஜ்ரத் கதீஜா**: ரசூலுல்லாஹ் (அலைஹி சலாம்) அவர்களின் அன்புக்குரிய முதல் மனைவி

**ஹஸ்ரத்**: (அல்லது ஹத்ரத்) மரியாதை மற்றும் மரியாதை வெளிப்பாடு

**ஹர்ஜ்**: கொந்தளிப்பு, சலசலப்பு,குழப்பம்.

**ஹிதாயத்**: சரியானவழி, அதன் விளைவாக இரட்சிப்புக்கும் வழிகாட்டுவது இது அல்லாஹுஃ தாலாவின் கட்டளையின் கீழ் மட்டுமே உள்ளது

**ஹிஜாப்**: முக்காடு.

**ஹிஜாஸ்**: சவூதி அரேபியாவின் மேற்குப் பகுதியில் உள்ள ஒரு பகுதி

**ஹிஜ்ரத்**,: முஹம்மது நபி (அலைஹி சலாம்) மக்காவி லிருந்து மதீனாவரை இடம் பெயர்வு

**ஹிஜ்ரி**: இஸ்லாத்தில் பயன்படுத்தப்படும் சகாப்தம், சந்திர கலண்டர்

**ஹிக்மா**: மறைக்கப்பட்ட காரணங்கள்.

**ஹிஸ்ஸ முஸ்தரக்**: கண்ணுக்கு தெரியாத ஐந்து உணர்வுஉறுப்புகளின் ஆற்றல் (உணர்வுகள்), அதாவது: ஹபிஸா (நினைவாற்றல்), வ ஹிம ா (பிரதிநிதித்துவம்,சக்தி),முதஸரிஃபா (நுண்ணறிவு சக்தி) மற்றும் ஹ ஸ ான த் - உ ல் - ஹ ய ால் (கற்பனை).

**ஹ ுப ் பிஃ பில ் ல ாஹ ்**: அல்லாஹுஃதாலாவை நேசிப் பவர்களை அல்லாஹுஃவுக்காக நேசிப்பது

**இஜ்திஹாத்**: ஒரு அயத் கரிமா அல்லது ஒருஹதீஸ் ஷெரீஃபில் மறைந்திருக்கும் பொருளை புரிந்து கொள்வதற்கு முடிவை அறிந்து கொள்வதற்கும் முஜ்தஹித்களான பெரிய அறிஞர்களால் செய்யப்படும் முயற்சி

**இல்ம்-ஹதீத்**: ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹுஃ அலைஹி வசல்லம் அவர்களின் பேச்சு நடத்தைகளை தொடர்பு படுத்தி விளக்குவது

**இல்ம் தஸவ்வுஃப்**: இதயம் மற்றும் ஆன்மாவை தூய்மை ப்படுத்துவதற்கு செய்ய வேண்டிய அல்லது தவிர்க்க வேண்டிய விஷயங்கள் வழிகளை விளக்குகிறது. இது இல்ம் அஹ்லாக் அல்லது இல்ம் இக்லாஸ் என்றும் அழைக்கப்படுகிறது

**இல்ம்**: சர்வ அறிவாற்றல், அல்லாஹுஃ தாலா வின்

பரிபூரண எட்டு பண்புகளில் ஒன்று

**இல்ம்-அல் ஹால்**: இஸ்லாத்தின் பிரதான கொள்கைகளை விளக்கும் புத்தகம்

**இமாம் அல்-அஃளம் அபு ஹனிஃபா** நுஃமான் இப்னு தாபித்: தலைவர் அஹ்ல் சுன்னா அறிஞர்களின் தலைவர்

**ஹதீதின்இமாம்**: மூன்று லட்சத்துக்கும் அதிகமான ஹதீதுகளை அவற்றை அறிவித்தவர்களின் தொடருடன் இதயத்தினால் மனனமிட்டவர்கள். அவர்கள் ஹதீதின் முஜ்தஹிதுகள் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

**இராதா**: நாட்டம், அல்லாஹுவின் தாலாவின் எட்டு பரிபூரணமான பண்புகளில் ஒன்று

**இராதா இலாஹி** : தெய்வீக விருப்பம்.

**இஸ்லாம்**: அல்லாஹு தஆலா அவனுக்கு அடிபணிவதற்கு உத்தரவிட்ட இஸ்லாத்தில் ஐந்து அடிப்படை அத்தியாவசியமாகிய மனிதனின் கடமைகள்

**இஸ்ராஃபில்**: பிரதான மலக்குகள் நால்வரில் ஒருவர்

**இஸ்தக்பால் கிப்லா**: கிப்லாவின் திசை

**இஸ்திஃபார்**:"**அஸ்தஃபிருல்லாஹ்**" எனது இறைவா (அல்லாஹுதஆலா) என்னை மன்னித்துவிடு என்று பிராத்தனை செய்வது

**இபாதத்**: ஷரி'அத்தில் வணக்க வழிபாடு செயல்

**இபாஹிஸ்** அல்லது **இபாஹதிஸ்**: முஸ்லிம்களின் மக்களை கொன்று, அவர்களின் சொத்துக்களை அநியாய மாக எடுத்துச்செல்வது 'ஹலால்' கூறும் வஹாபிகள் போன்றவர்கள். இது உண்மையில் ஹராம் ஆகும்

**ஹுஜ்ஜத்துல்இஸ்லாம்**: மூன்று இலட்சம் ஹதீஸ் களை இதயத்தால் மனப்பாடம் செய்தவர்

**ஹுகாமா**: மார்க்க அறிவை விஞ்ஞான அறிவு கொண்டு உறுதிப்படுத்துவதற்கு முயற்சிக்கும் முஸ்லிம்கள்

**ஹுலூல்** : ஊடுருவுவது.

**ஹுமுஸ்**: போரில் எதிரியிடமிருந்து எடுக்கப்பட்ட கனிமத் பொருட்களில் ஐந்தில் ஒரு பங்கு உலமாக் களுக்கு வழங்கப்படும்

**இஜ்மாஅல்-உம்மா**:.முஹம்மது நபி (அலைஹி சலாம்) அவர்களின் உம்மத்தின் ஒருமித்த கருத்து

**இஜ்மா**: நான்கு மத்ஹபுகளின் படி ஒருமித்த கருத்து,

**இஜ்திஹாத்**: சரியான முடிவுகளை வடிவமைப்பதற்கு முஜ்தஹிது எடுக்கும் முயற்சி மற்றும் சிந்தனை.

**இக்லாஸ்**: நேர்மையான பக்தி; எல்லாம் அல்லாஹு தாலாவுக்காக மட்டுமே செய்யும் எண்ணம் அல்லது நிலை,

**இக்தியார்**: விருப்பம். தெரிவு

**இலாஹி**:அர்த்தம்; 'ஓ அல்லாஹ்!'. அல்லாஹு வைப் போற்றும் கவிதைகளை படித்தல்

**இல்ஹாம்**: நல்ல எண்ணங்கள் கொண்டு வரும் மனித இதயத்தின் உத்வேகம்.

**இல்ம் அல் அஹ்லாக்**: நெறிமுறைகள்அறிவு

**இல்ம் அல் பிக்ஹு** : அறிவின் இந்த கிளை அப்ளல்-முகல்லஃபீன் எனும் அறிவியல் ஆய்வுகளை பற்றியது. அதாவது; புத்திசாலியாகவும், இளமையாகவும் இருப்பவர்கள் உடல் சம்பந்தப்பட்ட விஷயங்களில் எப்படி செயல்பட வேண்டும் என்று சொல்கிறது

**இல்ம்அல்-ஹதீத்**:அறிவின் இந்த கிளை நபி (ஸல்லல் லாஹு அலைஹி வசல்லம்) அவர்களின் பேச்சு (ஹதீஸ்கள்) நடத்தை (சுன்னத்) மற்றும் பழக்க வழக்கங்களை (ஹல்கள்) நுணுக்கமாக படிப்பது.

**இல்ம் அல் ஹால்**: மத அறிவு.

**இல்ம்-அல்-கலாம்**: இந்த அறிவியல் இஸ்லாத்தின் அடிப்படையான நம்பிக்கை கோட்பாடுகளை கற்பது

**இல்ம்-அல்-உசூல்-அல்-பிக்ஹு**: இந்தகிளை குர்ஆன் அல்-கரீமிலிருந்தும் ஹதீஸ் ஷரீஃப்களிலிருந்து ஃபிக்ஹை பெறும் வழிமுறைகளை கற்பது

**இல்ம்-அல்-உசூல்-அல்-ஹதீது**: இந்த அறிவியல் ஹதீஸ்களின் வ கைப ப டுத த லை கையாள்கிறது

**இல்ம்-அல்-உசுல்-அல்-கலாம்**: இந்த அறிவியல் கிளை குர்ஆன்அல்கரீம் மற்றும் ஹதீஸ் ஷரீஃப் களிலிருந்து இருந்து இல்ம் அல்கலாம் பெறப் படும் முறை பற்றி கற்பது

**இஜாசா**: (டிப்ளோமா), அதிகாரம் வைத்தி ருப்பவரின் இஸ்லாமிய அறிவுக்கு உத்தரவாதம் அளிக்கிறது

**இமாம்**:மஸ்ஜிதுகளில் முஸ்லீம் சமூகத்தின் வழிபாட்டுக்கு தலைவர்.

**ஈமான்**: இஸ்லாத்தின் அத்திவாசியமான வற்றில் நம்பிக்கை

**இன்ஷா**: கலாம்அல்-இலாஹியா (அல்லாஹு தாலா வின் வார்த்தை)யில் கூறப்படாத நடந்த அல்லது அது நடக்க இருக்கும் பல்வேறு பாடங்கள் இதில் விவரிக்க ப்படுகின்றது

**இன்ஷா அல்லாஹு தாலா**: அல்லாஹு த்தஆலா வின் விருப்பத்தில் உள்ளது

**இராதத் ஜூஸிய்யா**: பகுதி சுதந்திரமான விருப்பம்.

**இஸ்மா**: நபிமார்களுக்கு நுபுவ்வா ( தீர க்க தரிசனம ) தெரிவிக்கப்பட முன்னரும் அல்லது பின்னரும் எந்த சிறிய பெரிய பாவமும் செய்ய வில்லை. பாவத்திலிருந்து பாதுகாப்பு ஒவ்வொரு நபிக்கும் உள்ள ஏழு தனித்தன்மை களில் ஒன்று

**இஸ்திதராஜ**: அல்லாஹு தஆலாவின் பேரழிவுகளை அவற்றை பெறுபவருக்கு மறைக்கும் வகையில், நற்பேறு என்று சித்தரிப்பு மூலம் கொடுப்பது

**இஸ்திஃக்பார்**: ஒரு நபர் அவருடைய பாவங்கள், குறைகளை மறு உலகில் நரகத்தின் கசப்பான வேதனைகளை நினைத்து பயப்பட்டு நடுங்கி அல்லாஹு தஆலாவிடம் பாவமன்னிப்பை எதிர்பார்த்து. **"அஸ்தஃபிருல்லாஹ் அல் அளீம் அல்லதி லாஇலாஹ இல்லாஹுவல் ஹய்யுல் கய்யும் வஅத்துபு இலைஹி**." என்று மன்றாடுவது

**இஸ்திகாரா**: ஒருசெயலை செய்வதற்கு முன், அல்லாஹு தஆலாவின் வழிகாட்டுதலை கோருவது

**இஸ்திலா**: நுட்பமான அர்த்தம் [சம்பந்தப்பட்ட அறிவின் கிளைக்குரிய வித்தியாசமான அர்த்தம்].

**இத்திபாரி**: இருப்பதாக நினைப்பது.

**இத்திகாத்**: ஈமான், ஒருவரின் நம்பிக்கை கோட்பாடு.

**இத்மினன்**: இதயத்துக்கு இலகுவானது

**ஜப்ரயீல்**: நான்கு பிரதான மலக்குகளில் ஒருவர் (அலைஹி-ஸலாம்).

**ஜத்பா**: தெய்வீக ஈர்ப்பு

**ஜஹன்னம்**: நரகம்

**இல்ம் அத் தப்சீர்**: குர்ஆன் அல்-கரீமை விளக்குகின்ற அறிவியல்

**இல்ம் அத்-தஸவ்வுஃப்**. இந்தக் கிளை இல்ம் அல்-அ க ல ாக ( நெறிமுறைக ள ) என்றும் அழைக்கப் படுகிறது. அது நாம் மனதினால் செய்ய வேண்டிய மற்றும் செய்யக்கூடாத விடயங்களை மட்டும் விவரிக்கவில்லை, ஆனால் இதயப்பூர்வமான நம்பிக்கையில் இருக்க உதவுகிறது. முஸ்லிம் களுக்குஇல்ம்அல்பிக்ஹுவினால் கற்பிக்கப்படும் தங்கள் க ட மைக ளை நிறைவேற்றுவதை எளிதாக் குகிறது. மற்றும் ஒருவர் மரிஃபாவை அறிவை அடைய உதவுகிறது.

**இல்திபாத்**: உதவி செய்வது.

**ஜாயிஸ்**: அனுமதிக்கப்பட்டது, சாத்தியமானது

**ஜலால்**: அல்லாஹு தாலாவின் மாட்சிமை மற்றும் பெருந்தன்மை.

**ஜலீல்**: சரியான பண்புகளை கொண்டவர்

**ஜல்சா**: இரண்டு சஜ்தாக்களுக்கு இடையில் ஒரு கணம் அசையாமல் நிமிர்ந்து உட்கார்ந்து

**ஜமாஅ**: ஒருங்கிணைந்த இஸ்லாமிய வழிபாட்டாளர் சமூகம்

**ஜமாத் அத்-தப்லிகியா அல்லது (தப்லீக் ஜமாஅத்** ): வழிதவறிய குழு, இந்தியாவில் தோன்றிய (z) ஸின்திக்குகள்.

**ஜமால்**: அல்லாஹு தாலாவின் அழகு, மேலும் தஜல்லி அல்-ஜமால்

**ஜனாஸா**: முஸ்லிம்களின் இறுதி சடங்கு.

**ஜன்னா**: சொர்க்கம்.

**ஜிஹாத் அக்பர்**: (மிகப்பெரிய ஜிஹாத்) நஃப்ஸுக்கு எதிராக செய்வது.

**ஜிஹாத் கத்லி**: அரசு, அதன் ராணுவ பலம் மூலம் செய்யும் ஜிஹாத்,

**ஜிஹாத்கவ்லி**: பேச்சு மற்றும் எழுத்து மூலம் செய்யப்படும் ஜிஹாத், அது ஜிஹாத் கத்லியை விட சிறந்தது.

**ஜிஹாத்**: [அஹ்லு சுன்னா] இஸ்லாத்தை பரப்புவதற்கு பாடுபடுதல் அல்லது போராடுதல்

**ஜிஹ ாத - ஃ பீச பிலில ல ாஹ்** : அல்லாஹு த்தஆலா வின் பொருட்டு போராடுவது.

**ஜுனுப்**: மத ரீதியாக அசுத்தமானது

**ஜுனூன்**: பைத்தியம், இது இஸ்லாம் மீது அன்பு , மற்றும் வைராக்கியம்.

**ஜுஸ்**: குர்ஆன் அல்-கரீம். 30 **(ஜுஸ்)** ப குதிக ள ாக பிரிக்கப்பட்டுள்ளது

**கஃபா**: மக்காவில் அமைந்துள்ள இஸ்லாத்தின் மிக முக்கியமான மஸ்ஜித், மஸ்ஜித் அல்-ஹரம் என்று அ ழைக க ப ப டுகிற து. முஸ்லிம்கள் இதை நோக்கி தொழுகையை நிறைவேற்றுகிறார்கள்.

**கபீர்**: மிகவும் மேன்மையானவன்.

**க ாஃ பிர** : இ ஸ ல ாத தின உண்மையை நிராகரி ப்பவர்.

**காயினாத்**: படைப்பு

**கலாம் அல்-இலாஹி**: குர்ஆன் அல்-கரீம் (அல்லாஹு தாலாவின் தெய்வீக வார்த்தை, பேச்சு,).

**க ல ாம அ ல - இ ல ாஹிய ா**: அல்லாஹு தஆலாவின் வார்த்தை

**கலாம் லஃப்சி**: மனதில் நினைத்து தயார் செய்தவற் றை அதன் அர்த்தத்தில் வெளிப்படுத்தும் வார்த்தைகள்.

**கலாம் நஃப்சி**: சிந்தித்து அதை மனதில் தயார் செய்வது.

**கலாம்**: குர்ஆன் ஆயத்துகள் மற்றும் ஹதீஸ்களில் இருந்து பெறப்பட்டஅறிவு

**கலாம்**:, அல்லாஹுதாலாவின் பேச்சு, வார்த்தை. பரிபூரணமான எட்டு பண்பு களில் ஒன்று

**க லீம் - அ ல் ல ாஹ்** : மூஸ ா அலைஹிஸலாம் அல்லாஹு தஆலாவுடன் பேசிய தால் கலீம்-அல்லாஹ் என்று அழைக்கப் பட்டார்.

**கலிமத்அஷ்ஷஹாதா**:"**அஷ்ஹது அன்லா இலாஹ இ ல் ல ல் ல ாஹ் வ அ ஷ் ஹ து அன்ன முஹம்மதின் அப்துஹு வ ற சூலுஹ ு**." பூமியிலோ அ ல ல து வானத்திலோ,வணங்கபடுவதற் கு தகுதியானவன் அல்லாஹுதஆலாவை தவிர வேறு யாரும் இல்லை, எதுவும் இல்லை. மற்றும் முஹம்மது நபி (அலைஹி-ஸலாம்) அவர்கள் அல்லாஹு ததஆலா வின் அடிமையும் தூதருமாவார்"

**கலிமத் அத்-தவ்ஹீத்**: '**லா இலாஹ இல்ல ல்லாஹ், முஹம்மதுன் றசூலுல்லாஹ்**' [இதன்பொருள் :'அல்லாஹுதாலா இருப்பவன் மற்றும் ஒருவன். முஹம்மது (அலைஹி-ஸலாம்) அல்லாஹு தஆலாவினால் அனுப்பப்பட்ட தூதர்.']

**க லிம த் . தன்சீஹ்**:பிரார்த்தனை"**சுப்ஹா னல்லாஹி வபி ஹம்திஹி சுப்ஹானல்லாஹில் அளீம்**," ஒருவரின் பாவங்கள் மன்னிக்கபடவும் மற்றும் மீண்டும் பாவம் செய்வதற்கு எதிராக ஒருவரை பாதுகாக்கிறது

**கலிமத்-அல்லாஹ்**: ஈஸா ந பி( அ லைஹி- ஸ ல ாம ) இவ்வாறு ழைக்கப்பட்டார்கள். ஏனெனில் அவருக்கு தந்தை இல்லை, **அல்-கலிமத் அல்-இலாஹிய்யா** 'ஆகு!' என்ற (இறை வார்த்தை) யினாலேயே பிறந்தார்.

**காமில்**: சரியானவர், முழுமையானவர்

**கரஹா**: தொழுவதற்கு பாவமான நேர காலங்கள்,

**க ர ாம த்** : வ லிம ார் க ளின ால் இயற்கைக்கு அப்பாற் பட்டு நிகழ்த்தப்படும் அதிசயங்கள். (பன்மை. 'கறாமா')

**கரீம்**: அல்லாஹுதஆலாவி கருணை என்று பொருள்.

**கருபிய்யூன்**: தண்டனை செய்யும் வானவர்களின் தலைவர்கள்

**கஸ்ப்(b)**: கையகப்படுத்தல்.

**கஸ்ஃப்** தெய்வீக மர்மங்கள் அவிழ்ப்பு

**கத்ரத்தி வுஜூத்**: உயிரினங்களின் இருப்பு பற்றி அறிவதற்கு, ப டைத த் வ னையும படைப்பையும் பற்றி அறிவதற்கு அனைத்து படைப்புகளின் இருப்பை அங்கீகரிப்பதன் மூலம் போடப்படும் விதிகள் **கத்ரத்தி வுஜூத்** (பன்மை). என்று அழைக்கப்படுகிறது.

**கைஃபிய்யாத்**: நிஜம்.

**களா**:ஃபர்ளான வணக்கங்களை தொழுகை அல்லது நோன்பு போன்ற வணக்கங்களின் கடமையின் கடனை இறுப்பது.

**கஃப்ஃபாரத்**:ஒரு நாள் நோன்பை வேண்டுமென்றே விட்டதற்கு அபராதமாக 60 நாட்கள் நோன்பு இருப்பதுஅவசியம். இவ்வாறு கடனான கடமை யைசெய்வதுகஃப்ஃபாரத் என்று அழைக்க படும்.

**கபார்**: கலாம் அல்-இலாஹியா (அல்லாஹு தாலா வின் வார்த்தையில் பல்வேறு நடந்த நிகழ்வு களை அல்லது அது நடக்க இருக்கும் நிகழ்வு களை பாடங்களாக விவரிக்கின்றது ;

**கைர்**: நல்லது

**க ாலிக்** : அ ல் ல ாஹுத் த ால ாவின்

பரிபூரணமான எட்டு பண்புகளில் ஒன்று. படைப்பவன் என்று பொருள். தக்வின் (படைப்பாற்றல்).

**காரிஜிகள்**: இவர்கள் அஹ்லு-பைத்துகள் (நபிகள் நாயகத்தின் நெருங்கிய உறவினர்கள்) மீது விரோதமான போக்கை கொண்டிருந்தார்கள். அதாவது நமது மேன்மைமிக்க ஹஸ்ரத் அலி, ஹஸ்ரத் பாத்திமா (ரழியல்லாஹு தஆலா அன்ஹும்) அவர்களது பிள்ளைகள் மற்றும் சந்ததியினர் மீது. ஸுன்னி முஸ்லிம்களுக்கு மிகவும் நேச த் துக் குர ிய வ ர் க ள் . இப்போது அவர் கள்(காரிஜிகள்) யசீதிகள் என்று அழைக்க ப்படு கிறார்கள்.

**க(த்)தம்**: குர்ஆன் அல்-கரீமின் முழுமையான பாராயணம் (ஓதுவது)

**காத்தமல் அன்பியா**: கடைசி மற்றும் இறுதி நபி, முஹம்மது (அலைஹி சலாம்).

**ஹிலால்**: வுழு செய்யும்போது ஒன்றோடொன்று இணைந்த கை,கால் விரல்களுக்கிடையில் மற்றும் தாடி மயிர்களை விரல்களினால் குடைந்து கழுவுவது.

**ஹோஜா**: மார்க்க ஆசிரியர்.

**குதா**:அல்லாஹுதாலாவின்பாரசீக ப்பெயர். எப்பொ ழுதும் சுயமாக இருப்பவன், நித்திய மானவன்

**குலாஃபாஉ ரஷிதீன்**: நபி (ஸல்-அல்லாஹு அலைஹி வஸல்லம்)க்கு பின் வந்த நான்கு கலீஃபாக்கள்

**ஹுலுக்குள் அளீம்**: முஹம்மது நபியின் (அலைஹி-ஸலாம்) உயர்ந்த நிலை அந்தஸ்து, குர்ஆன் அல்-கரீமை முழுமையாக உள்ளடக்கிய நடத்தை யுடையவர்.

**ஹுஷு**: அர்ப்பணிப்பு, ஒன்றிப்பு, மரியாதை.

**குத்பா**: வெள்ளிக்கிழமை ஜும்ஆ நேரத்தில் செய்யப்படும் பிரசங்கம்.

**குவாஜா**: ஆசிரியர்,தலைவர்

**கிராமன் காதிபீன்**: அனைத்து நல்ல மற்றும் கெட்ட செயல்களையும் பதிவுசெய்யும் நான்கு மலக்கு களில் இருவர்

**குஃப்ர் ஹுக்மி**: குப்ரின் பொதுவாக அறியப்பட்ட அறிகுறிகளை தெரியாமல், அல்லது மக்களை சிரிக்க வைப ப த ற க ாக நகைச்சுவைக்காக பயன் படுத்துபவர்கள் குப்ருக்கு ஆ ள ாகுவ ார் க ள் . உதாரணத்திற்கு;, காபிர்கள் அவர்களின் வழிபாட் டின்போது சிறப்பாக அணிகின்ற பொருட்களை அணிவது ( பயன்படுத்துவது) குஃப்ர் ஆகும்.

**க ல ஃ ப் அ ஸ் - ஸ ாதிகின்** : சலஃப்அஸ்ஸாலிஹீனுக்கு பின் இரண்டாம், மூன்றாம் நூற்றாண்டுகளில் வந்த அஹ்ல் அஸ்-சுன்னா அறிஞர்கள்

**கலீல்-அல்லா**: இப்ராஹிம் நபி (அலைஹி-ஸலாம்) இவ்வாறு அழைக்கப்பட்டார். ஏனெனில் அவரு டைய உள்ளத்தில் படைப்புகளின் மீது அன்பு இருக்க வில்லை. அல்லாஹு தாலா மீதான அன்பு மட்டுமே இருந்தது

**ல'ஃப்**: விளையாட்டுகள், பொழுதுபோக்கு.

**லஹ்வ்**: அற்பமான வேடிக்கைகள் திசை திருப்பங் கள். இசை அல்லது பாடல் போன்றவை

**லா இலாஹ இல்லல்லாஹ்**: அல்லாஹு தாலா தவிர வணக்கத்துக்கு தகுதியான இலாஹ் இல்லை. அவன் அனைத்தையும் படைத்தவன்,

**லா-மதுகபி**: நான்கு மத்ஹபுகளில் ஒன்றையும் பின்பற்றாதவர் ;ஸுன்னி அல்லாதவர்.

**லாதைப்**: லத்தீப் என்பதன் பன்மை,

உணர்வு உறுப்பு களுக்கு கொடுக்கப்பட்ட கருத்து பெயர்கள் **இதயம், ஆன்மா, சர், காஃபி** மற்றும் **அக்ஃபா**.

**லத்திப்**f: மிகவும் மென்மையானது.

**ல வ் ஹ ூல் - ம ஹ் ஃ புல்** : சொர்க்கத்தில் எல்லா விஷயங்களும் பொறிக்கப் பட்டுள்ள இடம்

**லயதகய்யர்**: மாறாத, மாற்ற முடியாதது.

**லைலத்துல் கத்ர்**: அல்லாஹுூ தஆலா எங்கள் நபி முஹம்மது (அலைஹி சலாம்)க்கு குர் ஆ ன் அ ல் - க ர ீமை வெளிப்படுத்திய சக்தியின் இரவு,

**லிவாயில்-ஹம்து**: இது மறுமையில் மீள எழுப்பப் படும் நாளில் எமது நபி முஹம்மது (அலைஹி சலாம்) அவர்களின் கையில் இருக்கும் கொடி. அவர்கள் முதலில் கபுரில் இருந்து எழுப்ப படுவார்கள். முதலில் **ஷஃபாஅத்** (பரிந்துரை) செய்வார்கள். சொர்க்கத்தின் கதவை அவர்கள் தான் முதலில் தட்டுவார்கள். அனைத்து விசுவா சிகளும் உலகமுடிவு வரை இந்த கொடியின் கீழ் இருப்பார்கள்

**ம'இய்யத்**: ஒன்றுபடுதல்.

**மால்**: தஃப்சீரின் அறிஞர்கள், குர்ஆன் அல்-கரீமின் விளக்கமாக கூறிய அர்த்தம்

**மப்த தாயுன்**: முதல் அடையாளம்

**ம'ஃபு(b)த்**: உண்மையான தெய்வம்.

**மத்ஹபு**: இஸ்லாமிய நீதித்துறை பள்ளிகள்; ஹனஃபி, மாலிகி, ஷாஃபி மற்றும் ஹன்பலி.

**குஃப்ர்**: இஸ்லாத்தின் உண்மையை மறுப்பது, அவநம்பிக்கை.

**குர்சி**: ஏழாவது வானத்துக்கு வெளியே மற்றும் அர்ஷின் உள்ளே வானத்தின் ஒருபகுதி, இது வானத்தின் எல்லையின் முடிவில் உள்ள பொருள்.

**குதுப்அல்-சித்தா**: அனைத்து இஸ்லாமிய அறிஞர் களும் சரியானது என உறுதி செய்துள்ள ஆறு ஹதீஸ் கிரந்தங்கள் (ஸஹீஹ் சித்தா )

**மக்கா அல் முகர்ரமா**: முஸ்லிம்கள் முன்னோக்கி தொழும், இஸ்லாத்தின் முக்கியமான மஸ்ஜிது அல்-ஹரம் க'ஃபா மைந்துள்ள இடம் மக்கா.

**மக்துபாத்**: ஹஸ்ரத் முஹம்மது ம'ஃதூம் அவர்களி னால் தொகுக்கப்பட்ட இமாம் ரப்பானியின் கடிதங்கலின் தொகுப்பு **மக்துபாத்** எனப்படும். மூன்று தொகுதிகளில் உள்ளன.

**மலக்கு**: வானவர், 'தூதர்' அல்லது 'சக்தி.'

**மாலிக்**:நரகத்தின் மலக்குகளின் (ஜபானி யாக்களின்) தலைவர்

**மன்தூப்**: தவாபை பெற ுத ் த ர க் கூடிய பரிந்துரைக் கப்பட்ட செயல்கள்,

**மன்சுக் ஹதீஸ்**: ஒரு செல்லுபடியற்றதாக்கப்பட்ட ஹதீஸ்

**மக்புல்**:ஏற்றுக்கொள்ளப்பட்டது,அங்கீகரிக்கப்பட்டது

**ம'ரிஃபா**: ஆன்மீக அறிவு

**மசாலா**: ஒரு சம்பவம் அல்லது சூழ்நிலை.

**ம ஷ ாயிக ் கிற ாம ்** : மரியாதைக்குரிய அறிஞர்கள்

**ம ஷ ாயிக் முஸ் த கிம் - உ ல் - அ ஹ் வ ால்** : அ ஹ் க ாம் இ ஸ் ல ாமிய ாவுட ன் ஒத்துப்போகின்ற, சரியான ஹால் மற்றும் கஷ்ஃப் உடைய தஸவ்வுஃப்பின் பெரிய அறிஞர்கள்

**மஷிய்யா**: தெய்வீக சித்தம்

**மஷ்ரூஆத்**:, முஸ்லிம்களுக்கு கட்டளையிடப் பட்ட நான்கு வகையான இபாதத்துகள் .

ஃபர்ள், வாஜிப், சுன்னா மற்றும் நஃபிலா.

**ம ஷ ுகிய ாத**: ரசூலுல்லாஹ்ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்). அ வ ர க ளுக கு வழங்கப்படுகின்ற மறைவான நற்பேறுகள் ஆசீர்வாதங்கள்

**மாசிவா**: அல்லாஹுதாலாவை தவிர மற்ற அனைத் தும் ஆலம் என்று அழைக்கப்படுகிறது.

**மசிய்யத்**: பாவச் செயல்கள்.

**மஸ்னவி**: பாரசீக ரைமிங் கவிதை.

**மத்லுப்**: தெய்வீக மானவன், அல்லாஹு தாலா.

**மதீனா முனவ்வரா**: முஹம்மது நபி(அலைஹி ஸலாம் ) அவர்களின் ரவ்ளா அமைந்திருக்கும் பாக்கியம் பெற்ற நகரம்

**மதரசா**: கல்வி நிறுவனம்.

**மஃக்பிரத்**: அல்லாஹு தாலா ஒருவரின் பாவங்களை உலக வ ாழ க கையில மறைக்கின்றான், ஆனால் தீர்ப்பு நாள் அவர்கள் அன்று அந்த பாவத்திற்கு பொறுப்பாவார்கள், மற்றும் அல்லாஹு தஆலா வின் கருணை மூலம் அவர்கள் அந்த பாவம் மன்னிக்கப்பட்டதாக இருக்க முடியும்

**மஹ்பூபியாத்**: பின்பற்றுபவர் பின் ப ற ற ப ப ட ட வ ரை போன்றவர் பின்பற்றும் நிலை தொடர்ந்தும் இருப்பதில்லை

**மஹ்ரம்**: திருமணம் செய்ய அ னும திக க ப ப ட ாத நெருங்கிய இரத்த உறவுள்ள நபர்

**மஹ்ஷர்**: மறுமையில் ஒன்று கூடும் இடம்.

**மக்ருஹ்**: இஸ்லாத்தில் விரும்பப்படாத விஷயங்கள்.

அர்ஷுக்கு அப்பால், விவரிக்க முடியாத வகையில் அல்லாஹுவை கண்டார்கள்

**மிஸ்கீன்**: ஒரு நாள் தேவைக்கு அதிகமான உடைமைகள் இல்லாதவர்கள். 'மிகவும் ஏழை' என்று அர்த்தம்

**மிதால்**: வெளிப்பாடுகள்.

**மிதில்**: ஒத்த, சமமான .

**மீசான்**: தராசு,நமக்கு தெரிந்தவைகளை போன்றல லாது வேறுபட்டது. செயல்களை மற்றும் நடத்தைகளை எடை போடக்கூடியது.

**மு'ஃதஜிலா**: பித்அத்தின் 72 பிரிவுகளில் ஒன்று. வழிதவறிய பிரிவு. இஸ்லாமிய இறையியல் இயக்கம், எல்லோரும் தங்கள் சொந்த செயல்களை த ாங க ளே உருவாக்குகிறார்கள் என்று கருதுபவர்.

**மு'அக்கத் சுன்னா**: முஹம்மது (அலைஹி சலாம்) தொடர்ந்து செய்து வந்த மற்றும் அரிதாக தவிர்த்த சுன்னத்கள் என்று செயல்படுகிறது

**மு'ஆமலாத்**: இஸ்லாமிய வணிகம் போன்ற மக்களுக்கு இடையே உறவுகளுக்குரிய சட்டம்.

**முஅஸ்ஸின்**: முஸ்லிம்களை தொழுகைக்கு (ஸலாத்)அழைக்கும் நபர்

**முபாஹ்**: ஃபர்ள் அல்லது ஹராம் இல்லை என்ற அ னும திக க ப ப ட ட நடத்தைகள், செயல்கள், மற்றும் வார்த்தைகள்

**மாதுரிதி**: முஸ்லிம் ஒருவர் பின்பற்றும் நம்பிக்கை கோட்பாடுகள் இரண்டு இதிகாத்களில் ஒன்று. ஹனஃபி மற்றும் ஹன்பலியினரால் முதன்மை யாக பின்பற்றப்படுவது

**மவாஜித்**: பரவசமாக இருப்பது.

**மவ்து**: வேண்டுமென்றே புனையப்பட்ட ஹதீஸ்.

**மவ்லித்**: நபி முஹம்மது (அலைஹி சலாம்) புனித பிறந்தநாள் கொண்டாட்டம்

**மபி(b)**: பாவனை பொருள்

**மஹர்**: திருமண நேரத்தில் பணம் அல்லது உடைமை களின் வடிவத்தில் செலுத்தப்படும் அல்லது செலுத்தப்படும் என்று உறுதியளித்த கட்டாய கட்டணம்

**மிகாயில்**: நாங்கு பிரதான மலக்குகளில் (அலைஹி-ஸலாம்) ஒருவர்

**மி'ஃராஜ்**: நபி முஹம்மது (அலைஹிசலாம்) அவர் களின் விண்வெளிப்பயணம், அற்புதங்களில் ஒன்று அவர் சொந்த உடலுடன் விண்ணில் ஏறி

**முஜத்தித்**: முஜ்தஹித்களின் புத்தகங்களை உலகம் முழுவதும் பரப்பியவர்கள் மற்றும் அஹ்லுஸ் சுன் ன ாபோத னைக ளையும் சரியான வழியை யும் நிலை நிறுத்தியவர்

**முஜாஹதா**: நஃப்சை எதிர்த்துப் போராடு வதற்கு , நஃப்ஸ் விரும்பாததைச் செய்ய வேண்டும்.

**முஜாஹித்**: [அஹ்லுஸ் ஸுன்னா] இஸ்லாத்தை பிரச்சாரம் செய்ய பாடுபடுபவர் அல்லது போராடுபவர்

**மு'ஃஜிசா**: அல்லாஹுதாலா ஒரு தீர்க்கதரிசி மூலம் நிகழ்த்தும் அதிசயம்

**ஹதீஸின் முஜ்தஹித்**: மூன்று லட்சத்துககு மேற்பட்ட ஹதீதை அவற்றை அறிவித்தவர்களின் விவரத் துடன் அறிந்து இதயத்தால் ம ன ன மிட ட வ ர க ள . ஹதீஸுடைய இமாம் என்றும்அழைக்கப்படுவர்.

**முஜ்தஹித்**: ஒருஆயத்தில் அல்லது ஒரு ஹதீஸ் ஷரீஃபின் மறைவான பொருள்களை புரிந்து கொள்ள முயற்சி செய்வதன் மூலம் அவற்றின் அர்த்தங்களை மற்றும் முடிவுகளை ஆய்ந்து அறிந்த ,சிறந்த அறிஞர்கள்

**முஜ்தஹிதீன் ஃபில் மத்ஹப்**: அஹ்காம், இஸ்லாமியா மூல ங க ள லிருந து-இஜ்திஹாதுடைய விதிகளை உய்த்தறியும் திறன் கொண்ட பேரறிஞர்கள்.

**முகல்லாஃப்**: மார்க்க ரீதியாக மிகவும் பொறுப்பான ஒரு புத்திசாலி மற்றும் இளம் வயது ,நபர்.

**முபஷ்ஷிர்**:முஸ்லிம்களிடம்கேள்வி கேட்கும் மலக்கு கள் பஷீர் என்றும் அழைக்கப் படுவார் கள்.

**முதாஃப்**: இது ஒருவகை கடனாளி செலுத்தும் வட்டி. குறிப்பிட்ட நேரத்தில் செலுத்த முடியாதபோது காலத்தை நீடித்து ஒரு கூடுதல் கட்டணம் ந ிர ண யிக க ப ப ட டு செலுத்தப்படுவது

**முதாகனா**:ஒருவரின் துன்யா உலக நன்மைக்காக மதத்தைப் பயன்படுத்துவது

**முதாரா**: கிளர்ச்சிகளை எழுப்பாமல் இருக்க உள்ளே அமைதியாக இருப்பது.

**முத்ரிகா**: உணர்வு உறுப்புகளின் மூன்று வகையான சக்திகள்; மன சக்திகள் மற்றும் இதயத்தின் சக்திகள்.

**முபஸ்ஸிர்**: தஃப்சீர் செய்பவர்கள்

**முப்சித்**: நிகழ்த்தப்படும் ஒரு வழிபாட்டை முறிக்கும், செல் லுப டிய ற் ற த ாக கும் செயல். வேண்டு மென் றே செய்தால் அது ஒரு பாவம்.

**முஃப்தி**: மார்க்க விஷயங்களில் தீர்ப்பு வழங்க அதிகாரம் பெற்ற முஸ்லிம் சட்டநிபுணர்

**முஹப்பத் தாதியா**: அவனது பண்புகளை சேர்க்கா மல்அல்லாஹ் மீது மட்டுமே

அன்பு வைப்பது. . தெய்வீக அன்பு என்பது அல்லாஹு தாலாவை அவனுடைய பண்புகளுடன் சேர்த்து அன்பு வைப்பது

**முஹாஜிருன்**: மக்கா வெற்றிக்கு முன் மக்காவில் இஸ்லாத்தை தழுவியவர்கள்

**முஹ்கமத்**: தெளிவான வெள் ிப ் ப டைய ான அர்த்தங்கள் உள்ள வசனங்கள்

**முனாகஹத்**:கணவன் மனைவி இடையே திருமண ம், விவாகரத்து, கடமைகள் பற்றிய அறிவு

**முன்கர்**: கபுரில் கேள்வி கேட்கின்ற மலக்கு

**முகல்லித்**:, ஒரு மத்ஹபை கடைபிடித்து பின்பற்றுபவர்.

**முகர்ராபூ(b)ன்**: அல்லாஹ்வின் சந்நிதியில் உள்ள மலக்குகள்.

**முராத் இலாஹி** : தெய்வீக நோக்கம்

**முரீத்**: ஒரு முர்ஷித்தை (முதிர்ந்த ஆன்மீக வழிகாட்டி). பின்பற்றுபவர்

**முரீத்**: அல்லாஹுத்தாலாவின் முழுமையின் எட்டு பண்புகளில் ஒன்று எல்லாம்-விருப்பம் என்று பொருள். **இரதா** (நாட்டம்

**முர்ஷித்**: முதிர்ந்த ஆன்மீக வழிகாட்டி.

**முர்ஷித் காமில்**: சரியான முதிர்ந்த ஆன்மீக வழிகாட்டி. ஒரு சுன்னி இஸ்லாத்தை கடை பிடிக்கும் அறிஞர் அவர் என்ன சொன்னாலும் செய்தாலும். அவர் இஸ்லாத்தை ஆழமாக தெரிந்த ஒரு நல்ல அறிஞர்.

**முக்பீர் அஸ்-சாதிக்**: உண்மையை அறிவிப்ப வர், நபி.

**முக்லாஸ்**: இக்லாஸின் நிரந்தர உரிமையாளர்கள்

**முக்லிஸ்**:ற்ற இக்லாஸ் உள்ளவர்கள், மற்றும் இக்லாஸ் பெறுவதற்கு முயற்சி செய்பவர்.

**முக்தார்**: தெரிவு உள்ள ஒருவர்

**முல்ஹித்**: தன்னை உண்மையாக முஸ்லிம் என்று நம்புகின்ற ஒருநபர் .ஆனால் நன்பிக்கை யின்மை யின் அறிக்கைகளை வெளியிடுபவர்.

**மு'ஃமின்**: நம்பிக்கையாளர்.

**மும்கின்**: இல்லாமையிலிருந்து இருப்புக்கு வரக்கூடி யது . மற்றும் இருக்கும்போது இல்லாமல் போவது

**மும்கினுல்வுஜூத்**: அது இருக்கலாம் அல்லது இல்லாமல் இருக்கலாம். பிரபஞ்சமும், அனைத்து படைப்புகளும் விதி விலக்கில்லாமல் அதுபோன் றதுதான். வுஜூதுக்கு எதிரானது **அதம்** (இல்லாதது). அனைத்து படைப்புகளும், அவை தோன்றுவதற்கு முன்பு அதமில் இருந்தன.

**மும்தனிஅல்-வுஜூத்**: இருக்க முடியாதது. அல்லாஹு தாலாவுக்கு ஒரு பங்குதாரர் போன்று. அதாவது வேறு ஒரு தெய்வம் இருப்பதுபோன்றது. அல்லது அல்லாஹு தாலாவை ஒத்திருப்பது. அது எப்போதும் இருக்க முடியாதது.

**முனாபிக்**: குர்ஆன் அல்-கரீமின் திறந்த அர்த்தங் களின் எந்த நாஸ் மீதும் தமது அவநம்பிக்கை யை மறைப்பவர்

**முத்தகல்லிம்**: அல்லாஹு தஆலாவின் பரிபூரண மான எட்டுபண்புகளில் ஒன்று, அதாவது அனைத்தும் பேசும். **கலாம்** (பேச்சு, வார்த்தை),

**முத்தக்கல்லிமூன்**: ஈமான்பற்றி போதித்த முஜ்தஹிதுகள்.

**முத்தா நிக்காஹ்**: ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் ஒரு குறிப்பிட்ட காலம் ஒன்றாக வாழ்வதற்கு செய்யப்படும் ஒரு ஒப்பந்தம். இப்படிப்பட்ட

திருமணத்தை இஸ்லாம் தடை செய்கிறது

**முத்தஷாபிஹாத்**: பொருள் புரியாத மற்றும் மறைக்கப்பட்ட ஆயத்துகள் மற்றும் ஹதீஸ்கள். நாம் அவற்றை நம்ப வேண்டும்.

**முதவத்தி**: ஒரே இனத்தை சேர்ந்த அனைத்திலும் சம அளவில் உள்ள ஒரு பண்பு. மனிதநேயம் அல்லது மிருகம்

**நபி**: அல்லாஹுதஆலாவினால் தேர்ந்தெடுக் கப்பட்ட தூதர்

**நபிலா**: மிகையான வணக்கம்.

**முர்த்தத்**: மார்க்கத்தை விட்டு விலகியவர், துரோகி

**முஸ்ஹப்**: குர்ஆன் அல்-கரீமின் எழுதப்பட்ட நகல்

**முசவ்விஃப்f**: தவ்பாவை தள்ளிப்போடுபவர்கள்

**முஷாப்பிஹா**: அல்லாஹு தஆலா ஒரு பொருள் என்றுநம்பிக்கை கொண்டவர்

**முஷாஹதா**: வெற்று கண்ணினால் பார்ப்பது

**முஷக்கிக்**: ஒரு பண்பு, இது ஒரே இனத்தைச் சேர்ந்த எல்லாவற்றிலும் சம அளவில் இல்லை.உதாரணம் அறிவு போன்றது

**முஷ்ரிக்**: அல்லாஹு தாலாவுக்கு இணை அல்லது அல்லது பங்குதாரர் சேர்ப்பவர் பலகடவுள் கொள்கை, இணை ஷிர்க் வைப்பவர்கள்.

**முஸ்லிம்**: அல்லாஹு தாலாவுக்கு அடிபணி யும் ஒரு நபர். அல்லாஹுத'ஆலாவைதவிர வேறு கடவுள் இல்லை என்று நம்புபவர். மற்றும் முஹம்மது நபி சல்லள்ளாஹு அலைஹி வ ச ல ல ம அ ல் ல ாஹு த ' ஆ ல ாவின் கடைசி தீர்க்கதரிசி என்று நம்புகிறார். அவர்இஸ்லாத்தை பின்பற்றி நடைமுறைப் படுத்துபவர்.

**முஸ்தபாவிய்யா அலா மஸ்தரிஹஸ் சலாத்து வஸ்-சலாமி வத்தஹிய்யா**: அழகிய கருணை யுள்ள பிரார்த்தனை; அனைத்து பிரார்த்தனை களும் நல்லருள்களும் முஹம்மது நபிகள் நாயகத்தின் மீது உண்டாகட்டும்.

**முஸ்தஹப்**: இந்த செயல்களை செய்வதற்கு வெகுமதி கிடைக்கும் ,ஆனால் செய்ய வில்லை என்றால் பாவம் இல்லை.

**முத ாகிர ீன** : த பிய த் த ாபி' உ ன் க ளுக் கு பின்னர் வந்தவர்கள்

**நாஸ்**: வெளிப்படையான அர்த்தங்கள் கொண்ட குர்ஆன் வசனங்கள் (ஆயத்) மற்றும் ஹதீஸ் ஷரீஃபுகள்

**நசர்காஹ் இலாஹி**: அல்லாஹுத்தஆலா தன் கவனத்தை திருப்புகின்ற இடம்

**நஸ்ம் இலாஹி**: தெய்வீக வசனம்

**நஷ்ர்**: தீர்ப்பின் பின் கலைதல்

**நிக்காஹ்**: இஸ்லாத்தால் பரிந்துரைக்கப்பட்ட திருமண ஒப்பந்தம்

**நி'ஃமத்**: ஆசீர்வாதம்.

**நிகார்**: அம்ர்பில் மரூஃப் மற்றும் நஹி அனில் முன்கர் **நிகார்** என்று அழைக்கப்படுகிறது.

**நஃப்ஸ்அம்மாரா**:அதிகப்படியான உணர்வு, ஆசை மற்றும் நஃப்ஸின் தூண்டுதல்கள்

**நஃப்ஸ்முத்மஇன்னா**:அல்லாஹு தஆலாவுக்கு கீழ் படிவதில் திருப்தி அடையும் நஃப்ஸ்.

**நஃப்ஸ்**: மனிதனில் உள்ள, மனிதனின் ஆசைகள் பசியை கட்டளையிடுகின்ற மற்றும் ஆதிக்கம் செலுத்துகின்ற ஒரு சக்தி. அது சுயமாகவும் அல்லாஹு தஆலாவுக்கு விரோதமாகவும் இருக்கிறது

**நஹி அனில் முன்கர்**: இஸ்லாத்தில் தடுக்கப்பட்ட செயல்களை செய்வதற்கு எதிராக எச்சரிக்கை செய்வது, அறிவுரை கூறுவது.

**நஹீ**: **கலாம்அல்-இலாஹிய்யா** (அல்லாஹு தஆலா வின் வார்த்தை) யில் உள்ள தடைகள். இது த டைசெய ய ப ப ட ட விஷயங்களைக் கூறுகிறது.

**நஜாசத்**: இஸ்லாம் சில பொருட்களை தூய்மை யற்றவை என விவரிக்கின்றது

**நஜ்திகள்**: இவர்கள் வஹாபிகள் என்றும் அழைக்கப் ப டுகிற ார க ள . சுன்னிகளுக்கும் ஷியாக்களு க்கும் விரோதமானவர்கள்; அவர்கள் **ஃபிர்கத் அல்-மலுனா** (சபிக்கப்பட்ட குழு) என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

**நக்கீர்**: கப்ரில் கேள்வி கேட்கும் மலக்குகள்.

**நமஹ்ரம்**: ஒரு முஸ்லீம் திருமணம் செய்ய தடை இல்லாதவர்கள்

**நமிமா**: முஸ்லிம்கள் மத்தியில் கிசுகிசு, வார்த்தை களை சுமக்கும் செயல், இது ஹராம்

**நக்லி**: தெரிவிக்கப்பட்ட மார்க்க அறிவு.

**நாஸ்க்**: அல்லாஹ் த'ஆலாவினால் மாற்றப் பட்ட சில ஆயத்துகளின் உச்சரிப்புகள் அல்லது அர்த்தங்கள், அல்லது இரண்டும்.

**நிஸ்பத்**: உறவு, தொடர்பு.

**காதிர்**:அல்லாஹுத் தஆலாவின் முழுமை யான எட்டு பண்புகளில் ஒன்று. எல்லாம் வல்லவன் என்று பொருள். குத்ரா (சர்வ வல்லமை)

**காரி**: முழு குர்ஆன் அல் கரீமையும் மனனம் செய்த முஸ்லிம் என்று பொருள்

**கவ்ல்**: ஆதாரங்கள்மற்றும் பகுத்தறிவின் அடிப்படை யில் அடைந்த அனுமானம் அல்லது , ஒரு முடிவு.

**கவ்மா**: தொழுகையில் நிலையில் அசையாது நிற்பது

**கைலுலா**: மதியத்திற்கு முன் சிறிது நேரம் தூங்குவது

**கஸ்ஃப்**: ஒரு நபரின் பாவங்களைப் பற்றி மற்றவர் களுக்கு சொல்வது

**கிப்லா**: வழிபாட்டின் போது நோக்கும் திசை

**நிசாப்**: ஒரு முஸ்லீம் ஜகாத் கடமையாவதற்கு முன்பு இருக்க வேண்டிய தேவையான குறைந்தபட்ச அளவு. தொகை.

**நிய்யத்**: எண்ணம். நோக்கம்

**நுபுவ்வா**: நபித்துவம்.

**நூர்**: பிரகாசம்.

**நூராணி**: ஒளிரும், ஆன்மீகம்.

**களா அல்-ஆகிரா**: ஒரு தொழுகையின் கடைசி ரகாஅத்

**கப்ர் ஷரிஃப்**: மரியாதைக்குரிய கல்லறை

**களா**: அல்லாஹு தஆலாவின் நித்திய கடந்த காலத்திலிருந்து முடிவற்ற எதிர் காலம்வரை படைக்ககப்பட்ட மற்றும் ப டைக க ப ப டும் விஷயங்களை பற்றிய முன்னறிவிப்பு.

**களா**: ஒருவர் தவறவிட்ட கடமைகள் தாமதமான தொழுகை போன்றவற்றை காலம் பிந்தி நிறைவேற்றுவது

**கதர்**: களாவுக்கு இணக்கமாக எதையும் [உடனேயே] உ ருவ ாக குவ து, குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இல்லை.

**க த் த ஸ் ஸ ல் ல ாஹு ஸிர் ர ஹ்** : வ லிம ார க ள ில் குறிப்பிடத்தக்கவர்களுக்கு ம ர ிய ாதையின வெளிப்பாடாக 'அல்லாஹு

தஆலா அவரது மர்மங்களை மறைப்பானாக என்று பிரார்த்திப்பது.

**கத்தஸ்ஸல்லாஹு தாலா அஸ்ராரஹும் அஜ்ம'ஈன்**: வலிமார்களில் குறிப்பிடத் த க க வ ர க ளுக கு மரியாதையின் வெளிப் பாடாக 'அல்லாஹு தஆலா அவரது மர்மங்களை மறைத்து ஆசீர்வதிப்பானாக

**காதி**: நீதிபதி.

**காதியானிகள்**: இந்தியாவில் ஆங்கிலேயர் களால் ஏற்பாடு செய்யப்பட்ட மார்க்கத்தில் வழி தவறியவர்கள்.

**கதீ ம்**: ஆரம்பம் இல்லாதது.

**காதிர்முக்தார்**:அல்லாஹு தஆலா அவன் விரும்பிய எதையும் செய்ய முடியுமானவன் இயற்கை சக்திகள் போல் அல்லாது, அவனை எதுவும் நிப்பந்திக்கவில்லை.

**குர்பத்**: அது அல்லாஹ்வுக்காக செய்யப்படுகிறது என்று தெரிந்து ஒரு தாத் செய்வது

**குதுப்**: ஒரு, ஆன்மீக ரீதியாக சரியான பூரண மனிதன்.

**குவ்வா-தர்ராக்கா**: ஒரு விரிவான சக்தி.

**ராய்**: தனிப்பட்ட தீர்ப்பு.

**ரப்**: அல்லாஹு தாலா, படைப்பவன்

**றாபிதா**: ஒரு வலியின் தோற்றத்தை, முகத்தை கற்பனை செய்வது. இதில் அந்த நபர் அந்த வலியின் சுஹ ுப த தில இருந்தவர்களைப் போன்றே அருள்பாலிக்கப்படுவார்.

**கிதம்**: அவனது இருப்புக்கு முன்பும் அவன் இல்லாமல் இல்லை

**கிராஅத் சபா**: சபா என்றால் ஏழு. குர்ஆன் அல்-கரீம் இன் ஒவ்வொரு வாசிப்புக்கும் வேறு வேறு அர்த்தம் உண்டு.

**கிராத் ஷாஸா**: நபிகள் நாயகம் (அலை) அவர்களின் ஒருசில தோழர்கள் குர்ஆன்அல்-கரீமை அசாதாரணமான முறையில் ஓதுவார்கள்

**கிராஅத்**: தொழுகை நடத்தும் போது நின்று குர்ஆன் அல்-கரீம் அழகாக ஓதுவது

**கியாமா**: நிலையில் நிற்பது. அல்லாஹு த ஆலா தீர்ப்பு செய்யும் நேரம் படைப்புகள் அனைத் தையும் அழித்து மீண்டும் உடலுடன் உயிர்த் தெழுவது,

**கியாஸ்அல்-புகஹா**: பிகஹுவின் உய்த்தறியும் ஒப்புவமை ஆராய்வு

**கியாஸ்ஜாலி**: வெளிப்படையான ஒப்புவமை.

**கியாஸ் காஃபி**: மறைக்கப்பட்ட ஒப்புவமை.

**குத்திசசிர்ரஹு**:குறிப்பிடத்தக்க வ லிம ார க ளுக கு மரியாதையின் வெளிப்பாடு. அல்லாஹு தஆலா அவருடைய மறைவான விசயங்களை கண்ணிய மானதாக, புனிதமானதாக ஆக்கட்டும்.

**குத்ரா**:சர்வ வல்லமை, அல்லாஹு தஆலாவின் பரிபூரணமான எட்டு பண்புகளில் ஒன்று

**குத்ஸ்**:ஜெருசலத்தில் உள்ள அக்ஸா மஸ்ஜித்

**குரைஷ்**: முஹம்மது நபி(அலைஹி-ஸலாம்) அவர்கள் சேர்ந்த அரபு மக்களின் குடி.

**குர் ஆ ன் அ ல் - க ரீ ம்** : அ ல் ல ாஹு தஆலாவின் வார்த்தை ;இது முஹம்மதுநபி (அலைஹி-ஸலாம்) அவர் களின் தனிப்பட்ட கருத்துக்களின் ஒரு தொகுப்பு அல்ல .அல்லது தத்துவவாதிகளின் அல்லது வரலாற்ற சிரியர்களின் அறிக்கைகளுமல்ல.

**குர்ப் இலாஹி**: அல்லாஹு தஆலாவின் அன்பைப் பெறுவதற்கு என்ற பொருளில்

பயன்படுத்தப் படுகிறது. அல்லாஹு தஆலாவினால் நேசிக்கப் பட்டது.

**குர்ப்**: அல்லாஹு தஆலாவை நோக்கிய ஆன்மீக நெருக்கம்

**குர்பான்**: தியாகம்.

**ராவதிப்**: ஃபர்ளு தொழுகையுடன் நிகழ்த்தப்படும் சுன்னத்தான தொழுகைகள்

**ரஸாக்**: அல்லாஹுதாலாவின் திருநாமம். உணவளிப்பவன் என்று பொருள்

**உயிர்த்தெழுதல்**: தீர்ப்புநாளில் இறந்தவர்கள் எல்லோரும் திரும்ப எழுப்ப படுவது.

**ர ழி**: அ ல் ல ாஹ ு த ால ாவின் பொருத்தம், ஒரு குறிப் பிட்ட நபர் அல்லாஹு த'ஆலாவின் திருப்தியை அடைதல்.

**ர ழிஅ ல் ல ாஹ ு த ால ாஅ ன் ஹ ு**: அல்லாஹு தஆலா குறிப்பிட்ட மனிதனுக்கு அருள் பாலிக்கட்டும் என்று கூறுவதற்கு பயன் படுத்தப்படுகிறது

**ரழி-அல்லாஹு தஆலா அன்ஹும் அஜ்மாஈன்**: நமது நபி முஹம்மது (அலைஹி ஸலாம்) அவர்களின் தோழர்கள் மற்றும் சங்கை பொருந்திய மனைவிமார்கள் மீது அல்லாஹு தஆலா அருள் பாலிக்கட்டும்

**ரழி-அல்லாஹு தஆலா அன்ஹுன்னா** அல்லது (**ரழி-அ ல் ல ாஹ ு அ ன் ஹ ுன் ன ா**): அந்த குறிப்பிட்ட பெண்கள் மீது அல்லாஹு த்தஆலா அருள் புரிவானாக

**றாஃபிதிகள்**: அலவிஸ் என்றும் அழைக்கப்படுகிறா ர்கள். ஷியாக்கள் - மனிதர்கள் ப ாவ ங க ளை ( உ ருவ ாக குகிற ார் க ள் ) , அ ல் ல ாஹ ு த ஆ ல ா நன்மையை மட்டுமே படைக்கிறான் என்ற தவறான நிலையில் உள்ளவர்கள்.

**ரஃப்ராஃப்**: மி'ஃராஜின் போது நபி முஹம்மது (அலைஹி சாலாமை) சுமந்த படுக்கை, சூரியனை விட பிரகாசமானது

**ரஃகபா**:விரும்பிய, விரும்பப்பட்ட விஷயங்கள்

**ரஹீம்**: அல்லாஹுதாலாவின் திருநாமம். இரக்க முள்ளவன் என்று பொருள்.

**ரஹிமஹுமுல்லா**: இஸ்லாமிய அறிஞர்களுக்கு மரியாதை செலுத்துவது

**ரஹ்ம்**: இதயம் எதையாவது ஒன்றை நோக்கி சாய்கிறது

**ர ஹ் ம துல் ல ாஹிதாலாஅலைஹி**: குறிப்பிட்ட வலி அல்லது ஸாலிகானவருக்கு அமைதி நிலவ பிரார்த்தனை மற்றும் வாழ்த்துவது.

**ரகா'அத்**: ஒரு தொழுகையின் ப ர நி துரைக க ப ப ட ட செயல்களின் அலகு

**ரஹ்மதுல்லாஹிதாலாஅலைஹிம் அஜ்மாஈன்**: (அஹ்ல் சுன்னா) இஸ்லாமிய அறிஞர்கள் மீது அமைதியை விரும்பி பிரார்த்தனை

**ரசூல்**: ஒரு புதிய மார்க்கத்தை கொண்டு வந்த தீர்க்கதரிசி

**ஸ ல வ ாத் துல் ல ாஹிஅ லைஹிம்**: நபிமார்கள் மீது பாராட்டு மற்றும் பிரார்த்தனை

**ஸாலிஹ்**: பக்தி உள்ளவர், சரியான பாதையில் உள்ளவர்.

**ஸல்-அல்லாஹு அலைஹி வஸல்லம்**: அல்லாஹு தாலாவிடம் நபியின்மீது மற்றும் அவரது குடும்பத்தினர் மீது ஸலவாத்,

**ரிளா**: அல்லாஹு தாலாவின் பொருத்தம்.

**ரிள்வான்**: சொர்க்கத்திரகு பொறுப்பான மலக்கு

**ரிள்த்வானுல்லாஹி தாலா அலைஹிம் அஜ்மைன்**: சஹாபத் அல்-கிராம் அனைவர்மீதும் சாந்தியை

விரும்பி பிரார்த்திப்பது.

ர ிவ ாய ாக ் க ள ் : முஜ ் த ஹிதுக ள ிட மிருந ் து வரும் அறிவிப்புகள்

**ரியா**: போலித்தனம்.

**ரியாதா**: சுய மறுப்பு.

**ரியாசாத்**: நஃப்ஸின் ஆசைகளைச் செய்ய மறுப்பது

**ரூஹு**: ஆன்மா.

**ரூஹானியூன்**: கருணயின் மலக்குகள்

**ருக்சாத்**: அனுமதி, ஒரு ஃபர்ளை செய்வதற்கு அல்லது ஹராமை தவிர்ப்பது மேற் கொள்ளும் எளிதான வழி

**ருக்ன்**: ஒரு தொழுகைக்குள் ஐந்து ஃபர்ளுகள்.

**ருகூ**: தொழுகையின் போது முழங்கால்களில் கைகளை வைத்து குனிவது

**ருயத்**: அல்லாஹு தாலாவைப் பார்ப்பது.

**சயித்**: சாதா, பக்தி உள்ளவர்.

**சாதா**: நித்திய மகிழ்ச்சி உண்டாக்கும் பக்தி,, சொர்க்கத்துக்கு தகுதியான தரம்

**சாதா தாரைன்**: உலகில் மகிழ்ச்சியை உண்டாக்கும் பக்தி மற்றும். சொர்க்கத்துக்கு, நித்திய மகிழ்ச்சிக்கு தகுதியான தரம்

**சபப்**: காரணம், அர்த்தம்,இடைத்தரகர்.

**ஸஹாபா**: நபி `முஹம்மது (அலைஹி சலாம்) அவர்களின் நபித் தோழர்கள். அஸ்ஹாப் மற்றும் சஹாபத் அல்-கிராம் என்றும் அழைக்கப்படும்.

**சஹாபத் அல்-கிராம்**: நபி முஹம்மது (அலைஹி சலாம்) அவர்களின் தோழர்கள் மேலும் **அஸ்ஹாப்** மற்றும் **சஹாபா**.

**சஹிபி இத்நாத்**: அவரின் சொல் ஆவணமாக எடுத்துக்கொள்ளப்பட்ட ஒருவர் .

**சஹிஃபா**: சிறிய புத்தகம், வேதம்.

**ஸஹீஹ்**: உண்மையானது. அனுமதிக்கப்பட்டது

**சஜ்தா**: தொழுகையின் போது ஸஜ்தா செய்வது.

**சக்ர்**: மயக்கம்.

**ஸ ல ஃ ப ் அ ஸ் - ஸ ாலிஹீன்** : முஸ்லிம்களின் முதல் மூன்று தலைமுறைகள், சஹாபா க க ள ் , த ாபி' ஊ ன ் , தப'அத்தாபிஊன்கள்

**ஸலஃபிய்யா**: லா-மத்ஹபியினரால் போலியாக இயற்றப்பட்ட மத்ஹப்,

**சலாத்அத்-தஸ்பிஹ்**: ஒரு நஃபிலான தொழுகை

**ஸலவாத்**: நபி முஹம்மது (அலைஹி-ஸலாம் மீது புகழ் பாராட்டு மற்றும் பிரார்த்தனை.

**சம்**':கேட்டல், அல்லாஹு தஆலாவின் பரிபூரணமான எட்டு பண்புகளில் ஒன்று பார்த்தல்

**சமி**: அல்லாஹு தஆலாவின் பரிபூரண மான எட்டு பண்புகளில் ஒன்று அனைத்தையும் கேட்பது

**சனது**: ஆவண ஆதாரம்.

**சரயன்**: எல்லா விதங்களிலும் இருப்பது.

**சர்பு**:உருவகஅறிவியல், அடிப்படை வார்த்தைகளை வெவ்வேறு உதாரணங்களாக மாற்றுவது..

**சர்வர் ஆலம்**: பிரபஞ்சங்கள் தலைவர், முஹம்மது நபி 'ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.

**சத்றில்அவ்ரத்**: உடலின் அவ்றத் (நெருக்கமான) பகுதிகளை மறைப்பது. ஆண்கள் உடலின் நெருக்கமான பகுதிகளை தெரியாமல் மறைப் பது, மற்றும் பெண்கள்,முகம் மற்றும் கைகளைத் தவிர்த்து, அவர்களின் முழு உடலையும்

மறைத்தல்.

**சத்தார்**: அல்லாஹு தஆலாவின் பண்புகளில் ஒன்று. அதாவது பாவங்களை மறைக்கின்றவன் ஒரு முஸ்லிம் இஸ்லாத்தில் அவரது சகோதரனின் தவறுகளை மற்றும் குறைபாடுகளை மறைக்க வேண்டும்.

**சௌம்** :நோன்பு சௌம் என்று அழைக்கப்படுகிறது. சௌம் என்றால் ஒன்றை வேறு ஒன்றிலிருந்து பாதுகாப்பது.

**செய்யிதுல் அன்பியா**: மிக உயர்ந்த நபி.

**செய்யித்**: ஹஸ்ரத்தின் ஹசன் (ரழி-அல்லாஹு தஆலாஅன்ஹு) அவர்களின் வழித்தோன்றல்.

**ச'ஆதத் அபதிய்யா**: இம்மை மற்றும் மறுமையின் முடிவற்ற நற்பேறுகள்

**சல்பி**: இருப்பதற்கு சாத்தியமற்றது.

**சஷஹாதா**:"**அஷ்ஹது அன்லா இலாஹா இல்லல் லாஹ் வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ ரசூலுஹு**" "பூமியிலோ அல்லது வ ான த திலோ வ ண ங் க ப் ப் டுவ த ற் கு தகுதியும் உரிமை யும் உள்ளவன் அல்லாஹுவைத் தவிர வேறு எவரும்இல்லை. மற்றும் முஹம்மது நபி ( அ லைஹி- ஸ ல ாம ) அல்லாஹுத் தஆலாவின் மனித படைப்பு மற்றும் தூதர்."

**ஷஹ்வா**: காமம்

**ஷக்காவா**: பாவம்உள்ளவர், நரகத்துக்கு தகுதியான நிலை

**ஷகி**: ஷகாவா ஆன ஒருவன் , தீயவன்.

**ஷரியா**: இஸ்லாமிய சட்டம்.

**ஷைகுல்-ஹதீஸ்**: இரண்டு லட்சம் ஹதீஸ்களை அறிந்தவர் இதயத்தால் மனனமிட்டவர்.

**ஷைகுல்-இஸ்லாம்**: இஸ்லாமிய விடயங்களின் தலைவர்

**ஷரீஃப்**: ஹஸ்ரத் ஹுசைன் (ரழி-அல்லாஹு தாலா அன்ஹு) அவர்களின் வழித் தோன்றல்

**ஷிய ாக் க ள்** : ச ஹ ாப ாக் க ளுக் கு எதிரானவர்கள் , **ஃபிர்கத் அல்-ளல்லா**.

**ஷிர்க்**: அல்லாஹு த'ஆலாவுக்கு யாரையும் எதையும் துணை, பங்காளி சேர்த்தல், அல்லது எதையும் தெய்வமாக்குதல்.

**ஷ ுஹ ுத** : மித ால க ள வெள ிப ப ாடுக ளை அவர்களின் இதயத்தின் 'கண்கள் மூலம் பார்க்கின்ற ஒருவர்.

**ஷுக்ர்**: ஒருவருடைய உதவிகளை பயன்படுத்து வதற்கு இஸ்லாத்திற்கு இணக்கமாக நன்றியை வெளிப்படுத்துதல்.

**சிதுக்**: ஒவ்வொரு தீர்க்கதரிசிக்கும் இருந்த தனித்தன்மைகளில் ஒன்று; பக்தி, ஏழில்

**சித்ரத் அல்-முன்தஹா**: ஆறாவது மற்றும் ஏழாவது வானத்தில் உள்ள ஒரு மரம்.

**சிஃபத்அத்-தாதிய்யா**: அல்லாஹு தஆலா வின் ஆறு தனிப்பட்ட பண்புக்கூறுகள்.

**சிஃ ப ாத - அ ல - ஹ கிகிய ா**: அ ல ல ாஹ ு தஆலாவின் பூரணமான எட்டு பண்புகள் **உலூஹிய்யாவின்** (தெய்வீகம்)பண்புகள். **சிஃபாத் அத் துபுதிய்யா** என்றும் அழைக்கப்படுகிறது.

**ஸிஃ ப த அ த - துபுதிய ய ா**: அல்லாஹுதஆலாவின் பூர மான எட்டு பண்புகள்

**உ லூஹிய் ய ாவின்** ( தெய் வீக ) பண்புகள் . **சிஃபாத் அல்ஹக்கிகிய்யா** என்றும் அழைக்கப்படுகிறது.

**ஸிஃபத் அல்-சல்பிய்யா**: படைப்புகளில் இருக்கும் விஷயங்கள் மற்றும் பின்னர் உருவாக்கப்பட்ட வைகளிலும் இருப்பவை. அவை அனைத்தும் குறைபாடு

மற்றும் தவறுகளின் அறிகுறியாகும்

**சிற ாத த ல - முஸ த கிம**: உண்மையான வழி

**சிறாத்**: அல்லாஹுதஆலாவின் கட்டளையினால் நரகத்தின் மேல் அமைக்கப் படும் பாலம்

**சியார்**: நடத்தை முறை.

**சூஃபியா அலிய்யா**: தசவ்வுஃபின் சிறந்த அறிஞர்கள் மற்றும் அவ்லியாக்கள்.

**சூஃபியா கிறாம்**: மரியாதைக்குரிய தஸவ்வுஃப் உடையவர்கள்.

**சூஃபிசம்**: அல்லாஹுதாலாவுடன் ஐக்கியப்படுவதற்கு மாறுபட்ட ஆன்மீக நம்பிக்கை மற்றும் பயிற்சி, ஒரு ஆன்மீக தேடல். தசவவுப் என்று பிழையாக அழைக்கப்படுவது

**ஷர்**: தீயது.

**ஷைகைன்**: ஹஸ்ரத் அபுபக்கர் மற்றும் ஹஜ்ரத் உமர்( ரலியல்லாஹு த'ஆளா அன்ஹும்

**சுலாஹா**: பக்தியுள்ள முஸ்லிம்கள்

**சுலூக்** : அ ல் ல ாஹு த ால ாவுக் கு கீழ்ப்படிவதில் நிலை யான முன் தொடர்தல்

**சுன்னா அல்-ஹுதா**: இது ரசூலுல்லாஹ் (அலை) அவர்கள் தொடர்ந்து நிலையாக செய்ததும் மிகவும்அரிதாக தவிர்த்ததுமான செயல், ஆனால் அவற்றை தவிர்த்தவர்கள் பற்றி அவர்கள் எதுவும் சொல்லவில்லை.

**சுன்னா கைரி முஅக்கதா**: ரசூலுல்லாஹ் (அலைஹி சலாம்) அ வ ர க ள ின ாலேயே அவ்வப்போது தவிர்க்க ப்பட்டஒரு வாஜிப்

**சுன்னா ஹசனா**: இஸ்லாத்தின் (ஹிஜ்ரி) முதல் நூற்றாண்டு, தொடக்கம் இருந்த சுன்னாவிற்கு மாறாக இல்லாத புதுப்பித்தல் மற்றும் சீர்திருத்தங்கள்

**சுன்னா முஅக்கதா**: முஹம்மது (அலைஹி சலாம்) எப்போதும் செய்வது இதை தவிர்ப்பது மக்ருஹ் ஆகும். ஒரு சிறிய பாவம்

**சுன்னா சனியா**: இஸ்லாம். அஹ்காம் இஸ்லாமியா அவ்வளவுதான். சுன்னா சனிய்யாவை பின்பற்று வது இதயத்தை இருளாக்கும் நஃப்ஸின் ஆசை களையும் பழக்கங்களையும் ஒழிக்கிறது

**சுன்னா ஸாவித்**: ரசூலுல்லாஹ் (அலை) அவர்கள் தொடர்ந்து செய்த செயல்கள். இபாதத் (வழிபாடு) ஆக அல்லாமல் ஆதத் பழக்க வழக்கம் ஆக செய்தது.

**சுன்னா**: அல்லாஹுதஆலா கட்டளையிடாத செயல்கள், ரஸூலுல்லாஹ் (அலைஹி வசல்லம்) அவர்கள் விரும்பி இபாதத்தாக செய்தவை.

**ஸுன்னி**: சரியானநம்பிக்கை கொண்ட முஸ்லிம் கள், **அஹ்ல் அஸ்-சுன்னா வல் ஜமாஅ** என்று அழைக்கப்படுகிறது

**மேலதிக:வழிபாடு**. (கூடுதல் வெகுமதிக்கு தகுதி யான, ஆனால் கடமை இல்லாத செயல்கள். ஃபர்ளுடன் ஒப்பிடும் போது எதற்கும் மதிப்பு குறைந்த வழிபாடு

**சூர்**: ஒரு எக்காள சத்தம் முதலில் ஒலிக்கும் போது எல்லா உயிரினமும் இறக்கின்றன. இரண்டாவது ஒலியில் அனைத்தும் உயிர்ப்பித்து எழும்.

**சூரா**: குர்ஆன் அல்-கரீமின் 114 அத்தியாயங்களில் ஏதேனும் ஒன்று

**சுஹுபா**: நபி அல்லது வலியின் தோழமை

**சுஹுஃப்**: சஹிஃபா என்பதன் பன்மை, சிறிய வேத நூல்.

**சுஹுருத்**: நிபந்தனைகள்.

**தாலா**: அல்லாஹுதஆலாவின்

மேலாதிக்கம் மற்றும் குறைபாடு இல்லாத தன்மை. ம ர ிய ாதைக க ாக பயன்படுத்தப்பட்டது

**தாத்**: அல்லாஹு விரும்பும் நற்செயல்கள்.

**த பிஅ த த ாபிஊ ன** : தாபிஊன்களுக்கு பின்னர் வந்த பரம்பரையினர்

**தாபிஊன்: நபி அவர்களின் மறைவுக்கு** பின்னர் சஹாபாக்கள் காலத்தில் வந்த முஸ்லிம்கள்

.**தப்லீஃக்**: ஒவ்வொரு தீர்க்கதரிசிக்கும் இருந்த ஏழுதன்மைகளில் ஒன்று. பிரச்சாரம்.

**தஃ'தில் அரக்கான்**: தொழுகையின் போது சில செயல்களுக்கு இடையில் உடலை அசையாமல் சிறிது நேரம் வைத்திருத்தல்

**தப்சிர்**: குர்ஆன்அல்-கரீமின் அர்த்தங்களை தெளிவு படுத்தும் முயற்சி, விளக்கம், விளக்கம், கருத்து.

**தஃஹான்னி**: மெல்லிய குரலில் அழகான குரலில் ஓதுவது. குர்ஆன் அல்-கரீமை தாஜ்விதுடன் இணக்கமாக ஓதுவது ஒரு சுன்னா. உயர்த்தி தாழ்த்தி வெவ்வேறு ஒலிகளை உருவாக்கி வார்த்தைகளை கறைபடுத்தி ஓதுவது ஹராம்.

**தஹஜ்ஜுத்**: இஷா தொழுகைக்குப் பிறகு இரவின் கடைசி மூன்றாவது பங்கில் ஃபஜ்ருக்கு முன் செய்யப்படும் தொழுகை

**தஹாறத்**: சுத்தம், சுத்தம் செய்வது

**தஹ்மித்**: தினசரி ஐந்து பர்லான தொழுகைக ளுக கு பிற கு(அல் ஹ ம் துலில் ல ாஹ்) திக்ரை அமைதி யாக முப்பத்து மூன்று முறை ஓதுவது.

**தஜல்லிஅஃப்'அல்**: தெய்வீக செயல்களின் ஞானம்.

**த ஜ ல் லிஸ்** : சொர க க த தின் வெளிப்பாடுகள்

**தஜ்வித்**: குர்ஆன் அல்-கரீமின் முறையான பாராய ணத்தின் உச்சரிப்பு

**த க பீர அ ல - இ ஃ ப தித ா**: தொழுகையின் ஆரம்ப தக்பீர்,"அல்லாஹுஅக்பர்"என் ற வார்த்தையை கூறுவது.

**தக்பீர்தஹ்ரிமா** தொழுகையின் ஆரம்ப தக்பீர், " அ ல் ல ாஹு அ க் ப ர் " எ ன் ற சொல்

**தக்பீர்**: (அல்லாஹுஅக்பர்) திக்ர், தினசரி ஐந்து வேளை தொழுகைகளுக்கு பிறகு அமைதியாக முப்பத்து மூன்று முறை ஓதுவது.

**தக்பீர்தஷ்ரிக்**: "அல்லாஹு அக்பர். அல்லாஹு அக்பர் . லாஇலாஹ இல்லல் லாஹு வல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர் வலில்லாஹில் ஹம்து"என்று சொல்வது.

**தக்வின்**: அல்லாஹு தாலாவின் பரிபூரணமான எட்டு பண்புகளில் ஒன்று. படைப்பாற்றல்

**தல்ஃபிக்**: எந்த மத்ஹபுக்கும் பொருந்தாமல் நான்கு மத்ஹபுகளின் எளிதான வழிகளை இணைத்து வணக்கங்களை புரிவது.

**தன்ஸீஹ்**: (சுப்ஹானல்லாஹ்) திக்ர்தினசரி ஐந்து வேளை தொழுகைக்குப் பிறகு அமைதியாக முப்பத்து மூன்று முறை ஓதுவது.

**தர்ஜீஹ்**: ஆய்வு செய்தல், ஒப்பிடுதல், மற்றும் தெரிவு செய்வது .

**தஸவ்வுஃப்**: இதயத்தை தூய மைப ப டுத் துவ து, ஆன்மீக வளர்ச்சி.

**தஸ்ஃபியா**: இதயத்தை சுத்திகரிப்பது அதாவது, நம்பிக்கையின்மை மற்றும்

பாவத்தில் இருந்தும் தன்னைக் காப்பாற்றிக் கொள்வது.

**தஸ்பிஹ்**: திக்ர்செய்வது,அதாவது அல்லாஹ் தஆலாவை நினைவு கூர்வது. சுப்ஹான லலாஹ், அல்ஹம்துலில்லாஹ் மற்றும் அல்லாஹு அக்பர் அல்லது அது போன்ற பிற வார்த்தைகள். 'தஸ்பிஹ்' மற்றும் 'தக்திஸ்' அதே அ ர த த த தில பயன்படுத்தப்படுகின்றன. இ ருந த ாலும அவற்றுக்கிடையே அவற்றின் அர்த்தங்களில் மிக நுட்பமான வேறுபாடு உண்டு. அவை இரண்டும் எந்தக் குறையும் இல்லாதது.

**தவாஃப்**: கஃபாவை சுற்றறுவது ஹஜ்ஜின் கடமைகளில் ஒன்று

**தவஜ்ஜுஹ்**: அறிவை பெறுவதற்காக ஒரு நபர்மீதுகவனத்தைஒருமுகப்ப டுத்துவது.

**தவ்பா**: பாவ மன்னிப்பு கோருவது

**த வ ஸ ஸ ுல**: அ ல் ல ாஹு த் த ஆ ல ாவின் தூத ர (ஸல்லல்லாஹுஅலைஹிவஸ ல்லம்) அவர்க ளின் ஆசீர்வதிக்கப்பட்ட ஆன்மா மற்றும் அவனுடைய அர்ப்பணிப்புள்ள பக்தியான மனிதர்களின் பிரார்த்தனை மூலம் நெருங்கி செல்ல முயற்சிப்பது

**தவத்தூர்**: அடுத்தடுத்து, பல சங்கிலிதொடர் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி அசல் பற்றிய உண்மையான இஸ்லாமிய தகவல்கள்

**தவ்பா நாஸுஹ்**: நேர்மையான மன்னிப்பு கோருவது

**தவ்ஹீத்**: ஒன்றாகஅறிவது. [லாஇலாஹா இல்லல்லாஹ்]

**த'வில்**: அல்லாஹ் தஆலாவினால் மற்றும் ரசூலுலுல்லாஹ் (ச ல் ல ல் ல ாஹு அ லைஹி வஸல்லம்) இனால் தெளிவாக விளக்கப்படாத ஆயத்துகள் மற்றும் ஹதீஸ்களை அ ஹ க ாமுல இஸ்லாமியாவிற்கு ஏற்ற அர்த்தங்கள் மத்தி யில் இருந்து தேர்ந்து எடுத்து சுருக்கமாக அல்லது விரிவாக விளக்குவது.

**தவ்கிஃபி**: இஸ்லாத்தில் சொல்லப்பட்ட அல்லாஹு தஆலாவின் பெயர்கள் மட்டுமே பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறது.

**தக்கியா**: ஒருவர் துன்புறுத்தலை எதிர் கொள்ளும் போது தனது நம்பிக்கையை மறைப்பது/ மறுப்பது

**தக்லீது**: ஒருவர் ஒரு மத்ஹபை ஏற்றுக்கொண்டு ஒரு முஜ்தஹித் விளக்கி காட்டிய வழியை பின்பற்றுவது..

**தக்வா**: ஹராமானவற்றை செய்வதிலிருந்து தன்னை ப் பாதுகாத்துக் கொள்வது

**தரீக்/தரீக்கா**: வழிகள், தஸவ்வுஃபின் உத்தரவுகள்

**தவாப்**: அல்லாஹுதாலா விரும்பியதை செய்வதற் கும் சொன்னதற்கும் ஈடாக மறு உலகத்தில் வழங்கப்படும் வெகுமதி

**தமன்** : பணம்.

**திப்**: சுத்தமான மற்றும் கறைபடாத.

**துமனினத்**: தொழுகையில் ருகூ, ஸஜ்தா, நிலையில் மற்றும் ஜல்சாவின் போது நமது ஒவ்வொரு உறுப்புகளையும் அசையாது வைத்திருப்பது அவசியம்

**துருக்**: (தரீக் மற்றும் தரீகாவின் பன்மை) வழிகள், தஸவ்வுஃப் உத்தரவு

**உதுர்**: மன்னிப்பு.

**உலமாறாசிகின்**: குர்ஆன் அல்-

கரீம் மற்றும் ஹதீஸ்களின் ஆழமான அர்த்தங்கள் மற்றும் குறிப்புகளை புரிந்து கொள்ளும் சரியான அறிவுள்ள அறிஞர்கள். அ ப் ப டிப் ப ட் ட வ ர் க ள் அனைத்து நபிமார்களின் அஸ்ஹாப் (ரழி-அல்லாஹுஅன்ஹும்அஜ்மஈன் போன்றவர்கள்.

**உலமா**: இஸ்லாமிய சட்ட அறிவு மற்றும் இறையியலில் நிபுணத்துவம் பெற்றதாக அங்கீகரிக்கப்பட்ட முஸ்லிம் அறிஞர்கள்

**உலமா ஸு**: இஸ்லாத்தின் தவறான அறிஞர்கள். இஸ்லாத்தை பணம், பதவி, மற்றும் புகழ் சம்பாதிக்க ஒரு கருவியாக பாவிக்கும் உலக நன்மைகளை நோக்கமாக கொண்ட அதாவது, மோசமான இயல்புடைய அறிவிலிகள்.

**உ லூஹிய் ய ா**: வ ண ங் குவ த ற் கு தகுதியான அல்லா ஹு தாலாவின் பரிபூரணமான பண்புகள்

**உலுல்அம்ர்**: அதிகாரம் கொடுக்கப் பட்டவர்கள்.

**உலுல்-அஸ்ம்**: நபிமார்களில் உயர்ந்த ஆறு ரசூல்மார்கள்.

**உ லூம அ லிய ா**: மார்க்கத்தில்மேம்பட்ட அறிவு

**உ லூம அ ல -க்லியா**:அறிவியல்அறிவு.

**உலூம் பாதினிய்யா**: பகுத்தறிவு.

**உலூம் இஸ்லாமியா**: அனைத்து முஸ்லீம்களும் கற்று இருக்க வேண்டிய இஸ்லாமிய அறிவு

**த'ஸிர்**: சில குற்றங்களுக்கு இஸ்லாம் நிர்ணயித் துள்ள தண்டனை வகைகள் பலவற்றின் பொதுவான பெயர்கள்.

**தஸ்கியா**: சுத்திகரிப்பு.

**தைக்கா**: முஸ்லிம்களுக்கு ஒரு வழிபாட்டுக்கு மற்றும் கற்றலுக்கான இடம்

**உர்வா அல்-வுத்கா**: ரசூலுல்லாஹ் (அலைஹி சலாம்) மற்றும் அவரது அஸ்ஹாபு களின் வழியை பின்பற்றுவது.

**உஸ்ர்**: இது பயிர் அறுவடை செய்யப்பட்ட வுடன் செலுத்தப்படும் ஒரு வகையான ஜகாத்

**உசூலுத்தீன்**: இதயத்தால் நம்பிக்கை கொள்ள வேண்டிய ஈமானின் கட்டாய போதனைகள்.

**உசூல் பிக்ஹு**: ஆயத்துகள் மற்றும் ஹதீஸ் களிலிருந்து ஃபிக்ஹு எப்படி பெறப் பட்டது என்பதை விளக்குகிறது

**உசூல்ஹதீது**: பல்வேறு வகையானஹதீஸ் களை விளக்கும் அறிவின் கிளை

**உசூல் கலாம்**: ஆயத்துகள் மற்றும் ஹதீஸ் களிலிருந்து கலாம் உடைய அறிவு எப்படி பெறப்பட்டது என்பதை விளக்கும் அறிவின் கிளை.

**உவைசி**: ஆன்மீக அறிவு மாற்றப்பட்ட (கொடுக்கப்பட்ட) ஒருவர்

**வதியா**: (மூன்றாம் நபர் ஒருவரால்) ப ாதுக ாப புக க ாக ஒப்படைக்கப் பட்டது.

**வசெனி**: சின்னங்கள் மற்றும் சிலைகளை வழிபடும் மக்கள்

**வஹ்தத் அல்-வுஜூத்**: ஒன்றாக இருப்பது. அல்லாஹுதஆலாவை தவிர் உண்மை யான இருப்பு இல்லை.

**வஹாபிகள்**: நஜ்திஸ் என்றும் அழைக்கப் படுகிறார்கள். மத்ஹபு இல்லாதவர்கள் ஸ ுன ன ிக ளுக கும ், ஷிய ாக க ளுக கும விரோதமானவர்கள்; அவை **ஃபிர்கத் அல்-ம லுன ா**( ச பிக் க ப் ப ட் ட குழு).

என ்றும ் அழைக்கப்படுகின்றனர்.

**உலூம் இப்திதைய்யா**: தொடக்கநிலை அறிவு.

**உலூம் நக்லியா**: மத அறிவு.

**உலூம் ஜாஹிரிய்யா**: தஃப்சீர், கலாம், மற்றும் ஃபிக்ஹு சார்ந்த அறிவு. கிளைகள்

**உம்மா**: ஒரு தீர்க்கதரிசியை பின்பற்றுபவர்களின் சமூகம்

**உம்மி**: நபி முஹம்மது (அலைஹி-ஸலாம்) புத்தகங் களைபடிக்க வில்லை; அவர் எழுத்து பூர்வமாக படிக்கவில்லை, மற்றும் அவர் யாரிடமிருந்தும் பாடங்களை கற்க வில்லை

**உகுபத்**: தண்டனைச் ட்டம், தண்டனை

**விலாயாகஸ்ஸா**: அனைத்து வணக்க வழிபாடு களின் செயல்களை நஃப்ஸு ஏற்று, நம்பிக்கை கொண்டு, கீழ்ப்படிந்து செய்யும்போது வ ண க க ம ் உ ண் மைய ான த ாக வும் சரியான தாகவும் மாறும்

**வுஜூத்**:, இருப்பது. இருப்பதை நிறுத்துவது சாத்திய மற்றது.

**யக்கீன்**: உண்மையில் உறுதி.

**ச(z)பானியாக்கள்** : நரகத்தின் மலக்குகள்

**சா(z)ஹீத்**: உலக சொத்துகளுக்கு அவருடைய இதயத்தில் இடம் கொடுக்காதவர்

**ச(z)ஹிர்**: உணர்வு மற்றும் செயல்கள்.

**ளா(z)ஹிரி**:(குர்ஆன் அல்-கரீம்)இன் வெளிப் படையான பொருள்.

**ச(z)காத்**: கடமையான தானம். அகராதி பொருள் 'தூய்மை, நல்லதாகவும் அழகாகவும் ஆக்குவது.'

**ச(z)ல்லா**: மலக்குகளின் கேள்விகள்.

**ச(z)ம்ஹரிர்**: குளிர் நரகம். அது இருக்க முடியாத அளவுக்கு வீரியம் கொண்ட குளிராக உள்ளது. ஒரு கணம் கூட தாங்க முடியாதது

**சி (z)ல்லி சை(z)ல்**: கடந்து செல்லும் நிழல்கள் மற்றும் தோற்றங்கள். கற்பனையில் இருக்கக்கூடிய அனைத்து விஷயங்களும் சி(z)ல்லில் இருந்து உருவாகிறது.

**வஹி**: தெய்வீக வெளிப்பாடு.

**வாஜிப்அல்-வுஜூத்**: இருப்பது இன்றியமை யாதது. 'மும்கின்' ஐ உருவாக்கியது.

**வாஜிப்**: இஸ்லாத்தில் அவசியம், கட்டாயம்

**வ லி**: அ ல ் ல ாஹ ுவ ால ் நேசிக்கப்பட்டவர்.

**வக்ஃப்**: ஒரு முஸ்லீமினால் மார்க்கத்திக்கு, ஒரு கல்விக்காக, அல்லது சமூக சேவை க்காக அன்பளிக்கப்பட்டது.

**வக்ஃபா**: அரபாத் சமவெளியில், ஹஜ் யாத்ரீகர்கள் ஈத் அல்-அழ்ஹாவின் முன் தினம் (குர்பான்) -தியாகத்துக்காக அரபாத் மலையில் ஏறுவது.

**வக்த்**: இது தொழுகையை அதன் சரியான நேரத்தில்சரியாக நிறைவேற்றுவது .

**விஜ்தான்**: மனஒற்றுமையுடன்.

**விலாயா**: வலி என்ற நிலை, அதுஅல்லாஹு தாலாவால் நேசிக்கப்படுபவர்.

**வுளு**: தொழுகைக்காக மற்றும் வழிபாடு களுக்காக கழுவுதல்,சுத்தம் செய்வது

**சி(z)ல்**: நிழல் மற்றும் தோற்றங்கள்.

**சி(z)ந்தீக்**: நம்பாதவர், முஸ்லிமாக பாசாங்கு செய்பவர்.

**சு(z)ஹ்த்**: உலக விஷயங்களில் இருந்து திரும்புதல்

**சு(z)ஹூர்**: புலப்படுவது.

**சு(z)ல்-ஜனாஹைன்**: முர்ஷித் காமில் இஜ்திஹாத், இல்ம் அல்-ஹால் (மார்க்க அறிவு) மற்றும் மரிஃபா (ஆன்மிக

அறிவு) இரண்டிலும் உயர்ந்த தரத்தில் அறிஞராக இருப்பவர்.

**சு(z)ல்ம்**: அல்லாஹுு தஅலாவுக்கு ஷிர்க் (யாரையும் அல்லது எதையாவது ஒரு ப ங் க ாள ியு ாக , தெய் வீக ப் ப டுத் துத ல் )

வைப்பது.

**சு(z)ல்மத்**: இருண்ட மற்றும் மந்தகரமான நிலை

**சு(z)ன்னர்**: அவர்கள் முஸ்லீம் இல்லை என்று காட்டு வதற்கு அணியும் தனித்துவ மான பெல்ட்